
www.tamilarangam.net

# தமிழின மீட்சி

## ஒரு வரலாற்றுப் பார்வை



குணா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழின மீட்சி

## ஒரு வரலாற்றுப் பார்வை

(திருத்தியது)

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

குணா

தமிழக ஆய்வரண்
வெங்காலூர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற்பதிப்பு: தி. பி. 2017 மடங்கல்
(1994 ஆகத்து–செப்டம்பர்)
இரண்டாம் பதிப்பு: தி. பி. 2023 மடங்கல்
(1995 ஆகத்து–செப்டம்பர்)
மூன்றாம்
(திருத்திய) பதிப்பு: தி.பி. 2027, மேழம்
(1996, ஏப்பிரல்-மே)

© குணா

விலை: உரூவா 15.00

வெளியீடு:
**தமிழக ஆய்வரண்**
3155/A எச். ஏ. எல். இரண்டாம் கட்டம்
பெங்களூர் 560 008

நூல் கிடைக்குமிடம்:
**பஃறுளி பதிப்பகம்**
183, வேங்கடரங்கம் தெரு
திருவல்லிக்கேணி
சென்னை 600 005

**தமிழர் ஆய்வு மையம்**
28–பி, மருதூர் ஊரல் கரைமேடு
கிழக்கு புதுவைச் சாலை
விழுப்புரம் 605 602

அச்சு:
**மனோ அச்சகம்**
சென்னை 600 005

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை

*தமிழ்த் தேசியக் கொள்கை — ஒரு வரலாற்றுப் பார்வை* என்னும் தலைப்பில் **மீட்போலை** சிறப்பு மலருக்கு நான் எழுதிய கட்டுரையை அம் மீட்போலை சுருக்கியே வெளியிட்டது. பின்னர், வெங்காலூர் இந்தியத் தொலைபேசித் தொழிலகத்தில் பணிபுரியும் தமிழார்வலர்கள் 1986ஆம் ஆண்டில் அக் கட்டுரையை 40 பக்க அளவிலான ஒரு குறுநூலாக வெளியிட உதவினர். வெங்காலூர்த் திருராமபுரத்து உலகத் தமிழ்க் கழக அன்பர்களும் அதற்குத் துணைநின்றனர். சென்னைப் பஃறுளி பதிப்பகம் 1998ஆம் ஆண்டில் அதன் இரண்டாம் பதிப்பைக் கொணர்ந்தது. அந்தப் பதிப்பு, 51 பக்கங்களாக விரிந்தது.

வேலூர் ஊரீசு கல்லூரியில் மாணவனாக இருக்கையில், நான் பிறந்த கோலார் தங்கவயலில் 1958ஆம் ஆண்டளவில் பொதுவுடைமைக் கருத்தியலாலும் இயக்கத்தாலும் ஈர்க்கப் பெற்றேன். மோயீசன் (மோசே) காட்டிய பொன்னுலகைப் போல் அப் பொதுவுடைமை இயக்கம் எனக்குத் தென்படவே, கனவுலகத்திற்குள் புகுவதைப் போன்ற புத்துணர்வுடன் அதற்குள் மடமடவென அடியெடுத்து வைத்தேன். 1964ஆம் ஆண்டில் வெங்காலூரில் குடியேறி மார்க்சிய பொதுவுடைமைக் கட்சியில் இணைந்து முனைப்புடன் இயங்கிவந்தபோது, அக் கட்சிக்குள்ளும்கூடப் பார்ப்பனிய சாதிக் காழ்ப்புகளும், தமிழர் எதிர்ப்புணர்வும் புதைந்து விரிந்து நின்றதைக் கண்டு அதிர்ந்து போனேன்.

அம் மார்க்சியக் கட்சிக்குள் கொள்கைக் கலகம் செய்தமையால், 1968ஆம் ஆண்டில் வெளியேற்றப்பட்டு அக் கட்சியின் தலைமையாலேயே 'மீத்தீவிரர்' என அரசின் ஒற்றுத்துறைக்குக் காட்டிக்கொடுக்கப்பட்ட நிலையில், அப்போது முளைத்துக் கொண்டிருந்த மார்க்சிய–இலெனினியக் குழுக்களின் வறட்டியக் கருத்தியலைச் சார்ந்தும் முரணியும் இயங்கலானேன். இந்தச் சூழலிலேயே நான் எழுதத் தொடங்கினேன்.

வாய்கிழிய வறட்டுப் புரட்சி பேசிய அம் மார்க்சிய–இலெனினியக் குழுக்களில், தமிழகத்திலும் தமிழரல்லாத வேற்றினத்தவரின் கொற்றமே கோலோச்சிவந்தது; சாதி வேற்றுமைகளும் ஒரு பக்கம் முக்காடிட்டுக் கொண்டிருந்தன. வெள்ளையணுக்கள் உடைப்புக்குள் உடைப்பாக உடைந்து கெடுவதைப் போல், அக் குழுக்கள் சாதி, இன அடிப்படையில் கூறாகிக்

www.tamilarangam.net



கெட்டுவந்ததையும் கண்ணாறக் கண்டுவந்தேன். இந் நிலை, என்னை மெல்ல வறட்டு மார்க்சியத்திற்கு அப்பால் கொண்டு வந்து நிறுத்தியது. அதனால், அம்பேத்கரின் நூல்களையும், ஈ. வெ. இராமசாமி நாயக்கரின் நூல்களையும் விழுந்து விழுந்து படிக்கலானேன். சாதிக் காழ்ப்பு, தேசிய இன ஒடுக்கல் ஆகிய இக்கட்டுகளுக்கு அங்கும் நிறைவான விடை கிடைக்கவில்லை. வழிகாட்ட வல்லார் யாரும் இன்மையால், என் தேடல், ஒரு தனிநடையானது. அத்தகைய ஒற்றையடிப் பாதையில் நான் தட்டுத்தடுமாறி நடைபோட்டபோது, தமிழ்த் தேசியமே நான் கண்டெடுத்த கருத்தியலாக என்னுள் திரண்டுவந்தது. என் இளமை அதற்குள் தேய்ந்து ஓய்ந்தது. பழைய கருத்தியல் நிலை பாடுகளின் தளைகள் வேறு என் காலைப் பிணித்திருந்தன. **தமிழின மீட்சி** என்னும் குறுநூல், அத் தளைகளிலிருந்து நான் என்னையறியாமல் விடுபட்டுக்கொண்டிருந்த சூழலில் 1986ஆம் ஆண்டில் வெளிவந்தது. ஆரிய, திராவிட மாயைகளிலிருந்து தமிழிளைஞரை விடுபெறச் செய்யும் நல்ல கருத்தை விதைப்பதே நூலின் நோக்கம் அதன் என முதற்பதிப்பிலேயே கூறப்பட்டது. ஆயினும், அந் நிலையிலும் நிறைவின்மை என்னில் ஒரு கேள்வி யாகவே நின்றது.

தமிழ்த் தேசியக் கருத்தியல் என்னுள் ஓங்கி வளர்ந்து விழுது களாய்ப் படரத் தொடங்கிய நிலையில், **திராவிடத்தால் வீழ்ந் தோம்!** என்னும் நூல் பிறந்தது. பழைய தளைகளை நான் முற்றாக அறுத்துக்கொண்டு, புதுநடை போடத் தொடங்கி யதையே அந் நூல் குறிக்கும். அதனால்தான், நான் ஆக்கிய நூல்களைத் **திராவிடத்தால் வீழ்ந்தோம்!** நூலுக்கு முந்தியன, பிந்தியன எனப் பகுத்துப் பார்க்க வேண்டுமெனப் பணிவன் புடன் வேண்டுகின்றேன்.

இச் சூழலில்தான், தமிழின மீட்சியைத் திருத்தியமைத்து 122 பக்கங்களாக விரித்து உங்களின் கனிவான அலசலுக்கும் அசைப்போடலுக்கும் படையலாக்குகின்றேன். தமிழ்த் தேசிய ஓர்மையை ஒரு செவ்விய விடுதலை இயக்கமாக்கவல்ல குறிப்பு களும் வரலாற்றியலும் இந் நூலில் அடங்குவதால், இந் நூல் உங்களை மீண்டும் நாடி வருகின்றது.

ஆக்கமுடன் திறனாய்க!

குணா


www.tamilarangam.net

தாய்மொழியாம் தமிழைக் கற்கின்ற உரிமையைக்
காக்கத் தோள்தட்டி எழுந்து
1982 சூலைத் திங்களில்
கன்னட இனவெறிபிடித்த காவல்படை
கோலார் தங்கவயலில் நடத்திய
துப்பாக்கிச் சூட்டிற்கு இரையாகி உயிர்நீத்த
தமிழிளம் காளைகளுக்கு இது காணிக்கை

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழின மீட்சி

குணா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழின மீட்சி
## ஒரு வரலாற்றுப் பார்வை

*"வடவேங்கடம் தென்குமரி*
*ஆயிடைத்*
*தமிழ்கூறு நல்லுலகத்து"*

எனத் தமிழ்மொழி வழங்கிவந்த எல்லைகளைப்பற்றித் தொல் காப்பியத்தின் பாயிரம் சொல்லும். ஆனால், மரபினம் என் னும் அடிப்படையில் வந்த ஓர் இன ஒற்றுமை தமிழரிடம் தொன்றுதொட்டு விளங்கிவந்ததாகச் சொல்ல முடியாது. தமிழ் மூவேந்தர்கள் 113 ஆண்டுகளாகக் கட்டிக்காத்துவந்த வலிமை யானதொரு கூட்டணியைக் கலிங்கத்து மன்னன் காரவேலன் கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் முற்பாதியில் உடைத்தெறிந் தானாம். இப்படி ஒரு கல்வெட்டு கூறுகின்றது.[1] தமிழ் அரசு களுக்கு இடையிலான ஒரு கூட்டணியாகத்தான் அஃது இருந் திருக்கவேண்டும். ஆனால், தமிழரின ஒற்றுமையைக் கட்டிக் காப்பதற்கான ஒரு கூட்டணியே அஃதெனச் சொல்ல இயலாது. அக் கூட்டணி உடைக்கப்படாமல் இருந்திருந்தால், காலப் போக்கில் தமிழரிடம் ஒரு வகை மரபின ஒற்றுமை தோன்றி யிருக்கலாம்.

தமிழரினம் ஒரு தனி **மரபினம்** (ethnic race) என்னும் அடிப் படையில் இங்கு கருத்துரைக்கவில்லை. ஒரு தனித் **தேசிய இனம்** (nationality) என்னும் நிலையில்தான் அத் தமிழரையும் தமிழகத்தையும் இன்று ஆராயத் தலைப்படுகின்றோம். நாடு, தேயம் (தேசம்), அரசு ஆகிய இக்காலத்திய இலக்கணங்களைத் தழுவியே அந்த ஆய்வு உள்ளது.

ஐரோப்பிய வழக்கைத் தழுவிய ethnos என்னும் கிரேக்கச் சொல், உண்மையில் யூதர்களோ கிருத்துவர்களோ அல்லாத மக்களைக் குறிக்க ஆங்கிலத்தில் ஆளப்பட்டுவந்த ஒரு சொல் லாகும். ஒரு தனி மொழியையும் தனி வழக்காறுகளையும் தனிப் பண்பாட்டையும் தனி அழகியல் மரபுகளையும் கொண்ட மரபு வழியில் வந்த ஒரு பழம் குமுகத்தையே இலத்தீன் மொழி யில் ethnicus என்றும், கிரேக்க மொழியில் ethnicos என்றோ,

www.tamilarangam.net



ethnos என்றோ சொல்லி வந்தனர். Ethnic என்பதற்கு 'தேசம்' (nation) என்றும் 'மெய்யினம்' (race) என்றும் 'குலக்குழுகம்' (gentile) என்றும்கூடப் பொருள் சொல்வர். கிருத்துவர் போன்ற யூதரல்லா மதத்தவர் என்னும் தொகுதியைக் குறிக்க gentile என்னும் சொல்லைக் குறிப்பாக ஆள்வதைப் போல, ஆசிய ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த தேசிய இனங்களையும் மக்கள் குழுகங்களையும் குறிக்க ethnic என்னும் சொல்லை ஆள்வதும் ஓர் ஐரோப்பிய வழக்காகும். ஆனால், அந்தச் சொல் ஓர் ஒருபொருள் பன்மொழிச் சொல்லாக (arbitraty word) உள்ளது. மதத்தைச் சார்ந்த அச் சொல்லாக்கத்தைத் தமிழராகிய நாம் சுமக்க வேண்டிவந்த அவல நிலையில், ethnic race என்னும் சொற்றொடருக்கு ஈடாக 'மரபினம்' என்னும் சொல் இந் நூலில் ஆளப்படுகின்றது.

Nation என்னும் ஆங்கிலச் சொல்லின் natio, natus, nascar என்னும் இலத்தீன் வேர்ச்சொற்களுக்கு 'பிறந்த இடம்' என்று பொருள். உள்ளபடியே, natus என்னும் சொல், 'நாடு' என்னும் தமிழ்ச்சொல்லையே நினைவுபடுத்தும். தேசத்தைக் குறிக்கும் nation என்னும் சொல்லுக்கு ஈடானதுதான் ethnic என்னும் சொல். ஆயினும், "ஒரு பொதுமொழியையும் நிலப்பரப்பையும் பொருளியல் வாழ்க்கையையும் ஒரு பொதுப்பண்பாடாக வெளிப்படும் உளத்தியல் பாங்கையும் தழுவி வரலாற்று அடிப்படையில் வந்த ஒரு நிலையான குமுகமே தேசமாகும்" என்னும் இன்றைய சொல் வழக்கத்தைக் கருதி, அத்தகைய நாட்டைச் சேர்ந்த மக்களையே ஒரு 'தேசிய இனம்' (nationality) என்கிறோம். இதுவும்கூட ஓர் ஒருபொருள் பன்மொழிச் சொல்லேயாகும்.

ஐரோப்பிய அறிவு மரபுக்கு ஆட்பட்டுவிட்ட தவிர்க்க முடியாத சூழலில், இத்தகைய ஒருபொருள் பன்மொழிச் சொற்களை வைத்துத் தலையைக் குழப்பிக்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலையிலிருந்து இப்போதைக்கு நம்மால் தப்ப முடியாது என்பதை நன்றாகவே உணர முடிகின்றது.

## இனப்பற்று இல்லையே!

தமிழர்கள் பலரிடம் மொழிப்பற்று இருக்கும் அளவுக்கு தேசிய இனப்பற்று இல்லை. வரலாற்றுவழியில் பார்த்தாலும், தேசிய இனப்பற்று அவர்களிடம் பொதுவாக இருந்ததில்லை. பண்டு பல தமிழரசுகள் இருந்தன. இடைக்காலச் சோழரின்

www.tamilarangam.net



வல்லரசோ ஒரு பெரும் பேரரசாக (Superpower) இருந்தது. தனித்தனியாக இருந்த அரசுகளை எல்லாம் ஒரே அரசாட்சி யின்கீழ் ஒன்றாகக் கட்டிவைத்து அங்காடி உறவுகளின் அடிப் படையில் ஒரு பொருளியல் வாழ்வியலை ஒழுங்கமைத்துக் கொண்ட வரலாறோ அதற்கில்லை. **திறையாண்மை** (Tributorism) என்னும் நிலக்கிழமை ஆட்சியியலாக மட்டுமே தமிழகத் தின் அரசியல் இருந்துவந்தது.

வடநாட்டு அரசர்களை அடக்குவதற்கென்றே பண்டைத் தமிழ் மன்னர்களில் சிலர் வடசெலவுகளை மேற்கொண்டனர். தத்தம் வலிமையை உலகுக்குக் காட்டித் திறைபெற்று மீள்வ தற்கென்றே அவர்கள் வடக்கு நோக்கிப் போர்மேல் சென்றனர். தமிழரினத்தைச் சேர்ந்த அரசுகள் என்னும் இனவுணர்வின் அடிப்படையில் அவர்கள் வட 'ஆரிய' அரசுகளை வீழ்த்தவும் இல்லை. இனமானத்தைக் காட்ட வடக்கு நோக்கிப் படை யெடுத்துச் சென்ற சேரன் செங்குட்டுவன்கூடத் தான் வென்ற நாடுகளை எல்லாம் தன் குடையின்கீழ் வைத்துக் கட்டியாள வில்லை. இடைக்காலச் சோழர் பெரும்பேரரசும்கூட, தாம் வென்ற நாடுகளில் தமிழரைக் கொண்டுபோய்க் குடியேற்றி, ஒரு வந்தேறிப் (colonial) பொருளியலை அமைக்கவோ, தமிழை அங்கெலாம் ஆட்சிமொழியாக்கவோ செய்யவில்லை; தமிழைத் திணித்து அந் நாடுகளையும் பண்பாடுகளையும் தன்வயமாக்கிக் கொள்ளவோ தமிழ்மயமாக்கவோ பார்த்ததுமில்லை.

கடாரத்திலோ (மலையாவிலோ), சீயத்திலோ (தாய்லாந் திலோ), சாவகத்திலோ (சாவாவிலோ), குமர் (கம்போடியா) நாட்டிலோ, புட்பகத்திலோ (பர்மாவிலோ), சிங்கள நாட்டிலோ அச் சோழப் பேரரசு பதித்த அடிச்சுவடுகள் பல. அங்கெல் லாம் பொதுவாகச் சங்கதம் (சமற்கிருதம்) போன்ற பிற மொழி களில்தான் தமிழரசுகளின் கல்வெட்டுகளும் பிறவகைப் பதிவு களும் ஆக்கப்பட்டன. ஆந்திரரிடமும் கன்னடரிடமும் தமிழ கம் அண்மையில் இழந்த எல்லைப் பகுதிகளில் கண்டெடுக்கப் பட்ட கல்வெட்டுகளிலும்கூடத் தமிழைச் சங்கதமாக்கப் பார்த்த கிரந்த எழுத்துக்களே ஆளப்பட்டுள்ளன. நல்ல தமிழில் அவற் றைப் பதியவில்லை. கன்னடராகிய சாளுக்கியரின் கலப்பு சோழர் மரபில் ஏற்பட்ட பின்னரே, இடைக்காலச் சோழ அரசு ஒரு கடல் மேவிய ஒரு வல்லரசானது. அதுவே அந் நிலைக் கான காரணாகும். ஒட்டுமொத்தத்தில், தமிழைப் பிறரிடம் பரப்பவோ திணிக்கவோ தமிழர் மட்டும் பொதுவாக முயன்ற தில்லை. ஆனால், தமிழகத்தின்மீது படையெடுத்த மாற்றார்

www.tamilarangam.net



மட்டும் தவறாமல் தத்தம் மொழிகளைத் தமிழர்மீது திணிக்கத் தவறவில்லை. இந் நிலை இன்றும் தொடர்கின்றது.

பற்றி (பத்தி) இயக்கத்தை அன்றைய தமிழ்த் தேசிய இயக்கமெனலாம். ஆனால், அதனுடைய தமிழ்த் தேசியத் தன்மையோ, சமயத்திலும் மொழியுணர்விலும் மட்டும் ஆழப் புதையுண்டு கிடந்தது. வடபுல அரசுகளின் சமய வழியிலான ஊடுருவல்களையும் மேலாண்மையையும் அப் பற்றி இயக்கம் முறியடித்தது. ஆனால், தேசிய இனம் என்னும் அடிப்படையிலமைந்த தேசிய இயக்கமாக அவ் வடவர் எதிர்ப்பு இருக்கவில்லை. முதலாளியத்திற்கு முந்தைய சூழல், தமிழரினத்தை அன்று ஒரு தேசிய இனமாக உருப்பெற விடவில்லை.

நாடுகளைச் சந்தைகளாக்கி, ஓர் அங்காடிப் பொருளியல் உறவைக் கட்டியமைத்துத் தொழிலக விளைப்பு உறவுகளுடன் அவற்றை இறுக இணைக்கவல்ல முதலாளியச் சூழலிலேயே ஒருபொருள் பன்மொழிச் சொல்லான ‘தேசம்’ (Nation) என்னும் இக்கால உருப்படி தோன்றுகிறது; இக்கால தேசிய இனங்கள் தலையெடுக்கின்றன. வெவ்வேறு பேரரசுகளைக் கொண்டிருந்த தமிழர்கள் அன்று ஒரு தேசிய இனமாக உருப்பெற முடியாமைக்கு அத்தகைய முதலாளிய வாழ்க்கைத்திணை இல்லாமையே பெரிய காரணமாகும்.

தமிழகத்தில் வெவ்வேறு அரசுகளின் கீழிருந்த வெவ்வேறு இனத்து மக்களை எல்லாம் ஒரேயோர் ஒற்றையாட்சியின்கீழ்க் கட்டிவைத்து ஆண்ட வரலாற்று அமைதி ஆங்கிலேயரின் வருகைக்கு முன்னர் இருந்ததில்லை. இடைக்காலச் சோழ வல்லரசிலும்கூட அத்தகைய ஒற்றையாட்சி முறை இருக்கவில்லை. ஆங்கிலேயர்களே தமிழ் நிலம் முழுவதையும் முதன்முதலில் ஓர் அரசின் ஆட்சியின்கீழ் ஒன்றுபடுத்தினர். தமிழர்களுக்கு ஒரு **தேசம்** என்னும் தகுதி இவ்வாறுதான் ஏற்பட்டது.

ஆனால், ஆங்கிலேயர்கள் அன்று அமைத்ததோ, **சென்னை மாகாணம்** (Madras Presidency) என்னும் ஒரு பன்னாட்டின அரசு ஆகும். தமிழ்ப் பகுதிகளுடன் தெலுங்கு, மலையாள, கன்னட, குடகு, துளுப் பகுதிகளும் சேர்க்கப்பட்டு ஆங்கிலத்தை ஆட்சிமொழியாக வைத்து அப் பெருமாநிலம் ஆளப்பட்டது. இச் சூழலில், படித்த தமிழர் சிலரிடம் கருவுற்ற தமிழ்த் தேசிய உணர்வு ஒரு குறைபேறாகப் போனது. தமிழகத்தை ஆட்டி அலைக்கழித்த ‘திராவிடக்’ கொள்கையால்தான் இந்தக் கருக் கலைப்பு ஏற்பட்டது.

www.tamilarangam.net



தமிழ்த் தேசியக் கொள்கை ஒரு குறைபேறாகப் போனதையும், தமிழகச் சூழலில் அத் தமிழ்த் தேசியத்தை மீண்டும் கருக்கொண்டுவிட்ட ஒரு புதிய சூழல் தோன்றியுள்ளதையும் பற்றி அலசுவதே இந்த நூலின் நோக்கமாகும். ஒரு நாடு அடிமைப்பட்டிருக்கையில், அந் நிலையைத் தம் நாட்டினருக்குச் சுட்டிக்காட்டி எழுத்தாலும் பேச்சாலும் அந் நாட்டின் விடுதலைக்கு வித்திடுவது, அந் நாட்டைச் சேர்ந்த அறிவர் வகுப்பாகவே இருப்பது இயல்பு. அந்த அறிவர் வகுப்பில் பாட்டாளிய வகுப்பிலிருந்து வந்த அறிவர் அரிதாகவே இருப்பர். உழவர் வகுப்பிலிருந்து வந்தவர்கள் அவர்களையும் பார்க்கக் கூடுதலாக இருப்பர். செய்தொழில் வகுப்பிலிருந்து வந்தவர்கள் அவர்களையும்விடக் கூடுதலாக இருப்பர். இந்த அறிவர்களில் பெரும்பாலோர் இதனால் குறுமுதலாளியத் தன்மையைக் கொண்டவராக இருப்பதும், அவர்களில் பெரும்பாலோர் மேல்சாதிக்காரராக இருப்பதும் ஒரு தனித்தன்மை. தொழிலாளர் 'இயக்கமும் பாட்டாளியக் கொள்கையும் தோன்றுவதற்கு முன்னர், ஃபிரான்சு நாட்டில் மீகற்பனை ஒப்புரவுக் (utopion socialist) கருத்துகளே அறிவர்களிடம் நிலவிவந்தன. அறிவியல் ஒப்புரவுக் (Scientific Socialist) கருத்துகள் முளைப்பதற்கான விளைமண்ணாகவும் அவை இருந்தன. இதனால், ஒப்புரவுக் கொள்கையே ஒரு குறுமுதலாளியச் சரக்குத்தான் என ஒதுக்குவதில்லையே! அதே போல், தமிழ்த் தேசியத்தையும் ஒரு குறுமுதலாளிய உளவியல் காழ்ப்பு எனச் சொல்லிப் புறக்கணித்து விட முடியாது. அவ்வாறு செய்வது, வரலாற்றியலின் ஊழ்பாடுகளை அறியாது, தன் கண்களுக்குத் தானே கட்டுப் போட்டுக் கொள்வதாகவே ஆகும்.

## நாற்றங்கால்

ஆங்கிலேயர் காலம் தொட்டுத்தான் தற்காலம் தொடங்குகின்றது. முதலாளியத்தின் வருகையையும் இது குறிக்கின்றது. இந் நிலையில், தமிழ்த் தேசிய உணர்வு பிறப்பதற்கான கருநிலையாகத் தமிழ் மொழியுணர்வும் தமிழ் நாட்டுணர்வும் தலையெடுத்தன. வள்ளலாரிடம் (1823-74) தமிழ் மொழியுணர்வு இருந்தது; தமிழ் நாட்டுணர்வு தெளிவாகத் தென்படவில்லை. தமிழர்கள் ஒரு தனிநர்டு என்னும் கருத்தைச் சொல்லி அவர் அதை வளர்க்கவுமில்லை. மொழியுணர்வைப் பார்க்கிலும், சாதி எதிர்ப்பு, சமயச் சீர்திருத்தம் போன்ற கருத்துக்களில் அன்று அவருக்கிருந்த ஈடுபாடு, தமிழ்த் தேசியத்தை ஒரு தனிக்

www.tamilarangam.net



கொள்கையாக்கவல்ல வாய்ப்பை அவருக்குத் தரவில்லை. இந் நிலைக்கு அடிகளார் வாழ்ந்துவந்த சூழலையும் காலத்தையுமே காரணங்களாகக் கொள்ள வேண்டும். அதனால், அவ் வள்ள லாரைக் குறைசொல்ல முடியாது.

நற்செய்தி பரப்புக் கழகத்தைச் (Society for Propagation of the Gospel) சேர்ந்த காட்டுலாந்து கிருத்துவ சமயப் பரப்புநர் களான மறைத்திரு இராபர்ட் **கால்டுவெல்** ஐயரும் (1819–81) **ஜி. யூ. போப்** (1820–1907) ஐயரும் தமிழ்மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும்பற்றி ஆராய்ந்து சொன்ன கருத்துகளே தமிழ ரிடையில் மொழியுணர்வும், தமிழ்த் தேசிய இன உணர்வும் தோன்றுவதற்கான அடிப்படைகளாகின. [(ஒப்புரவு பொதுவு டைமைக் கருத்துகள் இங்கு வந்து பரவவும், அவர் போன்ற ஐரோப்பியர்தானே முன்னோடிகளாக இருந்தனர்?] அந்த ஐரோப்பியத் தமிழ் அறிஞர்கள் தந்த விளக்கங்களைத் தழுவித் தமிழகத்தில் பல தமிழ் அமைப்புகள் தோன்றின. பழவநத்தம் கிழாரான **பாண்டித்துரைத் தேவர்** அமைத்த **தமிழ்க் கழகம்** அவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கது. இந்த அமைப்பு 1903ஆம் ஆண்டில் வெளியிடத் தொடங்கிய **செந்தமிழ்** என்னும் ஏடு, இந் நீரோட்டத்திற்கு நல்ல வலிமை சேர்த்தது.

தமிழ்த் தேசியக் கொள்கையின் துளிர்நிலையைப் பேராசி ரியர் **சுந்தரம் பிள்ளை**யிடம் (1855–97) பார்க்கின்றோம். **தென் னிந்திய சிவனியக் கழகத்தை** (தென்னிந்திய சைவ சித்தாந்தச் சபையை)ச் சேர்ந்த **சே. எம். நல்லசாமிப் பிள்ளை**க்கு 1896 திசம்பர் 19 அன்று சுந்தரம் பிள்ளை எழுதிய மடலில்:

> "ஆரிய மெய்யியல் என்றும் ஆரிய நாகரிகம் என்றும் அறி யாமல் அழைக்கப்படுவனவற்றில் பெரும்பாலானவை சொல்லுக்குச் சொல் அடியில் (அப்படியே) திராவிடமாக அல்லது தமிழியமாக இருக்கின்றன"[2]

என்று விளக்கியிருந்தார். மீண்டும் 1897 சனவரி 30 அன்று **மெட்ராஸ் ஸ்டாண்டர்ட்** *(Madras Standard)* என்னும் ஏட்டில் அவர் எழுதுகையில்,

> "விந்தியமலைகளுக்குத் தெற்கே இருக்கிற தீவக்குறை (Peninsular) இந்தியாவே சரியான இந்தியாவாக இன்னும் நீடிக் கின்றது"[3]

என விளக்கினார்.

தமிழர்க்குரிய தனி வரலாற்றைச் சுட்டிக்காட்டி அதன் அடிப்படையிலான அரசியல் குமுக ஓர்மையை வளர்ப்பதற்கு

www.tamilarangam.net



வித்திட்டதில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளைக்கும் அவருடைய நண்பரான **டி. பொன்னம்பலம் பிள்ளை**க்கும் பெரிய பங்கு உண்டு. ஆயினும், தமிழ்த் தேசிய ஓர்மையை இவர்கள் 'திராவிடம்' என்னும் கருத்தாக்கத்திற்குள் அடைத்துவைத்தனர்.

தமிழ்த் தேசிய கருத்துக்கள் சமயவழியில் வடிவம் பெறுவதற்கு 1886ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தென்னிந்திய சிவனியக் கழகத்திற்கு (சைவ சித்தாந்த சபைக்கு) ஒரு பெரிய பங்கு உண்டு. பார்ப்பனிய மறைகளுக்கு நேரெதிராகத் தமிழ்ச் சிவனியத் திருமுறைகளை நிறுத்தி, தமிழரின் சமயநெறிகளுக்கிருந்த தனித்தன்மையை இக் கழகம் எடுத்துரைத்தது. வடமொழி, தென்மொழி என்னும் இருவேறு மொழி நிலைகளை வைத்தும் தமிழ்த் தேசிய உணர்வைப் பரப்புவதற்கும் இக் கழகம் ஒரு முன்னோடியாக இருந்தது. இக் கழகத்திற்கும், அஃது உருவாக்கிய தமிழ்த் தேசியக் கருத்துகளுக்கும் நல்லசாமிப் பிள்ளை ஓர் அடிக்காலாக இருந்து செவ்வனே பணிபுரிந்து வந்தார்.

## திராவிடப் புரட்டு

"இந்தியமயமாக்கல்" என்னும் கொள்கையை ஆங்கிலேயரின் இந்திய அரசு கடைபிடிக்கத் தொடங்கியது முதல் தமிழகத்தில் மாவட்ட ஆட்சியருக்குக் கீழடங்கிய அரசுப் பதவிகள் பெரும்பாலும் மராத்திய தேசாந்த பார்ப்பனரிடம் இருந்து வந்தன. ஆங்கில ஆளுநர் எல்ஃபின்சுட்டோனின் காலத்தில் இன்றைய சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னோடியான ***சென்னை உயர்நிலைப் பள்ளி*** *(1841)* நிறுவப்பட்டது. தமிழ்ப் பார்ப்பனர் பலர் அதன் வழியாக ஆங்கிலப் படிப்பை முடித்துவிட்டு அரசுப் பதவிகளில் புகுந்தனர். அரசுப் பணி கிடைக்காத பார்ப்பனர் பலர், மருத்துவர்களாகவும் பொறிஞர்களாகவும் வழக்குரைஞர்களாகவும் தாளிகையர்களாகவும் ஆகினர். இவ்வாறு அரசுத்துறையிலும் செய்தொழில்களிலும் தமிழ்ப் பார்ப்பனர்கள் பெரிய ஆதிக்கம் செலுத்திவந்ததை எதிர்த்தே சென்னையிலிருந்த பார்ப்பனரல்லாதார் ஒரு பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைத் தொடங்கினர்.

***தென்னிந்திய மக்கள் கழகம்*** (South Indian People's Association) என்னும் பெயரில் பார்ப்பனரல்லாதாரின் முதல் அரசியல் அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. இதன் பெயர் ***தென்னிந்திய நலவுரிமைக் கழகம்*** (South Indian Liberal Federation) எனத் திரிந்தது. இஃது 1917 பிப்ரவரி 16 தொடங்கி **ஜஸ்டிஸ்** *(Justice)*

www.tamilarangam.net



என்னும் பெயரில் ஓர் ஆங்கில ஏட்டை நடத்திவந்தமையால் **நயன்மைக் கட்சி** (Justice Party அல்லது நீதிக் கட்சி) என்றழைக் கப்பட்டுவந்தது. இந் நயன்மைக் கட்சியின் முன்னோடியாக 1912ஆம் ஆண்டில் டாக்டர் **சி. நடேசன்** (1875–1937) தொடங்கிய **சென்னை திராவிடர் கழகம்** (Madras Dravidian Association) இருந் தது.[4] பின்னர், இத் திராவிடக் கொள்கைக்குக் கடைவிரித்த தமிழர் யாவரும் பின்னுக்குத் தள்ளப்பட்டு, உண்மையான 'திரா விடர்'களான தெலுங்கர் முன்னுக்கு வந்தனர்.

நயன்மைக் கட்சியைத் தொடங்கியவர்கள் இருவர். ஒருவர் பிட்டி **தியாகராயச் செட்டியார்** (1852–1925). மற்றவர் **டி. எம். நாயர்** என்னும் மருத்துவர். இவர்களில் தியாகராயச் செட்டி யார் தேவாங்குச் செட்டியார் சாதியைச் சேர்ந்த தெலுங்கரும் பெருநிலவுடையாரும் பெரிய முதலாளியும் ஆவார். வட்டித் தொழில், வைப்பகத் தொழில், கைத்தறித் தொழில் ஆகியவற் றில் முன்னணி வகித்துவந்தவர் இவராவார். **தென்னிந்திய வணிகர் கழகத்தை** (South Indian Chamber of Commerce) அமைத் தவர்களில் இவரும் ஒருவர். சென்னை மாநகராட்சியின் உறுப் பினராக இருந்ததுடன், மூன்றாண்டு அதன் தலைவராகவும் இருந்தவராவார். தனி ஆந்திரம் கேட்டுப் பட்டினி கிடந்து உயிர்நீத்திட்ட பொட்டி சீராமுலு இவருடைய மருமகனாவார். தெலுங்கரின் இன மீட்சியில் அயராத ஆர்வம் காட்டிவந்தவர் அத் தியாகராயச் செட்டியார். டாக்டர் டி. எம். நாயரோ ஒரு மலையாளி. சென்னை திருவல்லிக்கேணியில் பணிபுரிந்து வந் தவர். 'இந்து' மதத்தையும் அதைச் சார்ந்த பண்பாட்டையும் நஞ்சென வெறுத்துவந்தவர். எல்லாவற்றிலும் ஆங்கிலமயமாக் கத்தைப் போற்றிவந்தவர்.[5]

## தெலுங்கர் திரண்டனர்

இதற்கிடையில், பேராயக் கட்சிக்குள் (காங்கிரசுக் கட்சிக் குள்) ஆந்திரப் பார்ப்பனருக்கும், தமிழ்ப் பார்ப்பனருக்கும் இடையில் போட்டிகள் பெரிதாய் வலுத்துவந்தன. 1908ஆம் ஆண்டு நடந்திட்ட அப் பேராயக் கட்சியின் அல்லாகாபாத் மாநாட்டுக்குப் பிறகு இம் முரண்பாடு முற்றியது. இதனால், 1909ஆம் ஆண்டில் **ஆந்திரர் இயக்கம்** உருவெடுத்தது. அன்று சென்னை மாகாணப் பேராயக் கட்சியிலிருந்த மீத்தீவிரர்களான **டி. பிரகாசம், எம். கிருஷ்ணராவ், பி. பட்டாபி சீத்தாராமய்யா, கொண்ட வெங்கடப்பய்யா** போன்ற தெலுங்குப் பார்ப்பனர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களும், சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவரும் வரணாசுரம தர்ம இயக்கத்தைத் தோற்றுவித்தவருமான **என். கே. இராமசாமி ஐயர்** என்னும் தமிழ்ப் பார்ப்பனரும், இந்த ஆந்திர இயக்கத்தின் கருவாக விளங்கினர். இவர்களில் கொண்ட வெங்கடப்பய் யாவை ஆந்திர இயக்கத்தின் தந்தை என்பர். இவர்கள் தெலுங் கர்களுக்கென ஒரு தனி ஆந்திர மாநிலம் அமைக்கப்பட வேண் டும் எனக் குரலெழுப்பத் தொடங்கினர். தெலுங்கு மொழியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டுவந்தனர்.

தெலுங்கு பேசும் பகுதிகளை எல்லாம் சென்னை மாகாணத் திலிருந்து பிரித்துத் தனி ஆந்திர மாநிலத்தை அமைக்க வேண்டு மென ஆந்திர வட்டகைப் பேராயக் கட்சி 1912ஆம் ஆண்டில் நடந்திட்ட குண்டூர் மாநாட்டிலேயே தீர்மானம் இயற்றியது. உள்ளாட்சி (Home Rule) வந்துவிட்டால் சென்னை மாநிலத் திலிருந்த ஆந்திரரின் அரசியல் பிடிப்புகள் தளர்ந்து விடுமென அஞ்சிய இத் தெலுங்குத் தலைவர்கள், 1913 மே திங்களில் குண்டூர் மாவட்டத்திலுள்ள பாபட்லாவில் ஆந்திரப் பெரு மக்கள் மாநாடு ஒன்றைக் கூட்டினர். ஆந்திரத் தெலுங்கருக் கென ஒரு தனிப் பேராயக் கட்சி அமைப்பும் தனி மாநிலமும் அமைக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் குரலெழுப்பினர். ஆந்திரத் தெலுங்கருக்கென ஒரு தனிப் பல்கலைக்கழகமும்கூட அமைக்கப்பட வேண்டும் எனக் கேட்கத் தொடங்கினர். இந்த ஆந்திர மாநாட்டை **ஆந்திரப் பெருமக்கள் அவை** (ஆந்திர மகா சன சபை) என்றோ **ஆந்திரப் பேரவை** (ஆந்திர மகாசபை) என்றோ குறிப்பிடுவர். ஆந்திர இயக்கத்தவரான கொண்ட வெங்கடப்பய்யாவும் பட்டாபி சீதாராமய்யாவும் சேர்ந்து கூட் டாக வெளியிட்ட ஒரு குறுநூலில்:

> "தொடர்ச்சியான ஒரு நிலப்பரப்பு, ஒரு பொது மொழி, இலக்கியம், தலைமக்களையும் பாவாணர்களையும் போர் வீரர்களையும் அரசர்களையும் பற்றிய பொதுவான மரபு கள், மனநிலையிலும் பண்பியலிலும் ஆழவோடிய ஒரு வலுவான ஒற்றுமை ஆகியவற்றில் தெளிவான வடிவமைதி உண்டு. மொழியால் கட்டுண்ட இக் குமுகங்கள் ஒவ் வொன்றையும் ஒரு தனி மெய்யினமாக (race) வரையறுக்க வேண்டும். அந்த ஒற்றுமையை விளக்கி ஊட்டுவிக்கவல்ல குமுக, அரசியல் வகுப்புகளுக்குரிய துணையங்கள் (acces- sories) எல்லாம் தரப்பட வேண்டும்[6]

என்றெழுதித் தெலுங்குத் தேசிய இன உணர்ச்சிக்குக் கொம் பூதினர். இத் தெலுங்குத் தேசிய இயக்கம் தொடக்கத்தில் ஒரு

www.tamilarangam.net



மக்கள் இயக்கமாக இருக்கவில்லை. ஒரு குறுகிய வட்டமாக — தெலுங்குப் பார்ப்பனர் தலைமையில் — அன்று அஃது இருந்தது. கோமுட்டிச் செட்டி நலன்களும் திருக்காளத்திக் கிழார் (சமீன் தார்) குடும்பமும் அதற்குப் பணவழியில் முட்டுத் தாங்கின. பின்னர் 1910க்கும் 1917க்கும் இடையில் இந்த இயக்கம் மளமள வென வளர்ந்தது.

இந்த ஆந்திர இயக்கத்தின் வழியில் வந்தவர்களாகவே நயன்மைக் கட்சியின் பார்ப்பனரல்லாத் தலைவர்கள் இருந் தனர். தியாகராயச் செட்டியாரே தெலுங்கு இனப்பற்று மிக் கவர்.[7] (பனகல் அரசராகப் பின்னர் 1922ஆம் ஆண்டில் ஆகிய) **பி. இராமராயநிங்கார் (1866–1928)** என்னும் நயன்மைக் கட்சி யின் தலைவரும்கூட 1915ஆம் ஆண்டில் ஆந்திர இயக்க மாநாட் டிற்குத் தலைமை தாங்கியவர்தான்.[8] நயன்மைக் கட்சியின் ஆட்சியில் கல்வி அமைச்சராகவிருந்த **அன்னப்பு பரசுராமதாசு பாத்ரோ** என்பவரே தனி ஆந்திரப் பல்கலைக்கழகம் அமைத்த தற்கு மூலவராவார்.[9] இரெட்டி மகாசன சபையின் உள்ளூயி ராக இருந்துவந்த நயன்மைக் கட்சித் தலைவர் **சித்தூர் இராம லிங்க ரெட்டியார்**தான் 1926–30ஆம் ஆண்டுகளில் புதிதாக அமைக்கப்பட்ட ஆந்திரப் பல்கலைக்கழகத்திற்கு முதல் துணை வேந்தராக இருந்தார்.[10] ஆந்திராவின் பித்தாபுரம் அரசர் நயன் மைக் கட்சியின் மற்றொரு பெரும்புள்ளி. **ஆந்திரப் பிரகாசிகா** என்னும் நயன்மைக் கட்சியின் தெலுங்கு ஏட்டின் ஆசிரியரும் நாயுடு சாதிக் கழகத்தைத் தோற்றுவித்தவருமான **ஏ. சி. பார்த்த சாரதி நாயுடு**வும் தெலுங்கு உணர்ச்சி மிக்கவர்.[11] சகர்லமுடி குப்புசாமி சௌதிரி என்னும் பெருநிலவுடையாரும் வட்டித் தொழிலருமான குண்டூரைச் சேர்ந்த கம்மா நாயுடு தலைவர். இவர் நயன்மைக் கட்சியர். ஒ. கந்தசாமி செட்டி என்னும் கிறித் துவ பேரிச்செட்டி, ஒ. தணிகாச்சலம் செட்டியின் ஒன்று விட்ட அண்ணனும் நயன்மைக் கட்சியரும் ஆவார். சங்கர எல்லப்ப செட்டி என்னும் சேலத்து நிலவுடையாரும் வணிகரும் வட்டித் தொழிலரும்கூட நயன்மைக் கட்சியரே.

நயன்மைக் கட்சியிலிருந்த அரசர்கள் எல்லோருமே தெலுங் கர்களாவர். பொப்பிலி அரசர், திருக்காளத்தி அரசர், வெங் கடகிரி அரசர், பவநகர் அரசர், சல்லப்பள்ளி அரசர் ஆகி யோர் அவர்களில் அடங்குவர். அக் கட்சியிலிருந்த ஊற்று மலை சமீன்தார், சிங்கம்பட்டி சமீன்தார், தேளாப்பள்ளி சமீன் தார் ஆகிய கிழார்கள் யாவரும் தெலுங்கரேயாவர்.[12] நாட்டுக் கோட்டைச் செட்டியாரும் பிற தமிழச் செட்டிமாரும் தவிர,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தமிழகத்தின் வணிகம் பொதுவாகப் பேரி செட்டி, வாணியச் செட்டி, சாதுச் செட்டி, கோமுட்டிச் செட்டி, இருபத்து நான்கு மனைச் செட்டி, கம்மா நாயுடு, வலமா நாயுடு, கவரை (பலிசா) நாயுடு, காப்பு நா்யுடு, வடமா நாயுடு, வளையல்கார நாயுடு, நான்கு பிரிவு ரெட்டியார் முதலான தெலுங்குச் சாதியின ரிடமே கட்டுண்டு கிடந்தது.

தமிழகத்தில் தெலுங்கு மொழியைப் பரப்பவும் தெலுங்கர் மேட்டிமையை உறுதிப்படுத்தவும் வேண்டி, ஆரிய வைசிய மகா சபை, ஆந்திர மகிள சபா, ஆந்திர மகா சபா, எஸ். கே. பி. டி. வைசிய சபா, பச்சையப்பா நிறுவனங்கள், சி. என். டி. நிறு வனங்கள், வீகம்சி நிறுவனங்கள், கலவலகண்ணன் செட்டி நிறுவனங்கள், உம்மிடியார் நிறுவனங்கள் ஆகியன அமைக்கப் பெற்றன.[13]

பார்ப்பனரல்லாதார் இயக்கம் தெலுங்கரின் பிடிப்புக்குள் சிக்கிக்கொள்ளவும், பழைய சென்னை மாகாண அரசியலில் தெலுங்கர்களின் கை ஓங்கவும் மேற்சொன்ன சூழல்களே வழி யமைத்துக் கொடுத்தன.

1917 மார்ச் 17 அன்று சென்னை மாகாணத்தில் அடங்கிய தெலுங்குப் பகுதிகளுக்கென ஒரு தனிப் பேராயக் கட்சி உறுப்பு அமைக்கப்பட்டது. தமிழ் மாவட்டங்களிலிருந்த சென்னை மாகாணப் பேராயக் கட்சிக்கு 1920ஆம் ஆண்டில்தான் 'தமிழ் நாடு பேராயக் கட்சி' என்னும் புதிய பெயர் சூட்டப்பட்டது. ஆனால், தெலுங்கர்க்கும் தமிழர்க்கும் இடையில் இதே போன்ற போட்டியும் பூசலும் இருந்துவந்த நயன்மைக் கட்சியில் மட்டும் ஆந்திரத் தெலுங்கருக்குத் தனிப் பிரிவு, தமிழருக்கு ஒரு தனிப் பிரிவு என வகுக்கப்படவில்லை. அக் கட்சியில் அத்தகைய பிரிவு வராமல், ஆந்திரத் தெலுங்கரின் இனநலன்கள் எச்சரிக் கையாகப் பார்த்துக்கொண்டன.

## எழுந்தடங்கிய இனமானம்

தியாகராயச் செட்டியார் முதலான நயன்மைக் கட்சித் தலைவர்கள் தமிழர்க்கு ஆதரவாக என்றுமே இருந்ததில்லை. இதனால், தியாகராயச் செட்டியார்–பனகல் அரசர் அணியை எதிர்த்து நயன்மைக் கட்சியிலிருந்த **சே. என். இராமநாதன், சே. எசு. கண்ணப்பர்** ஆகியோர் தமிழர் நலன்களுக்காகப் போராடி யதுண்டு. சிவனியக் கழகத்தைச் சேர்ந்த நல்லசாமிப் பிள்ளை யின் மகனான சே. என். இராமநாதனின் பங்கு இங்கு மிகவும்

www.tamilarangam.net


குறிப்பிடத்தக்கது. **திராவிடன்** என்னும் நயன்மைக் கட்சியின் தமிழ் ஏட்டிற்கு ஆசிரியராக இருந்தவர் இவர்.

நயன்மைக் கட்சியின் முதல் அமைச்சரவையில் தெலுங்கர்கள் மட்டுமே இடம் பெற்றனர். தென்னார்க்காடு மாவட்டத்தவரான **ஏ. சுப்பராயலு ரெட்டியார்** (1853–1922) 7.12-.1920 முதல் 11.7.1921 வரையில் சென்னை மாகாணத்தின் தலைமையமைச்சராக இருந்தார். இவர் பத்தாயிரம் குறுக்கம் (ஏக்கர்) நிலம் வைத்திருந்த ஒரு பெரிய நிலக்கிழார். இவரது அமைச்சரவையிலும் (பனகல் அமைச்சர்) இராமராயநிங்கரும் **கூர்ம வெங்கடரெட்டி நாயுடு**வும் அமைச்சர்களாக இருந்தனர். இந்த அமைச்சரவையில் நயன்மைக் கட்சியிலிருந்த தமிழர் ஒருவர்கூட அமைச்சராக முடியவில்லை. இதனால், இக் கட்சியிலிருந்த தமிழர் சிலர் கொதிப்புற்றனர். தெலுங்கரான தியாகராயச் செட்டியார் வேண்டுமென்றே தமிழரைப் புறக்கணிப்பதாகச் சொல்லி, 1920 மே திங்களில் இராமநாதன் குற்றம் சாட்டியதும் உண்டு. தெலுங்கர்களோ அசைந்து கொடுக்கவில்லை. இதன் விளைவாகத் **திராவிடன்** ஏட்டின் ஆசிரியர் பதவியிலிருந்த **கண்ணப்பர்** விலகிவிட்டார்.[14]

1923 மே திங்களில் இராமநாதனும் கண்ணப்பரும் சேர்ந்து 'பார்ப்பனரல்லாதார் ஊழியர் மாநாடு' ஒன்றைக் கூட்டி, தியாகராயச் செட்டியாரின் தெலுங்கினவெறியைக் கடுமையாக எதிர்த்துப் பேசினர். இதனால், இராமநாதன் பேசிக்கொண்டிருக்கும் போதே தியாகராயச் செட்டியார் மாநாட்டு அரங்கை விட்டு வெளியேறினார்.[15]

அடுத்து, 1923 ஆகத்துத் திங்களில் தமிழ் மாவட்டங்களின் பார்ப்பனரல்லாதார் மாநாடு ஒன்றை அவ்விருவரும் நடத்தினர். இராமநாதபுரத்து மன்னரும் திருச்சி பெத்தாச்சிச் செட்டியாரும் அம் மாநாட்டைக் கூட்ட உதவினர். நயன்மைக் கட்சியின் ஆண்டு மாநாடு அடுத்த திசம்பரில் நடக்கவிருந்தும், கட்சியின் தலைமையை மீறி இம் மாநாடு கூட்டப்பெற்றது. 1923ஆம் ஆண்டில் அமையவிருந்த அமைச்சரவையில் தமிழர்க்கு இடம் இல்லையெனில், தமிழர்கள் அந் நயன்மைக் கட்சியை விட்டே வெளியேற நேரிடும் என அச்சுறுத்தியும் பார்த்தனர்.

அம் மாநாட்டில் பேசிய இராமநாதபுரம் மன்னர்:

"ஒரு தொன்மையான நாகரிகத்தையும் ஈடு இணையற்ற புகழுடைய ஒரு மரபையும் கொண்ட தமிழர்கள் தங்களின் நலன்களைக் குறிப்பாகப் பேணிக் காத்துக்கொள்ளவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வளர்த்துக்கொள்ளவும் வேண்டி ஒரு தெள்ளத் தெளி வான அரசியல் கட்சியாக இப்போது தங்களைத் தேர்ந் தெடுத்துக் கொண்டுள்ளனர்"[16]

என்று பேசினார். 1925ஆம் ஆண்டில் நயன்மைக் கட்சியின் அதிகார முறையிலான தலைமையின்கீழ் **ஏ. டி. பன்னீர்ச்செல்வம்** தஞ்சையில் ஒரு மாநாடு நடத்தினார். இராமநாதன் குழுவினர் சில கல் தொலைவில் போட்டி மாநாடு ஒன்றை நடத்தினர். இறுதியில் கண்ணப்பரோ பனகல் அரசரால் விலைகொடுத்து வாங்கப்பட்டார். தமிழ் மாவட்டங்களின் பார்ப்பனரல்லா தோர் மாநாட்டை நடத்துவதைப்பற்றி இராமநாதபுரம் அரச ருடன் பனகல் அரசர் குசுகுசு பேச்சு நடத்தினார். முடிவில் இந்த இராமநாதபுரம் மன்னரைக் கொண்டும் பெத்தாச்சிச் செட்டியாரைக் கொண்டும் அம் மாநாடு குலைக்கப்பட்டது.[17] தமிழ்ப் பகுதியினரின் ஒற்றுமையும் கெடுக்கப்பட்டது.

1923ஆம் ஆண்டு மாநிலச் சட்டப் பேரவைக்கு நடந்த இரண்டாவது தேர்தலுக்குப் பிறகு, பனகல் அரசரே மீண்டும் தலைமையமைச்சரானார். பனகல் அரசரின் தலைமையிலான அமைச்சரவையில், சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழர் யாருக்கும் அமைச்சராகும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. பின்னர், ஓர் ஓய்வுபெற்ற அதிகாரியான **டி. என். சிவஞானம் பிள்ளை** என்னும் தமிழர் அந்த அமைச்சரவையில் இடம்பெற் றார். இந்தப் பதவி கிடைத்த சிவஞானம் பிள்ளை, பனகல் அரசருக்குப் பெரிய தொகையைக் கையூட்டாகக் கொடுத்த தாகக் கே. வி. ரெட்டி நாயுடுவின் குறிப்பேடு (24.11.-1923ஆம் நாள் குறிப்பு) சொல்கின்றதாம்.[18] எட்டயபுரத்தின் தலைமை யமைச்சராக (திவானாக) இருந்த அவருக்கே இந் நிலை!

## ஆளவந்தார் ஆண்டார்!

மாநிலச் சட்டப் பேரவைக்கு 1926ஆம் ஆண்டில் மூன்றா வது பொதுத்தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இந் நிலையைப் பயன்படுத்திக்கொண்டு இரவோடு இரவாக நயன் மைக் கட்சியிலிருந்து விலகித் தனி அரசியலரான குமாரமங் கலம் கிழார் டாக்டர் **பரமசிவ சுப்பராயன்** தலைமையமைச்ச ரானார். இவரே முதல் தமிழ் தலைமையமைச்சர். இவரது அமைச்சரவையில் ஏ. அரங்கநாத முதலியாரும் ஆர். ஏ. ஆரோக்கியசாமி முதலியாரும் ஆகிய தமிழர்கள் அமைச்சர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களாயினர். பின்னர் அமைச்சரவையில் மாற்றம் ஏற்பட, என். சேதுரத்தினம் ஐயரும், எசு. முத்தையா முதலியாரும் அமைச்சர்களாயினர். 1930ஆம் ஆண்டில் சுப்பராயனின் அமைச்சரவை கவிழ்ந்தது. மீண்டும் நயன்மைக் கட்சி ஆட்சிக்கு வந்தது. அத்துடன் தெலுங்கர்கள் மீண்டும் கொலுவேறினர். 1930 அக்டோபர் 7 முதல் 1932 நவம்பர் 4 வரையில், சித்தூரைச் சேர்ந்த **பொல்லினி முனுசாமி நாயுடு** என்னும் தெலுங்கர் தலைமையமைச்சராக இருந்தார். அதில் பி. டி. இராசனும் திருநெல்வேலியைச் சேர்ந்த எசு. குமாரசாமி ரெட்டியாரும் அமைச்சர்களாயினர். 1932 நவம்பர் 5 முதல் 1937 ஏப்ரல் 1 வரையில் ஆந்திரரான பொப்பிலி அரசர் தலைமையமைச்சராக ஆண்டார். 1937 ஏப்ரல் 1 முதல் 1937 சூலை 14 வரையில் சர். கூர்ம வெங்கட ரெட்டி நாயுடு இடைக்காலத் தலைமையமைச்சராக இருந்தார். இவ்வாறு அடுத்தடுத்து ஆந்திரர்களே நயன்மைக் கட்சி ஆட்சியில் தலைமையமைச்சராக வந்தனர். தமிழரான சர். **பி. டி. இராசன்** இரண்டு முறை முயன்றும் தலைமையமைச்சராக வரமுடியவில்லை. 1916ஆம் ஆண்டில் தோன்றியது முதல் 1937ஆம் ஆண்டில் மறைந்தது வரையில், நயன்மைக் கட்சியின் தலைவராகத் தமிழர் ஒருவரும் வரமுடியவில்லை.[19]

அது போக, 1920, 1923, 1926 ஆகிய ஆண்டுகளில் நடந்த தேர்தல்களில் சென்னை மாகாணத்தின் சட்டப் பேரவைக்குத் **தமிழ்ப் பகுதிகளிலிருந்து** தேர்ந்தெடுக்கப்பட்டோரில் மூன்றில் ஒரு பகுதிக்குமேல் தமிழரல்லாதோரே இருந்தனர்![20]

நயன்மைக் கட்சி ஆட்சிக்கு வந்த 1920ஆம் ஆண்டிற்கும் 1954ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட பழைய சென்னை மாகாணத்தின் அமைச்சரவைகளில் தெலுங்கரின் கொற்றமே கொடிக் கட்டிப் பறந்தது. அடியில் அதைக் காண்க:[21]

**சுப்பராயலு ரெட்டியார் அமைச்சு**
7.2.1920 முதல் 11.7.1921 வரை

| பெயர் | அதிகாரத்துறை | இனம் |
|---|---|---|
| ஏ. சுப்பராயலு ரெட்டியார்* | தலைமையமைச்சர்; பொது ஆட்சி | தெலுங்கர் |

* உடல்நலக்குறைவால் சுப்பராயலு ரெட்டியார் 1921ஆம் ஆண்டில் தலைமையமைச்சர் பதிவியிலிருந்து விலகவே, இராமராயநிங்கர் தலைமையமைச்சரானார். ஏ. பி. பாத்ரோ கல்வியமைச்சரானார். 1923ஆம் ஆண்டில், ரெட்டி நாயுடுவுக்கு மாறாக சிவஞானம் பிள்ளை அமைச்சரானார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | |
|---|---|---|
| பி. இராமராயனிங்கர் (பனகல் அரசர்) | உள்ளாட்சி | தெலுங்கர் |
| கூர்ம வெங்கட ரெட்டி நாயுடு | மேம்பாட்டுத்துறை | தெலுங்கர் |

**பனகல் அரசர் அமைச்சு**
19.12.1923 முதல் 3.12.1926 வரை

| | | |
|---|---|---|
| பி. இராமராயநிங்கர் (பனகல் அரசர்) | தலைமையமைச்சர்; பொது ஆட்சி | தெலுங்கர் |
| ஏ. பி. பாத்ரோ | கல்வி, பொதுப்பணி | ஒரியர் |
| டி. என். சிவஞானம் பிள்ளை | மேம்பாட்டுத்துறை, தொழில் | தமிழர் |

**டாக்டர் பி. சுப்பராயன் அமைச்சு**
4.12.1926 முதல் 27.10.1930 வரை

| | | |
|---|---|---|
| டாக்டர் பி. சுப்பராயன் | தலைமையமைச்சர்; உள்ளாட்சி | தமிழர் |
| ஏ. ரெங்கநாத முதலியார்* (1926–28) | மேம்பாட்டுத்துறை, கல்வி, தொழில் | தமிழர் |
| ஆர். ஏ. ஆரோக்கிசாமி* முதலியார் | உடல்நலம் | தமிழர் |
| எம். ஆர். சேதுரத்தின ஐயர் (1928_30) | அறநிலையம் | தெலுங்குப் பார்ப்பனர் |
| எசு. முத்தையா முதலியார் (1928_1930) | பொதுப்பணி, உடல்நலம் | தமிழர் |

**பொல்லினி முனிசாமி நாயுடு அமைச்சு**
27.10.1930 முதல் 31.1.1932 வரை

| | | |
|---|---|---|
| பி. முனிசாமி நாயுடு | தலைமையமைச்சர்; பொது ஆட்சி | தெலுங்கர் |
| எசு. குமாரசாமி ரெட்டியார் (1930_36) | கல்வி, தொழில் | தெலுங்கர் |

* ஆட்சிக்கு வந்து பதினைந்து மாதங்கள் கழித்துத் தன்னரசு(சுய ராச்சிய)க் கட்சியின் முடிவுக்கு மாறாகச் சைமன் ஆணையத்தைச் சுப்பராயன் வரவேற்றது பிடிக்காமல், இவ்விரு அமைச்சர்களும் பதவி விலகவே, என். சேதுரத்தினம் ஐயரும், எசு. முத்தையா முதலியாரும் அமைச்சர்களாயினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | |
|---|---|---|
| பி. டி. இராசன் (1930_37) | பொதுப்பணி | தமிழர் |

**பொப்பிலி அரசர் அமைச்சு**
5.11.1932 முதல் 1.4.1937 வரை

| | | |
|---|---|---|
| ரெங்காராவ் (பொப்பிலி அரசர்) | தலைமையமைச்சர்; பொது ஆட்சி | தெலுங்கர் |
| எசு. குமாரசாமி ரெட்டியார் (1930–36) | கல்வி, சுங்கம் | தெலுங்கர் |
| எம். ஏ. முத்தையா செட்டியார் | உள்ளாட்சி | தமிழர் |
| சர். பி. டி. இராசன் | மேம்பாட்டுத்துறை | தமிழர் |

**கூர்ம வெங்கட ரெட்டி நாயுடு அமைச்சு**
1.4.1937 முதல் 14.7.1937 வரை

| | | |
|---|---|---|
| கே. வி. ரெட்டி நாயுடு | தலைமையமைச்சர்; பொது ஆட்சி | தெலுங்கர் |
| ஆர். எம். பாலாட்டு | கல்வி, உடல்நலம் | தெலுங்கர் |
| கலிஃபுல்லா சாகிப் | பொதுப்பணி | தெலுங்கர் |
| ஏ. டி. பன்னீர்ச்செல்வம் | உள்துறை, பொருள் | தமிழர் |

**இராசகோபாலாச்சாரி அமைச்சு**
14.7.1937 முதல் 29.10.1939 வரை

| | | |
|---|---|---|
| இராசகோபாலாச்சாரி | தலைமையமைச்சர்; பொது ஆட்சி, பொருள் | தமிழ்ப் பார்ப்பனர் |
| டி. பிரகாசம் | வருவாய் | தெலுங்கர் |
| பி. கோபால் ரெட்டி | உள்துறை | தெலுங்கர் |
| யாகுப் ஃகாசன் | பொதுப்பணி | மலையாளி |
| டி. எசு. எசு. இராசன் | உடல்நலம் | மலையாளி |
| சி. ஜே. வர்க்கி | கல்வி | மலையாளி |
| கே. இராமன் மேனன் | சட்டம், சிறை | மலையாளி |
| வி. வி. கிரி | தொழில், தொழிலாளர் நலன் | தெலுங்கர் |
| பி. சுப்பராயன் | சட்டம், சிறை, வழக்குத்துறை | தமிழர் |
| எசு. இராமநாதன் | செய்தித்துறை | தமிழர் |
| வி. ஐ. முனிசாமிப்பிள்ளை | நிலவருவாய் | தமிழர் |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### டி. பிரகாசம் அமைச்சு
30.4.1946 முதல் 23.3.1947 வரை

| | | |
|---|---|---|
| டி. பிரகாசம் | தலைமையமைச்சர்; உணவு, பொருள் | தெலுங்கர் |
| பி. எசு. குமாரசாமி ராசா | வேளாண்மை | தெலுங்கர் |
| ருக்குமணி லட்சுமிபதி | மருத்துவம் | தெலுங்கர் |
| கே. கோட்டி ரெட்டி | இந்து அறநிலையம் | தெலுங்கர் |
| வேமுலு கூர்மையா | அரிசன நலம் | தெலுங்கர் |
| ஆர். இராகவ மேனன் | போக்குவரத்து | மலையாளி |
| டானியேல் தாமசு | உள்ளாட்சி | மலையாளி |
| கே. ஆர். கரந்த் | நிலவருவாய் | கொங்கணி |
| வி. வி. கிரி | கல்வி, தொழில், | தெலுங்கர் |
| கே. பாஃழ்யம் | சட்டம், சிறை, வழக்குத்துறை | தமிழ்ப் பார்ப்பனர் |
| டி. எசு. அவிநாசிலிங்கம் செட்டியார் | கால்நடை, தொழிலாளர் நலன் | தமிழர் |
| பி. வீராச்சாமி | ஊரகத் தொழில் | தமிழர் |
| எம். பக்தவத்சலம் | சட்டம் [இந்து அறநிலையம்] | தமிழர் |

### ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அமைச்சு
23.3.1947 முதல் 6.4.1949 வரை

| | | |
|---|---|---|
| ஓ. பி. இராமசாமி ரெட்டியார் | முதலமைச்சர்; காவல், அறநிலையம், சட்டம் | தெலுங்கர் |
| பி. கோபால் ரெட்டி | பொருள் | தெலுங்கர் |
| சீத்தாராம ரெட்டி | தொழில் | தெலுங்கர் |
| காலா வெங்கடராவ் | வேளாண்மை | தெலுங்கர் |
| வேமுலு கூர்மையா | அரிசன நலன் | தெலுங்கர் |
| டி. எசு. எசு. இராசன் | உணவு பங்கீடு | மலையாளி |
| டானியேல் தாமசு | மதுவிலக்கு | மலையாளி |
| கே. மாதவ மேனன் | வேளாண்மை, உணவு | மலையாளி |
| எம். பக்தவத்சலம் | பொதுப்பணி | தமிழர் |
| பி. சுப்பராயன் | உள்துறை, சட்டம் | தமிழர் |
| டி. எசு. அவிநாசிலிங்கம் செட்டியார் | கல்வி | தமிழர் |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | |
|---|---|---|
| கே. சந்திரமௌலி | கூட்டுறவு | தமிழர் |
| ஏ. பி. ஷெட்டி | சட்டம் [கூட்டுறவு] | துளுவர் |
| எசு. குருபாதம் | உள்ளாட்சி | தமிழர் |

**பி. எசு. குமாரசாமி ராசா அமைச்சு**
6.4.1949 முதல் 9.4.1952 வரை

| | | |
|---|---|---|
| பி. எசு. குமாரசாமி ராசா | முதலமைச்சர்; பொது ஆட்சி, காவல் | தெலுங்கர் |
| பி. கோபால் ரெட்டி | விற்பனை வரி | தெலுங்கர் |
| காலா வெங்கடராவ் | உடல்நலம் | தெலுங்கர் |
| பெருமாள்சாமி ரெட்டி | தொழில், சுரங்கம் | தெலுங்கர் |
| என். சஞ்சீவ ரெட்டி | மதுவிலக்கு, வீடு | தெலுங்கர் |
| எச். சீத்தாராம ரெட்டி | நிலவருவாய், தொழிலாளர் | தெலுங்கர் |
| பி. பரமேசுவரன் | அரிசன நலம் | தமிழர் |
| கே. மாதவ மேனன் | கல்வி, சிறை, வழக்குத்துறை | மலையாளி |
| ஜே. எல். பி. ரோசி விக்டோரியா | உணவு, மின் | ஆங்கில-இந்தியர் |
| கே. சந்திரமௌலி | கூட்டுறவு, உள்ளாட்சி | தமிழர் |
| ஏ. பி. ஷெட்டி | வேளாண்மை, கால்நடை | துளுவர் |
| டி. எசு. எசு. இராசன் | குமுகநலம் | மலையாளி |
| எம். பக்தவத்சலம் | இந்து அறநிலையம் | தமிழர் |

**இராசகோபாலாச்சாரியார் அமைச்சு**
10.4.1952 முதல் 13.4.1954 வரை

| | | |
|---|---|---|
| இராசாசி | முதலமைச்சர்; உள்துறை | தமிழ்ப் பார்ப்பனர் |
| ஏ. பி. ஷெட்டி | வேளாண்மை, கூட்டுறவு | துளுவர் |
| கே. வெங்கடசாமி நாயுடு | அறநிலையம், பதிவு | தெலுங்கர் |
| என். ரெங்கா ரெட்டி* | பொதுப்பணி | தெலுங்கர் |
| எம். வி. கிருஷ்ண ராவ்* | தொழில், போக்குவரத்து | தெலுங்கர் |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | |
|---|---|---|
| என். சங்கர ரெட்டி* | உள்ளாட்சி | தெலுங்கர் |
| எசு. பி. பி. பட்டாபி ராமராவ்* | ஊரக வளர்ச்சி | தெலுங்கர் |
| டி. சஞ்சீவையா* | அரிசன நலம், கூட்டுறவு | தெலுங்கர் |
| கே. பி. குட்டி கிருஃழ்ண நாயர் | சிறை, சட்டம், வழக்குத்துறை | மலையாளி |
| ஆர். நாகன கௌடா* | கால்நடை, சிங்கோனா | கன்னடர் |
| யூ. கிருஃழ்ணராவ் | உடல்நலம் | தெலுங்கர் |
| சி. சுப்பிரமணியம் | பொருள், உணவு | தமிழர் |
| வி. சி. பழனிச்சாமி கவுண்டர் | மதுவிலக்கு | தமிழர் |
| சண்முக இராசேசுவர சேதுபதி | பொதுப்பணி | தமிழர் |
| எம். ஏ. மாணிக்கவேலர் | நிலவருவாய் | தமிழர் |

மாண்டேகு–செம்சுஃபோர்ட் சீர்திருத்தங்களை 1920ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்திட்ட பின்னர் அமைக்கப்பெற்ற சென்னை மாகாண சட்டமன்றம் (Legislative Council) என்னும் மேலவைக்கு அதன் முதல் தலைவராகப் பி. இராசகோபாலாச் சாரியார் என்னும் தமிழ்ப் பார்ப்பனர் ஆளுநரால் அமர்த்தப் பெற்றார். 1923ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்ற இரண்டாவது மேலவைக்கும் அவரே தலைவரானார். 1924ஆம் ஆண்டில் எல். டி. சாமிக்கண்ணுப் பிள்ளை என்னும் கிறித்துவத் தமிழர் தலைவரானார். அவர் 1925ஆம் ஆண்டில் இயற்கை எய்திய மையால், எம். இரத்தினசாமி என்னும் கிறித்துவத் தமிழர் அம் மேலவையின் தலைவரானார். 1926ஆம் ஆண்டில் அமைந்த மேலவைக்கு சி.வி. எசு. நரசிம்மராசு என்னும் ஆந்திரத் தெலுங் கர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதையடுத்து வந்த நான்காவது சட்டமன்றத்தில், பி. இராமச்சந்திர ரெட்டி என் னும் ஆந்திரத் தெலுங்கர் அதன் தலைவரானார். இவ்வாறு

* 1953 அக்டோபர் 1 அன்று தனி ஆந்திர மாநிலம் அமைக்கப் பட்டதால், அது வரை ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் இராசாசி அமைச்சரவையிலிருந்த ரெங்கா ரெட்டி, கிருஃழ்ண ராவ், சங்கர ரெட்டி, பட்டாபிராம ராவ், சஞ்சீவையா, நாகன கௌடா ஆகியோர் தத்தம் பதவிகளைத் துறந்தனர். அவர்களுக்கு மாற்றாக, எம். பக்தவத்சலம், கே. இராசாராம், சோதி வெங்கடாச்சலம் ஆகி யோர் இராசாசியின் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டனர்.

www.tamilarangam.net



நயன்மைக் கட்சியின் ஆட்சியின்போது மேலவைத் தலைவர் பதவியையும்கூடத் தெலுங்கரே தட்டிக்கொண்டு போயினர். அதனால், அம் மேலவையும், தெலுங்கரின் கூடாரமானது. தமிழகத்தின் மாவட்ட ஆட்சிமன்றங்களிலும், வட்ட (தாலுக்கா) மன்றங்களிலும்கூட அவ் வந்தேறித் தெலுங்கரே அடுத்தடுத்துத் தலைவராயினர்.[22]

1920ஆம் ஆண்டில் நடைபெற்ற மேலவைத் தேர்தலுக்கு 33 பொதுத்தொகுதிகள் இருந்தன. அவற்றில் தமிழரல்லாதோர் 11 பேராகவிருந்து, மூன்றிலொரு பங்கினராயினர். 1933ஆம் ஆண்டில் சென்னை மாகாண சட்டமன்றத்திற்குப் பொதுத்தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டோரிலும் தமிழரல்லாதோர் மூன்றில் ஒரு பங்குக்கும் கூடுதலாகவே இருந்தனர்.

சென்னை உயர்வழக்கு(நீதி)மன்றம் 1801ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. பார்ப்பனரல்லாதவரை உயர் வழக்கு(நீதி) மன்றத்தின் நடுவராக்கிய 1908ஆம் ஆண்டு முதல் 1949ஆம் ஆண்டு வரையிலான நாற்பத்தொரு ஆண்டுகளில், ஒரே ஒரு பார்ப்பனரல்லாத தமிழர் மட்டுமே அதன் நடுவராக வர முடிந்தது! அந் நிலை திராவிடக் கட்சிகள் கோலோச்சிய இருபத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிறகும் தொடர்கின்றது. சென்னை உயர் வழக்குமன்றம் தோன்றிய பின்னர் 1948ஆம் ஆண்டு வரை ஆங்கிலேயர் மட்டுமே அதன் தலைமை நடுவராக அமர்த்தப் பெற்றனர். 1948ஆம் ஆண்டில் அவ் வழக்குமன்றத்தின் ஆங்கிலேயரல்லா நடுவராக முதன்முதலில் அமர்த்தம் பெற்றவர் ஆந்திரத் தெலுங்கரான **பி. வி. இராசமன்னார்** என்பவரேயன்றி ஒரு தமிழரல்லர்! பதவிமூப்புக்கேற்ப (seniority) அது தமிழ்ப் பார்ப்பனர் ஒருவருக்கே கிடைத்திருக்க வேண்டும். ஆனால், பார்ப்பனர் எதிர்ப்புப் பூச்சாண்டியை வைத்துத் தெலுங்கரான ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரின் அமைச்சு காட்டிய எதிர்ப்பினால், அப் பதவி அத் தமிழ்ப் பார்ப்பனருக்குக் கிடைக்கவில்லை.[23]

இன்றும் அந்த அவலநிலை தொடர்கின்றது. சென்னை உயர் வழக்குமன்றத்தின் இன்றைய தலைமை நடுவர் ஒரு கன்னடராவார்.

முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட சென்னை மாநகராட்சியின் தலைவர் (மேயர்) பதவி ஆங்கிலேயரிடமிருந்து 'இந்தியருக்கு' வந்த பின்னர், ஒரு சிலர் தவிர, நகரத் தந்தையாக வந்த எல்லோருமே தெலுங்கராவர். பேரிச்

www.tamilarangam.net



செட்டியான ஒட்டிலிங்கம் தணிகாச்சலம் செட்டி (1874–1929) என்னும் தெலுங்கர் ஒரு பெருவணிகராக இருந்ததுடன், நயன் மைக் கட்சியின் பெருந்தலைகளில் ஒருவராகவும், 1926ஆம் ஆண் டில் சென்னை மாநகராட்சியின் தலைவராகவும் இருந்தவர். குண்டூரைச் சேர்ந்த சாமி வெங்கடாச்சலம் செட்டி என்னும் கோமுட்டிச் செட்டியான தெலுங்கர், அதே போல் பெருவணி கர். இவர் 1919 முதல் சென்னை மாநகராட்சியின் உறுப்பின ராக இருந்ததுடன், 1929ஆம் ஆண்டில் அதன் தலைவராகவும் ஆனவர். பின்னர், 1923ஆம் ஆண்டிலும் 1926ஆம் ஆண்டிலும் சென்னை மாகாண சட்டமன்றத்தின் (மேலவையின்) உறுப்பின ராகவும் விளங்கியவர். வைசியரான எசு. வெங்கடாச்சலம் செட்டி (1889–1958) என்னும் தெலுங்கர், 1925–26ஆம் ஆண்டு களில் சென்னை மாநகராட்சியில் நகரத்தந்தையாக இருந்தவர். ஆனால், நயன்மைக் கட்சியின் உறுப்பினராகவும் திராவிட இயக்கத்தின் தோற்றுநருமான டாக்டர் சி. நடேசன் பல்லாண்டு காலம் சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகவிருந்தும் — அதில் முன்னணிப் பங்கை வகித்துவந்திடினும் — தமிழர் என் னும் ஒரே காரணத்தினால் அவர் நகரத்தந்தையாக ஆக முடிய வில்லை![24] அம் மாநகராட்சியில் வந்தேறித் தெலுங்கர் நலன் கள் கோலோச்சியமையே அதற்கான காரணமாகும்.

நயன்மைக் கட்சியின் ஆட்சிக்காலத்தில்தான், தெலுங்கரை மட்டுமே சென்னை மாநகராட்சியின் ஆணையர் பதவிக்குத் தொடர்ந்து அமர்த்துவது ஒரு வழக்கமாகியது.[25]

1937க்குப் பிறகு ஆந்திரப் பேரவை செயலற்றுப் போனது. இதனுடைய தலைவர்கள் பெரும்பாலோர் பேராயக் கட்சியின ராக இருந்தனர். அப் பேராயக் கட்சிக்குள்ளிருந்தே தனி ஆந்திரம் கேட்டு அவர்கள் போராட விரும்பியதால்தான் அந்த ஆந்திரப் பேரவை செயலிழந்தது.

1938 மார்ச்சு 30 அன்று சென்னை மாகாணத்தை மொழி வழியில் பிரித்திட வேண்டுமெனச் சென்னை சட்டப் பேரவை ஒரு தீர்மானம் இயற்றியது. இன்னொரு புதிய மாநிலத்தை அமைப்பதை அரசுச் செயலரான செட்லாந்து கோமகன் மிகக் கடுமையாக எதிர்த்தார். அதனால் ஆந்திர மாநிலம் அமைக் கப்படவில்லை.[26]

இந்தியப் பேராயக் கட்சியினுடைய செயப்பூர் மாநாட்டில் மொழிவழியில் மாநிலங்களை அமைப்பதைப்பற்றி ஆராய்ந்து கருத்துரைக்க ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


சவகர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், பட்டாபி சீதாராமய்யா ஆகியோர் இடம்பெற்றனர். **ஆந்திரத்தைத் தவிர** பிற மாநிலங்களை மொழிவழியில் அமைப்பதைத் தள்ளிப்போட வேண்டுமென இக் குழு பரிந்துரைத்தது. இதனடிப்படையில் சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திரத்தைப் பிரிப்பதைப் பற்றிய நடைமுறைகளை வகுத்துத் தருவதற்காகச் சென்னை அரசு ஒரு 'பிரிவினைக் குழுவை' அமைத்தது.[27] அதில் பெரும்பாலும் தெலுங்கரே இருந்தனர். அன்று சென்னை மாநில முதலமைச்சராக விருந்த பி. எசு. குமாரசாமி ராசாவான தெலுங்கர், இக் குழுவின் தலைவராக இருந்தார். இக் குழுவில் இருந்தவர்களில் டி. பிரகாசம், பி. கோபால ரெட்டி, என். சஞ்சீவ ரெட்டி, காலா வெங்கடராவ் ஆகியோர் யாவரும் தெலுங்கர்கள். கே. மாதவ மேனன் ஒரு மலையாளி. எம். பக்தவத்சலம், டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆகிய இருவர் மட்டுமே தமிழ்நாட்டவர். இந்த அழகில் தமிழரினத்தின் நலன்களைக் கோட்டை விடுவதற்குத் தமிழ்நாட்டவரான இவர்களுக்கு மட்டுமே 'இந்தியத் தேசியப்' பேய் பிடித்திருந்தது!

## பல்கலைக்கழகத்தைப்பற்றி

1920ஆம் ஆண்டுத் தேர்தலில் பல ஆந்திரர்களும் தமிழகத் தெலுங்கர்களும் சென்னை மாகாணச் சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் 1921ஆம் ஆண்டில் ஒரு முறையும், 1922ஆம் ஆண்டில் இன்னொரு முறையும், ஆந்திரருக்கென ஒரு தனிப் பல்கலைக்கழகம் வேண்டுமெனக் கேட்டுச் சட்டப் பேரவையில் வலுவாகக் குரலெழுப்பினர். எம். சூரிய நாராயணா என்னும் தெலுங்குப் பார்ப்பனர், தெலுங்கருக்கென ஒரு தனி ஆந்திர மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்னும் ஒரு தீர்மானத்தை 1922ஆம் ஆண்டில் அச் சட்டப் பேரவையில் முன்மொழிந்தார். இத் தீர்மானம், ஆட்சிமன்றத்தில் (Executive Council) சிறிது சிக்கலைத் தோற்றுவித்தது. இறுதியில் நயன்மைக் கட்சி விற்றுவந்த 'பார்ப்பனரல்லாதார் ஒற்றுமை' என்னும் கொள்கை அப்புறமாகித் தெலுங்கரின் தேசிய இனநலன்களே மேலோங்கின. அப்போது அமைச்சர்களாயிருந்த மூவரில் ஒருவரான ரெட்டி நாயுடு தம்முடைய நாட்குறிப்பில் இவ்வாறு எழுதினார்:

> "வடக்கு சர்க்கார் மாவட்டங்களில் இருக்கின்ற தெலுங்கர்கள் ஒரு தனி ஆந்திர மாநிலம் வேண்டுமெனக் கேட்டு எப்பொழுதுமே கிளர்ச்சி செய்து வந்துள்ளனர். கோடை

www.tamilarangam.net



மாவட்டங்களில் (Ceded Districts) இருக்கின்ற தெலுங்கர்களோ அதற்கு ஆதரவு காட்டவில்லை. ஆந்திர மாநிலம் ஒரு தேவை என நான் தனிப்பட்ட முறையில் எப்போதுமே கருதிவந்துள்ளேன். ஆனால், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என அண்மைக் காலங்களில் வந்துள்ள வேற்றுமைகளைக் கருதி என்னுடைய போக்கு மாறியுள்ளது. புதிதாக அமைக்கப்படுகின்ற மாநிலங்களின் சட்டமன்றங்களிலும் பொது ஊழியங்களிலும் பார்பனரல்லாதாருக்குப் பெரும்பான்மை இருக்கும் எனச் சட்டப்படி உறுதிப்பாடு தரப்பட்டாலும், ஆந்திரர்களுக்கு ஒரு தனி மாநிலம் தருவதை நான் இன்னும் ஆதரிக்கின்றேன்."[28]

இவற்றை எல்லாம் கண்டும்கூட, 'திராவிடப்' பொய்மானை அணைத்துக் கெட்ட தமிழர் சிலரின் கண்களிலிருந்து அத் திராவிட மாயை விலகவில்லை.

1925ஆம் ஆண்டில் ஆந்திரருக்கென ஒரு தனிப் பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கான ஒரு வரைவுச் சட்டத்தைச் சட்டப் பேரவையின் முன்வைத்தபோது, ரெட்டி நாயுடு அதற்குத் "தெலுங்குப் பல்கலைக்கழக வரைவுச் சட்டம்" எனப் பெயரை மாற்றிவைக்க வேண்டுமெனக் கருத்துரைத்தார்.[29] இதற்கு நேர் மாறாக, நயன்மைக் கட்சியைச் சேர்ந்த தமிழரான டாக்டர் நடேச முதலியார், அத் தனி ஆந்திரப் பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கான வரைவுச் சட்டம்,

> "பார்ப்பனரல்லாக் குமுகத்தின் உறுப்பினர்களுக்கிடையே வேற்றுமை நெடியைக் கிளப்புகிறது."[30]

என்றும்,

> "தெலுங்கர்களைத் தமிழர்களிடமிருந்து பிரிக்கவே முடியாது; நாம் திராவிடர்கள்; நாம் பிரியமாட்டோம்"[31]

என்றும் சொல்லி ஒப்பாரி வைத்த கையறுநிலையை என்னவெனச் சொல்வது! இதுதானே தமிழர்களின் இளித்தவாய்த்தனம்!

இந் நிலையில், தமிழர்க்கென ஒரு தனிப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கையைத் தமிழர் சிலர் எழுப்பத் தொடங்கினர். 'சென்னை மாகாணத்தின் தலையாய மொழிவழிப் பகுதி' ஒவ்வொன்றிற்கும் ஒரு பல்கலைக் கழகத்தை அமைக்கச் சொல்லிப் பரிந்துரைத்து, சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றம் ஒரு தீர்மானத்தை இயற்றியது. இத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை அமைப்பதைப்பற்றி 1926

www.tamilarangam.net



மார்ச் 22 அன்று மாநில சட்டப் பேரவையில் நடந்த கலந் தாய்வுக்குப் பிறகு, தமிழ்ப் பல்கலைக்கழகக் குழு அமைக்கப் பட்டது. இதற்கு நயன்மைக் கட்சியின் மேம்பாட்டுத்துறை அமைச்சராகவிருந்த டி. என். சிவஞானம் பிள்ளை முதல் தலை வரானார். தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைப்பதை பி. டி. சீனி வாச ஐயங்கார், சோமசுந்தர பாரதியார் போன்ற தமிழ் அறிஞர் கள் ஆதரித்தனர். ஆனால், அக் குழுவோ தமிழ்ப் பல்கலைக் கழகத்தை அமைக்கப் போதிய பணமில்லை எனச் சொல்லி சர். அண்ணாமலைச் செட்டியாரிடம் அறக்கொடை கேட்டு மண்டி யிட்டு நின்றது. இறுதியாக 1929ஆம் ஆண்டில் தென்னார்க் காட்டுச் சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என் னும் பெயரில் ஒரு புதிய பல்கலைக்கழகத்தைத் தொடங்கியது. ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைவதைத் தெலுங்கரும் தமிழ ரில் திராவிடப் பித்தரும் சேர்ந்து கெடுத்தனர். அந்த அண்ணா மலைப் பல்கலைக்கழகம் தமிழோடு சங்கதத்தையும் (சமற்கிரு தத்தையும்) சேர்த்து வளர்க்கும் என்றும் அக் குழு செய்த முடிவு வேறு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியது.[32] இதைவிடத் தலைகுனியச் செய்த நிகழ்வு என்னவெனில், அத் தமிழ்ப் பல்கலைக்கழகக் குழுவின் முன்னால் போய் அத்தகைய பல் கலைக்கழகம் வேண்டுமா வேண்டாமாவெனச் சான்றுரைத்த ஆங்கிலப்பித்தரான இராமசாமி முதலியார், அப் பல்கலை கழகத்திற்குத் 'தமிழ்ப் பல்கலைக்கழகம்' எனப் பெயரிடுவதற்கு மாறாக 'திராவிடப் பல்கலைக்கழகம்' எனப் பெயரிட வேண்டு மென வழக்காடியதுதான்![33]

சேரலத்தின் திருவாங்கூர் மன்னராட்சியும், தெலுங்கரின் ஆந்திரப் பல்கலைக்கழகத்தைப் போன்று, 1937ஆம் ஆண்டில் மலையாளிகளுக்கு என ஒரு 'கேரளப் பல்கலைக்கழக'த்தைத் திருவனந்தபுரத்தில் தொடங்கியது.

## முளையிலேயே கெட்டது

இது மட்டுமா? ஆந்திரர் இயக்கம் தொடங்கியது முதல் — பார்ப்பனராயினும் பார்ப்பனரல்லாதாராயினும் — தெலுங்கர் நடத்திய அரசியல் கூட்டங்கள் யாவும் தெலுங்கு மொழியி லேயே நடத்தப்பட்டன. ஆனால், நயன்மைக் கட்சிக் கூட்டங் களில் மட்டும் தமிழை ஆளவிடவில்லை. தமிழ்ப் பகுதிகளில் நடந்த அக் கட்சியின் கூட்டங்கள் எல்லாம் ஆங்கிலத்திலேயே நடத்தப்பட்டன.

www.tamilarangam.net



'இந்தியத் தேசியம்' பேசிய பேராயக் கட்சியில்கூட இத்தகைய தமிழ் எதிர்ப்பு நிலை அவ்வளவாக இல்லை. இந்து நாளேட்டின் ஆசிரியராகவிருந்த கஸ்தூரிரங்க ஐயங்கார், 1906ஆம் ஆண்டளவிலேயே பேராயக் கட்சியின் கூட்டங்களையெல்லாம் தமிழிலோ தெலுங்கிலோ நடத்த வேண்டுமெனச் சொன்னதுண்டு. இதிலிருந்து குறிப்பறிந்துகொண்ட ஆரிய சமற்கிருதச் சார்பு அன்னி பெசன்ட் அம்மையார்கூட மக்கள் பேசிப் பழகுகின்ற மொழிகளிலேயே கூட்டங்களை நடத்துவது நல்லது எனச் சொன்னார்.[34] இதனடிப்படையில், உள்ளாட்சி இயக்கத்தைச் சேர்ந்த டாக்டர் பி. வரதராசுலு நாயுடுதான் 1917ஆம் ஆண்டில் முதன்முதலாக வடவார்க்காடு மாவட்டத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் முழுவதும் தமிழிலேயே உரையாற்றி வரலாறு படைத்தவர்.[35] தமிழ்நாட்டுத் தெலுங்கரான வரதராசுலு நாயுடு, **பிரபஞ்சமித்திரன்** என்னும் இதழையும், **தமிழ்நாடு** என்னும் ஏட்டையும் தமிழில் நிறுவியவர். ஆயினும், பேராயக் கட்சியினராகவிருந்த அவர், 1940ஆம் ஆண்டில் இந்துவெறி இயக்கமான இந்து மகாசபையின் பொதுச்செயலாளராகவும், 1942–44ஆம் ஆண்டுகளில் அதன் துணைத்தலைவராகவும் இருந்துவந்தவருமாவார்![36]

ஆந்திர இயக்கம் தொடங்கியது முதல் ஆந்திரப் பேராயக் கட்சி தெலுங்கு மொழியை ஆளத் தொடங்கியது. ஆனால், பொதுக்கூட்டங்களில் தமிழை ஆள்வதற்கு வெள்ளோட்டம் விட்டவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு தெலுங்கர்தான் என்பது புதிர்தான்! இதற்கடுத்து 1919 ஆகத்து 23 அன்றுதான் பேராயக் கட்சியின் கூட்டங்களை இனி தமிழில்தான் நடத்த வேண்டும் என்னும் தீர்மானத்தை நிறைவேற்றச் செய்வதில் சோமசுந்தர பாரதியார் வெற்றிகண்டார்![37] ஆனால், செத்து மடியும் வரையில் தெலுங்கரின் மேட்டிமையையும் நலன்களையும் கருதியே செயல்பட்டுவந்த நயன்மைக் கட்சி மட்டும், தமிழரிடையே ஆங்கிலத்தை ஆள்வதில் விட்டுக்கொடுக்கவில்லை.

இந் நிலையில், தமிழ்த் தேசியக் கருத்துக்கள் மெல்ல அரும்பிக்கொண்டுதான் இருந்தன. ஆனால், அக் கருத்துகளை ஊன்றிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, பொன்னம்பலம் பிள்ளை முதலானோரும் சிவனியக் கொள்கையில் தங்களைப் புதைத்துக்கொண்டிருந்தது ஒரு முரணியாகும்.

அவர் போன்றோரின் திராவிடக் கொள்கைக்கு அப்பால், தமிழர்கள் ஒரு நாடு என்னும் தேசியக் கொள்கை முதன்முதலில்

www.tamilarangam.net



கருவெடுத்தது பெரும்பாவலர் சி. சுப்பிரமணிய பாரதியிடம் (1882--1921) தான் என்பதும் ஒரு புதிராகும்.

**"செந்தமிழ்நா டென்னும் போதினிலே இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே எங்கள்**
**தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு**
**சக்தி பிறக்குது மூச்சினிலே"[38]**

என்னும் பாரதியின் பாடலில் வரும் நாட்டுணர்ச்சி உள்ளத்தின் அடியிலிருந்து கொப்புளித்து வந்த பேருணர்ச்சி என்பதை நாம் பார்க்கத் தவறவில்லை.

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்"[39]**

என அடித்துச் சொல்லியதோடு, தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்யச் சொன்னவரும் அப் பாரதிதான். சங்கதத்திற்கு (சமற் கிருத்திற்கு) முதலிடத்தைத் தரும் பார்ப்பனர் குமுகத்திலிருந்து வந்தவராயினும், அவர் காட்டிய தமிழுணர்ச்சி நெஞ்சைக் கவர வல்லது. ஆனால், பாரதியிடமிருந்த தமிழ்ப்பற்றையும் தமிழ்த் தேசிய உணர்வையும் எதிரொளிக்கும் இத்தகைய பாடல்களோ, ஒரு சிலவாக மட்டுமே இருக்கின்றன.

பாரதியிடம் வெளிப்பட்ட இத் தமிழ்த் தேசிய உணர்ச்சி, விரைவில் அணைந்துவிட்டது. அவரை ஆட்கொண்ட 'இந்துத் தேசிய' உணர்வும், அதனுடைய புறவெளிப்பாடான இந்தி(ய)த் தேசிய உணர்வும், அவரிடமிருந்த தமிழ்த் தேசிய உணர்வைப் புதைத்துவிட்டன. அன்று ஆரியக் கொள்கையை ஏந்திவந்த இறைநெறிக் கழகம் (Theosophical Society), பிரமக் கழகம் (பிரம சமாசம்), ஆரியக் கழகம் (ஆரிய சமாசம்) போன்ற மாற்றுப் புலத்து சமயவழி அரசியல் அமைப்புகள் எழுப்பிய கருத்தியல் பாரதியார் போன்றோரை தாக்கித் தன்வயமாக்கிக் கொண்டன. அதனால், அப் பாரதியிடம் அரும்பிய தமிழ்த் தேசிய ஓர்மை, தொடக்கத்திலேயே பெரிய இடருக்குள்ளாகியது.

### மாற்றார் உணர்த்தியும், கற்றாரில்லை!

தமிழர்கள் ஒரு நாடாக உருப்பெற வேண்டுமென்னும் குரல் முதன்முதலில் எழுந்ததே தமிழரல்லாத சிலரிடம்தான் என்பதும் ஒரு புதிர்தான்! தமிழரெதிர்ப்பையும் தெலுங்கு தேசிய இனச் சார்பையும் மூடிவைத்துக்கொண்டு பார்ப்பனரல்லாதார்

www.tamilarangam.net



ஒற்றுமை எனப் புறத்தே பேசிவந்த நயன்மைக் கட்சியோ, சென்னை மாகாணத்திற்கு இந்திய அரசுக்குள்ளேயே மாநிலத் தன்னாட்சி மட்டுமே தந்தால் போதுமெனக் கூறத் தொடங்கியது. ஆனால், இப் 'பார்ப்பனரல்லாதார்' இயக்கத்துடன் அவ்வளவு தொடர்பில்லாத பார்ப்பனரல்லா மலையாளியான சி. சங்கரன் நாயர் என்பவர்தான் தமிழர் யாவரும் ஒரு 'தனி நாடாக' (separate nation) இருப்பதை முதன்முதலில் வெளிப் படுத்தினார் என்பதும் இன்னொரு வரலாற்றுப் புதிராகும்! தில்லியில் கொலுவிருந்த மாநிலங்களின் மன்றத்தில் (Council of States) 1926 மார்ச் 15 அன்று பேசிய சி. சங்கரன் நாயர்:

"தமிழ் பேசும் மரபினத்தவர் வாழும் பத்து மாவட்டங்களை முழுமையான தன்னாட்சியைக் கொண்ட ஒரு மாநில மாகக் கட்டமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, இந்திய அரசு மாட்சிமை தங்கிய (ஆங்கி லேயப்) பேரரசரின் அரசுக்கு அறிவுரைக்க வேண்டும்"[40]

என்று சொன்னார். அத்துடன்

"இந்தியாவில் அடங்கிய வேறொரு தேசத்திலுள்ள அள வுக்குத் 'தமிழ்த் தேசம்' அறிவாண்மையுடையது"[41]

என்றும் அடித்துக் கூறினார்.

சங்கரன் நாயருக்கு அடுத்து, டாக்டர் பி. வரதராசுலு நாயுடு, 1926 அக்டோபர் 9 அன்று 'ஒன்றியத் தமிழ் இந்திய நாட்டைத் தோற்றுவிக்கவும் வளர்க்கவும்' ஓர் அமைப்பைத் தொடங்கினார்.[42] ஆயினும், சங்கரன் நாயரும் வரதராசுலு நாயுடுவும் தமிழர்க்குத் தனிநாடு வேண்டும் என்றெழுப்பிய குரலை யாரும் பொருட்படுத்தவில்லை.

இந்தி(ய)த் தேசியத்தில் வீழ்ந்துகிடந்த திரு. வி. கலியாண சுந்தரனார், 1920 சூலையில் **தேச பக்தன்** ஏட்டை விட்டு, **நவசக்தி** ஏட்டைத் தொடங்கினார். அப்போது அவர் தமிழ், தமிழர், தமிழ்நாடு என்றெல்லாம் கூடுதலாக எழுதத் தொடங்கினார். இப் போக்கு அவருடைய 'இந்தியத் தேசியத்தை'யே கருவறுக்கவல்ல எதிர்நீச்சலாக இருந்தது அவருக்கே புலப்படா தது ஒரு புதிர்தான். அத் தமிழ்த் தேசிய உணர்ச்சியை ஆற்றுப் படுத்தித் தமிழர்க்குத் தனிநாட்டுரிமை வேண்டுமென்றோ, அத் தமிழர் ஒரு நாடாக வேண்டுமென்றோ, இயக்கவழியில் நெறிப் படுத்திய போங்கு திரு. வி. க.விடம் இருக்கவில்லை.

தென்னிந்திய சிவனியக் கொள்கையின் வழியாக வந்த கருத்துகளே இவரது தமிழுணர்வுக்கு ஆற்றுக்கால் அமைத்துக்

www.tamilarangam.net


கொடுத்தன. அச் சிவனியக் கொள்கையின் வழியில் வந்த மறைமலையடிகள், தனித்தமிழை ஓர் இயக்கமாக்கினார். இந்தி எதிர்ப்புக்கு ஊக்கம் தந்தார். இராசாசி கொண்டுவந்த இந்தித் திணிப்பை 1948 ஆம் ஆண்டில் சோமசுந்தர பாரதியாரும்கூட எதிர்த்தார். இவை யாவும், தெளிவான தமிழரின விடுதலைக் கருத்தியலாக மலரவில்லை.

## கூட்டிக் கழித்தால்...

இப் பின்புலத்தில், நயன்மைக் கட்சியால் தமிழர்க்கு வந்த நன்மைகளையும் தீமைகளையும் முறையாகக் கூட்டிக் கழித்துப் பார்க்க வேண்டும்.

பழைய சென்னை மாகாணத்தில் தமிழர் இழந்த தமிழ்ப் பகுதிகளில் மட்டுமே நயன்மைக் கட்சியால் வளர முடிந்தது. கன்னடப் பகுதிகளிலோ, ஆந்திரப் பகுதிகளிலோ, மலையாளப் பகுதிகளிலோ பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் அரசியலை கன்னட, தெலுங்கு, மலையாளித் தலைவர்கள் வேண்டுமென்றே பரப்பவில்லை. அவர்கள் தமிழரை மட்டுமே ஒன்றுபடாமல் வைத்தனர். தத்தம் மேட்டிமையை உறுதிப்படுத்திக் கொள்வ தற்காகவே அவ்வாறு செய்தனர் என்பதைக் காலம் மெய்ப் பித்துவிட்டது. திராவிடக் கொள்கை, ஆந்திரத்திலோ கேரளத் திலோ கருநாடகத்திலோ எடுபடவில்லை. கட்சியையும் சாதி யையும் மறந்து தெலுங்கரெல்லாம் ஆந்திரப் பெருமக்கள் அவை யின் (ஆந்திர மகாசன சபாவின்) கீழ் ஒன்றுபட்டனர். அவ் வாறே சாதியையும் கட்சியையும் ஒதுக்கிவைத்துவிட்டு மலை யாளிகள் யாவரும் கேரளக் கழகத்தில் (கேரள சமாசத்தில்) ஒன்றுதிரண்டனர். தமிழரை மட்டுமே பார்ப்பனர்-பார்ப்பன ரல்லாதார் எனக் கன்னடர்களும் தெலுங்கர்களும் மலையாளி களும் பிளவுபடுத்தினர். தெலுங்கர்களும் மலையாளிகளும் துளுவர்களும் இனத்தால் ஒன்றுபட, தமிழர்கள் சாதியால் மேன்மேலும் கூறுபட்டனர். உள்ளபடியே, தமிழ்ப் பார்ப்ப னரை எல்லாம் அரசுப் பதவிகளிலிருந்து இறக்கிவிட்டுப் பார்ப் பனரல்லாத் தெலுங்கர்களும் மலையாளிகளும் அந்த இடங் களில் தாங்கள் போய் அமர்வதற்கான ஒரு நொண்டிச் சாக் காகவே அவர்களின் பார்ப்பனர் எதிர்ப்பு இருந்தது. தமிழ்ப் பார்ப்பனரை அகற்றிய இடங்களிலெல்லாம் தெலுங்கர்களும் மலையாளிகளுமே தமிழகத்தில் மேன்மை பெற்றனர் என்பதைக் கள ஆய்வுகள் தெளிவாகக் காட்டவல்லன.

www.tamilarangam.net



இந்த அவல நிலைக்குச் சாதிவெறி என்னும் பேய் பிடித்திருந்த தமிழ்ப் பார்ப்பனரும் பாதிக்குமேல் பொறுப்பாவார். இத் தமிழ்ப் பார்ப்பனர், ஆரியக் கொள்கையில் அறிவிழந்து போனவரர்க இருந்தனர். அவர்களிடம் தமிழ்ப் பற்றும் தமிழ் நாட்டுப் பற்றும் தமிழினப் பற்றும் இன்மையால் இந்த நிலைக்கு அவர்களும் பெரிய காரணமாயினர். பன்னாட்டின சென்னை அரசின் கீழிருந்த தமிழரினமோ, இதனால் தாங்கள் 'திராவிடர்' என்பதை ஒப்புக்குக்கூட ஏற்றுக்கொள்ளாத 'திராவிடரின்' வேட்டைக்காடாகியது. தமிழகத்தில் பிறந்து வளர்ந்தவராக, வீட்டில் தெலுங்கும் வெளியில் தமிழும் பேசிவந்த 'இருமொழியர்' மட்டுமே தங்களைத் 'திராவிடர்' என அழைத்துக்கொண்டனரேயன்றி, ஆந்திரர்கள் என்றுமே திராவிடர் எனத் தங்களை விரும்பி அழைத்துக்கொண்டதில்லை. மலையாளிகளும் கன்னடர்களும் துளுவர்களும்கூட அவ்வாறு திராவிடராகவில்லை. ஆனால், இளித்தவாய்த் தமிழர் மட்டுமே திராவிடர் ஆயினர். தெலுங்கர்களும் மலையாளிகளும் கன்னடர்களும் தேசிய இன உணர்வை முன்னால் வைத்துச் சாதி உணர்வைப் பின்னால் வைத்தனர். முன்னவர்கள் இனவழியில் ஒன்றுபட்டனர். தமிழரோ சாதிவழியில் சுக்குநூறாகினர். இத் திராவிட மரபினால் தான் தமிழினம் இன்று சாதிக்கொரு மாநாடு நடத்திக் கெட்டழிந்து கொண்டிருக்கிறது.

## திராவிடத்தால் தொலைந்த தமிழன்!

தமிழர் மட்டுமே உணர்வாலும் செயலாலும் திராவிடர் ஆக்கப்பெற்றனர். தமிழ் பேசும் பகுதிகளுக்கு அப்பாற்பட்ட தெலுங்கர்களோ மலையாளிகளோ கன்னடர்களோ அவ்வாறு திராவிடராகவில்லை. கன்னடரும், மலையாளிகளும், தெலுங்கரும் திராவிடர் என்னும் சொல்லையும்கூட ஆள்வதில்லை. பார்ப்பனரல்லாதாரின் ஏடுகளுக்குச் சூட்டிய பெயர்களை எடுத்துக்கொள்ளுங்களேன்! தென்னிந்திய நலவுரிமைக் கழகம் 1917 பிப்ரவரி 26 அன்று **ஜஸ்ட்டிஸ்** ஏட்டைத் தொடங்கியது. தமிழில் **திராவிடன்** என்னும் ஏட்டை 1917க்கு இடையில் கொண்டுவந்தது. ஆனால் தெலுங்கிலோ, 1885ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற **ஆந்திரப் பிரகாசிகா** என்னும் ஏட்டை வாங்கிக்கொண்டு அதைத் 'திராவிடன்' என்று பெயர் மாற்றாமலேயே 'ஆந்திரப்' பெயர் ஒலிக்க அந்த ஏட்டை நடத்திவந்தது. ஆந்திரப் பேராயக் கட்சி வட்டமும்கூட **ஆந்திரப் பத்திரிகா** என்னும் பெயரில்தான் தாளிகையை வெளியிட்டது. மலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாளிகளும் **கேரள சஞ்சாரி**, **கேரளோதயம்**, **மலையாளி** என்னும் பெயர்களில்தாம் ஏடுகளை நடத்தினரேயன்றி 'திராவிடன்' என்னும் பெயரை என்றும் சூட்டிக்கொண்டதில்லை. நயன்மைக் கட்சி தமிழில் கொணர்ந்த ஏட்டிற்கு மட்டுமே **திராவிடன்** எனப் பெயர் சூட்ட முடிந்தது.[43]

இது போக, 1890ஆம் ஆண்டில் இரட்டைமலை சீனிவாசனால் (1859–1945) தொடக்கப்பட்ட தொல்தமிழர்களின் அமைப்பான **பறையர் பெருமக்கள் அவை** (பறையர் மகாசன சபை), 1910ஆம் ஆண்டுக்குப் பிறகு **ஆதிதிராவிடர் பெருமக்கள் அவை** (ஆதிதிராவிடர் மகாசன சபை) ஆகியது. தொல்தமிழர்கள் மட்டுமே 'ஆதிதிராவிடர்' ஆயினர். நலிந்த தெலுங்கு சாதியினர் 'ஆதி ஆந்திரர்' என்றும், நலிந்த சாதி கன்னடர்கள் 'ஆதிகருநாடகர்' என்றும் ஆயினர். நலிந்த மலையாளச் சாதியினர் 'ஆதிகேரளர்' என்றாகினர். தமிழரில் நலிந்த சாதியினர் மட்டும் 'ஆதிதமிழர்' ஆகவில்லை! ஆந்திரத்திலும் கருநாடகத்திலும் நலிந்தோர் யாரும் 'ஆதிதிராவிடர்' என்னும் பட்டத்தை ஏற்க முன்வராததை அன்றைய மக்கள் கணக்கெடுப்பு அதிகாரியான ஈட்சு (M. W. M. Yeatts) சுட்டிக்காட்டினார்.[44] ஆயினும், சென்னை மாகாணத்தில் 1921ஆம் ஆண்டு மக்கள்தொகையில் 63,70,074 பேர் தொல்தமிழராக இருந்தும், அவர்களில் 15,025 பேர் மட்டுமே 'ஆதிதிராவிடர்' என்னும் பெயரில் தங்களின் பெயர்களைப் பதிந்துகொள்ள முன்வந்தனர். தொல்தமிழரில் பெரும்பாலோர், அவர்களின்மீது திணிக்கப்பட்ட 'ஆதிதிராவிடர்' என்னும் பெயரொட்டியை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையே அது காட்டும்.[45]

தாழ்த்தப்பட்ட சாதியினரின் தனிப்பெரும் தலைவராகத் தமிழகத்திலிருந்த இரட்டைமலை சீனிவாசன், ஆதிதிராவிடர் என்னும் பெயருக்கு மாறாகப் **பழந்தமிழர்** என்னும் பெயரையே ஆண்டுவந்தார். தமிழரை 'ஆதிதிராவிடர்' என்றும் 'சாதி இந்துக்கள்' என்றும் முதன்முதலில் பிரித்து எழுதி, 'சாதி இந்து' என்ற சொல்லை ஆக்கியதும் அறிமுகப்படுத்தியதும் நயன்மைக் கட்சியின் அன்றைய ஏடான **திராவிடன்** ஏடுதான் என்பதை அந்நாளைய **ஆதிதிராவிடன்** நவம்பர் 15, 1921 இதழில் பின்வருமாறு எழுதி அம்பலப்படுத்தியது:

> "முன்னர் நம்மை 'பறையர்', 'பள்ளர்', 'சக்கிலியர்', 'பஞ்சமர்' என்ற இழிவான பெயர்களை மாற்றி, ஆதிதிராவிடர் என்னும் மேன்மையான பதத்தை நம் கழுத்தில் மாட்டியதாக மிகவும் வீரா(ர்)ப்பாய்ப் பேசுகிறார்கள். அப்பால், மில்

www.tamilarangam.net



[1921 பின்னி ஆலை வேலைநிறுத்த] குழப்பத்திற்குப் பிறகு, 'பழைய குருடி, கதவைத் திருடி!' என்றபடி நம்மைப் 'பறையர்' என்றும், 'பஞ்சமர்' என்றும் **திராவிடன்** ஏட்டிலெழுதித் தூற்றத் தொடங்கிவிட்டனர். ஆதிதிராவிடரல்லாதார் 'சாதி இந்துக்கள்' என்பாராயினர்."[46]

பார்ப்பனரல்லாதார் இயக்கம் தொல்தமிழரை 'ஆதிதிராவிடர்' ஆக்கிய கதை இது.

நயன்மைக் கட்சியில் படித்துப் பட்டம்பெற்ற இரட்டைமலை சீனிவாசன், எம். சி. இராசா, வி. ஐ. முனிசாமிப் பிள்ளை, தருமலிங்கம் பிள்ளை, என். சிவராசு முதலான தொல்தமிழர் தலைவர்கள் பலர் முன்னணியில் இருந்தனர். குறிப்பாக, இரட்டைமலை சீனிவாசன் 1893ஆம் ஆண்டிலேயே **பறையன்** என்னும் கிழமை ஏட்டை நடத்தத் தொடங்கியவர். 1904ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்கா சென்று, நெட்டாலில் வழக்குமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிந்தவர். 1928ஆம் ஆண்டில் சென்னை மாகாண தாழ்த்தப்பட்டோர் கூட்டமைப்பை நிறுவியவர். 1923ஆம் ஆண்டிலிருந்து 1938 வரை தொடர்ந்து சென்னை சட்டமன்ற (மேலவை) உறுப்பினராக இருந்தவர். 1930ஆம் ஆண்டில் இராவ் பகதூர் பட்டம் பெற்றவர். 1930 நவம்பரில் இலண்டனில் நடந்த முதல் வட்டமேசை மாநாட்டில் பங்குபெற்றவர். 1932ஆம் ஆண்டில், தாழ்த்தப்பட்டோருக்குத் தனித் தொகுதி வழங்கலாகாதெனச் சாகும் வரை உண்ணாநோன்பிருந்த காந்தியின் உயிரைக் காப்பாற்றிய பூனா ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டவர். தாழ்த்தப்பட்டோர் எல்லாம் புத்த மதத்திற்கு மாற வேண்டும் என்னும் அம்பேத்கரின் அறைகூவலை எதிர்த்தவர். அத் தொல்தமிழர்கள் கிறித்துவ மதத்திற்கு மாறுவதையும்கூடக் கடுமையாக எதிர்த்துவந்தவர். அப்படி இருந்தும், நயன்மைக் கட்சித் தலைமை, தொல்தமிழர் தலைவர் ஒருவரைக்கூட அமைச்சராக்கவில்லை. ஆனால், என். ஆர். சேதுரத்தின ஐயர் என்னும் பார்ப்பனர் மட்டும் இடவொதுக்கீட்டு அடிப்படையில் நயன்மைக் கட்சி ஆட்சியில் அமைச்சராக முடிந்தது. மூன்றரை மாதங்களே நீடித்த கூர்ம வெங்கட ரெட்டி நாயுடுவின் இடைக்கால அமைச்சரவையில் மட்டுமே தொல்தமிழர் தலைவரான எம். சி. இராசா — அதுவும் ஆங்கிலேய ஆளுநரின் அருளால் — ஓர் அமைச்சராக முடிந்தது![47]

சென்னையிலுள்ள கர்நாடிக் பஞ்சாலைத் தொழிலாளர்கள் 1921 மே திங்களில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். அப்

www.tamilarangam.net



போது தீண்டப்படாதோர் எனப்பட்ட நலிந்த சாதித் தொழிலாளர்கள், நெடுநாள் பட்டினி கிடப்பதைத் தாங்க முடியாமல், வேலைக்குத் திரும்பினர். இதனால் மேல்சாதித் தொழிலாளர்கள் ஆத்திரமுற்றனர். புலையன் தோப்பு என்னுமிடத்தில் ஒரு சாதிக் கலவரம் மூண்டது. இந்நிகழ்ச்சியில், மேல் சாதித் தொழிலாளர்க்குச் சார்பான ஒரு நிலையை நயன்மைக் கட்சி எடுத்தது. பார்ப்பனரல்லாதாரின் கட்சி எனச் சொல்லிக் கொண்ட நயன்மைக் கட்சி ஒடுக்குண்ட சாதியினரைப் பார்த்து வடிப்பதெல்லாம் முதலைக் கண்ணீர்தான் என்பது இதனால் மெய்ப்பட்டுவிட்டதாக எம். சி. இராசா போன்ற தொல்தமிழர் தலைவர்கள் இடித்துரைத்தனர்.[48]

பறையர் என்னும் தொல்தமிழரை 'ஆதிதிராவிடர்' என்னும் ஒரு புதிய பெயரைச் சொல்லி அழைக்குமாறு கேட்டு, அதை அன்றைய நயன்மைக் கட்சியை ஏற்றுக்கொள்ளச் செய்த எம். சி. இராசா போன்ற தொல்தமிழர் தலைவர்கள், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைப் பின்னர் விளங்கிக்கொள்வதற்கு இது போன்ற நிகழ்ச்சிகள் உதவின.

## வந்தேறிகளின் கொற்றம்

ஆந்திரரின் தலைமையிலான பார்ப்பனரல்லாதார் இயக்கத்தினாலும் பேராயக் கட்சியின் 'இந்தி(ய)த்' தேசியத்தாலும் வறட்டுப் பொதுவுடைமையரின் 'உலகப்' பாட்டாளியத்தாலும் வழிவழியாக வந்த நிலப்பரப்புகள் பலவற்றை தமிழர்கள் இழந்தனர். தமிழகத்திற்கு வந்தேறிகளாக வந்த தமிழரல்லாதார் மட்டும் நல்ல வளம் பெற்றனர். தமிழரைத் தம் சொந்த மண்ணிலேயே அடிமைகளாகவும் கூலிகளாகவும் இவர்கள் செய்தது அடுத்துவந்தது.

1917ஆம் ஆண்டில் ஆந்திரர்க்கெனப் பேராயக் கட்சியில் ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்ட பின்னர், ஆந்திரப் பேராயக் கட்சியின் தலைமையகம் விசயவாடாவிலிருந்து செயல்பட்டு வந்தது. தலைநகரமாகச் சென்னை இருக்கையில் விசயவாடாவிலிருந்து செயல்படுவது சரியன்று என்று கருதிய ஆந்திரப் பேராயக் கட்சித் தலைமை, தன்னுடைய தலைமையகத்தைச் சென்னைக்கு மாற்றிக்கொள்ள இசைவு கேட்டது. அவ் வேண்டுகோளைத் தமிழகப் பேராயக் கட்சி ஏற்றுக்கொண்டு ஒப்புதல் தெரிவித்தது. அதற்கடுத்து, ஆந்திரர் மற்றொரு அடாவடித்தனமான கோரிக்கையை முன்வைத்தனர். தமிழகப் பேராயக்

www.tamilarangam.net



கட்சி சென்னை மாவட்டத்துக்கென எவ்வாறு ஒரு சென்னை மாவட்டக் கிளையை வைத்துக்கொண்டிருந்ததோ, அவ்வாறே ஆந்திரப் பேராயக் கட்சியும்கூடச் சென்னை மாவட்ட ஆந்திரப் பேராயக் கட்சிக் கிளையொன்றை அமைத்துக்கொள்ளக் கட்சி மேலிடத்திடம் மன்றாடியது. அத் தலைமையும் இதற்கு இசைந்தது.[49] அந்த ஆந்திரப் பேராயக் கட்சி சென்னையில் ஒரு சென்னை மாவட்டக் கிளையை அமைப்பதைத் தமிழ்நாட்டுப் பேராயக் கட்சி ஆதரிக்கவில்லைதான். ஆனால், இந்த அடாவடித்தனத்தை எதிர்க்கவல்ல துணிவும் தமிழரினச் சார்பும் அத் 'தமிழ்நாடு பேராயக் கட்சி'க்கு இருக்கவில்லை. இந்த நிலை இராசாசியின் ஏலாமையைக் காட்டும். இவ்வாறு அமைக்கப்பட்ட சென்னை மாவட்ட ஆந்திரப் பேராயக் கட்சிக் கிளையில் பெரும்பாலும் தெலுங்கரே இருந்தனர். ஒரு சில குசராத்தியரும் மார்வாடியரும்கூட இருந்தனர். சென்னை மாவட்டத் தமிழ்ப் பேராயக் கட்சியிலோ இவ்வாறு தமிழரல்லாதார்தாம் மிகப் பெரும்பான்மையராக இருந்தனர்.

தமிழ்நாடு பேராயக் கட்சி எனத் தனியாக அமைந்த பின்னரும்கூடச் சென்னை போன்ற நகரங்களிலும் பிற தமிழ்ப் பகுதிகளிலுமிருந்த பேராயக் கட்சிப் பொறுப்புகள் எல்லாம் பொதுவாகத் தமிழரல்லாதாரிடமே இருந்துவந்தன. சென்னை நகரப் பேராயக் கட்சியின் குழுவிலிருந்த தெலுங்கர்கள், ஆந்திரப் பேராயக் கட்சிக்கு உடனே போய்விடவுமில்லை. தமிழ்நாடு பேராயக் கட்சி இவ்வாறு அன்னி பெசன்ட் (ஐரியர்), டாக்டர் சி. எசு. அருண்டேல் (ஐரியர்), லாட் கோவிந்ததாசு (குசராத்தி வங்கியர்), பி. பி. வாடியா (பார்சி), சுப்பராய காமத் (கொங்கணியர்), ருக்குமணி லட்சுமிபதி (ஆந்திரர்), எம். கே. ரெட்டி (ஆந்திரர்), சுரேந்திரநாத் ஆரியா (ஆந்திரர்), டாக்டர் பி. வரதராசுலு நாயுடு (தமிழ்நாட்டுத் தெலுங்கர்), அப்துல் அமீத்கான் (உருது), யாகூப் ஃகாசன் (உருது) ஆகிய தமிழரல்லாதவரின் பிடிப்புக்குள் இருந்துவந்தது.[50] தமிழ்நாட்டுப் பேராயக் கட்சி உறுப்பினரில் இருமொழியரான தமிழ்நாட்டுத் தெலுங்கர்கள் நான்கில் ஒரு பங்கினராக இருந்தனர்.[51]

இதன் விளைவாகச் சென்னை நகரிலிருந்த நான்கு தொகுதிகளில் இரண்டில் சென்னை மாவட்ட ஆந்திரப் பேராயக் கட்சி தன்னுடைய சொந்த ஆந்திர வேட்பாளர்களை நிறுத்தி வைக்க இசைவு கேட்டது. இந்த அடாவடித்தனத்திற்கும் ஊடுருவலுக்கும் மாற்றாரைப் பெரும்பான்மையாகக் கொண்ட தமிழ்நாடு பேராயக் கட்சி வெட்கமின்றிப் பணிந்துகொடுத்தது.

www.tamilarangam.net



இதனால் 1937 பொதுத் தேர்தலில் சென்னை நகரில் இருந்த நான்கு தொகுதிகளில் ஒரேயொரு தொகுதியில் மட்டுமே தமிழர் ஒருவரால் வெற்றிபெற முடிந்தது. வெற்றிபெற்ற பிற மூவரும் ஆந்திரர்கள்! மக்கள்தொகையில் பெரும்பான்மையராகவிருந்த தமிழர்கள், சென்னை நகரில் ஆந்திரப் பேராயக் கட்சி நிறுத்தி வைத்த இரண்டு ஆந்திரரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவலம் ஒருபுறம்! அன்றையத் தேர்தலில் பங்கெடுக்கவும் வாக்களிக்கவும் வல்ல உரிமை, சொத்து அடிப்படையில்தான் இருந்தது. இதனால், தமிழர்கள் பொதுவாகத் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை இருந்தது. பணக்காரர்களான தெலுங்கர்கள் தாம் சென்னைப் பேராயக் கட்சியின் சார்பிலும் போட்டியிட நேர்ந்த இழிநிலை மறுபுறம்! இதனால் துளிர்த்துவிட்ட ஆந்திரர்கள், "சென்னை நகரம் ஆந்திரருக்கே!" என வம்புத்தனமாகக் குரலெழுப்பத் தொடங்கினர். அன்று நயன்மைக் கட்சியின் தலைவர்கள் என்ன செய்தனர்? ஆந்திர வம்பர்கள் இவ்வாறு முழங்கியபோது, அந்த ஆந்திரப் பேராயக் கட்சியின் அடாவடித்தனத்துக்குப் பச்சையாகத் துணைநின்றனர்.[52] சென்னையைப் பறித்துக்கொண்டு போக விரும்பிய இவர்கள் 'பார்ப்பனரல்லாதார் ஒற்றுமை' என்னும் பொய்ம்மையை வெளிச்சமாக்கினர்.

சென்னை மாகாண சட்டப் பேரவைக்கு 1937ஆம் ஆண்டிலும், 1946ஆம் ஆண்டிலும் நடந்த தேர்தல்களில் தமிழ்நாடு பேராயக் கட்சியின் சார்பிலும் ஆந்திரப் பேராயக் கட்சியின் சார்பிலும் சென்னை நகரின் நான்கு பொதுத்தொகுதிகளில் நிறுத்தப்பெற்று வென்றவர்கள் பின்வருமாறு:[53]

| ஆண்டு | வென்ற வேட்பாளர் | இனம் |
|---|---|---|
| 1936 | பு. ம. ஆதிகேசவ நாயகர் | தமிழர் |
| | என். எசு. வரதாச்சாரி | சித்தூர் தெலுங்கர் |
| | கத்தே ரங்கைய நாயுடு | ஆந்திரத் தெலுங்கர் |
| | டி. பிரகாசம் பந்துலு | ஆந்திரத் தெலுங்கர் |
| 1946 | ஜி. ராசமன்னார் நாயுடு | ஆந்திரத் தெலுங்கர் |
| | என். எசு. வரதாச்சாரி | சித்தூர் தெலுங்கர் |
| | டி. பிரகாசம் பந்துலு | ஆந்திரத் தெலுங்கர் |
| | குண்டூர் நரசிம்மராவ் | ஆந்திரத் தெலுங்கர் |

1944 தேர்தலில் சென்னை நகரில் இருந்த நான்கு தொகுதிகளையும் ஆந்திரர்களே வென்றனர். 1937, 1946 ஆகிய ஆண்டுகளில் நடந்த தேர்தல்கள் இரண்டிலும், சென்னை நகருக்குரிய ஒரேயொரு பெண் தொகுதியில் ஆந்திரரான திருவாட்டி ருக்கு

www.tamilarangam.net



மணி லட்சுமிபதிதான் தமிழ்நாடு பேராயக் கட்சியின் சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.[54] ஒட்டுமொத்தத்தில், தலை நகராம் சென்னை மாநகரத்தைப் பறித்துச் செல்லத் தெலுங்கர் செய்த சூழ்ச்சி பலிக்காமைக்குத் தமிழகத் தமிழரிடமிருந்த இன வுணர்வுதான் காரணம் எனச் சொல்ல முடியாது.

## 3. மண்ணை இழந்தோம்

நயன்மைக் கட்சி ஆண்டு வந்த 1920க்கும் 1936க்கும் இடை யில் தமிழ்ப் பகுதியான சித்தூர் மாவட்டம் முழுதும் தெலுங்கு மயமானது. வடார்க்காடு மாவட்டம் அளவில் மிகப் பெரிய தாக இருந்ததனால், அதிலடங்கியிருந்த தமிழ்ப் பகுதிகளான திருத்தணிகை, புத்தூர், சித்தூர், திருப்பதி, திருக்காளத்தி, பல் லவனேரி ஆகிய ஆறு வட்டங்களை(தாலுக்காக்களை)ப் பிரித் தெடுத்து ஆந்திரத்தின் கடப்பை மாவட்டத்திலிருந்த மதனப் பள்ளி, வாயல்பாடி ஆகிய இரண்டு வட்டங்களுடன் சேர்த்து 1.4.1911 அன்று சித்தூர் மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது.[55] பின்னர் இங்குத் தெலுங்கர் மளமளவென வந்து குடியேறத் தொடங்கினர். இறுதியில், மொழிவழி மாநிலங்களை அமைப் பதற்கென 1953ஆம் ஆண்டில் உருவான ஆணையத்தின் முன் னால் கட்சி வேற்றுமையையும் சாதி வேற்றுமையையும் மறந்து தெலுங்கர் எல்லாரும் ஒன்றாக நின்று வழக்காடிச் சித்தூரைப் பறித்துக்கொண்டு போயினர்.

அன்று இந்திய அரசில் துணைக் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் சர்வேபள்ளி இராதாகிருஃஷ்ணன் மிகப் பெரிய தெலுங்குவெறியராவார். அவருடைய விடாப்பிடி அழுத்தங் களால் 23.3.1953 அன்று சித்தூர் ஆந்திராவுடன் இணைக்கப் படுமென அன்றைய இந்தி(ய)த் தலைமையமைச்சர் ஒருதலையாக அறிவித்தார்.

அதையடுத்து எழுந்த வடவெல்லைக் காப்புப் போராட் டத்திற்குப் பிறகு, இந்தி(ய) அரசு அமைத்த படாசுக்கர் ஆணைக் குழு, சித்தூர் யாருக்குச் சேர வேண்டும் என்னும் தன் பரிந் துரையை 1957ஆம் ஆண்டின் இறுதியில் வெளியிட்டது. இப் பரிந்துரைகள், 1960 ஏப்ரல் திங்களில் நடைமுறைப்படுத்தப் பட்டன. இவ்வாறு, திருப்பதி, திருக்காளத்தி, சித்தூர், புத்தூர், புங்கனூர், பல்லவனேரி, காகுந்தி ஆகிய வட்டங்களையும், நெல்லூர் மாவட்டம் முழுவதையுமே தமிழர்கள் தெலுங்கரிடம் இழந்தனர்.

www.tamilarangam.net



அதே போல், சென்னையில் ஆந்திரரும் குசராத்தியரும் மார்வாடிகளும் மெல்ல வந்து குடியேறித் தத்தம் வலிமையைப் பெருக்கிக்கொள்ளத் தொடங்கினர்.

பன்னிரு ஆண்டு காலம் சென்னை மாகாணத்தின் தலைமை யமைச்சர்களாகப் பனகல் அரசரும் பொப்பிலி அரசருமான நயன்மைக் கட்சியர் ஆண்டனர். ஆயினும், தனி ஆந்திர கோரிக்கையை மிக உறுதியாக ஆதரித்த அவர்களிருவரும், சென்னை நகரை ஆந்திராவின் தலைநகராகவும், மதுரையை யோ திருச்சியையோ தமிழ்நாட்டின் தலைநகராகவும் ஆக்க வேண்டுமென அடித்துச் சொல்லிவந்தனர்.

தெலுங்கரில் ஒருவர் — **ஆந்திர பிரபா**வின் ஆசிரியரான நாரலா வெங்கடேசுவர ராவ் — சென்னை நகர் யாருக்கு வேண்டுமென்னும் பூசல் வடவரையே வலுப்படுத்திவிடும் என அத்தி பூத்தாற் போன்று சொல்லிவிட்டதைத் தலைமேல் தூக்கிக் கொண்டு அண்ணாவின் **திராவிட நாடு** ஒரு பெரிய ஆசிரிய வுரையையே எழுதிக் கொண்டாடியது.

> "தமிழர்க்கா — தெலுங்கர்க்கா சென்னை நகர் எனும் வழக்குப் பொருளுடையதாயினும், ஒரே இன மக்களிடம் மனக்கசப்பை வளர்க்கும் போர்ப் பேச்சாகக் கூடாது என நாம் விளக்கினோம். இருவரின் நட்புரிமைக்கும் கேடு பயக்கும் கருத்தற்றார் சொல் என எடுத்துக்காட்டினோம். அன்பு முறையில், இனியவை கூறி முடிக்க வேண்டிய ஒன் றென வழக்காடினோம். தலைநகர் யாருக்கு எனும் பேச்சு, திராவிட இன மக்களிடையே உள்ள பிளவைப் பெரிதாக் குமே, பெரிதானால் திராவிடம் பனியாவின் பண்ணை யாகுமே, அதன் பயனாகத் திராவிடம் வறுமையால் வாடுமே என வருந்திச் சில பல கூறினோம். தெளிவு பெறாதோர் மிரண்டனர். நாம் பழிக்குள்ளானோம்"[56]

என்னும் அதன் புலம்பல், தமிழர்க்குப் பச்சை இரண்டகம் செய் தமையை ஞாயப்படுத்திவிட்ட கயமை நிலையாகும். ஆந்திரத் தெலுங்கர் இனவெறி பிடித்தலைந்தபோது, அதைக் கண்டும் காணாது தமிழர்க்கு மட்டுமே திராவிட அறிவுரையை விற்றிட முயன்ற சூழ்ச்சியே அக் கூற்று ஆகும்.

## தெற்கு எல்லைப் போராட்டம்

தமிழகத்தின் தெற்கு எல்லையான குமரி மாவட்டம் உள் ளிட்ட ஈராயிரம் சதுரக்கல் (சதுரமைல்) பரப்பளவு பழைய

www.tamilarangam.net



திருவிதாங்கூர் மன்னராட்சியில் அடங்கியிருந்தது. தமிழரை அங்கெலாம் மலையாளிகள் பெருமளவு துன்புறுத்தியும் அடக்கி யொடுக்கியும் ஆண்டுவந்தனர். அத்தகைய இனவொடுக்கலி லிருந்து திருவிதாங்கூர்த் தமிழரினத்தை விடுதலை செய்திட புலிப்பனம் மோசசு சாலமோன், அருமைநாயகம் முதலானோ ரின் தலைமையில 1810ஆம் ஆண்டிலேயே ஒரு மலையாளி எதிர்ப்பியக்கம் உருவானது. அவ் வியக்கம் 1820ஆம் ஆண்டில் ஆற்றூர் வேதமாணிக்கம் தலைமையில் இயங்கியது. பின்னர், தமிழரும்கூட மலையாள மொழியிலேயே கையொப்பம் இட வேண்டும் எனத் திருவிதாங்கூர் அரசு இட்ட ஆணைக்கு எதிரான மலையாள எதிர்ப்பியக்கமும் தோன்றியது. இத்த கைய தமிழரின உணர்ச்சியின் அளவையியல் விளைவாகவே, 1928ஆம் ஆண்டில் காஞ்சாங்குழி குஞ்சன் நாடார் தலைமை யில் நெய்யூரில் தமிழர் விடுதலைப் பேராயம் தோற்றுவிக்கப் பட்டது. அடுத்து, களியரக்காவிளையைத் தலைமையகமாகக் கொண்ட தமிழர் கட்சி 1935ஆம் ஆண்டில் அப்பாவு ஆசான் தலைமையில் தோன்றியது.[57]

திருவிதாங்கூர் மன்னராட்சி தமிழர்களுக்குத் தாய்மொழி கற்கும் உரிமையை மறுத்தது. தமிழரை எல்லா வகையிலும் புறக்கணித்துவந்தது. போதாமைக்கு, தேவிகுளம், பீர்மேடு முத லான தமிழர் பகுதிகளில் மலையாளிகள் தமிழர்களை அப்புறப் படுத்திவிட்டு வலியக் குடியேறுவதைத் திருவிதாங்கூர் அரசே ஊக்குவித்தது. தமிழர்மீது கொடும் வரிகளை விதித்தது. இந் நிலையில், அராசக்கமங்கலத்தில் 1938 அக்டோபரில் நடந்த ஒரு கூட்டத்தில், திருவிதாங்கூர் தமிழர்களுக்கென ஒரு தனித்தமிழ் மாவட்டம் அமைக்கப்பட வேண்டுமெனக் குரலெழுப்பப்பட் டது. அடுத்து, ஒரு தமிழ்ச் சங்கமும் அமைக்கப்பட்டது.

மலையாளிகள் கோரிவந்த ஒன்றிய (ஐக்கிய) கேரளத்தில் கன்னியாகுமரி முதல் காசறைக்கோடு வரையுள்ள பகுதியும் இணைக்கப்பட வேண்டுமெனக் கேட்டு 1945ஆம் ஆண்டின் இறுதியில் மலபார் மாகாணப் பேராயக் கட்சி, கொச்சி பிரசா மண்டல், திருவிதாங்கூர் மன்னரக (சமசுத்தான)ப் பேராயக் கட்சி ஆகிய மூன்று அமைப்புகளும் சேர்ந்து ஒரு தீர்மானத்தை இயற்றின. அந்தத் தீர்மானத்தை எதிர்த்துத் திருவிதாங்கூர் மன்னரகப் பேராயக் கட்சியிலிருந்த தமிழ் இனவுணர்வாளர்கள் எல்லோரும் விலகினர். இதனால்தான், எசு. நாத்தானியேல் தலைமையிலான அனைத்துத் திருவிதாங்கூர்த் தமிழர் பேராயக் கட்சி தோன்றியது. அந்தக் கட்சியே பின்னர் திருவிதாங்கூர்த்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்நாடு பேராயக் கட்சியானது. மார்சல் நேசமணியும் அக் கட்சியில் இணைந்தார். பி. எசு. மணி, குஞ்சன் நாடார், காந்திராமன் முதலானோர் அந்த அமைப்பின் முன்னணித் தலைவர்களாக இருந்தனர்.[58]

திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தில் தமிழில் யாரும் உரையாற்றக் கூடாது என்றும், தமிழரில் எவ்வளவு பெரிய அறிஞராயினும் அவருக்குப் பல்கலைக்கழகத்தில் வரவேற்பு அளிக்கக் கூடாது என்றும் மலையாளிகள் திருவாங்கூரில் வாழ்ந்துவந்த பதினைந்து இலக்கம் தமிழர்க்கு எதிராகத் தடைவிதித்தனர். கலைவாணர் என். எசு. கிருஃழ்ணனுக்குத் திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தின் தமிழ் மாணவர்கள் வரவேற்புக் கூட்டம் கூட நடத்தக் கூடாதென மலையாள மாணவர்கள் அடாவடிக் கலகம் செய்யும் அளவுக்குத் தமிழ் எதிர்ப்பு பற்றிப் பரவி வந்தது.[59] இவற்றை யெல்லாம் காதில் போட்டுக்கொள்ளாத காமராசர், "திருவாங்கூரிலுள்ள தமிழர்களுக்குத் தமிழ் எழுதப் படிக்கத் தெரியுமா?" என்று கேட்டுவைத்தாராம்![60]

குமரித் தமிழர்கள் பழைய திருவிதாங்கூர்–கொச்சி மன்னரகப் பகுதியிலிருந்த தமிழ்ப் பகுதிகளை எல்லாம் தாய்த் தமிழகத்தோடு இணைக்கக் கேட்டு நடாத்திய எழுச்சி மிக்க போராட்டங்களுக்குத் துணைநிற்கத் தமிழகத்திலிருந்து தலைவர் எவரும் செல்லத் துணியாத நிலையிலும், குமரி மாவட்டத்திற்குச் சென்று அக் குமரித் தமிழர்களின் எல்லைப் போராட்டத்திற்குத் தோள்கொடுத்தவர்தான் ம. பொ. சிவஞானம். திருவிதாங்கூர் மன்னரகப் (சமசுத்தானப்) பேராயக் கட்சியிலிருந்து உடைந்து திருவிதாங்கூர் தமிழ்நாடு பேராயக் கட்சியை நிறுவிய குமரி மாவட்டப் பேராயக் கட்சியினர், தமிழகத்தின் தெற்கு எல்லைகளை மீட்கப் போர்க்களம் கண்டபோது, அன்று ஏதோ கட்டாயத்தால் குமரி மாவட்டத்திற்குச் செல்ல நேர்ந்த காமராசர், அக் குமரித் தமிழரின் எல்லைப் போராட்டம் ஞாயமானதேயென ஒப்புக்குப் பேசியதும் உண்மைதான். அங்கு இரணியல் என்னும் ஊரில் 6.12.1947 அன்று ஓர் இலக்கம் தமிழர்கள் கலந்துகொண்ட ஒரு பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய காமராசர்,

> "திருவிதாங்கூர்த் தமிழ்நாடு பேராயக் கட்சியின் கோரிக்கைகள் என்னவென்பதை நான் சரியாக அறிந்துகொண்டேன். அவற்றின் உண்மைகளைக் கண்டு நான் நிறைவடைகிறேன். திருவிதாங்கூரை மன்னர் ஆண்டுகொண்டிருக்கும் போதே, ஒன்றிய (ஐக்கிய)க் கேரளத்தை அமைப்

www.tamilarangam.net



பது என்னும் எண்ணம் சரியன்று; ஒன்றியக் கேரளத்தில் தென்திருவிதாங்கூர் அடங்க முடியாது. காசர்கோடு முதல் கன்னியாகுமரி வரை கேரளம் எனக் கூறுவது முறையன்று"[61]

என முழங்கினார்.

அக் கூட்டம் முடிந்ததும் காமராசர் நேரே திருவனந்தபுரம் சென்றார். அங்குத் தமிழரின்மீது வன்முறை வெறியாடிவந்த பட்டம்தாணுப் பிள்ளை தந்த விருந்துண்டு மகிழ்ந்தார். பின்னர் ஒரு கேள்விக்கு விடையளிக்கையில்,

"மன்னரக (சமசுத்தான) பேராயக் கட்சியை வலுப்படுத்தவே தாம் வந்துள்ளதாகவும், பேராயக் கட்சி வலுவாக இருந்தால்தான் தற்போது கிடைத்துள்ள பொறுப்பாட்சியைக் காக்க முடியுமென்றும், மன்னரகத்திலுள்ள தமிழர்களுக்கு திரு. தாணுப்பிள்ளை அளித்த உறுதிமொழிகளுக்காக அவருக்கு நன்றி செலுத்துவதாகவும், தமிழர்கள் தங்கள் பாதுகாப்புக்குக்கூட மன்னரகப் பேராயக் கட்சியை வலுப்படுத்துவது தேவை என்றும், மன்னரகப் பேராயக் கட்சி திருவிதாங்கூர் அரசுடன் சேர்ந்துகொண்டு தமிழர் கோரிக்கைகளை நசுக்கப் பார்ப்பதாகச் செய்யப்படும் கருத்துப் பரப்பலைத் தாம் நம்பவில்லை"[62]

என்றும் திருவாய்மலர்ந்தருளி, திருவிதாங்கூர்த் தமிழரின் மண்ணுரிமைப் போராட்டத்தை எதிர்த்தும், மலையாளிகளின் நிலைபாட்டைச் சார்ந்தும் கருத்துரைத்தார்!

காமராசரின் இக் குட்டிக்கரணத்தைப்பற்றி அண்ணாவின் **திராவிட நாடு** 4.1.1948 அன்று இவ்வாறு எழுதியது:

"திருவாங்கூரைச் சேர்ந்த 'மனோன்மணீயம்' காலஞ்சென்ற சுந்தரம் பிள்ளை, இசைச்செல்வர் இலக்குமண பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆகியோர்கள் தமிழில் மிகப் பெரிய அறிஞர்களென்பதை அறியாத காமராச நாடார் அவர்களை நாம் குற்றம் சொல்லவில்லை. ஐயா, போனதும் போனாரே! பட்டம்தாணுப் பிள்ளையின் விருந்து சாப்பிட்டுவிட்டு ஒன்றும் பேசாது எல்லோர்க்கும் நல்ல பிள்ளையாகத் திரும்ப எண்ணிச் சிக்கலைப் படுமோசமாகச் செய்துவிட்டுச் சென்னை வந்து சேர்ந்து ஊமையாகி யிருக்கிறார்"[63]

தமிழரின் வழிவழி மண்ணுரிமையைக் காட்டிக் கொடுப்பதில் திராவிடத் தேசியமும் இந்தி(ய)த் தேசியமும் ஒன்றிற்

www.tamilarangam.net



கொன்று என்றும் இளைத்தனவல்ல என்பதையே இதைப் போன்ற நிகழ்ச்சிகள் காட்டுவன.

## மடிபறித்தானே மலையாளி!

பின்னர், திருவிதாங்கூர்த் தமிழரைச் சிறுபான்மையராக்கும் தீய எண்ணத்துடன் 1949ஆம் ஆண்டில் திருவிதாங்கூருடன் கொச்சியும் இணைக்கப்பட்டது.

தென்கன்னடம், காசறைகோடு, குடகு, மலபார், கூடலூர், உதகமண்டலம், கோவை மாவட்டத்தின் மேற்குப்பகுதி, தமிழ்ப் பகுதிகளடங்கிய திருவிதாங்கூர்–கொச்சி மன்னரகம், இலக்கத் தீவுகள், மாலத்தீவுகள் ஆகியன வெல்லாம் ஒன்றியக் கேரளத்தில் அடங்க வேண்டுமென மலையாளிகள் கோரிவந்தனர்.

மொழிவழியில் சென்னை மாகாணத்தைப் பிரித்தபோது போது அரவமின்றிப் பாலக்காடும் பேரியாறு வளம் சேர்க்கும் இடுக்கியும் தமிழகத்தைவிட்டுப் போயின. 1954ஆம் ஆண்டில் தமிழர் பகுதிகளான தேவிகுளம், பீர்மேடு பகுதிகளில் திருவிதாங்கூர்–கொச்சி அரசு பெரிய அரசு வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டது. அவ் வன்முறைக்கு எதிராகக் குஞ்சன் நாடார் தலைமையில் அறப்போராட்டம் நடந்தது. அப் போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மதுரை முத்து ஒப்புக்குக் கலந்துகொண்டார்.

1954 ஆகத்து 11ஆம் நாளைத் திருவிதாங்கூர்த் தமிழர்கள் தமிழர் விடுதலை நாளாகக் கொண்டாட முடிவு செய்திடவே, தமிழர் பகுதிகளில் முழுக் கடையடைப்பும் வேலைநிறுத்தமும் மறியலும் நடைபெற்றன. மாணவர்கள் வகுப்புக்குச் செல்லவில்லை. காவல்துறை புதுக்கடையில் துப்பாக்கிச் சூடு நடத்தியது. தமிழர் எங்கெணும் வேட்டையாடப்பட்டனர். காவல் நிலையத்தில் துன்புறுத்தப்பட்ட குஞ்சன் நாடார், அதனால் பின்னர் உயிர்துறந்தார். துடிப்புள்ள தமிழிளைஞர் பலர் தலைமறைவாகினர். அதன் விளைவாக, தமிழர்கள் மலையாளிகளைத் திருப்பியடிக்கத் தொடங்கினர். அரண்டு போன மலையாளிகள், தமிழர் பகுதிகளைவிட்டு ஒட்டம்பிடித்தனர்.[64]

இந் நிலையில், பசல் அலியைத் தலைவராகவும், எச். என். குன்சுருவையும் கே. எம். பணிக்கரையும் உறுப்பினர்களாகவும் கொண்ட மாநில மறுசீரமைப்பு ஆணையத்தை நேருவின் தில்லிப் பேரரசு அமைத்தது. ஆனால், மலையாளியான கே.

www.tamilarangam.net



எம். பணிக்கரின் சூழ்ச்சியால், தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றின் கரை, கொச்சி, சித்தூர், உடும்பன் சோலை ஆகியவற்றுடன் நெடுமங்காடு, செங்கோட்டை ஆகியவற்றின் பெரும் பகுதிகளும் புதிதாகத் தோன்றிய கேரளத்துடன் வலிய இணைக்கப்பெற்றன. எஞ்சிய குமரி மாவட்டப் பகுதிகள் மட்டும் தமிழகத்திற்கு 1956 நவம்பர் 1 அன்று மீண்டன.

கட்சி வேற்றுமை, சாதி வேற்றுமை, பார்ப்பனர்--பார்ப்பனரல்லாதார் வேற்றுமை ஆகிய வேற்றுமைகளை எல்லாம் துறந்து மலையாளிகள் எல்லாம் தமிழரின் மண்ணுரிமையைப் பறிப்பதற்குப் புலியின் பின்னால் தொடரும் செந்நாய்க் கூட்டமாய்த் திரண்டனர். ‘நான் பட்டனுக்குப் பிறந்தவன், தெரியுமா?’ எனப் பெருமை பாராட்டிக்கொள்பவர் பலருள்ள இனத்தின் பெரும் புள்ளிகள் எல்லாம் திரண்டு திருவிதாங்கூர்த் தமிழருக்கு எதிராக அரசியல் சித்தாடத் தொடங்கினர்.

இந் நிலையில், தங்களுக்கு ஆதரவுகாட்ட வருமாறு தமிழ் நாட்டுத் தலைவர்களுக்குத் திருவிதாங்கூர்த் தமிழர்கள் அழைப்பு விடுத்தனர். ஆனால், இந்தி(ய)த் தேசியக் குட்டையிலும் திராவிடப் பொறியிலும் சிக்குண்ட தமிழ்நாட்டுத் தலைவர்கள் யாரும் அவர்களுக்குத் துணைவராத போது, ம. பொ. சிவஞானம் மட்டும் 1946 அக்டோபர் 24 அன்று அழைக்காமலேயே வந்து நாத்தானியேலுடன் சேர்ந்து எழுச்சியுரைகளாற்றி, அத் திருவிதாங்கூர்த் தமிழர்க்குத் தோள் கொடுத்தார்.

இந்தியாவெங்கும் பிழைக்கப் போன மலையாளிகளில் பெரும்புள்ளிகள் சிலர், 15.12.1946 அன்று கேரள மாநில மறுசீரமைப்புக் குழு என்னும் பெயரில் பம்பாயில் கூடி,

> “திருவிதாங்கூரில் தமிழரும் வாழ்ந்துவருவதை ஒன்றிய கேரளம் அமைவதற்கு ஒரு தடையாகத் திருவிதாங்கூர் அரசு எழுப்புகின்றது. வியப்பூட்டும் இக் காரணத்தை ஏற்கவியலாது. திருவிதாங்கூரிலோ, கேரளத்தின் பிற பகுதிகளிலோ வாழும் தமிழர்கள் ஆங்காங்கே குடியேறியவர்கள்தாம். சில நூற்றாண்டுகளுக்கு முன், பிழைப்பதற்காக வந்து குடியேறிய இவர்கள், இன்று தங்கள் பண்பாட்டை மாற்றியமைத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கெனக் கேரளத்தின் எந்தப் பகுதியையும் பிரித்துக் கொடுக்க வேண்டியதில்லை”[65]

என அறிக்கை வெளியிட்டனர். ஒரிசாவின் ஆளுநராகவிருந்த பீகாரி முசுலிமான பசல் அலியின் தலைமையிலான மாநில

www.tamilarangam.net



மறுசீரமைப்பு ஆணையத்தின் உறுப்பினரும் மலையாளியுமான கே. எம். பணிக்கரின் நிலைபாடும் இதுவேயாகும். இந்தச் சர்தார் பணிக்கர் சொன்னதே நேருவுக்கு அன்று திருவாக்காம். அந் நேருவின் அயலுறவுக் கொள்கையை முடிவு செய்தவரும் இவரேயாம். தில்லிக் கொலுவில் அவருக்கு அவ்வளவு பெரிய பிடிப்பு. அப் பிடிப்பை, மலையாள இனநலன்களுக்காக அவர் செவ்வனே பயன்படுத்திக் கொண்டார். தமிழரின் வழி வழி வந்த தாயகத்தை இவ்வாறு பிய்த்துப் பிடுங்கிச் செல்வதில் மலையாளிகள் காட்டிய வெறித்தனமே ஒரு தனிக் கதை.

## கடைத் தேங்காயை எடுத்து...

ஆனால், இத்தனையையும் கண்டும் காணாமல், தமிழரின் மண்ணுரிமை இருந்தால் என்ன, போனால் என்னவென்றிருந்த கன்னடர் ஈ. வெ. இராமசாமி நாயக்கரின் பார்ப்பனர் எதிர்ப்பும் கடவுள் எதிர்ப்பும் தமிழரின் தேசிய இன ஓர்மையின் எழுச்சியைத் திசை திருப்பிக் கொண்டிருந்தன. தமிழரின் தாய் மண்ணைத் தெலுங்கரும் கன்னடரும் மலையாளிகளும் மடி பறித்துச் செல்வதற்கு ஒப்புதலை வழங்கித் தமிழருக்கு இரண்டகம் செய்தது ஈ. வெ. இரா.வின் இயக்கம். 1955ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் **தினத்தந்தி**க்கு ஈ. வெ. இரா. திருச்சியில் தம் பெரியார் மாளிகையில் ஒரு செவ்வி (பேட்டி) தந்தார். கேரளத்தின் திருச்சூரில் நடந்து முடிந்திருந்த தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களின் பொதுவுடைமையரின் கூட்டத்தில், “தேவிகுளம், பீர்மேடு கேரளாவிலேயே விட்டுவைக்கப்பட வேண்டும்” என்ற தமிழர் எதிர்ப்புத் தீர்மானத்தை இயற்றியதைப்பற்றிக் குறிப்பிட்டு அச் செய்தியாளர், அதைப் பற்றிய ஈ. வெ. இராவின் கருத்தைக் கேட்டார். அதற்கு,

> “தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றின் கரை, கொச்சின் சித்தூர் ஆகிய பகுதிகளைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அவற்றை மலையாளத்துடன் சேர்க்க வேண்டியதுதான். அண்மையில், சர்தார் பணிக்கர் சென்னை வந்திருந்தார். அவரை நான் சந்தித்துப் பேசினேன். தொழிலுக்காகத் தான் தமிழர்கள் அங்கு வந்தார்களே யொழிய, நிலம் மலையாளிகளைச் சேர்ந்ததுதான் என்று பணிக்கர் சொன்னார். நானும் சரி என்று சொல்லிவிட்டேன்”[66]

எனச் சொன்னார் அக் கன்னடப் ‘பெரியார்’. தமிழரின் மண்ணுரிமையையும் இனநலன்களையும் பச்சையாகக் காட்டிக் கொடுப்பதில் ஈ. வெ. இரா.வுக்கு இருந்த நெஞ்சழுத்தம் வேறு

www.tamilarangam.net



யாருக்கும் வராது. இக் கயமையைக் கண்டு மிகவும் வெகுண்ட ம. பொ. சிவஞானம்,

"மலையாளிகளுக்கும் நமக்கும் பண்பாட்டிலே உறவிருப்ப தாகச் சிலர் கூறுகின்றனர். ஆனால், சொத்தைப் பறிக்க முயல்வோரிடம் சொந்தம் பாராட்டி வாளாவிருப்பது தன்மானம் ஆகாது"[67]

என்று இடித்துரைத்தார். அத்துடன் நில்லாது,

"தமிழர்களுக்குரிய நிலத்தில் ஒரு விரற்கிடைகூட விடக் கூடாது. தமிழர்கள் கேரள நாட்டிற்குச் சென்று குடியேறி யவர்களல்லர். அஃது அவர்களின் வழிவழிவந்த தாயகம்; முன்னோர்களின் சொத்து. சேரர் என்னும் பழந்தமிழ்க் குடிமக்கள் கேரளராகியதோடு சேரநாடும் கேரள நாடாகி விட்டது. இனியும் எஞ்சியுள்ள தமிழகத்தையும் நாம் இழந்துவிட அணியமாக இல்லை"[68]

என்றும் அறிக்கை விடுத்தார்.

திராவிடக் கருத்தியலும் இந்தி(ய) தேசியக் கருத்தியலும் இணைந்து பிணைந்திட, ஈ. வெ. இரா-காமராசர் அரசியல் உறவாடல், தவளையும் எலியும் கொண்ட நட்புவழி நின்றது. திருவிதாங்கூர்த் தமிழரின் வீரமிக்க போராட்டங்களால், செங் கோட்டை, தோவாளை, அகத்தீச்சரம், கல்குளம், விளவன் கோடு ஆகிய ஐந்து தமிழ் வட்டங்கள் மட்டுமே தமிழகத்திற்கு மீண்டன. தேவிகுளம், பீர்மேடு, கொச்சின் சித்தூர், நெய்யாற் றின் கரை, நெடுமங்காடு, உடும்பன்சோலை ஆகிய ஆறு தமிழ் வட்டங்கள், மலையாளிகளுக்கு நீரட்டித் தரப்பட்டன. அஃதா வது, திருவிதாங்கூர் மன்னரகப் பகுதியில் அடிமையுண்டு கிடந்த 2000 சதுரக்கல் பரப்பளவில், எறத்தாழ 600 சதுரக்கல் மட்டுமே தமிழகத்திற்கு மீண்டது. மொழிவழியில் சென்னை மாகாணத் தைப் பிரித்தபோது, தமிழர்கள் ஆந்திரத் தெலுங்கரிடம் 29,000 சதுரக்கட்டை(கிலோமீட்டர்)களையும், கன்னடர்களிடம் 16,946 சதுரக்கட்டைகளையும், மலையாளிகளிடம் 12,219 சதுரக்கட் டைகளையும் இழந்தனர்.

## வடவெல்லையை இழந்தோம்!

"தமிழுடம்பெடுத்த பெருந்தகையார்" எனப் போற்றப் பெற்ற மங்கலங்கிழார், ஐம்பதுகளில் வேங்கடத்தைத் தெலுங் கரிடமிருந்து மீட்கப் பாடாற்றி வெஞ்சிறைப்பட்டவர். வட வேங்கடத்தை மீட்க நடந்த போராட்டத்தின் உள்ளுயிரே அம்

www.tamilarangam.net



மங்கலங்கிழார்தான் என்றால் மிகையாகாது. "என் தொண்டினைவிடக் கிழாரின் தொண்டு சிறந்தது"[69] எனத் திரு. வி. கலியாணசுந்தரனாராலேயே போற்றப்பட்டவர் அவர்.

'வேங்கடம் வேண்டுமென்கிறாயா? விழுந்துகிட சிறையிலே!

'திருத்தணிகை செந்தமிழனுடையதென்றா கூட்டம் கூட்டி முழங்கினாய்? தாங்கிக்கொள் தடியடியை!

'உரிமை முழக்கமிட உனக்கேதடா தமிழா அதிகாரம்?

'ஆந்திரனா நீ, உன்னைக் கண்டு நாங்களஞ்ச?

'கன்னடியனா நீ, கனைத்தவுடன் அஞ்சிப் பதுங்கி உனக்கு நாங்கள் நாடு வழங்க?

'வெறும் தமிழன்! பண்பாடு, பண்பாடு என்று பேசிப் பாழாய்ப் போன தமிழன்! உன் மிரட்டலுக்கா அஞ்சுவோம்? உன் ஆர்ப்பாட்டத்திற்கு அஞ்சியா ஆந்திராவில் எங்கள் நேரு சேர்த்த சித்தூர்த் தமிழ்ப் பகுதிகளை மீட்டு உனக்குத் தருவோம்? உன் எண்ணம் பலிக்காது! சிறையிலே கிடந்து வெம்பு! அல்லற்படு! அதுதான் உனக்கு உனது நாட்டுப்பற்றிற்குப் பரிசு!...'[70]

என்றெல்லாம் சொல்லி மங்கலங்கிழாரின் படையணிகள் தமிழரை இடித்துரைத்து, வடவெல்லைப் போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்துக் கொம்பூதின.

மொழிவழி மாநிலப் போராட்டத்தின் போது நூறு மலையாளிக் குடும்பங்கள்கூடத் தேறாத கோலார்த் தங்கவயலைக் கூடத் தங்களுக்கு வேண்டுமென மலையாளிகள் கேட்டனர்! திருத்தணி ஒரு வழியில் மீண்டது. வேங்கடம் (திருப்பதி) பறிபோனது. பெங்களூரும் கோலார்த் தங்கவயலும் தமிழகத்துடன் சேர்க்கப்படவில்லை. மலையாளிகள் மளமளவென வந்து குடியேறிய கூடலூரை ஒருவாறு தக்கவைத்துக் கொண்டோம். கோவையையும் கேரளத்தையும் ஒட்டிய பகுதிகளோ இன்று மலையாளிகளால் தம்வயமாக்கப்பட்டு வருகின்றன. மாநிலங்களை மொழிவழியாக அமைக்க முடிவு செய்தபோது, நெல்லை, கோவை, நீலகிரி போன்ற மாவட்டங்கள் யாவும் புதிய கேரளத்துடன் சேர்க்கப்பட்டு ஓர் ஒன்றிய (ஐக்கிய) கேரளமாக்க வேண்டுமெனக் கேட்டுக் கேரளப் பேராயக் கட்சியினர் பெருங்கிளர்ச்சியை நடத்தினர்.[71]

ஆனால், தமிழகத்திலிருந்த உலகப் பாட்டாளியங்களும், இந்தி(ய)த் தேசியங்களும், திராவிட ஓர்மைகளும் மட்டும் வாய்

www.tamilarangam.net



செத்து ஊமையாகிக் கிடந்தன. தமிழிரின் மண்ணுரிமை பறி போவது, அவ் வந்தேறி நலன்களுக்கு உள்ளுக்குள் கொண்டாட்டமாகத்தானே இருந்திருக்கும்?

சென்னை மாகாணத்தின் ஆட்சித்துறையிலான அதிகார வகுப்பை 'இந்தியமயமாக்குவது' 1909ஆம் ஆண்டில் தொடங்கியது. 1953ஆம் ஆண்டு வரையில் அதனை 'ஆந்திரமயமாக்கல்' என்றே சொல்ல வேண்டும் என ம. பொ. சி. கருத்துரைப்பார்.[72] மொழிவழி மாநிலங்கள் என்னும் சாக்கில் தமிழகத்தைச் சூறைத் தேங்காய் ஆக்கிய பிறகும், அந் நிலை மாறவேயில்லை. ஆந்திரம் அமைந்த பின்னரும், ஆந்திரத் தெலுங்கு ஆட்சிப்பணி அதிகாரிகளும் பணியாளரும் ஆந்திரத்திற்குச் செல்ல மறுத்துத் தமிழகத்திலேயே நிலையாகக் கூடாரமிட்டனர். அதே போல், மலையாளி அதிகாரிகளும் கன்னட அதிகாரிகளும்கூடத் தத்தம் மாநிலங்களுக்குப் பெயரவில்லை. ஆட்சியதிகார வரம்பிற்குள் தமிழகத்தில் தத்தம் பிள்ளைகளையும் உற்றார் உறவினரையும் வேறு தமிழகத்திற்கு வரச்சொல்லிக் குடியேற்றி, தத்தம் அதிகார அடித்தளைத்தை அவர்கள் மேன் மேலும் வலுப்படுத்திக்கொண்டனர்.[73] தமிழகத்தை ஆள்வது தமிழரல்லர் என்னும் வேண்டாச் சூழலை அவர்கள் உருவாக்கினர். திராவிடக் கட்சிகளின் ஆட்சிகளின்போது இந் நிலை மேலும் உறுதிப்பட்டது.

போதாமைக்குத் தமிழகத்தில் தமிழர்கள் இந் நூற்றாண்டின் தொடக்கம் முதல் தங்களின் காணிகளை வேளாண்மை நிலங்களை மளமளவென இழக்கலாயினர். கழகக் காலம் தொட்டு வேங்கடம் முதல் குமரி வரையில் விரிந்து கிடந்த தமிழகத்தின் எல்லைகளை அக்கம் பக்கத்து நாட்டினரும் பிறரும் மெல்ல அரித்துத் தின்றுவருகின்றனர். விசயநகர வல்லரசோடு இங்கு வந்தவர்கள் போக, ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலும் தெலுங்கர்கள் அலையலையாக வந்து தமிழகத்தில் குடியேறினர்.

## கைவிரித்துவந்த கயவர்...

1790ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் குழுமத்தின் கர்னல் ரீட், தாமசு மன்றோ ஆகியோர் வகுத்த அரையத்துவாரி (வேளாண் வகை) நிலவருவாய் முறை, 1820களில் திருத்தியமைக்கப்பட்டது. அந்த அரையத்துவாரி முறை, தமிழரிடம் தொன்றுதொட்டு நிலவிவந்த காணியாட்சி நிலக்கிழமையை ஒழித்துக்கட்டியது. காணியாட்சி முறையின்கீழ் யாதொரு பங்காளியின் நிலத்தை

www.tamilarangam.net



யும் அயலார் எளிதில் வாங்கிட முடியாது. பங்காளிகளுக்கு இருந்த வாங்கும் முன்னுரிமை (the right of pre-emption) தமிழரின் மண்ணுரிமையைக் காத்துவந்தது.

அத்தகைய காணியாட்சி நிலக்கிழமையை ஆங்கிலேயர் குலைத்திட்ட பெரும் வரலாற்று நிகழ்வும், அரையத்துவாரி முறை தமிழகத்தை ஆட்கொண்டமையும், தெலுங்கர் முதலான வந்தேறிகள் தமிழகத்திற்குள் புதிதாக ஊடுருவுவதற்கேற்ற புற நிலையானது.

தமிழகத்தில் நெடுங்காலம் நிலவிவந்த காணியாட்சி நிலக் கிழமையை ஆங்கிலேயர் குலைத்தமையாலும், வந்தேறிச் சுரண்டலை ஆங்கிலயேரின் நிலவருவாய் ஆட்சி இன்னும் வேகப் படுத்தியமையாலும், சென்னை மாகாணத்தில் வான் பொய்த்த போது பெரிய பஞ்சங்கள் தோன்றின. அவற்றில், 1876–78ஆம் ஆண்டுகளில் நிலவிய கருப்பு(பஞ்ச)க் காலம் மிகக் கொடியது. இப் பஞ்சம் சென்னை, பம்பாய் மாகாணங்களிலும் ஐதராபாத், மைசூர் மன்னராட்சிப் பகுதிகளிலும் மிகக் கடுமையாக இருந்தது. அதோடு, கழிச்சல் (காலரா) கொள்ளை நோயும் சேர்ந்து மக்களை வாட்டியது. இருபதாண்டுகள் கழித்து 1896ஆம் ஆண்டில் தோன்றிய மற்றொரு பஞ்சம் தமிழர் வாழ்வியலை மேன் மேலும் குலைத்தது. தெலுங்கர் பெருமளவில் சென்னை மாகாணத்தின் தமிழ்ப் பகுதிகளுக்குக் குடிபெயரவும், தமிழர் நிலங்களைக் கவரவும் அப் பஞ்சங்களால் வந்த அவலங்களும் பெருங் காரணமாகும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அத் தெலுங்கர் குடியேற்றத்தின் வேகம் கூடியது. வடவார்க்காடு, செங்கை, தகடூர் (தருமபுரி) போன்ற மாவட்டங்களில் மெல்லக் குடிபுகுந்த இரெட்டிகளும் நாயுடுகளும் பிறருமான தெலுங்கர்கள், தமிழரிடமிருந்த காணிகளையும் கழனிகளையும் மளமளவெனப் பெருமளவில் வாங்கி வளைத்துப் போட்டுக்கொண்டனர். அவ் வந்தேறிகள், தமிழர்களைத் தம் சொந்த மண்ணிலேயே ஏதிலி (அகதி)களாக்கினர்.

ஆந்திரத்திலிருந்து அண்மைக் காலத்தில்தான் வந்து தமிழகத்தில் குடியேறிய தெலுங்கர்கள், தென்பாண்டிநாடு வரையில் நன்றாக ஊடுருவிவிட்டனர். அங்குள்ள காணிகளை எல்லாம் மெல்ல மெல்ல வாங்கிப் போட்டுச் சுற்றிவளைத்துக் கவர்ந்து வருகின்றனர். நெல்லை மாவட்டத்தில் உள்ள புன்செய் நிலங்களில் மூன்றில் ஒரு பங்கு அண்மை சில ஆண்டுகளாகத் தெலுங்

www.tamilarangam.net



கரின் கைக்கு மாறிவிட்டனவாம். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பெரிய இழுவை(இரப்பர்)த் தோட்டங்கள் மலையாளிகளுக்கும் வடஇந்தியர்களுக்கும் பன்னாட்டின நிறுவனங்களுக்கும் சொந்தமாகிவிட்டன. தமிழர்க்குச் சொந்த மண்ணிலேயே இடமில்லை. தமிழகத்திலுள்ள காடுகளும் கழனிகளும் தோட்டங்களும் துரவுகளும் தொழில் முதலீடுகளும் வணிகமும் பெரும்பாலும் ஒரு சிறுபான்மையரான தமிழரல்லாதவரிடமே இருப்பதைக் காணப் பூதக்கண்ணாடி வேண்டுமோ?

## ஆரியரா பறித்தனர்?

இத்தகைய நிலப்பறிப்பு சென்ற ஓரிரு நூற்றாண்டுகளாக எவ்வாறு நடந்து வருகிறது என்பதைக் காட்ட இதோ ஓர் எடுத்துக்காட்டு! வடவார்க்காடு மாவட்டத்தின் ஆம்பூருக்கு 20 புதுக்கல் (கிலோமீட்டர்) தொலைவில் வளையல்காரன்பட்டி என்னும் ஒரு சிற்றூர் உண்டு. இச் சிற்றூரில் வளையல்கார நாயுடுகள் என்னும் தெலுங்கர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலோ இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ வந்து குடியேறியிருக்க வேண்டும்.

ஏரிப்பாசனத்தை நம்பிய வளமான கழனிகள் இந்த ஊரில் உண்டு. இந்த ஏரிக்கு அருகில் நல்ல நீர்ப்பாய்ச்சல் இருந்த நிலங்கள் யாவும் 1910ஆம் ஆண்டுக்கு முன்னர் பறையர்கள் எனப்படும் தொல்தமிழரிடம் இருந்துவந்தன.

வளையல்கார நாயுடுகள், மழை இல்லாத காலங்களில் ஊர் ஊராகச் சென்று வளையல் விற்று வணிகம் செய்து திரும்பி வந்து வேளாண்மைக் காலங்களில் பயிர்த்தொழிலில் ஈடுபடுவது வழக்கம். இவ்வாறு சேர்த்த பணத்தைக் கொண்டு இவர்கள் மிக மிக மலிவான விலையில் அத் தொல்தமிழரின் நிலபுலங்களை ஏமாற்றி விலைக்கு வாங்கித் தன்வயமாக்கிக் கொண்டனர். அந் நிலங்களின் சொந்தக்காரரான தொல்குடிகளை அவர்தம் சொந்த நிலங்களிலேயே கூலிக்காரர்களாக்கினர். ஒரு சில தொல்தமிழர்கள், ஊருக்கு அப்பாலிருந்த வானம் பார்த்த கரம்பு நிலங்களை உழுதுண்ணப் பார்த்தனர். வேறு சிலர் வடவார்க்காடு மாவட்டத்தில் அரும்பிய தோல் பதனிடும் தொழிலகங்களில் வேலைக்காரராகப் போயினர். இவர்கள் இழந்த காணிகளில் இன்று தெலுங்கு வளையல்காரர்கள் கரும்பு விளைவித்து வளம் பெறுவதற்கு வேலூர் வணிகத் தரகர்கள் கடனுதவி செய்துவருகின்றனர். இந்தத் தெலுங்கு நாயுடுகள்,

www.tamilarangam.net



பொதுவாகப் பேராயக் கட்சிச் சார்பாளராக இருந்துவந்தனர். நிலங்களை இழந்த தொல்தமிழரோ, அண்ணா திராவிட முன் னேற்றக் கழகத்தைச் சார்ந்தவராக இருந்துகொண்டு திரைப்பட மயக்கத்திற்கும் கள் அருந்தும் பழக்கத்திற்கும் அடிமையாகிச் சின்னஞ்சிறு நாட்கூலி வருவாயையும் வீணே அழித்துக் கெடு கின்றனர். சொந்த நிலத்தை இழந்திட்டமையால் வந்த மன உலைச்சலையும் கையறுநிலையையும் மறக்கடிக்கும் போதைப் பொருட்களாக அவற்றை நினைத்துக்கொண்டு மேன்மேலும் சீரழிந்துவருகின்றனர்.[74]

இதோ இன்னொரு எடுத்துக்காட்டு! தென்பாண்டிநாட்டி லுள்ள இராசப்பாளையத்தின் பழைய பெயர் பள்ளர்பாளையம் அல்லது பழையபாளையம் ஆகும். தெலுங்குநாட்டிலிருந்து பிழைப்புத் தேடித் தமிழகத்திற்குள் புகுந்த தெலுங்கு வேட்டுவச் சாதியினனான கம்பளத்து நாயக்கன் ஒருவன், தன்னுடைய வேட்டைநாயுடன் பள்ளர்பாளையம் வரையில் வந்துவிட்டா னாம். அப்போது அவனுடைய நாய் ஒரு முயலைத் துரத்தத் தொடங்கியது. தப்பித்து ஓடிய முயல் சஞ்சீவி மலையருகில் சென்றவுடன், அம் முயல் திரும்பி நாயை விரட்டத் தொடங் கியது. இந்த அரிய காட்சியைக் கண்டு மலைத்த அத் தெலுங் கன், அந்த மண் வீரஞ்செறிந்த மண் எனக் கருதி அங்கேயே குடியேறுவதென முடிவு செய்தானாம். சேத்தூர் கொல்லங் கொண்டான் சேவுகப் பாண்டியன் என்னும் கள்ளத்தேவர் கிழாராக (சமீன்தாராக) இருந்துவந்த பகுதி அது.

'வீரபாண்டியன்' என்றாக்கப்பட்ட கட்டபொம்மு முத லான கம்பளத்து நாயக்கர்கள் எல்லோருமே தமிழகத்தில் வந் தேறிக் குதிர்ந்து கொழுத்தமைக்கு இந்த நாய்-முயல் கதையே திரும்பத் திரும்பச் சொல்லப்படும்.

அவ்வாறு வந்தேறிய தெலுங்கனும் அவனது வழியினரும் மெல்ல மெல்லத் தமிழரின் – குறிப்பாகத் தொல்தமிழரின் – நிலபுலங்களை எல்லாம் சுருட்டத் தொடங்கினர். 'ஆட்டுத் தலைக்கும் மாட்டுத் தலைக்கும் கேழ்வரகுக்கும் கம்மங்கதிருக்கும் கள்ளு மொந்தைக்குமாகத்' தொல்தமிழர் தத்தம் நிலங்களை எல்லாம் கையுருட்டித் (கைநாட்டு வைத்துத்) தெலுங்கரிடம் கொடுக்க, பழையபாளையம் 'இராசப்பாளையம்' ஆகியது!

பழையபாளையத்தின் காடு கரைகள் தோட்டம் துரவுகள் இத் தெலுங்கரிடம் மேன்மேலும் குவிந்தன. நிலவுறவுகள் தலை கீழாயின. தெலுங்கு நிலவுடையார்கள் தம்வயமாக்கிக்கொண்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோட்டங்களில், தமிழ்ச் சிறார்கள் மாங்காயோ தேங்காயோ திருட நேர்ந்தால், அவர்களைத் தெலுங்கர்கள் சாவடிகளில் அடைத்துவைத்துச் சாட்டையால் அடிப்பதுண்டு. அச் சிறார் களை மீட்பதற்கு, தொல்தமிழரின் பீடும் பெருமையும் மிக்க நாட்டாண்மை அவ் வந்தேறி வேட்டைக்காரரின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்கும் அளவுக்கு வந்தேறிகளின் கொற் றம் கொடி கட்டிக்கொண்டது![75]

அவ் வந்தேறித் தெலுங்கர்கள், பின்னர் 'இராசாக்கள்' ஆயி னர். இவர்களில் சிலர் பேராயக் கட்சியில் சேர்ந்தனர். குமார சாமி ராசா (1898–1957) அவர்களில் குறிப்பிடத்தக்கவராவார். 1922ஆம் ஆண்டில் திருவில்லிபுத்தூர் வட்டாட்சி மன்றத் தலை வராகிய அவர், 1937–43ஆம் ஆண்டுகளில் முகவை மாவட்ட ஆட்சிமன்றத் தலைவரானார். 1936–37ஆம் ஆண்டுகளில் தமிழ் நாடு பேராயக் கட்சியின் பொருளராகவும் அவர் இருந்தார். 1934–37ஆம் ஆண்டுகளில் மதுரை, முகவை, நெல்லை மாவட் டங்களுக்கு நடுவணரசு சட்டமன்ற உறுப்பினராக (MLA-Centre) ஆகிய அவர், 1946–47ஆம் ஆண்டுகளில் முன்னாள் சென்னை மாகாணத்தின் வேளாண்மை அமைச்சராகி, இறுதியில் அம் மாகாணத்தின முதலமைச்சராகக் கொலுவேறினார். பின்னர், 1954–56ஆம் ஆண்டுகளில் ஒரிசாவின் ஆளுநரானார். தமிழ் நிலத்தை இந்தத் தெலுங்கர் ஆண்ட காலத்தை, அந்த இராச பாளையம் 'இராசாக்'களின் பொற்காலம் என்பர். பஞ்சாலை கள், பருத்திக் கொட்டைப் பிரிப்பாலைகள், சீமைந்து (cement) ஆலைகள் எனத் தொழில்வளம் இவர்களிடம் வந்து குவிந்தது; வணிக வலிமையும் கூடியது.

மாற்றாரின் நிலப்பறிப்பும் தமிழரின் நில இழப்பும் இந்தப் பாணியிலேயே தமிழகமெங்கும் இன்னும் நிகழ்ந்து வருகின்றன. வடதமிழ்நாட்டிற்கு ஒன்று, தென்தமிழ்நாட்டிற்கு ஒன்றென மேலே காட்டப்பெற்ற இரண்டு எடுகோள்களும், வந்தேறித் திராவிடர்கள் சொந்த நிலங்களிலிருந்து தொல்தமிழரைத் தமிழ கம் எங்குமிருந்து பிடுங்கியெறிந்த இயற்பாட்டின் பொதுவான போங்கைக் காட்டவல்லன. இதனால், நாம் எழுப்பும் ஓர் அடிப்படைக் கேள்வி: **மண்ணின் மக்களான தொல்தமிழர்கள், வழிவழியாக வந்த தங்களின் மண்ணுரிமையை ஆரியரிடம் இழந்தனரா, தெலுங்கர் முதலான திராவிடரிடம் இழந்தனரா?** தங்களின் நிலபுலங்களைப் பறிக்க அவர்கள் எந்த ஆரியனைக் கண்டனர்? கண்டதெல்லாம் திராவிட வந்தேறிகளின் மண் பறிப்புத்தானே?

www.tamilarangam.net



தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களும், அவற்றின் தலைமை ஊழியர்களும், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழரல்லாதவராகப் பரவலாக இருப்பதால், பறிக்கப்பட்ட தமிழரின் உரிமைகள் வெளிப்படுத்தப்படாமல் அமுக்கப்பட்டு வருகின்றன.

## வந்தேறிகள் மட்டும் வாழ்ந்தனர்!

இதனால், தலைமுறை தலைமுறையாகத் தமிழ்நிலத்தில் தமிழராய் வாழ்ந்துவந்தவர் என்றிருந்தாலன்றித் தமிழரல்லாதவர் யாரும் தமிழகத்தில் காணிகளையும் கழனிகளையும் காடுகளையும் தோட்டங்களையும் துரவுகளையும் மனைகளையும் பிற நிலைச்சொத்துக்களையும் தமிழரிடமிருந்து வாங்குவதைச் சட்டம்போட்டுத் தடுக்க வேண்டும் என்னும் நிலைப்பாடும் கோரிக்கையும் உரக்க எழுவதைத் தடுக்க முடியுமா?

தமிழகத்தின் தொழில்துறை முதலீட்டை எடுத்துக்கொண்டாலும், கோமுட்டிச் செட்டிகளும் கோவைப் பகுதி நாயக்கன்மார்களும் மட்டுமே நயன்மைக் கட்சியின் ஆட்சியின் போதும் அதற்குப் பின்னரும் தொழில்துறையில் ஓங்கி வளர்ந்தவர்கள். தங்கம், வெள்ளி நகைக்கடைகளையும் துணிக்கடைகளையும் சென்னை நகரில் முதன்முதலில் ஆந்திரத் தெலுங்கரே தொடங்கினர். அவர்களுக்குப் பின்னரே, மார்வாடிகள் முதலான வடவர்கள் அத் துறைகளுக்குள் புகுந்தனர்.[76]

தெலுங்கரோடு குசராத்தி, மார்வாடி முதலாளிகளும் வங்கியர்களும் சேர்ந்து, தமிழகத்திலான நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் பணமுதலீட்டையும்கூடக் கட்டெறும்பு அளவுக்குக் குறுகச் செய்துவிட்டனர். அண்மையில் பூதமென வளர்ந்துள்ள டி. வி. எசு., சேசசாயி, டி. டி. கே. போன்ற தமிழ்ப் பார்ப்பன முற்றுடைமை மனைகளோ, தமிழ்த் தன்மையற்றுப் பொல்லா 'இந்து'க் கொள்கையைப் பரப்புவதில் பெருமளவில் காசைக் கொட்டிவருகின்றன.

போலி அனைத்துலகியமும் இந்தி(ய)த் தேசியமும் திராவிடத் தேசியமும் போட்டியிட்டுக் கொண்டும், கைகோர்த்துக் கொண்டும், தாய்த்தமிழகத்தை அடிமையிலும் அடிமையான இழிதகை நாடாகச் செய்துவைத்துள்ளன.

சென்னை மாநிலத்தில் அடங்கிய பல்வேறு தேசிய இனங்களுக்கும் பொதுவாகத் தென்னிந்திய வணிகர் கழகம் (South

www.tamilarangam.net



Indian Chamber of Commerce) போன்ற அமைப்பு இருந்தது. அதன் பெரும்புள்ளிகளில் ஒருவராகப் பிட்டி தியாகராயச் செட்டியார் இருந்தார். அவ் வணிகக் கழகங்களில் தெலுங்கரே பெரும்பான்மையராக இருந்தனர். அப்படி இருந்தும், ஆந்திர வணிகக் கழகம் (Andhra Chamber of Commerce) என்னும் புதிய அமைப்பை ஆந்திரத் தெலுங்கர் அமைத்துக் கொண்டனர்.[77] அவர்களுக்கிருந்த தெலுங்குத் தேசிய இன உணர்வைத் தமிழ் முதலாளிகள் புரிந்துகொள்ளவில்லை.

நயன்மைக் கட்சியின் ஆட்சி போய் பேராயக் கட்சியின் ஆட்சி சென்னை மாகாணத்தில் தோன்றியபோதும், தமிழ்த் தேசிய உணர்வு வளர்வதற்கான சூழல் இல்லாமல் போனது. 1946ஆம் ஆண்டில் தமிழரான சி. என். முத்துரங்க முதலியாரைத் தோற்கடித்துவிட்டு ஆந்திரரான டி. பிரகாசம் சென்னை மாகாணத்தின் தலைமையமைச்சரானார்! தமிழ்நாடு பேராயக் கட்சியைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்களில் நான்கில் ஒரு பங்கினராக இருந்த இருமொழியரான தமிழ்நாட்டுத் தெலுங்கர்கள், தம் போன்ற தெலுங்கரான டி. பிரகாசத்துக்கு மட்டுமே கமுக்கமாக ஒப்போலை (வாக்கோலை) தந்ததனால் தான் முத்துரங்க முதலியார் தோல்வியடைந்தார்.[78]

இந்தியத் தேசியத்திடம் மயங்கியவராய்த் தமிழினப்பற்று அவ்வளவாக இல்லாத காமராசர், இந் நிலையில் ஆந்திரத் தெலுங்கர்களின் மேலாண்மையை ஒழிக்க ஓர் உத்தியைச் செய்தார். ஓ. பி. இராமசாமி ரெட்டியார், பி. எசு. குமாரசாமி ராசா போன்ற தமிழ்நாட்டுத் தெலுங்கரையே அடுத்தடுத்துச் சென்னை மாகாணத்தின் முதலமைச்சர்களாக வரச்செய்தது தான் காமராசர் கண்ட 'வழி'யாக இருந்தது![79]

## பிறழ்ந்த இன உணர்வு

தெலுங்கு தேசிய இன உணர்வு ஒரு கட்டுக்கோப்புக்குள் வந்துவிட்டது. மலையாளிகளிடம் மலையாளத் தேசிய உணர்வு இருக்கிற வலிமையையும் ஆழத்தையும் சொல்லியா தெரிய வேண்டும்? ஆனால், தமிழ்த் தேசியம் மட்டும் உருப்படியான ஒரு வடிவத்தை எடுக்க முடியவில்லை. தமிழுணர்வூட்டிய வ. உ. சிதம்பரனார், மறைமலையடிகள் போன்ற தமிழர்கள் தமிழ்த் தேசிய விடுதலைக்கான கொள்கையை உருவாக்கித் தர இயலாமைக்கு அவர்களுடைய வகுப்புப் பின்புலம் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

www.tamilarangam.net



நடுநிலைப் பள்ளிகளில் முதல் மூன்று வகுப்புகளில் இந்தி மொழியை இராசாசியின் பேராயக் கட்சி ஆட்சி 1935ஆம் ஆண்டில் கட்டாயப் பாடமாக்கியபோது, அந்த இந்தித் திணிப்பை எதிர்த்து மறைமலையடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகிய தமிழறிஞர்களின் தலைமையில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெடித்தது. தமிழ்ப் புலவரையே மிகுதியாகக் கொண்ட அப் போராட்டத் தலைமைக்குப் போதிய தன்னம்பிக்கையும் போர்க்குணமும் இல்லாமை ஒரு பெரும் துன்பியலாகும். போதாமைக்கு, அன்றைய தமிழ்த் தலைமை போர்க்குணமே அறியாத சிவனிய வேளாளர்களிடம் கிடந்தமையால், அம் மரக்கறித் தலைமையால் நல்ல தலைமையைத் தர முடியவில்லை. இதனால், அன்று அரும்பிட்ட தமிழ்த் தேசிய ஓர்மை ஒரு கருக்குலைவாகப் போனது. தடாலடி அரசியல் நடத்தும் துணிவும், ஆற்றலும், பணவலிமையும், செல்வாக்கும், பேராயக் கட்சி– நயன்மைக் கட்சி அரசியல் பட்டறிவும் பெற்றிருந்த கன்னடரான ஈ. வெ. இராமசாமி நாயக்கரின் அரசியல் தலைமையால் மட்டுமே அன்றெழுந்த இந்தியெதிர்ப்புப் போராட்டத்திற்கு வெற்றியை ஈட்டித்தர முடியும் என்னும் மாயை அத் தலைமையை ஆட்கொண்டது. முதுகெலும்பில்லாத அச் சிவனிய் வேளாளர் தலைமை, அதனால் ஈ. வெ. இரா.வின் காலடியில் தமிழ்த் தேசிய இயக்கத்தின் தலைமையைப் பெரும் படையலாக வைத்தது. ஈ. வெ. இராமசாமி நாயக்கருக்குப் 'பெரியார்' என்னும் பட்டத்தை மறைமலையடிகளின் திருமகள் நீலாம்பிகை அம்மையாரை வைத்தே தரப்பட்டது. கன்னடரான ஈ. வெ. இராமசாமியைத் 'தமிழர் தலைவர்' எனக் கற்பித்துச் சாமி சிதம்பரனார் அவரது வரலாற்றை வேறு எழுதி வெளியிட்டார்! தமிழரினத்தின் ஏலாமையையும், அன்றைய மரக்கறித் தலைமையையும் என்னென்று சொல்ல!

தமிழ்த் தேசிய உணர்வு அரும்பத் தொடங்கிய வரலாறு காணா அத்தகைய சூழலில், 'தமிழ்', 'தமிழர்', 'தமிழ்நாடு' என்னும் பேச்சுகளும், 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்னும் முழக்கமும் தமிழரின் வாழ்வியலில் ஒரு புதிய போக்காகின. வளர்ந்துவந்த இத் தமிழ்த் தேசிய ஓர்மையையே இராசாசிக்கு எதிரான அரசியலாக்க ஈ. வெ. இரா. நினைத்தார். இந்த உத்தியேதான் ஈ. வெ. இரா.வின் அடுத்த கட்ட அரசியலானது.

'தமிழ்நாடு தமிழருக்கே!' என்னும் முழக்கம் ஈ. வெ. இரா.வால் 11.9.1938 அன்று எழுப்பப்பட்டது. உள்ளபடியே, அரசியல் காரணங்களுக்காக அவர் எழுப்பிய ஓர் இரவல் முழக்கமே

www.tamilarangam.net



அஃதாகும். அக்கால் தமிழ் அறிவாளிகளிடம் எழுந்த அம் முழக்கத்தை, 1938ஆம் ஆண்டில் எழுந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது ஈ. வெ. இரா. தம்வயமாக்கிக் கொண்டார். அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஒரு தமிழின உரிமைப் போராட்டமாகவும் தமிழக விடுதலைப் போராட்டமாகவும் மக்களுக்குக் காட்டித் தமிழகத்தில் அரசியல் செய்யப் பார்த்த முதன்முயற்சி ஈ. வெ. இரா.வின் முயற்சியேயாகும். 1938 அக்டோபர் 23 அன்று **விடுதலை** ஏட்டில் அவர் வெளியிட்ட அறிக்கை இவ்வாறிருந்தது:

> "இனியாவது 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்று ஆரவாரம் செய்யுங்கள்!
> உங்கள் கைகளில் 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்ற வாசகத்தை எழுதிப் பதியுங்கள்!
> நம் வீட்டுக்குள் அயலான் புகுந்து கொண்டதோடல்லாது, அவன், நமக்கு ஏமான் (எசமான்) என்றால் நமக்கு இதைவிட மானமற்ற தன்மை, இழிதன்மை வேறு என்ன எனச் சிந்தியுங்கள்!
> புறப்படுங்கள்! தமிழ்நாட்டுக்குப் பூட்டப்பட்ட விலங்கைச் சுக்குநூறாக்குங்கள்!
> தமிழ்நாடு தமிழருக்கே!"[80]

அடுத்து, 27.12.1938ஆம் ஆண்டு வேலூரில் நடந்த தமிழர் மாநாட்டில் தமிழ்நாட்டின் எதிர்காலத் திட்டத்தைப்பற்றிப் பேசப்பட்டது. சென்னையில் நடந்த நயன்மைக் கட்சியின் மாகாண மாநாட்டில் தமிழ்நாடு தனிநாடாக வேண்டும் என்பது வலியுறுத்தப் பெற்றது. தமிழ்நாடு தமிழருக்கே என்னும் முழக்கத்தை விளக்குவதற்கென 10.12.1939 அன்று விழா எடுக்கப் பட்டது. ஆனால், அடுத்த சில மாதங்களுக்குள் அம் முழக்கம் கைவிடப்பட்டு 2.7.1940 அன்று காஞ்சியில் திராவிடநாடு பிரிவினை மாநாடு நடாத்தப்பெற்றது. அதோடு, திராவிடநாடு பிரிவினைக்கென ஒரு குழுவும் அம் மாநாட்டில் அமைக்கப் பட்டது.

வடவார்க்காடு மாவட்டத்துத் திருவத்திபுரத்தில் 26.2.1938 அன்று நடந்த தமிழர் மாநாட்டில் சோமசுந்தர பாரதியாருக்கும், ஈ. வெ. இராமாசாமிக்கும், தஞ்சை கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் உமாமகேசுவரம் பிள்ளைக்கும் பாராட்டு மடல்கள் படித்தளிக்கப்பட்டனவே யன்றி, ஈ. வெ. இரா. வுக்கும் அம் மாநாட்டிற்கும் நேரடித் தொடர்பு யாதுமில்லை. தமிழ்க் கொடியை உமாமகேசுவரம் பிள்ளை ஏற்றிவைக்க, கி. ஆ. பெ.

www.tamilarangam.net



விசுவநாதன் அம் மாநாட்டைத் திறந்துவைத்துச் சிறப்புரை ஆற்றினார். பேராசிரியர் சோமசுந்தர பாரதியார் தலைமை வகித்தார்.[81] மாநாட்டில் பங்கெடுத்தோர் பெரும்பாலும் தமிழ ராகவே இருந்தனர். பின்னர், முகவை மாவட்டத்து விருது நகரில் 24.4.1938 நடந்த தமிழர் மாநாட்டிலும் அதே நிலை தான்.[82]

## எது திராவிட நாடு?

***பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைத் தமிழகத்தில் தோற்று வித்தவர் ஈ. வெ. இராசாமி அல்லர்.*** அதை மலையாளியான மருத்துவர் டி. எம். நாயரே வடிவமைத்தார். ஈ. வெ. இரா. 1915ஆம் ஆண்டில் பேராயக் கட்சியில் சேர்ந்தவர். 1926ஆம் ஆண்டில் அவர் அப் பேராயக் கட்சியிலிருந்து விலகினார். ஆனால், நயன்மைக் கட்சியோ 1916ஆம் ஆண்டில் தோற்று விக்கப் பெற்றது. அந் நயன்மைக் கட்சி தோன்றிய முதல் பத் தாண்டு காலம் வரையில், ஈ. வெ. இரா. அக் கட்சியை மிகவும் கடுமையாக எதிர்த்துவந்தார். பேராயக் கட்சியிலிருந்த பார்ப் பனரின் தூண்டுதலால், பார்ப்பனரல்லாதாரின் அமைப்பு ஒன்று அப் பேராயக் கட்சிக்குள்ளேயே தோற்றுவிக்கப்பட்டது. **சென்னை மாகாணச் சங்கம்** என்ற அந்த அமைப்பு, நயன்மைக் கட்சியை எதிர்ப்பதற்கென்றே தோற்றுவிக்கப்பட்டது. அந்த அமைப்பின் துணைத்தலைவராக இருந்தவர் ஈ. வெ. இராம சாமி நாயக்கரே![83]

1926ஆம் ஆண்டில் நயன்மைக் கட்சியில் சேர்ந்த பின்னரும் ஆரியர்–திராவிடர் மெய்யினக் கொள்கையை எதிர்த்துவந்தவர் தான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர். 1929ஆம் ஆண்டில் நடந் திட்ட தமிழர் மாநாட்டில் ஈ. வெ. இரா. ஆற்றிய உரையில்,

> "தமிழ்நாட்டவர் அனைவரும் தமிழரேயாவர். தமிழருள் பல சாதியார், பல சமயத்தார் இருக்கலாம். அவர்கள் அனைவரையும் தமிழ்மொழி ஒன்றுபடுத்தியிருக்கிறது. தமிழ்நாட்டில் பல வகுப்பார் குடியேறியிருப்பது உண் மையே. அவர் தமிழ்நாட்டிலேயே தங்கித் தமது தாய் நாடாகக் கொண்டமையால், அவர் தமிழராகாது பின் எவராவார்?...
>
> "பழந்தமிழர், புதுத் தமிழர் என்ற சொல்லை ஆராய்ச்சி யாளருக்கு விட்டுவிடலாம். சில பழைய வரலாறுகளைப் படித்துப் பிளவுகளை உண்டாக்கல் அறிவுடைமையா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காது. தமிழ்நாட்டிலுள்ள பிராமணர், பிராமணரல்லா தவர், திராவிடர், ஆதிதிராவிடர், இந்துக்கள், முசுலீம்கள், கிறித்துவர்கள், பௌத்தர்கள், சமணர்கள் முதலிய எல்லா ரும் தமிழரேயாவர்”[84]

என வழக்காடியயதே அதற்குச் சான்றுரைக்கும். மொழிவழித் தேசிய இனமாகத் தமிழரை அவர் அன்று பார்த்திருக்கின்றார். ஆயினும், தாம் தமிழரல்லர் என்னும் உள்ளுணர்வு காரண மாகவும், ‘யார் தமிழர்’ என்னும் கேள்வி எழுப்பப்பட்டமை யாலும், தமிழகத்தில் குடியேறிய வந்தேறிகள் எல்லோருமே தமிழர்தாம் என்னும் கூற்றை அவர் முன்வைத்தார். தேசிய இனம் இன்னதென உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரை யறைக்கும் இலக்கணத்திற்கும் மாறாக அவர் ஒரு தவறான பாடத்தைப் படித்தார். தாம் வந்து குடியேறிய தமிழ்நாட்டின் அரசியல் தலைமையைப் பறித்தெடுக்கவும், தமிழ்நிலத்தில் தொன்றுதொட்டு வாழ்ந்துவரும் மண்ணின் மக்களிடையே இன வுணர்வு எழாமல் தடுக்கவும் என்றே, இத்தகைய கூற்றுகளைத் திராவிட வந்தேறிகள் தமிழரிடம் மட்டுமே விலைபேசலாயி னர். அதனால், ஈ. வெ. இரா. ‘திராவிட நாடு’ வேண்டுமெனக் கேட்கலானார். 1944ஆம் ஆண்டில் மிச்சம் மீதி இருந்த நயன் மைக் கட்சியை ஈ. வெ. இரா. தன்வயமாக்கிக் கொண்ட பின்னர், திராவிடர் கழகம் உருவானது. அப்போது தனித் திராவிட நாடு கோரிக்கை ஓர் அரசியல் முழக்கமாக்கப்பட்டது. இத னால், தமிழ்த் தேசியம் மடைதிருப்பப் பெற்றது.

திருச்சி புத்தூரில் 29.9.1945அன்று நடந்த திராவிடர் கழகத் தின் 17வது மாகாண மாநாட்டில்,

‘1 (a) திராவிடநாடு **(சென்னை மாகாணம்)** குமுகம், பொரு ளியல், தொழில் துறை, வணிகம் ஆகியவற்றில் முழு விடுதலையும் மேலாண்மையும் பெற வேண்டும்’[85]

என்னும் தீர்மானம் முதல் தீர்மானமாக இயற்றப்பட்டது.

**திராவிடத்தால் வீழ்ந்தோம்!** என்னும் நூலுக்கு **விடுதலை** யில் மறுப்பெழுதிய தெலுங்கர் அதைச் சுட்டிக்காட்டி,

“இத் தீர்மானத்தின் வரிகளிலும் திராவிட நாடு என்பது சென்னை மாகாணம் [மட்டும்தான்] என்று விளக்கப்பட் டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

“இவ்வாறு திராவிட நாடு என்று கேட்டபோது– மைசூர் மன்னராட்சியையோ, திருவாங்கூர்–கொச்சி மன்னராட்சி யையோ, ஐதராபாத் மன்னராட்சியையோ [கருத்தில்]

www.tamilarangam.net



கொண்டு ஒருபோதும் கேட்கப்படவில்லை என்பதைத் திட்டவட்டமாக அறிய வேண்டும்"[86]

என மிகத் தெளிவாக விளக்குகின்றார். கன்னடத் தெலுங்கு வந்தேறிகள் பேதைத் தமிழரின் காதில் மட்டும் திராவிடப் பூவைச் சுற்றியதையே இது புலப்படுத்தும். பழைய சென்னை மாகாணம் மட்டுமே ஈ. வெ. இரா. கேட்ட திராவிட நாடாம்! அச் சென்னை மாகாணத்திற்கு அப்பாலிருந்த கன்னடர், தெலுங்கர், மலையாளிகள் ஆகியோரின் பகுதிகள் எல்லாம் அவர் கேட்ட திராவிட நாட்டில் அடங்காவாம்! அப்படியாயின், கன்னடருக்கும் தெலுங்கருக்கும் மலையாளிகளுக்கும் மட்டும் இரட்டைத் தாயகங்களா? கன்னடருக்கு ஒரு தனிநாடு உண்டு. தெலுங்கருக்கும் தனிநாடு கிடைத்துவிட்டது. மலையாளிக்கும் தனிநாடொன்று கிடைத்துவிட்டது. ஆனால், தமிழருக்குக் கிடைத்த தமிழ்நாடு மட்டும் உள்ளீட்டில் 'திராவிடநாடு' என்றானது. அஃதாவது, தமிழருக்குக் கிடைத்தது தமிழ்நாடாக இல்லை. இது திராவிடக் கயமையால் வந்த வினை!

## தமிழர் கழகமாகவில்லை!

ஈ. வெ. இரா. 27.8.1944 அன்று சேலத்தில் கூட்டிய நயன்மைக் கட்சியின் மாகாண மாநாட்டில் 'தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்' என்னும் அதன் பெயரைத் **திராவிடர் கழகம்** என மாற்றினார். கி. ஆ. பெ. விசுவநாதன், அண்ணல்தங்கோ, மு. தங்கவேலு, சௌந்திர பாண்டியன் ஆகியோர் நயன்மைக் கட்சியின் பெயரைத் 'திராவிடர் கழகம்' என மாற்றுவதற்கு மாறாக அதைத் **தமிழர் கழகம்** என்றழைக்கலாம் என முழு மூச்சாய்ப் போராடிப் பார்த்தனர். தமிழர் கழகம் என்றால் பார்ப்பனரும் நுழைந்துவிடுவர்; திராவிடன் என்னும் பெயரை எந்தப் பார்ப்பனனும் ஏற்றுக் கொள்ள மாட்டான் என்று சொல்லி, ஈ. வெ. இராமசாமி அக் கருத்தை ஏற்க மறுத்துவிட்டார்.

அச் சேலம் மாநாட்டிற்கு முன்பாகவே, 1943ஆம் ஆண்டின் இறுதியில் சேலத்திலேயே கூடிய நயன்மைக் கட்சியின் ஆட்சிக் குழுவில் அக் கட்சியின் பெயரைத் 'திராவிடர் கழகம்' என மாற்றுவதாகத் தீர்மானம் இயற்றப்பட்டது. அத் தீர்மானத்தை அந் நயன்மைக் கட்சிக்குள்ளிருந்த தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அது 'தமிழ்க் கழகம்' என்றாக வேண்டுமென அவர்கள் விரும்பினர். இதனாலேயே, ஈ. வெ.இரா. 16.1.1944 அன்று செவ்வாய்ப்பேட்டையில் அப் பெயர் மாற்றத்தைப்பற்றிப் பேச

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேர்ந்தது. அந்த உரை 29.1.1944 **குடி அரசு** ஏட்டில் **திராவிடர் கழகம் — பெயர் ஏன்?** என்னும் தலைப்பில் வெளியானது.

"'பார்ப்பனரல்லாதார் சங்கம்' என்று முன்னாளில் அழைக்கப்பட்டுவந்தபோது, ஏதோ ஒருசில நேரங்களில் தவிர, **மற்ற காலங்களில் எல்லாத் தமிழ் மக்களையும் கொண்டதாக நயன்மைக் கட்சி இருந்ததில்லை**"87

என அவ் வுரையில் சொன்ன அவர், அக் கட்சி, தெலுங்கரின் கூடாரமாக இருந்ததை மறைமுகமாக ஒப்புக்கொண்டார். ஆயினும், தம் தலைமையிலான நயன்மைக் கட்சியைத் தமிழரின் அமைப்பாகச் செய்ய அவர் விடாப்பிடியாக மறுத்தார்.

"1917ஆம் ஆண்டிலிருந்து 1943ஆம் ஆண்டு முடிய 26 ஆண்டுகள் மறைந்தன. காலஞ்சென்ற தலைவர்கள், தொடக்கத்தில் 'திராவிடர் கட்சி' என்ற பெயரைக் கொள்வதில் கருத்து வேற்றுமை கொண்டிருந்தனர். இந்தத் திராவிடர் கழகத்தின் உறுப்பினர்களாக இருக்கும் தேவாங்கர் [பிட்டி தியாகராயச் செட்டியார் தேவாங்கர் சாதியினர் என்பதை நினைவில் கொள்க —ஆசிரியர்] — அந்தக் காலத்தில், தங்களைப் பிராமணர்களென்றே கூறிக்கொண்டிருந்தனர். மேலும் ஆந்திர சமீன்தார்கள் தங்களை ஆரியர் என்றே கருதிவந்தனர். உறுதிமிக்கத் தலைவரான காலஞ்சென்ற பனகல் அரசருக்கே பூணூலும் உச்சிக்குடுமியும் இருந்தன. அவர் பெரிய சமற்கிருதப் புலவர்.

"திருவரங்கத்தில் வடமொழியில் படித்தளிக்கப்பட்ட வரவேற்புக்கு, வடமொழியிலேயே பனகல் அரசர் விடையளித்திருக்கின்றார். இந்தி எதிர்ப்புக் காலத்தில் ஆரியர்-திராவிடர் சிக்கல் நம் கட்சியை வலுவாக ஆட்கொண்டபோது, வெங்கிடகிரி அரசர் அவர்கள் அதற்காகவே [நயன்மைக்] கட்சியைவிட்டு விலகினார்.

"திராவிடக் குமுகம் என்று நம்மைக் கூறிக்கொள்ளவே பெரும்பாடாயிருக்கும்போது, தமிழர் என்று எல்லாரையும் ஒற்றுமையாக்க முயற்சியெடுத்தால் இன்னல்கள் கூடும். இங்கேயே பாருங்கள்! கண்ணப்பர் தெலுங்கர், **நான் கன்னடியன்**, தோழர் அண்ணாத்துரை தமிழர். இனி எங்களுக்குள் ஆயிரம் சாதிப் பிரிவுகள். என்னைப் பொறுத்தவரையில், நான் தமிழன் எனச் சொல்லிக் கொள்ள ஒப்புகிறேன். ஆனால், எல்லாக் கன்னடியர்களும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தெலுங்கரும் அப்படியே. எனவே, 'திராவிடக் குமுகத்தின் உறுப்பினர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



> நாம்; நம் நாடு திராவிட நாடு' என்று வரையறுத்துக் கொள்வதில் இவர்களுக்கு மறுப்பு இருக்காது. அது நன்மை பயக்கும்"88

என்றெல்லாம் சொல்லி, 'திராவிடர் கழகம்' என்னும் பெயருக் காக அவர் வழக்காடினார். 'திராவிடர் கழகம்' என்னும் பெயரைத் தவிர வேறு பெயர் வைக்கக்கூடாதென ஈ. வெ. இரா.வை மிகவும் முனைப்புடன் நெருக்கியவர் சி. பி. சிற்றரசு என்னும் தெலுங்கர்தானாம்.

நயன்மைக் கட்சிக்குள் தோன்றிய தமிழர்-தமிழரல்லாதார் என்னும் பூசல் சேலம் மாநாட்டில் வேறு வகையில் வெளிப் பட்டது. அம் மாநாட்டின் ஊர்வலத்தில் இரட்டைக் குதிரை பூட்டிய வண்டியில் ஈ. வெ. இரா.வுடனும் சௌந்தர பாண்டிய னோடும் கி. ஆ. பெ. விசுவநாதனும் பி. பாலசுப்பிரமணியமும் கூட அமர்த்தப்பட்டபோது, ஈ. வெ. இரா.வின் சார்பாளரான ஊர்வலத்தினர் எதிர்ப்புக் காட்டினர். பின்னர் மாநாட்டைத் தொடக்கிவைத்து கி. ஆ. பெ. உரையாற்றத் தொடங்கிய போதும், மீண்டும் எதிர்ப்புக் கிளம்பியது. இவற்றைப்பற்றிக் **குடியரசு** இவ்வாறு எழுதியது:

> "தோழர் விசுவநாதம் அவர்கள் பேசியதும், சற்றேறக் குறைய தோழர் பாலசுப்பிரமணியம் பேசியது போலவே யிருந்தாலும், பெரியார் கொடுங்கோலராய் இருப்பதைக் கூடத் தான் ஆதரிப்பதாகவும் பேசித் திறமையான முறை யில் சாடைமாடையாகச் சில கிண்டல் சொற்களையும் உதிர்க்கலானார். கூட்டத்திலிருந்த பேராளர் சிலர் ஒரு மையில் பேசி எச்சரிக்கத் தொடங்கியவுடன், மறுபடியும் பெரியாருக்குப் புகழ்மாலை சூட்ட முனைந்துவிட்டார்."89

திராவிடக் கருத்தியலுக்கு எதிரானவராக இருந்தமையா லும், தமிழ்த் தேசிய ஓர்மையில் ஊன்றி நின்றமையாலுமே ஈ. வெ. இரா.வின் சார்பாளரால் இவ்வாறெல்லாம் கி. ஆ. பெ. விசுவநாதன் இழிவுபடுத்தப்பட்டார். இதனால், கி. ஆ. பெ. விசுவநாதன், ஈ. வெ. இராசாமி நாயக்கரிடமிருந்து விலகினார். பின்னர்த் தமிழ்த் தேசிய அணியைக் கட்டப் பார்த்த இவர் முயற்சி வெற்றிபெறவில்லை.

## தமிழியத்தின் வேர்கள்

இந் நிலையில், வடவார்க்காடு மாவட்டத்துக் குடியாத்தத் தைச் சேர்ந்த **கு. மு. அண்ணல்தங்கோ**, தனித்தமிழ்நாடு முழக்

www.tamilarangam.net



கத்தை முதன் முதலில் எழுப்பினார். தான் தொடங்கி நடத்திய **தமிழ்நிலம்** என்னும் ஏட்டின் வாயிலாக அவர் தமிழ்த் தேசிய விடுதலைக்குக் குரல் கொடுத்தார். தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால் பாடத்தக்க தேசியப் பாடல்களை எழுதி, **முத்தம்மா பாட்டு** என்னும் நூலாக வெளியிட்டார்.

'திராவிட நாடு' கோரிக்கைக்கு மாறாக அண்ணல்தங்கோ தனித் தமிழ்நாடு கேட்டதை சி. என். அண்ணாத்துரை எதிர்த்தார். "நாலணா ஓரணா" கதையைச் சொல்லி அதை அண்ணா நகையாடினார். ஆனால், உள்ளம் தளராத அண்ணல்தங்கோ, தனித்தமிழ்நாடு கேட்டுப் போராடுவதற்கென்றே ஒரு தொண்டர் படையை அமைத்தார். 1950ஆம் ஆண்டில் தான் நடத்திய ஒரு கூட்டத்தில், 'திராவிடம்' என்னும் பெயரைச் சொல்லாமலேயே பேசுமாறு இவர் கேட்டுக் கொள்ள, அண்ணாவும் அவ்வாறே பேசி முடித்தார்.

தனித்தமிழை அன்றாட அரசியலில் முதன்முதலில் பழக்கியவர் அண்ணல்தங்கோவேயாவார். 'காங்கிரசுக் கட்சி' என்பதைப் பேராயக் கட்சி என முதன்முதலில் தமிழ்ப்படுத்தியவர் இவர்தான். Agent என்பதை 'முகவர்' என்றும் Insurance என்பதை 'உயிர்க் காப்பீட்டுக் கழகம்' என்றும் ஆக்கியதைப் போல் பல அரிய தமிழ்ச்சொற்களையும் ஆக்கித் தந்தார். தனித் தமிழ்ப் பெயர்களை ஆக்குவதிலும் சூட்டுவதிலும் பெரிய ஆர்வம் காட்டினார். உருவ வழிபாட்டை எதிர்த்த அண்ணல் தங்கோ, முருகன் தமிழ்க் கடவுள் என்னும் கருத்தைப் பரப்பினார். பொங்கலைத் தமிழரின் தேசியத் திருநாள் என வைத்து, ஒரு கிழமைக் காலத்திற்குக் கொண்டாடினார்.

பழைய சென்னை மாகாணத்தை மொழிவழியில் அரிந்த போது, தேவிகுளம், பீர்மேடு, திருப்பதி, சென்னை போன்ற பகுதிகளெல்லாம் தமிழகத்திலேயே இருக்க வேண்டுமென உரிமைக் குரல் எழுப்பியவர்களில் அண்ணல்தங்கோ குறிப்பிடத்தக்கவர். தமிழ்நாடு எல்லைக் காப்புப் போராட்டத்தில் இவரும் முழுமூச்சுடன் ஈடுபட்டார். தமிழ்நாடு தனிநாடாக வேண்டும் என்பதை வலியுறுத்தித் தமிழ்நாட்டின் எல்லைகள் இன்னின்னவென வறையறுத்த இவருடைய கூட்டத்தில், சோமசுந்தர பாரதியாரும், பாவேந்தரும்கூடப் பங்கெடுத்தனர்.

திராவிட இயக்கத்திற்குள் இருந்த வண்ணம் தமிழின விடுதலை உணர்வை இறவாத எழுச்சிப் பாடல்களாக்கிய பெருமை புரட்சிப் பாவலர் பாரதிதாசனைச் சாரும்.

www.tamilarangam.net



"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!"[90]

எனத் தமிழினத்தின் ஒற்றுமைக்காகவெனச் சங்கூதிய புரட்சிப் பாவலன் அதோடு நிற்கவில்லை.

"பார்த்தொழில் அனைத்தும்கொண்ட
பயன்தரு ஆலைக்கூட்டம்
ஆர்த்திடக் கேட்பதன்றோ
அணிபெறத் தமிழர் கூட்டம்
போர்த்தொழில் பயில்வதெண்ணிப்
புவியெல்லாம் நடுங்கிற்றென்ற
வார்த்தையைக் கேட்டு நெஞ்சு
மகிழ்ந்துகூத் தாடல் என்றோ?"[91]

என்றும் பாடி, தமிழரிடையே ஒற்றுமை வந்திட்டால் மட்டும் போதாது, நல்ல போர்க்குணமும் வேண்டும் எனத் தமிழரின் இனவுணர்வை ஆற்றுப்படுத்தியமையும் அப் பாவேந்தரின் பாக்களின் தனிச் சிறப்பாகும்.

## தமிழரசு அரசியல்

தமிழ்த் தேசிய கருத்தியல் அரசியல் கட்சி வடிவில் ஒருவாறு வெளிப்படவும் செய்தது. ம. பொ. சிவஞானம், பேராயக் கட்சிக்குள்ளிருந்துகொண்டே தமிழரசுக் கழகம் என்னும் கட்சியைத் தோற்றுவித்தார். அத் தமிழரசுக் கழகத்தின் கால்கோள் கூட்டம் 1946 நவம்பர் 21ஆம் நாளன்று சென்னை மண்ணடியில் நடந்தபோது, அக் கூட்டத்தில் திரு. வி. கலியாணசுந்தரனார், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், மு. வரதராசனார் முதலான தமிழறிஞர்கள் பங்குபெற்றனர். 'தமிழினமே ஒன்றுபடு!' என்பதே அத் தமிழரசுக் கழகத்தின் அறைகூவலானது.

சோவியத் ஒன்றியத்தின் தேசிய இனக் கொள்கையைக் கண்மூடித்தனமாகப் போலிகை செய்யப் பார்த்த தமிழரசுக் கழகம், தமிழ்நாட்டிற்குத் தனிநாட்டுரிமை (the right of self-determination) வேண்டும் எனக் கேட்டு இயற்றிய தீர்மானத்தை ஆதரித்து திரு. வி. கலியாணசுந்தரனார், காமராசர், பாவேந்தர் பாரதிதாசன், ப. சீவானந்தம், கல்கி கிருஷ்ணமூர்த்தி, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், டாக்டர் சுப்பராயன், டி. கே. சிதம்பரனார் முதலான பன்னிருவர் கையொப்பமிட்டனர் என்பது அக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கழகத்தின் தனிநாட்டுரிமைக் கொள்கைக்கு அறிவர் பெருமக்களிடமிருந்து கிட்டிய பேராதரவையே காட்டும்.

தேசிய இனச் சிக்கலை அரைகுறையாகப் புரிந்துகொண்ட இந்த அமைப்பின் கொள்கையில் குழப்பங்கள் கூடாரமிட்டுக் கொண்டிருந்தன. திராவிடக் கொள்கையை எதிர்த்த அளவுக்கு அக் கட்சி, 'இந்தி(ய)த்' தேசியத்தை எதிர்க்கவில்லை. மாறாக அதை அணைத்துக் கெட்டது. இல்லாத இந்திய ஒற்றுமைக்குத் தரகு பேசியது. இந்தத் தரகுத் தன்மையால் 'நடுவில் கூட்டரசு; மாநிலத்தில் தன்னாட்சி' என்னும் உப்புச்சப்பில்லாத கொள்கைக்குக் கடைவிரித்துக் கெட்டது. தேசிய இனங்களுக்குத் தனிநாட்டுரிமை (right of self-determination) கேட்கும் கொள்கையைத் தூக்கிக் குப்பையில் எறிந்துவிட்டுத் தன்னாட்சியைக் (autonomy) கேட்கும் இரவலர் நிலையை எடுத்தது. இந்தக் கேட்டுக்கு 'ஒப்புரவுத் தமிழ்க் குடியரசு' என்னும் ஒரு புதிய தமிழகத்தை அமைக்கப் போவதாகவும் சொல்லிக்கொண்டது. 'உரிமைக்கு எல்லை வேங்கடம்; உறவுக்கு எல்லை இமயம்' என்னும் இருதலை முழக்கத்துடன் இந்தி(ய) வல்லரசிடம் தமிழரினத்தைப் பேரம் பேச முன்வந்தமையால், இந்தி(ய) வல்லரசின் திரையன் குதிரையோ என ஐயப்படும் வகையில் அது நடந்து கொண்டது.

ஆயினும், சென்னை மாகாணத்தை மொழிவழியில் பிரித்த போது, திராவிடத் தலைமைகளும் இந்தி(ய)த் தேசியங்களும் உலகப் பாட்டாளியங்களும் தமிழகத்தின் எல்லைகளை மீட்கக் குரல் கொடுக்கும் அக்கறையும் நாட்டமும் திறனும் துணிவும் அற்றிருந்தன. அந் நிலையில், தமிழக எல்லைகளை ஓரளவாவது மீட்ட பயன் அம் ம. பொ. சிவஞானம் அவர்களால் தான் வந்தது என்பதற்காகத் தமிழரினம் இந்த அணியினருக்கு நன்றி சொல்லாமல் இருக்க முடியாது.

தேசிய இன அடிப்படையில் மாநிலங்கள் அமைவதைத் தடுக்க வேண்டி திராவிடக் கொள்கையை மறைமுகமாக ஏற்றுக் கொண்ட இந்தி(ய) வல்லரசு, 1956ஆம் ஆண்டில் 'தென் பைதிரத் திட்டம்' (தட்சிணைப் பிரதேசத் திட்டம்) என்னும் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தது. அத் திட்டத்தைக் குலைக்க ஈ.வெ.இரா.வும் உதவினார்.

தமிழகப் பேராயக் கட்சியில் சத்தியமூர்த்தி (1887–1943) என்னும் ஐயருக்கும் சி. இராசகோபாலாச்சாரி என்னும் ஐயங்காருக்கும் இடையிலான முரண்பாடு மாபாரதப் போரைப்

www.tamilarangam.net



போன்ற ஓர் உட்பூசல் என்பதை உலகறியும். அந்தப் பகை, சத்தியமூர்த்தியின் அணியைச் சேர்ந்த காமராசருக்கும் இராசா சிக்கும் இடையிலான பகையாகச் சத்தியமூர்த்தி ஐயரின் மறை வுக்குப் பின்னரும் தொடர்ந்தது.

ம. பொ. சிவஞானம் இராசாசியின் கைப்பாவை என்பது ஊரறிந்த குட்டு. ஆயினும், சென்னை மாகாணத்தில் ஆந்திர ருக்கெனத் தனி மாநிலப் பேராயக் கட்சி உருவாகிய பின்ன ரும், தெலுங்கரின் மேட்டிமையும் கொற்றமும் தமிழ்நாட்டுப் பேராயக் கட்சிக்குள்ளும் தொடர்ந்ததை இராசாசி என்னும் தமிழ்ப் பார்ப்பனரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஆந்திரத் தெலுங்கர்கள் இராசாசியையே தங்களின் இனநலன் களுக்கு எதிரான பெரிய நெருடலாகக் கருதிவந்தனர். இத னால், தமிழ்த் தேசிய உணர்வைத் தமிழ்நாட்டுப் பேராயக் கட்சிக்கு உள்ளும் புறமும் உசுப்பிவிட வேண்டிய தேவையை இராசாசியும் மெல்ல உணர்ந்தார். அதன் வழியில் தன்னை யறியாமலேயே செயல்பட்டார். இந் நிலையில், அவரது முயற் சிக்குத் தக்கவகையில் கைகொடுத்தவர் ம. பொ. சிவஞானம் ஆவார். 1952ஆம் ஆண்டில் இராசாசி முதலமைச்சரானபோது, தெலுங்கர்கள் அவருக்குக் கொடுத்த தொல்லைகள் ஒரு பெரிய கதை. தமிழகப் பேராயக் கட்சி, பார்ப்பனர்–பார்ப்பனரல்லா தார் எனப் பிரிந்து கிடக்கையில், தமிழர்–தெலுங்கர் என்னும் இனவேற்றுமையின் அடிப்படையிலேயே அத் தெலுங்கர்கள் இராசாசிக்கு எதிராக வரிந்துகட்டி நின்றனர். பொட்டி சீராமுலு தனி ஆந்திரம் கேட்டுப் பட்டினி கிடந்து செத்த போது, 'அரவ ராசாசி சாவால; ஆந்திர ராச்சியம் காவால' என்னும் முழக்கமே ஆந்திரத் தெலுங்கரின் போர்க்குரலாக இருந்தது.[92]

ஆந்திரப் பெருமக்கள் அவை என்னும் கட்சிசாராத் தெலுங் கர் அமைப்பின் வழியாகத் தெலுங்கர்கள் தங்களது தேசிய இன ஓர்மையை ஆற்றுப்படுத்தினர் என்பது மெய்தான். ஆனால் பேராயக் கட்சிக்குள்ளேதான் அந்த ஆந்திரரின் தனிமாநிலக் கோரிக்கையும் தெலுங்குத் தேசிய ஓர்மையும் கருக்கொண்டதும் உருக்கொண்டதும் வரலாறு. அதே போல், மலையாளிகளின் 'ஒன்றிய கேரளம்' என்னும் கோரிக்கை அரும்பியதும் ஆளுயர வளர்ந்ததும் பேராயக் கட்சிக்கு உள்ளேயேதான் என்பதும் தனி வரலாறு. அகன்ற கருநாடகம் மொழிவழியில் அமைந்த பின் னர், கன்னடர்கள் தங்களுடைய கன்னட தேசிய நலன்களை வன்கோட்டையென வளர்த்துக்கொண்டதும் அப் பேராயக்

www.tamilarangam.net



கட்சிக்கு உள்ளிருந்தேதான் என்பதும் உண்மை. இந் நிலையில், இந்தி(ய)த் தேசியக் கட்டுக்கோப்புக்குள்ளேயே திராவிடர்களான தெலுங்கர்கள், மலையாளிகள், கன்னடர்கள் ஆகியோரின் தேசிய இன ஓர்மைகள் காலூன்றி வளர்ந்து வானளாவக் கொடிகளைக் கட்டின. இம் மூன்று திராவிட இனத்தவரும் 'இந்தி'யா வென்னும் கட்டுக்கோப்புக்குள்ளிருந்தே பிரிந்து தனி நாடுகளாகிட என்றுமே விரும்பியதில்லை என்பதே ஒரு பெரிய புதிரும் முரணணியுமாகும்.

இந் நிலையில், ம. பொ. சி. அமைத்த தமிழரசுக் கழகத்தின் வாயிலாக, இந்தி(ய)த் தேசிய அணிக்குள்ளே அதே போன்று தமிழ்த் தேசிய கருத்தியலும் கருக்கொண்டது. அத் தமிழரசுக் கழகம் தோன்றுவதற்கான முன்னிலைகள் இரண்டு என்பர். அவை:

1) பேராயக் கட்சி உறுப்பினராகவும் கிராமணி குல மகாசன சங்கம் என்னும் சாதியமைப்பின் செயலராகவும் முதலில் இருந்த ம. பொ. சிவஞானம், அமராவதிச் சிறையில் இருந்தபோதே தமிழிலக்கியங்களைக் கற்கத் தொடங்கி, 'தான் ஒரு தமிழன்' என்னும் இனஓர்மையைப் பெற்றிட்டார். அத்தகைய தமிழரின உணர்வைப் பெற்றதையே அவர் தம்முடைய வாழ்க்கையின் இரண்டாம் பகுதியாகக் கொண்டார். இஃது ஒரு திரிவாக்க வளர்ச்சி.

2) தமிழ்நாடு பேராயக் கட்சியெனத் தனிமாநிலக் கட்சியமைப்புத் தோன்றிய பின்னரும் தெலுங்கரின் மேட்டிமையும் கொற்றமும் ஓங்கிநின்றமையால், அப் பேராயக் கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் தெலுங்கரின எதிர்ப்புணர்வு புகையத் தொடங்கியது. இத்தகைய சூழலில், பேராயக் கட்சிக்குள்ளிருந்த தமிழரிடம் விளங்கிவந்த தெலுங்கர்க்கு எதிரான உள்ளக்குமுறலின் அளவையியல் நீட்சியாகவும் வெளிப்பாடாகவுமே தமிழரசுக் கழகம் தோன்றியது. அத் தெலுங்கரின் குறும்புகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் ஆளான இராசாசியின் மறைமுகத் தூண்டலும் துணையும் அந்த இயற்பாட்டிற்கான சூழலாகவும் தேவையாகவும் அமைந்தன.

அச் சூழலுக்கான வரலாற்றுத் தேவையும் நிகழ்வுமாகிய தமிழரசுக் கழகம், படித்த நடுத்தர வகுப்புத் தமிழரைக் கவரத் தொடங்கியது. 1944ஆம் ஆண்டில் கால்கொண்ட ஈ. வெ. இரா. வின் திராவிடர் கழகத்தையும் விஞ்சி வளர்ந்து உள்ளபடியே தமிழக வாழ்வியலில் பெரியதோர் ஆற்றலாக அமைந்திருக்க

www.tamilarangam.net



வேண்டிய அத் தமிழரசுக் கழகம், பின்னர் வழியிழந்து விழியிழந்து தன்னேயே கெடுத்துக்கொண்டது அதன் பிந்தைய கதையாகும்.

மொழிவழி மாநிலங்களை அமைப்பது என்னும் சாக்கில், திராவிடரான தெலுங்கரும் கன்னடரும் மலையாளிகளும் தமிழகத்தின் பல எல்லைப் பகுதிகளை வெட்டிப் பெயர்த்துச் சென்ற போது, தமிழகத்தின் வடக்கு எல்லைகளையும் தெற்கு எல்லைகளையும் காக்க ம. பொ. சிவஞானம் நடத்திய போராட்டங்கள், தனி வரலாறாகும். இராசாசியை மனத்தில்கொண்டு, 'ஆட்டுவித்தால் ஆடாதார் யாரோ?' என நகையாடிப் பார்ப்பனரெதிர்ப்பு என்னும் சாக்கில் ம. பொ. சி. எல்லைகளை மீட்டதைச் சிறுமைப்படுத்துவது பெரிய பேதைமையாகும். அதே போல், 1960களில் சென்னை மாகாணம் என்னும் பெயரைத் தமிழ்நாடு என மாற்றிடக் கேட்டு ம. பொ. சி. யின் தலைமையிலான தமிழரசுக் கழகம் நடத்திய போராட்டம் ஒரு முன்னோடியாகும். அந்தப் போராட்டத்திற்குத் தமிழரிடமிருந்து பேராதரவு கிடைத்தது. ஆயினும், ஆற்றிலொரு கால் சேற்றிலொரு காலெனப் பேராயக் கட்சியின் (1962) பொதுத்தேர்தல் நலன்களுக்கும் தமிழ்த் தேசிய நலன்களுக்கும் இடையில் அல்லாடிய ம. பொ. சி.யின் ஊசலாட்டம், அத் தமிழரசுக் கழகத்தின் வீழ்ச்சிக்குக் கட்டியம் கூறியது.

தமிழகத்தின் நலனைக் கருதியும் தெலுங்கர்களுக்கு எதிர்ப்பாகவும் ம. பொ. சிவஞானத்தை அன்று ஆட்டுவித்துவந்தவர் இராசாசிதான் என்னும் உண்மையின் மறுபக்கத்தையும் பார்க்க வேண்டும். இராசாசியின் பகைஞரும் ஈ. வெ. இராமசாமி நாயக்கரின் உற்ற நண்பருமான காமராசரோ, தமிழகத்தின் எல்லைகளைக் காக்கவும் மீட்கவும் சுண்டுவிரலைக்கூட அசைத்தாரில்லை. தேவிகுளம், பீர்மேடு முதலான தமிழ்ப் பகுதிகளைத் தாய்த்தமிழகத்தோடு இணைக்கக் கோரியபோது, 'குளமாவது, மேடாவது!' எனத் திருவாய்மலர்ந்தருளித் தமிழரினத்திற்கே இரண்டகம் செய்தவர்தாம் இராசாசி எதிர்ப்பாளரான காமராசர்! பெரியார் என்னும் கன்னடரின் துணையும், குருட்டுத்தனமான இராசாசி எதிர்ப்பும், தமிழரின் மண்ணுரிமையைக் காட்டிக்கொடுக்கும் அவலநிலைக்கு அக் காமராசரைத் தள்ளியதே அதற்கான காரணம். தமிழகப் பேராயக் கட்சியில் இராசாசிக்கும் காமராசருக்கும் இடையிலான உட்பூசலுக்குத் தமிழகத்தின் எல்லைக் காப்பும் மீட்பும்தானா பலிகடாக்களாக்கப்பட வேண்டும்?

www.tamilarangam.net



## நாம் தமிழர் அரசியல்

1942ஆம் ஆண்டில் சி. பா. ஆதித்தனார் **தமிழ் அரசு** (இராச்சிய)க் கட்சியைத் தொடங்கினார். அன்று ஆங்கிலேயரிடம் அடிமையுண்டு கிடந்த நாடுகளிலடங்கிய தமிழரை எல்லாம் திரட்டி, அவர்களுக்கென ஒரு 'தமிழப் பேரரசை' உருவாக்கு வதே அவரது நோக்கமாக இருந்தது. தமிழகத்தை மட்டுமே வரம்பாகக் கொண்டு, ஆங்கிலேயரிடம் அத் தமிழருக்குத் தனி யாகத் தனியுரிமை வழங்கக் கேட்டு அவர் போராடியிருந்தால், வரலாறு வேறுவகையில் இருந்திருக்கும்.

ஆனால் 1942ஆம் ஆண்டின் பிற்பகுதியில் காந்தி நடத்திய 'வெள்ளையனே வெளியேறு!' போராட்டத்தைக் கெடுக்கக் கூடாதென்றும், அன்று மாகாண அரசியலில் தலையெடுத்துக் கொண்டிருந்த தம் சொந்தச் சாதியரான காமராசரின் வளர்ச் சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாதென்றும், ஆதித்தனார் கருதியதே அவ் வியக்கத்தை அவரே கைவிட்டதற்கான காரணம் என்பர். சாதி என்னும் முருங்கைக்கொம்பைப் பற்றிக்கொண்டு, தேசிய இனம் என்னும் புளியங்கொம்பைப் பற்றாமல் விட்டோ ரின் கதையெல்லாம் இவ்வாறே முடியும்.

ஆயினும், அவருக்குள் குடிகொண்ட ஆழ்ந்த தமிழரின உணர்வு அவரை **நாம் தமிழர்** இயக்கத்தைத் தோற்றுவிக்கச் செய்தது. சி. பா. ஆதித்தனாரின் தலைமையில் திருக்குறள் முனிசாமி, ஒப்புரவு(சோசலிச)க் கட்சியைச் சேர்ந்த ஈரோடு சின்னச்சாமி, வ. செயசந்திரன், வாலாசா வரதராசன் ஆகி யோர் சேர்ந்து **நாம் தமிழர்** இயக்கத்தைக் கட்டினர். பாவேந் தரும் ஆதரவு தந்தார். தமிழ்நாடு தனிநாடாக வேண்டும் என் பதே நாம் தமிழர் இயக்கத்தின் குறிக்கோள். பின்னர், 1958 பெப்ருவரி 9 அன்று நடந்த நாம் தமிழர் இயக்க அமைப்புக் கூட்டம் தனியுரிமை(சுதந்திர)த் தமிழ்நாடே தனது குறிக்கோள் என்று முழங்கியது. அத் தனியுரிமைத் தமிழகத்திற்குள் ஈழம், பர்மா முதலான கடலுக்கப்பாலுள்ள நாடுகளையும் அடக்கி, அதனை 'ஆழிசூழ் தமிழப் பேரரசு' என ஆதித்தனார் வரை யறுத்தார்.

தாமெழுதிய **தமிழப் பேரரசு** என்னும் நூலில் தமிழகம் எல்லா வகைகளிலும் தனித்தியங்க முடியும் என்பதை விரி வாகச் சொல்லி நிறுவியிருந்தார். **தமிழ்க்கொடி** என்னும் கிழமை ஏட்டைக்கொண்டு நாம் தமிழர் இயக்கத்தின் கொள்கை களைப் பரப்பிவந்தார். தமிழ்நாட்டை நீக்கிய இந்திய வரை

www.tamilarangam.net



படத்தை எரிக்கும் போராட்டத்திற்கு இந்த அமைப்பு அறை கூவல் விடுத்தது. சடுகுடு ஆட்டத்தைத் தமிழர் விளையாட்டு என அறிவித்து, ஆதித்தனார் ஆக்கமும் ஊக்கமும் தந்தார்.

1958 சூலை 6ஆம் நாளன்று மன்னார்குடியில் ஆதித்தனார் கூட்டிய தனியுரிமை(சுதந்திர)த் தமிழ்நாடு போராட்டப் பணித் திட்ட மாநாட்டில் ஜி. டி. நாயுடு, ஈ. வெ. இராமசாமி நாயக்கர் முதலான தமிழரல்லாத் தலைவர்களும் பங்கெடுத்தனர். அந் நாம் தமிழர் இயக்கம் எந்த அளவுக்குத் தனித்தமிழர் இயக்க மாக வளரவல்ல உள்ளாற்றலைக் கொண்டிருந்தது என்பதை இதுவே அளந்து காட்டும். ஆதித்தனார் வேற்றினத்தாரை அணைத்துக் கெட்டதே அவரது பிந்தைய தோல்விக்குக் காரண மாகும்.

1962ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ்நாடு இந்தியா விலிருந்து பிரிய வேண்டுமென்னும் கொள்கையை முன்வைத்து ஆதித்தனார் தேர்தல் பரப்புரை நடத்தினார். சென்னைக் கடற் கரையில் 1962ஆம் ஆண்டு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிய அண்ணா,

> “சி. பா. ஆதித்தனார் கேட்கும் தனித்தமிழ்நாடு என்பது ஒரு தொழுநோயாளியின் கையிலிருக்கும் வெண்ணெய் போன்றது. அது யாருக்கும் பயன்படாது”93

எனச் சொல்லிப் புண்படப் பேசினார்.

அதற்கு விடையளித்த ஆதித்தனார்,

> “மெத்தப் படித்த அண்ணாத்துரை அவர்களே! இன்று இந்தியக் கூட்டாட்சியில் தமிழ்நாடு அடிமைப்பட்டு இருப் பதைப் போல நீங்கள் கேட்கும் திராவிடக் கூட்டாட்சி யிலும் தமிழ்நாடு அடிமைநாடாகத்தான் இருக்கும். அதை விட இந்தியக் கூட்டாட்சியிலேயே அடிமைநாடாக இருந்துவிடலாமே. அது மட்டுமன்று. திராவிட நாடு என்ற குழந்தையைப் பெற்றவர் பெரியார். அதை வளர்த் தவரும் அவரே. பின்னர் அவரே அத் ‘திராவிட நாடு’ என்ற குழந்தை செத்துவிட்டது; அதைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டேன் என்று அறிவித்துவிட்டார். இவ்வாறு அவர் அறிவித்த பிறகும் திராவிட நாடு பிணத்தைத் தோண்டி எடுத்துக்கொண்டுவந்து ‘திராவிட நாடு திராவி டருக்கே!’ என்று கதறியழுதுகொண்டிருப்பதில் பொருள் இல்லை”94

என்று இடித்துரைத்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இறுதியில், 1967ஆம் ஆண்டில் தி. மு. க.வில் நாம் தமிழர் இயக்கத்தைக் கரைத்த பின்னர், அவர் முன்வைத்த தமிழ்த் தேசியக் கொள்கையும் ஒடுங்கியது.

1948ஆம் ஆண்டில் நாவலர் சோமசுந்தர பாரதியார், கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோரைக் கொண்ட தமிழர் கழகம் என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இத் தமிழர் கழகம் பெரிய அளவில் வளர இயலாமல் போனது.

## நந்தவனத்தில் ஓர் ஆண்டி...

திராவிடர் கழகத்தில் 1949 செப்டம்பர் 17 அன்று ஏற்பட்ட பிளவுக்குப் பிறகு, அதன் வழி இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் தன் தாய்க்கழகத்தை விஞ்சி மளமளவென வளர்ந்தது. அந்த இயக்கத்தில் இலைமறை காயாக இருந்த தமிழ்த் தன்மையே அதற்கு ஒரு பெரிய கரணியம் ஆகும். ஆனால், அந்தத் தமிழ்த் தன்மையைத் திராவிடக் கொள்கை அமுத்தி மறைத்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கிய பின்னர் அதன் முதல் சட்டதிட்டம் மயிலாடுதுறையில் நடந்த பொதுக் குழுவில் வைக்கப்பட்டபோது, கோவை மாவட்ட தி. மு. க.வின் அமைப்பாளராகவிருந்த கோவைச் செழியன், திராவிடக் கூட்டாட்சி கூடாதென அண்ணாவிடம் வழக்காடினார். திராவிட நாடு அமைந்தால், தெலுங்கரும் கன்னடரும் மலையாளிகளும் தமிழரைச் சுரண்ட மாட்டாராவென்றும், அதனால் அவர்தம் மேட்டிமைதானே தமிழரைத் தாழ்த்துமென்றும் அண்ணாவிடம் கேட்டார். சோவியத் ஒன்றியத்தில் இருந்தைப் போல் ஒவ்வொரு மாநிலமும் திராவிடக் கூட்டாட்சியில் ஒரு குடியரசாக அமையத்தக்க திராவிட பெருங்கூட்டோ, இந்தியப் பெருங்கூட்டோ (confederation) அமைக்க வேண்டிப் போராடினால் என்னவென அவர் கருத்துரைத்தார்.

அதற்கு அண்ணா அக் கோவைச் செழியனை அமைதிப் படுத்தி, பெரியாரைவிட்டு வந்தவுடன் இவ்வாறெல்லாம் பேச வேண்டாம் எனச் சொல்லி மழுப்பிவிட்டார். தொடக்க முதல் தமிழன் என்று நம்மை நாமே அழைத்துக்கொள்ளாமல் 'திராவிடன்' எனச் சொல்லிக் கொண்டதாலேயே நாம் தமிழ்மொழிக்கும் இனத்திற்கும் தீங்கு செய்துவிட்டோம் எனக் கோவைச் செழியன் அதனால் இன்று வருந்துகின்றார்.[95]

www.tamilarangam.net



தமிழ்த் தேசியக் கட்சி என்னும் பல்லில்லாத ஒரு கட்சி அதற்கடுத்துத் தோன்றி மறைந்ததற்கும் ஒரு சிறிய வரலாறு உண்டு.

1956 திருச்சி மாநாட்டில், இனி தேர்தல் அரசியலில் ஈடு படப் போவதாக திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்தது. இதனால் அக் கழகம் எழுப்பிவந்த 'திராவிடநாடு' கோரிக் கையை மெல்ல மெல்லக் கைவிடத் தொடங்கியது. 1957ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் அக் கழகம் 15 சட்டப் பேரவைத் தொகுதிகளில் வென்றது. அன்று பொருட்டுறை அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம், தி. மு. க. அணியின் சட்டப் பேரவைத் தலைவராக இருந்த சி. என். அண்ணாத்துரையை 1959 திசம்பரில் சட்டப் பேரவையில் ஒரு கேள்வியைக் கேட்டு மடக்கினார். தனித் திராவிட நாட்டைக் கேட்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய அரசுச் சட்டத்தை முழு மனதுடன் ஏற்றுக்கொள்வதாகச் சொல்வது ஒரு பித்தலாட்டமில்லையா என்பதே அவர் எழுப்பிய கேள்வி. அண்ணா, வகையாக மாட்டிக் கொண்டார்! இந்திய அரசுச் சட்டத்தை முழு மன துடன் ஏற்றுக்கொள்வதாயின், தி. மு. க. பிரிவினை கேட்பதைக் கைவிட வேண்டும். பிரிவினையை வலியுறுத்துவதாயின், அக் கழகம் இந்தி(ய) அரசுச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது. இதுதானே உண்மைநிலை? அப்போது, மாநிலங்களின் அதிகா ரங்கள் எல்லாம் மிகக் கொடிய முறையில் நடுவணரசிடம் நடுக்குவிக்கப்பட்டிருப்பதாகவும், இந்திய அரசுச்சட்டத்தைத் திருத்தக் கேட்டுச் சட்டப்படி போராடுவதே தி. மு. க.வின் கொள்கை என்பதாகவும், பட்டும் படாமல் பேசி அண்ணா மழுப்பினார்.[96]

அண்ணாவின் இந்தப் பேச்சு, கழகத்தில் பெரிய அதிர்ச்சி யையையும் சலசலப்பையும் ஏற்படுத்தியது. அன்று கழகத்தின் பொதுக்குழுத் தலைவராக ஈ. வெ. கி. சம்பத் இருந்தார். அவர் அண்ணாவுக்கு அடுத்த பிறங்கடையாக (வாரிசாக)க் கருதப் பட்டுவந்தவர். அண்ணாவின் இந்தக் கொள்கை மழுப்பலை எதிர்த்து அவர் மெல்லக் குரலெழுப்பத் தொடங்கினார். சொகு சான சட்டமன்ற வாழ்க்கைக்கு அறிமுகமாகிவிட்ட கழகத்தி னர், ஒரு சின்ன அச்சுறுத்தலுக்கே அரண்டுபோய்த் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கொள்கையையே திடு மெனக் கைவிடப்பார்ப்பது பெரும் வருத்ததையும் ஏமாற்றத்தை யும் தருவதாகக் கழக அணியினருக்கு அவர் ஒரு மடல் விடுத் தார்.[97] பிரிவினைக் கோரிக்கை இல்லையெனில், திராவிட

www.tamilarangam.net



முன்னேற்றக் கழகத்தினது அடிப்படைக் கொள்கையே அடிபட்டுப் போவதைச் சுட்டிக்காட்டினார். அண்ணாத்துரையோ, பிரிவினைக் கொள்கையை முன்வைத்துத் திராவிட நாட்டை அமைப்பதற்குத் தில்லி வல்லரசுடன் போராட அஞ்சினார். மொழிவழியில் பழைய சென்னை மாகாணத்தைக் கூறாடிய பின்னர், திராவிட நாடு கேட்பது பொருந்தாது என்ற உள்ளுணர்வும் அவருக்கு இருந்தது. அதனால், அவர் தம்முடைய பிரிவினைக் கோரிக்கையை மெல்லக் கைவிடப் பார்த்தார். அதற்குத் திரைப்பட நடிகர் சிலரின் உதவியை நாடினார். அத் திரைப்பட நடிகர்களின் உதிரி வட்டங்கள் அப்போது அண்ணாவைக் கரையேற்ற உதவின.

அண்ணாவின் இந்த அடிப்படை ஊசலாட்டத்தை அம்பலப்படுத்தும் வகையில், சம்பத் தமிழகம் முழுவதும் சூறைக் காற்றுப் பயணத்தை மேற்கொண்டார். அண்ணாவின் தலைமைக்கு இஃது ஒரு மண்டையிடியாக இருந்தது. சம்பத்தின் எதிர்ப்பைச் சமாளிக்க கருதிய அண்ணா, 'அடைந்தால் திராவிட நாடு, இல்லையேல் சுடுகாடு!' என்றெல்லாம் பேசவும் எழுதவும் தொடங்கினார். ஆனால், சம்பத்தோ அவரை விட்டபாடில்லை. இன்ன நாளுக்குள் திராவிட நாட்டை அடைந்தே தீருவோமென ஒரு நாள் குறித்து அறிவிக்குமாறு ஒரு கலக அறைகூவல் விடுத்தார்.[98] தனித் திராவிட நாட்டை அடைய நீண்டகாலப் போராட்டம் இன்றியமையாதது எனச் சொன்ன அண்ணா, அதற்கென ஒரு நாளைக் குறிக்க முடியாதென்றார். மக்கள் போராட்டத்தை வளர்த்தெடுத்து வேட்டு முறையில்லாத 'ஓட்டு' முறையைக்கொண்டே தனித் திராவிட நாட்டைப் பெற்றுவிட முடியுமெனச் சொல்லி ஒரு நழுவலான விளக்கத்தைத் தந்தார். அடுத்தடுத்து, பல தேர்தல்களில் பங்கெடுத்துக் கூடுதலான பல இடங்களை வென்று மக்களின் நம்பிக்கையைப் பெற்ற பின்னர், காலமறிந்து ஓங்கி அடிக்கையில் கிடைத்து விடும் 'திராவிடநாடு' என்பது அவரது கூற்று.

மக்களின் பரந்துபட்ட ஆதரவும் ஈடுபாடும் எள்ளளவும் இல்லாத நயன்மைக் கட்சியின் வழியில் திராவிட முன்னேற்றக் கழகத்தை வழிநடத்துவதே அண்ணாவின் வழியாக இருந்தது. பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்து, பாராளுமன்ற அரசியல் போராட்டங்களுக்கு அப்பாலும் சென்று தனிநாட்டுக் கோரிக்கையை ஒரு மக்கள் போராட்டமாக வளர்த்தெடுத்து, அதன் வழியாகத் திராவிட நாட்டைப் பெறுவதே சம்பத்தின் நோக்கமாகும். துமுக்கி எடுத்து விடுதலைக்காகப் போராட

www.tamilarangam.net



வேண்டும் என்னும் அளவுக்கு தீவிரத் தன்மை கொண்டதாக சம்பத்தின் கொள்கை இருக்கவில்லை. ஆனால், திராவிட நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தும் அளவுக்கு அவரிடம் தீவிரம் இருந்தது.

தில்லிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஈ. வெ. கி. சம்பத், அன்று அவருடன் பாராளுமன்றத்திலிருந்த ஃகிரேன் முக்கர்சியின் தொடர்பினால் தேசிய இனங்களுக்குச் சோவியத் ஒன்றியத்திலிருந்த தனிநாட்டுரிமையைப்பற்றி அறிந்துகொண்டார். பின்னர், சோவியத் ஒன்றியத்தைப் பார்வையிடச் சென்ற பாராளுமன்றக் குழுவில் பங்குபெற்ற சம்பத், தேசிய இனச் சிக்கலை அரைகுறையாக விளங்கிக்கொண்டு, 'திராவிட நாடு' கோரிக்கையைத் தீவிரமாக வலியுறுத்தலானார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் அன்று கலைஞர் கருணாநிதி ஒரு பக்கமும், சம்பத்தும் என். வி. நடராசனும் மறுக்கமும் என முரணி நின்ற நிலையும் சம்பத்தின் நிலைபாட்டிற்கு அரண் சேர்த்தது. கன்னடரான சம்பத்திற்கும், அவருடனிருந்த நடராசனுக்கும் திராவிட நாட்டை அடைவதிலிருந்த ஈடுபாடு, தெலுங்கர் வழிவந்த கருணாநிதியிடம் இருக்கவில்லை.

இதற்கிடையில், இந்திதான் இந்தி(யா)வின் ஆட்சிமொழி என அறிவித்த இந்தியக் குடியரசுத் தலைவரின் ஆணை வந்தது. இதற்கு எதிர்ப்புக் காட்டுவதில் முனைப்பாக இருந்த தி. மு. கழக இளைஞர்கள் சம்பத்தின் பின்னால் அணிதிரண்டனர். இந் நிலையில், 1960 சூன் திங்களில் கூடிய தி. மு. க. பொதுக்குழு, வரவிருந்த ஆகத்து 31க்குள் குடியரசுத் தலைவரின் ஆணையை விலக்கிக்கொள்ளவில்லையெனில், அடுத்த இருபத்து நான்கு மணிக்குள் தி. மு. கழகம் ஒரு மாபெரும் போராட்டத்தில் குதித்துத் திராவிட நாடு அடையும் வரையில் போராட வேண்டி வரும் என்று ஒரு தீர்மானம் இயற்றியது. சம்பத்தின் தலைமையிலான தீவிரர்களுக்கு இத் தீர்மானம் ஒரு பெரிய வெற்றியாகும்.[99] இதனால், தமிழகத்தின்மீது இந்தி திணிக்கப்படாது எனச் சொல்லி இந்தி(ய) வல்லரசின் உள்நாட்டமைச்சர் ஒரு பொய்யை அவிழ்த்துவிட்டார். பின்னர், இந்தித் திணிப்பைப் பற்றி இந்தி(ய)த் தலைமை அமைச்சர் நேருவே சம்பத்துக்கு ஒரு மடல் விடுத்தார்.[100]

இந் நிலையில், கழகத்திற்குள் சம்பத்தின் கை ஓங்கி வருவதைக் கண்டு அண்ணா அஞ்சத் தொடங்கினார். போதாமைக்கு, இந்தி எதிர்ப்பு உணர்ச்சி வேறு தமிழக மாணவர்

www.tamilarangam.net



களிடையேயும் இளைஞர்களிடையேயும் பொங்கத் தொடங்கி யிருந்தது. மொழிப்பற்றும் தமிழ்நாட்டுப்பற்றும் எள்ளளவும் இல்லாத தமிழகப் பொதுவுடைமையரும்கூட, இந்த இந்தி எதிர்ப்புணர்ச்சியைப் புரிந்துகொண்டு அதற்கு ஆதரவு தெரிவிக்கத் தொடங்கினர்.

அப்போது அண்ணாவின் மிதவியத்திற்கும் சம்பத்தின் தீவிர வியத்திற்கும் இடையில் இருந்த முரண்பாடு முற்றி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குள் ஒரு பெரிய பிளவு வரக்கூடிய சூழல் தோன்றியது. அத்தகைய பிளவை அண்ணா அன்று தவிர்க்க விரும்பினார்.

இதனால், சம்பத்துடன் அண்ணா பேரம் பேச முற்பட்டார். அடுத்து வந்த பொதுக்குழுவில் சம்பத்தைக் கழகத்தின் தலைவராகவும் தம்மைப் பொதுச் செயலராகவும் தேர்ந்தெடுக்க வழிசெய்தார். பொதுக்குழுவில் பெரும்பான்மை ஆதரவிருந்த சம்பத், பொதுவுடைமைக் கட்சியுடன் ஓர் உடன்பாடு ஏற்பட முயன்று வந்தார். அண்ணாவோ, இராசகோபாலாச்சாரியாருடன் தமக்கிருந்த நெருக்கத்தைக் கருதி,'வலங்கை' அரசியலைச் சார்ந்து நின்றார். வலதுகளுடன் உறவா, 'இடது'களுடன் உறவா என்னும் கேள்வியால் வந்த பூசல் வலுத்து வருவதை உணர்ந்துகொண்ட அண்ணா, சம்பத்துடன் உள்ள உறவை முறித்துக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டதாகக் கருதினார். திரைப்பட நடிகர்களான ம. கோ. இராமச்சந்திரன், எசு. எசு. இராசேந்திரன் ஆகியோரைப் பயன்படுத்திக் கழகத் தலைவர் சம்பத்தைக் கண்டித்து 1961 பொதுக்குழுக் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தை முன்மொழியச் செய்தார்.[101]

இதனால், பொதுக்குழுவில் ஒரே அமளியும் அடிதடியும் ஏற்பட்டன. நடிகர்களின் சுவைஞர் வட்டங்களால் சம்பத் திட்டமிட்டு வன்முறையில் தாக்கப்பட்டார். இந் நிகழ்ச்சியை யடுத்துச் சம்பத், கழகத் தலைவர் பதவியிலிருந்து விலகினார். திருச்சியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கையில், அடியாட்களால் சம்பத் மீண்டும் ஒருமுறை தாக்கப்பட்டார். தன்மீது ஏவிவிடப்பட்ட இவ் வன்முறையைக் கண்டித்துச் சம்பத் உண்ணாநோன்பிருந்தார். இதனால், சம்பத்தின்மீது நடத்தப் பட்ட வன்தாக்குதல்களுக்கு வருந்தி அண்ணா ஒரு நீண்ட அறிக்கையை விடுத்தார்.[102]

இதற்கிடையில், சம்பத்துக்கும் அண்ணாவுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டுவிடுமோவென அஞ்சிய கருணாநிதியும்,

www.tamilarangam.net



எசு. எசு. இராசேந்திரனும் அத்தகைய விட்டுக்கொடுப்புக் கூடா தெனச் சொல்லி அண்ணாமீது ஓர் அழுத்தத்தைத் தர வேண்டிக் கழகத்தின் பொதுக்குழுவிலிருந்து விலகினர். அடுத்த இரண்டு திங்களுக்குள் சம்பத் தம்முடைய ஆதரவாளர்களுடன் தி. மு. க. விலிருந்து விலகினார். பின்னர்த் தமிழ்த் தேசிய கட்சி என்னும் ஒரு புதிய அமைப்பைத் தொடங்கினார். பிரிந்துபோகும் உரிமை உள்ளிட்ட தனிநாட்டுரிமை தமிழகத்திற்கு வேண்டு மென இக் கட்சி கேட்டுவந்தது.

தமிழ்த் தேசிய கொள்கை, அஃது அடைபட்டுக் கிடந்த திராவிடக் கூட்டை உடைத்துக்கொண்டு வெளியில் வந்து, தனித்த அரசியலான பெரிய நிகழ்ச்சி இத் தமிழ்த் தேசியக் கட்சியின் தோற்றமேயாகும். ஆயினும், சம்பத்திடம் இருந்த குழப்பங்களும், உறுதியற்ற நிலையும், அவரே ஒரு தமிழரல்லா ராக இருந்தமையும், பிறவும், பரந்த அளவிலான ஒரு தமிழ்த் தேசிய இயக்கத்தைக் கட்டும் வாய்ப்பை அவருக்குத் தரவில்லை. இதனால், சம்பத்தை நம்பி அவருடன் வெளியேறிய இளைஞர் பலர் நம்பிக்கை இழந்து மீண்டும் தாய்க்கழகத்திற்கே திரும்பினர்; முதலாளியத் தேர்தல் சாய்க்கடை அரசியலில் முக்குளித்து, மீள முடியாமல் சீரழியத் தொடங்கினர்.

இந் நிலையில், இந்திய சீன எல்லைப் போர் வந்தது. வட நாட்டு வல்லரசின் போர் ஏற்பாடுகளுக்கு அண்ணா தாமே வலிந்து துணைபோனார். அப் போரைச் சாக்காக வைத்துத் திராவிடநாடு கோரிக்கையைக் கைவிட அணியமானார். அதற் கடுத்து, தேர்தலில் வேட்பாளராகப் பங்கெடுக்க விரும்புகின்ற எல்லோரும் இனிமேல் இந்தி(ய) அரசுச்சட்டத்துக்குக் கட்டுப் பட்டு இந்தி(ய) அரசின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பேணத் தவறமாட்டோம் என உறுதிமொழி தர வேண்டும் என்னும் 16வது அரசுச் சட்டத்திருத்தம், 1963 அக்டோபர் 5 அன்று தில்லிப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனால், தனித் திராவிடநாடு கோரிக்கையைக் கைவிடுவதாக 1963 நவம்பர் 3 கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் தன் னுடைய கழகச் சட்டதிட்டத்தில் அறக்கப் பறக்க ஒரு திருத் தத்தைச் செய்துகொண்டது.[103]

## ஒப்புக்கு ஒரு போராட்டம்!

திராவிடநாடு கோரிக்கையைப்பற்றி தி. மு. கழகத்திற்குள் ஏற்பட்ட குழப்பங்களையும் தொய்வுகளையும் சரிக்கட்டக்

www.tamilarangam.net



கருதிய அண்ணாவின் தலைமை, 1963 நவம்பர் 13 அன்று ஓர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கியது. சென்னை மாநிலப் பேராயக் கட்சியின் ஆட்சி, இப் போராட்டத்தை முறியடிக்கப் பார்த்தது. தில்லிக்குக் கீழ்ப்படிந்து ஓர் அடக்கு முறையைக் கட்டவிழ்த்துவிட்டது. அப் போராட்டம், அதனால் பிசுபிசுத்தது. ஆயினும், இந்தி எதிர்ப்பு உணர்ச்சி மட்டும் தமிழகத்தில் ஆறாமல் புழுங்கிக் கொண்டிருந்தது.

இந் நிலையில், இந்தி மொழி இந்தியாவின் ஆட்சிமொழியாகவிருந்த கெடுநாளான 1965 சனவரி 26 நெருங்கிக் கொண்டிருந்தது. அந் நாளை ஒரு கண்ணீர் நாளாகக் கடைப்பிடிக்குமாறு தி. மு. க. அறிவித்தது. இந்தித் திணிப்பை எதிர்த்து அன்று தி. மு. க. தொண்டர் சின்னச்சாமி தீக்குளித்து மாண்டார். இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் தலைமை மாணவர்களின் கைக்கு மாறியது. தமிழகம் கொழுந்துவிட்டு எரிந்தது.

1965 சனவரி அன்று வெடித்த தமிழ் மாணவரின் இந்தியெதிர்ப்புப் போராட்டம், 1965 பிப்ரவரி 12 வரை ஒரே வீச்சாக நடந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் அரசேந்திரனும் இளங்கோவும் முதலமைச்சர் பக்தவத்சலம் கட்டவிழ்த்துவிட்ட காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டில் மடிந்தனர். இதனால்,

> **“முதிராச் சிறுமொழி முனிந்து முத்தமிழ்**
> **கதிரெரி எஃகம் அணிமுன் னின்று**
> **மறல்கொடு நெஞ்சின் மாமகன்**
> **விறல்பெறத் தாங்கி வீழுந்த ஞான்றே!”**[104]

என மாணவன் அரசேந்திரனின் ஈகத்தைப்பற்றிப் பெருஞ்சித்திரனார் மறம் பாடினார்.

> **“இட்ட போக்கிற் கிடறாக் காவலர்**
> **சுட்டுக் கிடத்திய செந்தமிழ்ச் சிறாஅன்**
> **வளங்கூர் நாவின் இளங்கோ”**[105]

என இளங்கோவையும் வாயாறப் போற்றினார்.

அடுத்து, கோடம்பாக்கம் சிவலிங்கமும், விருகம்பாக்கத்து அரங்கநாதனும் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தீக்குளித்தனர். திருச்சிக் கீரனூரில் முத்து (20) என்பவரும், விராலிமலைச் சண்முகம் என்பவரும் நஞ்சுண்டு மடிந்தனர். தமிழகமெங்கும் கல்லூரிகளும் பள்ளிகளும் ஒன்றரை மாதங்களுக்கு இழுத்து மூடப்பட்டன. ஆயிரக் கணக்கானோர் சிறைப்பட்டனர். ஊர்திகளும் தொடர்வண்டிகளும் அரசு அலுவலகங்களும் கடை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கண்ணிகளும் கொளுத்தப்பட்டன. தொலைவரிக் கம்பிகளும் அறுத்தெறியப்பட்டன. இந்தி(ய)ப் பட்டாளங்கள் வந்து அட்டூழியம் செய்தன. கூலிக் காவல்படைஞர் உயிரோடு கொளுத்தப்பட்டனர். திருச்சி ஐயனாவரத்தைச் சேர்ந்த தொடக்கப் பள்ளி ஆசிரியர் வீரப்பனும், சத்தியமங்கலம் முத்துவும்கூடத் தீக்குளித்தனர். இம் மொழிப் போராட்டத்தில் காவல்துறையின் துமுக்கிச்சூட்டிற்கு இரையானோர் 68 பேராவர்.

அப் போராட்டத்தின்போது தமிழ் மாணவர் துடிப்புடன் இயங்கிய பாங்கைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார்,

> **"அண்ணா மலைசெய் பல்கலைக் கழகத்து**
> **உண்ணில் போக்கிய இளையோர் அண்மி**
> **தெருவலம் வந்து தூளுரை முழக்கி**
> **ஒள்ளிய கொள்கை சுவர்தொறும் வரைந்து**
> **மைநிற நெடுங்கொடி பன்மனை தூக்கி**
> **நெடுந்தொடர் வண்டித் தடம்படுத் திருந்து**
> **கல்லாப் புலைமொழி கற்கெனத் தூண்டிய**
> **ஒல்லாப் பேதையர் அரசு கடிந்து**
> **காவல் மாடத்து ஏவல் பணிந்து**
> **வல்சிறை போகி மெய்யடி பட்டு**
> **நெருப்புரை யாற்றி உறுப்பறை போகிய**
> **தடந்தோள் மாணவர்க் குள்ளுயிர் கிண்ட**
> **தாழா நல்லிசைத் தமிழே**
> **வாழிய நெடுநீர் வையநாள் வரையே!"**[106]

எனப் படம் பிடித்துக் காட்டுவார்.

இவற்றை யெல்லாம் கண்டு அரண்ட தி. மு. க. தலைமை பின்வாங்கத் தொடங்கியது. தமிழகத்தின் வரலாறு காணா அம் மொழிப் போராட்டத்தைக் கண்டு நடுங்கிய அத் தலைமை, அப் போராட்டத்திற்கும் தனக்கும் 'ஒட்டும் இல்லை, உறவும் இல்லை' எனச் சொல்லி ஓர் அறிக்கையை விடுத்து மெல்ல நழுவப் பார்த்தது. இந்த இனவெழுச்சிப் போராட்டத்தில் தங்களின் உயிரையே காணிக்கையாக்கி இறவாப் புகழ்பெற்ற தமிழிளம் அரிமாக்களின் ஈகத்தையே அரசியல் முதலீடாக்கி, பின்னர் 1967 பொதுத்தேர்தலில் அக் கழகம் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றது. இந்தி(ய) வல்லரசின் கீழடங்கிய மற்றொரு அடிமை ஆட்சியாகக் கட்டிலேறியது.

சென்னை மாநிலத்திற்கு அந்த ஆண்டில்தான் "தமிழ்நாடு" என்னும் பெயர் சூட்டிய சடங்கும் நடந்தேறியது. சென்னை

www.tamilarangam.net



மாகாணத்திற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டப்பெற்றதே சங்கரலிங்கனாரின் உயிர் ஈகத்தால் வந்த பெரும் பயனாகும். இந்தி(ய)த் தேசியம் என்னும் கானல்நீரில் தமிழரை முக்குளிக்கச் செய்த பேராயக் கட்சியைச் சேர்ந்த சங்கரலிங்கனார், சென்னை மாகாணத்திற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்ட வேண்டும் எனக் கேட்டு 27.7-.56 முதல் சாகும் வரையில் உண்ணாநோன் பிருந்து தமிழ்த் தேசியப் பள்ளுப் பாடியதே ஒரு பெரிய புதி ராகும். சாகும் வரையில் உண்ணாநோன்பிருந்து அவர் உயிர் துறந்தபோது, தனி ஆந்திரநாடு கேட்டுப் பொட்டி சீராமுலு உண்ணாநோன்பிருந்து செத்தபோது ஆந்திர தெலுங்கரிடம் ஏற்பட்ட இனவெழுச்சிக்கு ஈடான ஒரு மக்கள் எழுச்சியைத் தமிழரிடையே பார்க்க முடியவில்லை. சாதிகளாலும் கட்சி களாலும் கேடுகெட்ட முறையில் கூறுபட்டிருந்த தமிழரினம், திராவிட மாயைக்குள்ளும் இந்தி(ய) மாயைக்குள்ளும் இந்து மாயைக்குள்ளும் புதையுண்டு கிடந்தமையே அதனிடம் தமிழ்த் தேசிய ஓர்மை செவ்வனே தலையெடுக்க இயலாமைக்குக் காரண மாகியது.

## ஆங்கில மயக்கம்

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டம், ஆங்கிலமே இந்தியாவின் இணைப்பு மொழியாக தொடர்ந்து இருக்க வேண்டும் என்னும் அடிப்படையிலேயே தொடங்கியது. தமிழகத்தில் எல்லாமே தமிழாகத்தான் இருக்க வேண்டும் என்னும் அடிப்படையில் அது தோன்றவில்லை. ஆயினும், அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் தலைமை அக் கழகத்தைவிட்டுக் கைமாறி மாணவர்களிடம் போனபோது தான் தமிழ்த் தேசிய உணர்வெழுச்சியாக வெளிப்பட்டு, 'இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!' என்னும் முழக்கம் மேலோங்கியது.

பார்ப்பனரல்லாதார் இயக்கமும் அதன் வழியாக வந்த திராவிடர் இயக்கமும் ஒட்டுமொத்தத்தில் ஆங்கிலக் கவர்ச்சி யில் புதையுண்ட இயக்கங்களாக இருந்தமையின் தொடர்ச்சி யாகவே தி. மு. க. வின் இந்தி எதிர்ப்பு நிலைபாட்டைப் பார்க்க வேண்டும். மேடைப் பேச்சளவிலும் எழுத்தளவிலும் மட்டுமே திராவிடர் இயக்கம் தமிழைப் பழகியது. தமிழுக்கு எல்லா நிலைகளிலும் முதலிடத்தைத் தந்து பேணி அம் மொழியை அது வளர்க்கவில்லை. இதன் விளைவாக, தமிழில் பேசிப் பழகு வதே தாழ்வானது என்னும் ஒரு தாழ்வு மனப்பான்மை தமிழ்

www.tamilarangam.net



மாணவரிடையேயும் படித்த வட்டங்களிடையேயும் மேன் மேலும் படர்ந்தது. ஆங்கிலத்தையும் சங்கதத்ததையும கலந்து தமிழைக் கெடுப்பது ஓர் உயர்ந்த பாங்கு என்னும் ஓர் உள நிலையைப் பார்ப்பனியப் பண்பாட்டு வட்டங்கள் போற்றி வளர்த்தமைக்கு இணையான ஒரு போக்கு, பார்ப்பனரல்லா தவரிடையேயும் கால்கொண்டது.

அரைகுறை ஆங்கிலத்தைப் பல்லுதிரக் கொட்டும் முதலா ளியப் பண்பாட்டை ஒரு நாகரிகமாகப் பரப்புவதற்கு திராவி டர் இயக்கமும் காரணமானது. ஆங்கிலம் கலவாமல் பேசி விட்டால், தமிழரே நம்மை மேலும் கீழும் பார்க்கின்றனர்! வழக்கிலுள்ள வேற்றுமொழிச் சொல்லுக்கு ஈடான தமிழ்ச் சொல்லைப் பேச்சுவாக்கில் யாராவது ஆண்டுவிட்டால், தமி ழர்களே அதைக் கேட்டு நகையாடுவர்! 'கிளாசு' என்றோ 'தம்ளர்' என்றோ சொல்லாமல், முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் வரையில் ஆளப்பட்டுவந்த 'குவளை' என்னும் தமிழ்ச் சொல்லைப் பேச்சுவழக்கில் ஆண்டுவிட்டால், தமிழரே இளக் காரமாகச் சிரித்திடுவர்! 'சோறு' எனத் தமிழில் சொல்வது தாழ்வு என்றும், 'ஸாதம்' எனச் சங்கதத்தில் சொல்வதே உயர்வு என்றும் கருதுகின்ற இனத்தவரைச் சேர்ந்தவர் அவர்களன்றோ? சென்னைத் தமிழரைப் பார்த்து "எழும்பூருக்கு எந்த வண்டி போகும்?" எனக் கேட்டாலே போதும். அவர் உச்சியிலிருந்து அடிவரை அளந்துவிடுவார்! அவர் கணக்கில் 'எக்மூர்' என்பது உயர்வானது; 'எழும்பூர்' என்பது தாழ்வானது! தமிழரிடம் பிறமொழிப் பித்து தலைவிரித்தாடுகின்றது. அவ்வளவு ஏன்? தமிழுக்கு அழகூட்டும் ழகரத்தை 'ழ' எனச் சரியாக ஒலிப்பதே தாழ்வு எனக் கருதும் அளவுக்குத் தமிழன் வீழ்ந்துவிட்டான்! இந்த அளவிலுள்ளது அவனது மொழிக்காப்பு உணர்வு!

இத் துணைக்கண்டத்தில் வேறெங்கும் இல்லாத ஒரு வியத் தகு நிலையைத் தமிழகத்தில் பார்க்கலாம். இந்தி(ய) அரசில் கட்டுண்ட பிற நாடுகளில் (மாநிலங்களில்) அந்தந்த நாட்டு மொழிகளைக் கற்க வேண்டியது அந்த மொழியைத் தாய்மொழி யாகக் கொண்ட எல்லோருக்கும் கட்டாயமாகும். ஆனால், தமிழகத்தில் மட்டும் தமிழர் தம் பிள்ளைகளுக்குத் தம் தாய் மொழியைக் கற்பிப்பது கட்டாயமில்லை! ஆகவே, எவரும் ஆங்கிலத்தையோ இந்தியையோ மட்டும் பாடங்களாக எடுத்துக் கொண்டு கல்லூரி வரையில் படித்து முடித்து வெளியே வர லாம்! 'தமிழில் படித்தால் வேலை கிடைக்குமா?' என்னும் சிறு பிள்ளைத்தனமான கேள்வியை வைத்தே தமிழர்கள் தாய்மொழி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாம் தமிழைக் கற்பதைத் 'திராவிட' வந்தேறிகள் திறம்படக் கெடுத்துவிட்டனர்.

தமிழே தமிழகத்தில் பாடமொழியாகவும் ஆட்சிமொழியாகவும் வழக்குமன்ற மொழியாகவும் விளங்கவேண்டும் என்னும் கருத்தியல் நெடுங்காலமாக இருந்துவருகின்றது. தன் தாய்மொழியே எல்லா நிலைகளிலும் கோலோச்ச வேண்டும் என்பது எந்தத் தேசிய இனத்திற்கும் இயல்பான வேட்கையாகும். இராசாசியின் அமைச்சரவை 1939ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழியைப் பயிற்றுமொழியாக்கி, ஆங்கிலத்தை அகற்றியது. 1956ஆம் ஆண்டில் காமராசரின் பேராயக் கட்சி ஆட்சி தமிழகத்தில் தமிழ் மட்டுமே ஆட்சிமொழி எனச் சட்டம் இயற்றியது. உயர்நிலைப் பள்ளி வரை தாய்மொழியான தமிழையே பாடமொழியாக்கியது. ஆனால், காமராசருக்குப் பின்னர் வந்த புதிய பார்ப்பனரான பக்தவத்சலத்தின் பேராயக் கட்சி ஆட்சியால் 1964ஆம் ஆண்டில் தமிழ் மெல்ல பின்னுக்குத் தள்ளப்பட்டு, அத் தமிழோடு ஆங்கிலமும் பாடமொழியாக்கப்பட்டது. ஆங்கிலமே ஆட்சிமொழியாக நீடித்தது. தளவாய் அரியநாத முதலியாரின் வழியில், பக்தவத்சலம் தமிழை மெல்ல அழிக்க வழிகோலினார்.

தமிழைச் சொல்லி வயிறு வளர்த்த திராவிட முன்னேற்றக் கழகம், தமிழை ஆட்சிமொழி ஆக்குவதென 1968ஆம் ஆண்டில் தமிழகச் சட்டப்பேரவையில் தீர்மானம் இயற்றியது. ஆனால், தெலுங்கர் வழிவந்த கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் அத் தீர்மானம் கிடப்பில் போடப்பட்டு, ஆங்கிலமே கோலோச்சியது. திராவிடக் கட்சிகளின் இரு மொழிக் கொள்கை என்னும் ஏமாற்றுக் கொள்கை 'திராவிட' வந்தேறிகளின் ஆங்கிலச் சார்பையும் தமிழ் எதிர்ப்பையும் மூடிமறைக்கும் முக்காடாகவே விளங்கியது. அடுத்து வந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தமிழெதிர்ப்பு ஆட்சியில், குழந்தைப் பள்ளி முதல் ஆங்கிலம் என்னும் புட்டிப் பாலே ஊட்டப்பெற்று, எல்லாமே ஆங்கிலமயமானது. ஆங்கிலச் சார்பே அக் கழகத்தின் மொழிக் கொள்கையானது. தொடக்கப் பள்ளிகளில் தமிழைக் கற்பிப்பதை ஒழிப்பதற்கு என்றே ஆங்கிலத்திலேயே குழந்தைப் பள்ளிகளைத் தொடங்கிடத் தமிழக அரசே திட்டமிடும் அளவுக்கு தமிழகத்தில் தமிழ் பூத்துக் குலுங்குகின்றது! இதுதான் திராவிட உணர்வு தமிழை வளர்த்த அழகு! **தமிழரிடையே தமிழ் தெரியாத் தலைமுறை உருவாகத் திராவிடக் கட்சிகளே பெருங் காரணமாகும்.** பேராயக் கட்சியின் ஆட்சி இருந்திருந்தாலும்,

www.tamilarangam.net



இத்தகைய கேடு தமிழுக்கு நேர்ந்திராது. திராவிடர் ஆட்சிக் காலம் தமிழகத்தின் இருண்ட காலத்திலும் இருண்ட காலம் என்றாகிவிட்டது.

பாட்டாளி மக்கள் கட்சி மட்டுமே மும்மொழிக் கொள்கையும் வேண்டாம், இருமொழிக் கொள்கையும் வேண்டாம், ஒருமொழிக் கொள்கையே தமிழர்க்குப் போதும் என அடித்துச் சொன்னது. ஆயினும், அறிக்கைகளை விடுவதும் தீர்மானங்களை இயற்றுவதும் தவிர, அந்த ஒருமொழிக் கொள்கையைக் கொண்டுவர வேறு வகைகளில் போராடும் மனமும் துணிவும் திறனும் அக் கட்சிக்கும் இல்லை.

போதாமைக்கு, இந்தி(ய) வல்லரசு வேறு வந்து, நடுவண் பள்ளிகளைக் கருவியாக்கிக்கொண்டு, தமிழகத்தில் தமிழே தெரியாத தமிழர் தலைமுறையை உருவாக்கிப் புழக்கடை வழியாக இந்தியைத் திணித்து வருகின்றது. இச் சூழ்ச்சிக்கும் அப்பால், கல்வித்துறை முழுவதையும் தில்லி வல்லரசே நேரடியாக எடுத்துக்கொண்டு, இந்தியையும் ஆங்கிலத்தையும் மட்டுமே கற்பிக்கத் திட்டம் தீட்டி, 1986 மே 13 அன்று அதைச் சட்டமாகவும் இயற்றிவிட்டது.

இந்தி(ய)த் தேசியமும் திராவிட ஓர்மையும் உலகப் பாட்டாளியமும் சேர்ந்து, தமிழ் தெரியாத தமிழரினம் ஒன்றை உருவாக்கி, ஓர் இன ஒழிப்புக்கு வழி செய்துவருவதைத் தமிழரினம் உணர வேண்டும்.

## உருமறைப்பு

ஓர் இனத்தை அழித்தொழிப்பதற்கு முன்னர் அதன் மொழியையும் பண்பாட்டையும் அழித்தல் வேண்டும் என்னும் ஆளவந்தாரின் ஆண்டைக் கொள்கையைத்தான், ஆரியப் பார்ப்பனியமும், கன்னடத் தெலுங்கர் கடைவிரித்த திராவிடமும், இந்தி-இந்து வல்லரசியமும் தமிழகத்தில் விடாப்பிடியாகக் கடைப்பிடித்து வருகின்றன.

தமிழகத்தை மூன்று நூற்றாண்டுகளுக்குச் சுரண்டி ஆண்ட நாயக்கர் ஆட்சிக் காலத்தில் பெருமளவில் வந்தேறிய தெலுங்குப் பார்ப்பனர்கள் பூசாரித் தொழிலைத் தங்களது முற்றுடைமையாக்கிக்கொண்டனர். இவ்வாறு வந்தேறிய அத் தெலுங்குப் பார்ப்பனர்கள், இன்று தமிழகத்தில் பூசாரித் தொழிலைச் செய்துவரும் பார்ப்பனர்களில் 98% ஆவர் என்பது ம. பொ.

www.tamilarangam.net



சிவஞானம் வெளிப்படுத்திய ஒரு பேருண்மை.[107] கோயில் களைத் தங்களின் பார்ப்பனப் பாசறைகளாக ஆக்கிக் கொண்ட அவர்கள் தமிழகத்தையே கெடுத்தனர். இன்று பார்ப்பனியத் தின் தலைமையகமாகச் செயல்பட்டுவரும் காஞ்சிக் காமகோடி மடத்திற்குக் கன்னடத் தெலுங்குப் பார்ப்பனர் மட்டுமே மடத் தலைவராக முடியுமேயன்றி, தமிழ்ப் பார்ப்பனர் ஒருவரால் அதன் தலைவராக வரவே முடியாது.

தமிழகத்தின் கோயில்களில் ஒருகால் தேவாரத் திருப்பதி கங்கள் ஓதப்பட்டுவந்த நிலையைக் கெடுத்து, வழிபாட்டில் தமிழை ஒழித்துக்கட்டி, மக்களுக்குப் புரியாத சங்கதத்தில் (சமற் கிருதத்தில்) பூசை செய்யும் அலங்கோலத்திற்கு அக் கன்னடத் தெலுங்குப் பார்ப்பனரின் வரவும் வல்லாண்மையுமே காரணங் களாகும். இவ் வுண்மையைத் தெலுங்கரின் நயன்மைக் கட்சி யும், திராவிடக் கழகங்களும் மூடிமறைத்துவந்துள்ளது தற்செய லானதன்று.

தமிழகத்தின் கோயில்களில் எண்ணூறு ஆண்டுகளுக்கும் மேலாகக் கொற்றம் புரிந்துவரும் கன்னடத் தெலுங்குப் பார்ப் பனப் பூசாரிகளை ஓடவோட விரட்டியடித்தாலன்றி, தமிழ கத்தின் கோயில்களில் தமிழை மீட்க முடியாது. கோயில் களில் தேவாரத் திருப்பதிகங்களை ஓதுவதை ஒழித்த கன்னடத் தெலுங்கு வந்தேறிகளைத் தமிழகத்திலிருந்து ஒழிக்கத்தானே வேண்டும்?

தெலுங்கரின் கழகமான திராவிடர் கழகம் தமிழகத்தின் கோயில்களில் தமிழில் வழிபாடு நடத்திடக் கோரிப் போராடி யது புண்ணுக்குப் புனுகு பூசுவதைப் போன்றது. ஏனெனில், தமிழ்ப் பார்ப்பனரை மட்டும் வரிந்துகொண்டு எதிர்த்த அப் 'பார்ப்பனரல்லா' இயக்கம், கன்னடத் தெலுங்கு பார்ப்பனரை அந்த அளவுக்கு எதிர்க்கவில்லை. ஒருவகையில், தமிழகத்தின் கோயில்களில் கொற்றம் புரிந்துவரும் கன்னடத் தெலுங்குப் பார்ப்பனப் பூசாரியரின் கேடயம் போன்றே அவ் வியக்கம் இருந்துவந்துள்ளது.

அதே போன்று, நாயக்கர் ஆட்சிக் காலத்தில் பெருமளவில் தமிழகத்திற்குள் வந்தேறிய தோட்டியர், சக்கிலியர், உப்பரவர், ஒட்டர் போன்ற தெலுங்குச் சாதியினர் இன்று எழுந்து வரும் தமிழ்த் தேசிய எழுச்சியைக் கண்டு அரண்டு நிற்பதுடன், தெலுங்கு இன ஓர்மையால் தங்களைக் காலங்காலமாய் இழிவு படுத்தியும் ஒடுக்கியும் ஆண்டுவந்த தெலுங்கு ஆண்டைச் சாதி

www.tamilarangam.net



யினருக்குச் சார்பாகவே செயல்பட்டு, தொல்தமிழரிடையே தமிழ்த் தேசிய ஓர்மை வலுப்படுவதைச் சீர்குலைக்கும் நோக்குடனும் போக்குடனும் முனைப்புடன் செயல்பட்டுவருவதும் கண்கூடான உண்மை.

## தமிழகத்தில் ஒரு தெலுங்கு தேசமா?

தமிழகத்தில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழரின் எண்ணிக்கை 1971ஆம் ஆண்டு மக்கள்தொகையில் 84.51%. ஆகும். அஃதாவது, தமிழரல்லாதோர் தமிழகத்தில் 15.49% மட்டுமே ஆவர். இருந்தும், தமிழகத்தில் வாழும் தெலுங்கர் 40 விழுக்காட்டினர் என்னும் பொய்க்கணக்கைக் காட்டித் தெலுங்கைத் தமிழகத்தில் இரண்டாவது ஆட்சிமொழியாக ஆக்கிட வேண்டுமென வந்தேறித் தெலுங்கர்கள் பேரணிகளும் மாநாடுகளும் நடத்தி ஓலமிடத் தொடங்கினர்.

மதுரையைப் பிடித்தாண்ட வந்தேறிகளின் வழிவந்த திருமலை நாயக்கரின் 407வது பிறந்த நாளைக் கொண்டாடத் தமிழகத் தெலுங்கர்கள் 1990ஆம் ஆண்டில் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் ஒரு பெருவிழா எடுத்தனர். அனைத்திந்தி(ய) அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சுலோச்சனா சம்பத், முனு ஆதி, கே. கே. எசு. எசு. ஆர். இராமச்சந்திரன், பேராயக் கட்சியின் க. சுப்பு ஆகிய தெலுங்குப் பெருந்தலைகள் முனைப்புடன் பங்கெடுத்த அந்த மாநாட்டில் தான் தமிழ்நாட்டில் தெலுங்கர் 40 விழுக்காட்டினர் என்றும், அதனால் தெலுங்கைத் தமிழகத்தின் துணை ஆட்சிமொழியாகச் செய்ய வேண்டும் என்றும் முதன்முறையாகத் தீர்மானம் இயற்றப்பட்டது.

கொங்குதமிழ்ப் பகுதியிலுள்ள உடுமலைப்பேட்டையில் ஒரு பெரிய முதலாளியாகவுள்ள கெங்குசாமி நாயுடு, கம்மவார் நாயுடு சங்கத்தின் மாநிலத் தலைவராக இருந்தவர். பின்னர்த் தெலுங்குக் கூட்டமைப்பு என்னும் பெயரில் ஒரு தெலுங்கர் அமைப்பைக் கட்டித் தமிழருக்கு எதிராகப் பேசியும் இயங்கியும் வருகின்றவர். தமிழ்நாட்டில் தெலுங்கர் குவிந்துள்ள ஊர்களுக்கெல்லாம் சென்று அங்கெல்லாம் அவர் தெலுங்கர் கொடியை ஏற்றிவருகின்றார். தமிழகத்திற்குள்ளேயே ஒரு தெலுங்கு தேசத்தை அமைக்க அவர் பாடாற்றிவருகின்றார். 'தமிழ்நாடு' என்னும் பெயரை மீண்டும் 'சென்னை மாகாணம்' என மாற்ற வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கின்றார். தமிழ்நாட்டிலுள்ள

www.tamilarangam.net



தெலுங்குச் சக்கிலியரைத் தொல்தமிழருக்கு எதிராக முடுக்கி விடும் சித்துவேலையைச் செய்துவருகின்றார். திண்டுக்கல்லைத் தலைமையாகக்கொண்ட மாவட்டத்திற்கு இராணி மங்கம்மா பெயரைச் சூட்ட வேண்டுமெனத் தீர்மானம் இயற்றுகின்றார். மதுரை மாவட்டத்திற்குத் தெலுங்கின வெறியனான திருமலை நாயக்கனின் பெயரையும், கோவை மாவட்டத்திற்கு ஜி. டி. நாயுடுவின் பெயரையும் வைக்க வேண்டும் என்றும் கோருகின் றார். தமிழகத்திலும் ஒரு தெலுங்குப் பல்கலைக்கழகம் அமைக் கப்பட வேண்டும் என்றும், கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் தெலுங்கருக்கு 40% ஒதுக்கீடு தேவை என்றும் தீர்மானம் இயற்றி யவர் இவராவார். தமிழ்நாடு **தெலுங்கர் முன்னணி** என்னும் புதிய அரசியல் அமைப்பைத் தெலுங்கரான கொண்டல்சாமி நாயுடு 1995 திசம்பர் திங்களில் தொடங்கினார்.

இவை யாவும் தமிழகத்தில் தெலுங்கினத்தின் ஆளுநராக வும் பேராளராகவும் கொலுவிருக்கும் சென்னா ரெட்டி தரும் ஊக்கங்களையே சத்துணவாகக் கொண்டனவாகும். தமிழக ஆளுநர் மாளிகையே தெலுங்கரின் இனப் பாசறையாகவும் தலைமையகமாகவும் இயங்கிவருகின்றது. இன்று தமிழகத்தில் நடைபெற்று வருவது, ஒரு வகையில், புதிய நாயக்கர் ஆட்சியே யாகும். தெலுங்கு வந்தேறிகளின் குடியேற்ற நாடாகவே (colonial state) தமிழகம் இன்று சீரழிந்து வருகின்றது. தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் வளர்ப்பதற்கென்றே தோற்றுவிக்கப் பட்ட தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குத் தெலுங்கின ஆளுநரான சென்னா ரெட்டி, தமிழில் பட்டமே பெறாது, கன்னடத்திலும் மொழியியலிலும் மட்டுமே பட்டங்களைப் பெற்றுள்ள தெலுங்கரான முனைவர் கருணாகரன் என்பவரைத் துணைவேந்தராக அமர்த்தித் தமிழரின் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சினார்.

தமிழகத்தின் எல்லையோரப் பகுதிகள் மட்டுமல்லாது, தமிழகத்தின் உட்பகுதிகள் பலவற்றிலும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது ஆகிய மொழிகளைத் துணை ஆட்சிமொழி யாக்கி 29.12.1993 அன்று தமிழக அரசு ஓர் ஆணைப் பிறப்பித் தது. தமிழகத்தில் தமிழே ஆட்சிமொழியாக இல்லாதபோது, வந்தேறிகளின் மொழிகளைத் துணை ஆட்சிமொழிகளாக்கு வது, தமிழகத்தின் எல்லைப்பகுதிகளை அவ் வந்தேறித் திராவி டர் மெல்ல மடிபறித்துச் செல்வதற்கான முதல் படிதான் என் பதைச் சொல்லித்தானா தெரிய வேண்டும்? அத்துடன், தமிழ கத்திற்கு வந்தேறிய மொழிச் சிறுபான்மையரெல்லாம் தமிழில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எழுதப் படிக்கத் தெரியாமலேயே எல்லாப் படிப்புகளையும் பட்டங்களையும் முடித்து அரசு வேலைகளையும் பதவிகளையும் வகிக்க நேரும். இதனால், இவர்கள் தமிழைப் புறக்கணித்து ஆங்கிலத்திலேயே எல்லா அரசு அலுவல்களையும் நடத்துவர். மொழிவழியில் சென்னை மாகாணத்தைக் கொந்திக் கூறாடிய பின்னும், 1961ஆம் ஆண்டில் மொழிச் சிறுபான்மையருக்குப் பாதுகாப்பு என்னும் சாக்கில் 20 விழுக்காட்டிற்குத் தமிழகத்தின் ஒரு பகுதியில் வேற்றுமொழியினர் வாழ்வராயின், அவர்களின் மொழியும் அப் பகுதியில் ஆட்சிமொழி ஆகுமென அன்றைய பேராயக் கட்சி கயமைத்தனமான ஓர் ஆணையிட்டது. இனி ஒரு பகுதியில் 15 விழுக்காட்டினராக மொழிச் சிறுபான்மையர் இருந்தாலே அவ் வுரிமை அவருக்குண்டு என அவ் வாணை 1965ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. இத்தகைய அயல்மொழித் திட்டுக்களைத் தமிழகத்திற்குள் வலுப்படுத்தும் அந்தக் கொள் கையைத் திராவிட முன்னேற்றக் கழகமும் அரவமும் ஆரவாரமு மின்றித் தொடர்ந்தது. அதன் அளவையியல் தொடர்ச்சியே தமிழுக்கும் தமிழரின் மண்ணுரிமைக்கும் குழிபறிக்க 1993ஆம் ஆண்டில் செயலலிதா ஆட்சி பிறப்பித்த ஆணையாகும்.

1996ஆம் ஆண்டு தேர்தலுக்கான எல்லா அரசு வெளியீடு களும் ஒசூர் போன்ற எல்லைப் பகுதியில் கன்னடம், தெலுங்கு, தமிழ், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளில் வெளியிடப்பட் டுள்ளன. ஆனால், தமிழர் பாதிக்கு மேல் வாழும் பெங்க ளூரிலோ கோலார் தங்கவயலிலோ தமிழில் அவ்வாறு எதை யும் வெளியிட மாட்டார்கள். போதாமைக்கு, தமிழர் பெருமள வில் வாழும் பெங்களூரின் அலசூர் பகுதியில் தி. மு. க. உறுப் பினரான கன்னடர் ஒருவர் நெடுங்காலமாகப் பெங்களூர் மா நகராட்சிக்குத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றார். தமிழரின் வாக்குகளை வாங்கி வென்றுவரும் அவர், அந்த பகுதி முழுவதும் கன்னட இனவெறியரின் குறியீடான மஞ்சள்–சிவப்புக் கொடி வண்ணத்தைக் கண்ட இடங்களிலெல்லாம் அடித்துவைத்து அலசூரையே கன்னடமயமாக்கிவரும் திருப் பணியைச் செய்துவருகின்றார். அண்மையில், அந்த அலசூர் பகுதியில், அவர்து துணையுடன், கடைகளின் பெயர்ப்பலகை களிலுள்ள தமிழ் எழுத்துக்கள் எல்லாம் கன்னடவெறியரால் அழிக்கப்பட்டுவிட்டன. ஒசூருக்கு ஓர் அளவுகோல், பெங்களூ ருக்கு ஓர் அளவுகோல் என்பதுதானே திராவிடக் கணக்கு!

தமிழருக்கும் தமிழகத்திற்கும் பெருந்தீங்கு செய்ய நினைக் கும் தெலுங்கரின் மேற்சொன்ன சூழ்ச்சிகளையும் அணிவகுப்பு

www.tamilarangam.net



களையும் ஆரவாரங்களையும் தமிழக அரசியலில் முன்னணிப் பங்கை வகித்துவரும் கலைஞர் கருணாநிதி, கி. வீரமணி, வை. கோபால்சாமி, ஆர்க்காடு வீராசாமி, என். சங்கரையா, எசு. ஆர். பாலசுப்பிரமணியம், கோவை இராமக்கிருஃழ்ணன் முதலான தெலுங்கர்கள் இதுவரை கண்டிக்கவோ எதிர்க்கவோ செய்யாதது, அவர்கள் அவற்றிற்கெல்லாம் வழங்கும் மறைமுக ஒப்புதலேயன்றி வேறில்லை.

## புதிய வந்தேறியம்

தமிழகத்திற்கு வாய்த்த அதிகார வகுப்பிலும்கூட இன்று தமிழரல்லாதார்தாமே பெரும்பான்மையர்? மொழிவழியில் தமிழகத்தைக் கொந்திக் கூறாடி நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆயினும், தமிழகத்தில் அரசு அதிகாரத்திலும் ஆட்சித் துறையிலும்கூடத் தமிழரல்லாதோரே இன்னும் தனிக்கொற்றம் புரிந்துவருகின்றனர். 1995ஆம் ஆண்டில் தமிழகத்தின் ஆளவந்தாராக விளங்கிய வந்தேறிகள் சிலரை அடியில் காண்க:[108]

**ஆட்சித்துறை**

| | | | |
|---|---|---|---|
| ஆர். வரதராசுலு | இ.ஆ.ப (I.A.S) | முதலமைச்சரின் செயலர் | தெலுங்கர் |
| ஆதிசேஃழையா | இ.ஆ.ப | முதலமைச்சரின் இணைச்செயலர் | தெலுங்கர் |
| ஃழீலாப்பிரியா | இ.ஆ.ப | ஆளுநரின் செயலர் | தெலுங்கர் |
| அரிபாஸ்கர் | இ.ஆ.ப | தலைமைச் செயலர் | மலையாளி |
| சி. இராமச்சந்திரன் | இ.ஆ.ப | தொழில்துறை செயலர் | மலையாளி |
| ஜி. இராம கிருஃழ்ணன் | இ.ஆ.ப | போக்குவரத்து ஆணையர் | தெலுங்கர் |
| எம். தேவராஜ் | இ.ஆ.ப | நகராட்சி இயக்குநர் | படுகர் |
| சுந்தரதேவன் | இ.ஆ.ப | தேர்தல் ஆணையச் செயலர் | படுகர் |
| எம். அகமது | இ.ஆ.ப | | மலையாளி |
| பி. சி. சிரியாக் | இ.ஆ.ப | | மலையாளி |
| லீலா நாயர் | இ.ஆ.ப | | மலையாளி |
| சாந்த ஃழீலா நாயர் | இ.ஆ.ப | | மலையாளி |
| கே. ஏ. மாத்யூ | இ.ஆ.ப | | மலையாளி |
| சூசன் மாத்யூ | இ.ஆ.ப | | மலையாளி |
| கே. சந்திரசூடன் | இ.ஆ.ப | | மலையாளி |
| ஓ. பி. சோசம்மா | இ.ஆ.ப | | மலையாளி |
| மாதவன் நம்பியார் | இ.ஆ.ப | | மலையாளி |
| வே. மாதவன் நாயர் | இ.ஆ.ப | | மலையாளி |

www.tamilarangam.net



| | | |
|---|---|---|
| டி. ஜேக்கப் | இ.ஆ.ப | மலையாளி |
| பிந்து மாதவன் | இ.ஆ.ப | மலையாளி |
| வி. கே. ஜெயக்கொடி | இ.ஆ.ப | தெலுங்கர் |
| ஆதிசேஷன் | இ.ஆ.ப | தெலுங்கர் |
| வரபிரசாதராவ் | இ.ஆ.ப | தெலுங்கர் |
| ராம்மோகன்ராவ் | இ.ஆ.ப | தெலுங்கர் |
| ஜி. ஏ. ராஜ்குமார் | இ.ஆ.ப | தெலுங்கர் |
| ஆர். பாஸ்கரன் | இ.ஆ.ப | தெலுங்கர் |
| ஜே. டி. ஆச்சார்யலு | இ.ஆ.ப | தெலுங்கர் |
| ஜி. ரங்காராவ் | இ.ஆ.ப | தெலுங்கர் |
| பிரபாகர் ராவ் | இ.ஆ.ப | தெலுங்கர் |
| வி. கே. சுப்புராஜ் | இ.ஆ.ப | தெலுங்கர் |
| ஏ. வி. ஷெட்டி | இ.ஆ.ப | துளுவர் |
| எம். பி.பிரானேஷ் | இ.ஆ.ப | கன்னடர் |
| புஜங்கர ராவ் | இ.ஆ.ப | வடவர் |
| எச். எம். பாண்டே | இ.ஆ.ப | வடவர் |
| ஆர். சி. பாண்டா | இ.ஆ.ப | வடவர் |
| கே. சௌதிரி | இ.ஆ.ப | வடவர் |
| உஜாகர் சிங் | இ.ஆ.ப | வடவர் |
| எஸ். கே. உபாத்தியாயா | இ.ஆ.ப | வடவர் |
| பிரிஜேஸ்வர் சிங் | இ.ஆ.ப | வடவர் |
| சுவரண்சிங் | இ.ஆ.ப | வடவர் |
| நிர்மல் சிங் ஹீரா | இ.ஆ.ப | வடவர் |
| அனுராதா கட்டி | இ.ஆ.ப | வடவர் |
| அஜீத் பட்டாச்சார்யா | இ.ஆ.ப | வடவர் |
| மோகன் பியாரே | இ.ஆ.ப | வடவர் |
| என். பி. குப்தா | இ.ஆ.ப | வடவர் |
| நரேஷ் குப்தா | இ.ஆ.ப | வடவர் |
| ராக்கேஷ் கக்கர் | இ.ஆ.ப | வடவர் |
| சமீர் வியாஸ் | இ.ஆ.ப | வடவர் |
| ஹன்ஸ்ராஜ் வர்மா | இ.ஆ.ப | வடவர் |
| குத்சியா காந்தி | இ.ஆ.ப | வடவர் |
| சி. கே. கரியாலி | இ.ஆ.ப | வடவர் |
| ஜோர் சிங் ஷயீம் | இ.ஆ.ப | வடவர் |
| சத்பதி | இ.ஆ.ப | வடவர் |
| தீபக் ஜெயின் | இ.ஆ.ப | வடவர் |
| லதிகா படால்கர் | இ.ஆ.ப | வடவர் |
| முனீர் ஹோடா | இ.ஆ.ப | வடவர் |
| ஜஸ்பீர் சிங் பஜாஜ் | இ.ஆ.ப | வடவர் |
| வால் ராவ்னா சைலோ | இ.ஆ.ப | வடவர் |
| ரேமந்தகுமார் சின்ஃகா | இ.ஆ.ப | வடவர் |
| சன்வத் ராம் | இ.ஆ.ப | வடவர் |
| சக்தி காந்தி தாஸ் | இ.ஆ.ப | வடவர் |
| ரவி வினய் ஜா | இ.ஆ.ப | வடவர் |
| பவன் டெப்னா | இ.ஆ.ப | வடவர் |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | |
|---|---|---|
| பிரவீன் குமார் | இ.ஆ.ப | வடவர் |
| ரமேஷ்ராம் மிஸ்ரா | இ.ஆ.ப | வடவர் |
| தேபேந்திர நாத் சாரங்கி | இ.ஆ.ப | வடவர் |
| அம்புஜ் சர்மா | இ.ஆ.ப | வடவர் |
| சசி சேகர் | இ.ஆ.ப | வடவர் |
| பிரிஜ் கிஷோர் பிரசாத் | இ.ஆ.ப | வடவர் |
| ராஜிவ் ரஞ்சன் | இ.ஆ.ப | வடவர் |

## காவல்துறை

| | | | |
|---|---|---|---|
| கே. கே. இராஜ சேகர நாயர் | இ.கா.ப (I.P.S) | காவல் தலைமை இயக்குநர் | மலையாளி |
| சர்மா | இ.கா.ப | கூடுதல் காவல் இயக்குநர் | வடவர் |
| ஆர். சி. பந்த் | இ.கா.ப | கூடுதல் காவல் இயக்குநர் | வடவர் |
| பெருமாள்சாமி | இ.கா.ப | காவல்துறைத் தலைவர் (குற்றம்) | தெலுங்கர் |
| குமாரசாமி | இ.கா.ப | காவல்துறைத் தலைவர் | தெலுங்கர் |
| சந்திர கிஷோர் | இ.கா.ப | காவல்துறைத் தலைவர் (சிறை) | வடவர் |
| முகர்ஜி | இ.கா.ப | காவல்துறைத் தலைவர் | வடவர் |
| முன்ஷினி | இ.கா.ப | காவல்துறைத் தலைவர் | வடவர் |
| பி. ஆர். தாப்பா | இ.கா.ப | காவல்துறைத் தலைவர் | வடவர் |
| என். பாலச்சந்திரன் | இ.கா.ப | காவல்துறைத் தலைவர் | மலையாளி |
| விஜயகுமார் | இ.கா.ப | காவல்வட்டத் துணைத்தலைவர் | மலையாளி |
| பாலச்சந்திரன் | இ.கா.ப | காவல்வட்டத் துணைத்தலைவர் | தெலுங்கர் |
| இராதாகிருஷ்ண ராஜா | இ.கா.ப | காவல்வட்டத் துணைத்தலைவர் | தெலுங்கர் |
| இராமராஜன் | இ.கா.ப | காவல்வட்டத் துணைத்தலைவர் | தெலுங்கர் |
| கே. வி. எஸ். மூர்த்தி | இ.கா.ப | காவல்வட்டத் துணைத்தலைவர் | தெலுங்கர் |
| லத்திகா சரண் | இ.கா.ப | காவல்வட்டத் துணைத்தலைவர் | வடவர் |
| விபாகர் சர்மா | இ.கா.ப | காவல்வட்டத் துணைத்தலைவர் | வடவர் |
| அசோக் ஜிண்டா | இ.கா.ப | | வடவர் |
| சஞ்சை அரோரா | இ.கா.ப | | வடவர் |
| ஜாங்கீட் | இ.கா.ப | | வடவர் |
| அஜீஸ் பாங்ரா | இ.கா.ப | | வடவர் |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | |
|---|---|---|
| ஆர். என். சவானி | இ.கா.ப | வடவர் |
| ரவீந்திரநாத் | இ.கா.ப | மலையாளி |
| பி. பாஸ்கர் | இ.கா.ப | தெலுங்கர் |
| திலகவதி | இ.கா.ப | தெலுங்கர் |
| ரஞ்சித் சிங் | இ.கா.ப | சௌராட்டிரர் |

**வழக்குமன்றத் துறை**

| | | |
|---|---|---|
| கே. ஏ. சுவாமி | உயர்வழக்குமன்றத் தலைமை நடுவர் | கன்னடர் |
| வெங்கடசாமி | உயர்வழக்குமன்ற நடுவர் | தெலுங்கர் |
| இராமானுஜம் | நடுவர் | தெலுங்கர் |
| வி. இராமசாமி | நடுவர் | தெலுங்கர் |
| ராஜு | நடுவர் | தெலுங்கர் |
| ஸ்ரீராமுலு | நடுவர் | தெலுங்கர் |
| சிவப்பா | நடுவர் | கன்னடர் |
| சிவராஜ் பாட்டீல் | நடுவர் | கன்னடர் |
| அப்துல் ஹாதி | நடுவர் | உருது |
| அலி அகமது | நடுவர் | உருது |
| சுப்பிரமணி | நடுவர் | மலையாளி |
| வெங்கிடாச்சலம் | நடுவர் | தெலுங்கர் |
| சீனிவாசன் | நடுவர் | தெலுங்கர் |
| ஜெயராம் சவுதா | நடுவர் | கன்னடர் |
| ஜெய்சிம்ம பாபு | நடுவர் | கன்னடர் |

இந்த அழகில் தமிழ்நாட்டில் தமிழை ஆட்சிமொழியாகவும் வழக்குமன்ற மொழியாகவும் செய்வது எங்ஙனம் ஆகும்?

திராவிட அரசியலில் சிக்கிக் கொண்டமையால், தமிழகத்தின் எல்லைகளை அன்றும் காக்க முடியவில்லை; இன்றும் காக்க முடியவில்லை. 1993ஆம் ஆண்டின் இறுதியில் தமிழக-ஆந்திர எல்லையில் அமைந்துள்ள பழவேர்க்காடு கடலேரியில் 40,000 தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க வழிவழியாய்க் கொண்டிருந்த உரிமையைப் பறித்து, அம் மீனவரை அடித்துத் துன்புறுத்தத் தொடங்கியது ஆந்திர மாநிலக் காவல்படை. அங்குள்ள மீனவர் யாரும் தெலுங்கர் கிடையாது. போதாமைக்கு, சிறிஅரிக்கோட்டையில் இந்தி(ய) ஆளவந்தார்கள் ஏவுகணைத் தளம் அமைக்கவிருப்பதாகச் சொல்லி, தமிழ் மீனவர் பலர் தாங்கள் பல காலமாய் வாழ்ந்துவந்த குடியிருப்புகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர். ஆண்டுக்கு ரூ 40 கோடி அயல் நாட்டுச் செலாவணியை ஈட்டித்தந்த தமிழ் மீனவரின் வருங்காலம் இவற்றால் கேள்விக்குரியதானது. இப் பகுதியிலுள்ள அரசு அதிகாரிகள் பலர் தெலுங்கராகவே இருப்பதனால், தமிழ்

www.tamilarangam.net



மீனவரின் அவலக்குரலைத் தமிழக அரசு காதில் போட்டுக் கொள்ளவில்லை.

தெலுங்கனும் மலையாளியும் மார்வாடியும் பிற வந்தேறிகளும் வறுமையில் வாடும் தமிழரிடமுள்ள கன்னித் தமிழ்நிலங்களை எல்லாம் குறுக்கத்திற்கு (ஏக்கருக்கு) ஆயிரம் இரண்டாயிரம் எனப் பேரம் பேசி வாங்கி, முந்திரிக்காடாகவும் புதின மரப்பண்ணைகளாகவும் பழத்தோட்டங்களாகவும் மாற்றித் தமிழரைத் தம் சொந்த மண்ணிலேயே கூலிகளாகவும் எடுபிடிகளாகவும் கொத்தடிமைகளாகவும் செய்துவருகின்றனர். விளை நிலங்களை எல்லாம் மலிவாய் வாங்கிக் கூறுபோட்டு மனைக் கட்டுகளாக்கி விற்று, வீட்டுமனைத் தரகர்களாகிச் செல்வத்தைப் பெருக்கிவருகின்றனர்.

## பொதுமையரின் கயமை

தேசிய இனங்களுக்குத் தனிநாட்டுரிமை தரப்பட வேண்டும் என்னும் இலெனினியக் கொள்கையை இந்தியப் பொதுவுடைமைக் கட்சி காட்டிக்கொடுத்த வரலாறும் பெரிய கதையாகும். 1953 திசம்பர் 27 முதல் 1954 சனவரி 4 வரையில் மதுரையில் நடந்த இந்தி(ய)ப் பொதுவுடைமைக் கட்சியின் மூன்றாவது பேராயத்தில் அக் கொள்கைக்குக் கல்லறை கட்டப்பட்டது. ஆரியக் கொள்கையோடும் பார்ப்பனியத்தோடும் சோரம் போய் 'பாரதக்' கூத்தாடியதால், அக் கட்சி தமிழரினத்தை வஞ்சித்தது. இக் கட்சி, 1964 முதல் அடுத்தடுத்துப் பல கூறுகளாக உடைந்தது. தமிழரல்லாதோரே அவற்றில் தொடர்ந்து கூடுதலாக உள்ளனர். இந்திய (மார்க்சியப்) பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் 1967ஆம் ஆண்டு தேர்தலில் தி. மு. க. வின் அரவணைப்புடன் தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களில் மூவர் மலையாளிகளாவர்! அக் கட்சியின் இன்றைய மாநிலத் தலைவரான என். சங்கரையா ஒரு தெலுங்கர். தமிழீழ விடுதலைப் போரையும் தமிழ்நாட்டுத் தமிழரின் தேசிய இன நலன்களையும் வெறிகொண்டு எதிர்ப்பதில் இவரிடமுள்ள வஞ்சினம், தாம் ஒரு வந்தேறி ஆளவந்தார் என்னும் அவரது அடிமனத்துக் காழ்ப்பினால் வந்ததேயாகும். மார்க்சிய-இலெனினியர் எனக் கூறிக் கொள்ளும் வறட்டியக் குழுக்களின் தலைமைகளிலும் தமிழரல்லாதவரே தலைமையில் உள்ளனர். இக் குழுக்களின் தலைவர்கள் தெலுங்கராகவும் மலையாளிகளாகவும் இருப்பதால்தான்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவர்கள் தமிழ்த் தேசிய இனச் சிக்கலை அறிவியல் வழியில் பார்க்க மறுக்கின்றனர்; தமிழ்த் தேசிய ஓர்மை வளர்வதைக் கண்டு தேள்கொட்டினாற் போல் துடிக்கின்றனர்.

தமிழகப் பொதுவுடைமையர் மட்டுமே தமிழ்த் தேசிய இன உணர்ச்சியைக் குருட்டுத்தனமாக எதிர்த்து வந்தனர். ஆனால், தெலுங்குநாட்டுப் பொதுவுடைமையரோ, தெலுங்குத் தேசியத் துடன் என்றுமே ஒன்றித்தான் வளர்ந்தனர். முன்பு நிசாம் மன்னராட்சிப் பகுதியிலிருந்த பொதுவுடைமையரை இங்குக் குறிப்பாகச் சொல்லலாம். இந்தத் தெலுங்கானாப் பகுதியில் 1930ஆம் ஆண்டில்தான் **ஆந்திரப் பெருமக்கள் அவை (ஆந்திர மகாசன சபை)** தோற்றுவிக்கப்பட்டது. 1939ஆம் ஆண்டின் இறுதியில் தெலுங்கானாவில் பொதுவுடைமைக் கட்சி அமைக் கப்பட்டது. பொதுவுடைமைக் கட்சியினர், இந்த ஆந்திரப் பெருமக்கள் அவைக்குள் மெல்ல மெல்ல ஊடுருவத் தொடங் கினர். சிலக்கூரில் 1941ஆம் ஆண்டில் நடந்த ஆந்திரப் பெரு மக்கள் அவை மாநாட்டிற்குத் தலைமை தாங்கியவர் அன்று பொதுவுடைமைக் கட்சியின் தலைவராகவிருந்த தோழர் இரவி நாராயண ரெட்டிதான்.[109] பின்னர், 6. 2.1944ஆம் ஆண்டில் போங்கரில் நடந்த ஆந்திரப் பெருமக்கள் அவை மாநாட்டில் அந்த அமைப்பின் தலைமை முழுவதையும் பொதுவுடைமையர் கைப்பற்றிவிட்டனர். இதனால் இந்த ஆந்திரப் பெருமக்கள் அவை பின்னர்ப் 'பொதுவுடைமையர் சார்பு ஆந்திர பெரு மக்கள் அவை', 'பொதுவுடைமையரல்லாதார் ஆந்திரப் பெரு மக்கள் அவை' என உடைந்தது.[110]

இதற்கடுத்து, 3.12.1946 அன்று நிசாமின் அரசு பொது வுடைமைக் கட்சியைத் தடைசெய்தது.[111] தெலுங்கானாவைச் சேர்ந்த பொதுவுடைமையர்கள் இதனால் பேராயக் கட்சிக்குள் புகுந்து, அப் பேராயக் கட்சி தொடங்கிய அறப்போராட்டங் களில் தீவிரமாக ஈடுபடலாயினர். 1947 அக்டோபர் முதல் ஓராண்டுக் காலத்துக்கு நிசாமின் பகுதியை ஆளத்தொடங்கிய இரசாக்கர்கள், இப் பொதுவுடைமைக் கட்சியின் மீதிருந்த தடையை வேண்டுமென்றே நீக்கிப் பேராயக் கட்சிக்கும் பொது வுடைமைக் கட்சிக்கும் இடையில் தோன்றிய கூட்டணியை உடைக்கப் பார்த்தனர். இந் நேரத்தில், நிசாமின் ஆட்சிக்குட் பட்ட பொதுவுடைமையர், விடுதலைபெற்ற 'ஒரு தனி ஐதரா பாத்' அரசை அமைக்க வேண்டும் எனக் கேட்டு முழங்கத் தொடங்கினர்![112] 'அகன்ற ஆந்திரம்' (விசால ஆந்திரம்) அமைக் கப்பட வேண்டுமெனக் கேட்டு ஆந்திரப் பொதுவுடைமைக்

www.tamilarangam.net



கட்சி தனது 1947 தேர்தல் அறிக்கையில் முழங்கியிருந்தது.[113] 'சோற்றாலடித்த பிண்டங்களாகவும் வந்தேறிகளின் எடுபிடி களாகவும் ஏனோதானோக்களாகவும்' இருந்துவந்த தமிழகப் பொதுவுடைமையரிடம் மட்டும் அதற்கு நிகரான தமிழ்த் தேசிய இன உணர்வு தலையெடுக்கவே இல்லை!

இருந்தும், 1965ஆம் ஆண்டில் கோவை மாவட்ட இந்தி(ய) மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியில் தேசிய இனச் சிக் கலைப் பற்றிய புகைச்சல் தலையெடுத்தது. அடுத்து வந்த முத லாளியத் தேர்தலில் அக் கட்சியர் தோற்றனர். பின்னர் வந்த தேர்தல்களில் ஒரு சில இடங்களையாவது தரக் கேட்டுத் தி. மு. க. வின் காலடியில் கெஞ்சித் தவம் கிடக்கும் அவல நிலையால் வந்த அறிவு வெளிச்சத்தால், இவர்கள் தேசிய இனச் சிக்க லின் சிறப்பை மேலும் வலியுறுத்தினர். தமிழ்மொழியின் மீதும் தமிழ்நாட்டின் மீதும் தமிழினத்தின் மீதும் கொண்ட பற்றினால் வந்த நிலையே அஃதெனச் சொல்ல முடியாது. தமிழ்த் தேசியத் தன்மை இன்றியே இவர்கள் தேசிய இனச் 'சிக்கலைப்'பற்றிப் பேசிவந்தனர். அதனால், தமிழரின ஓர்மையை எதிர்த்துவந்த அப் பொதுவுடைமைக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அதனால், இவர்களும்கூட 'மார்க்சிய-இலெனினியர்' ஆகினர். மீத்தீவிர வறட்டிய அணியினரான இம் மார்க்சிய-இலெனினி யர்கள், குழுக்களுக்குள் குறுங்குழுக்களாக முடிவின்றி உடை பட்டுக்கொண்டிருக்கையில், தேசிய இனச் சிக்கலும் சாதிச் சிக்க லும் வந்து இடைமறித்து அவர்களை ஓயாமல் அலைக்கழித்தன. இந் நிலையில், இலெனின் சொன்னாரே என்னும் குருட்டுப் பற்றுக்காக மட்டுமே தனிநாட்டுரிமையை ஏற்றுக்கொள்வதாக இப் 'பெத்த பெருமாள்கள்' உதட்டளவில் பாடம் படித்தனர். ஆனால், தாங்கள் பிரிவினை 'வாதத்தை' ஆதரிக்கவில்லை எனச் சொல்லி அடுத்த நாழியே முன்னுக்குப்பின் முரணாகப் பேசிக் குட்டிக்கரணம் போட்டனர்.

இவ் வறட்டியக் குழுக்களின் தலைமைகளில் பெரும்பாலும் தெலுங்கரோ மலையாளிகளோ கோலோச்சுவது தற்செயலான தன்று. மதவழியில் பிறழ்ந்த சீக்கியரின் சிக்கலைத் தேசிய இனச் சிக்கலாகக் கருதி ஆதரித்த இம் மார்க்சிய-இலெனினி யர்கள், சீனம் ஒருகால் ஆதரித்ததே என்பதால்தான் காஃழ்மீர மக்களுக்கும் நாகர்களுக்கும் மணிப்பூர் மக்களுக்கும் அசாமி யருக்கும் தனிநாட்டுரிமையைத் தர வேண்டும் எனச் சொல்லி வந்தனர். ஆனால், தமிழக விடுதலை என்னும் கருத்தியலை மட்டும் வரிந்து கட்டிக்கொண்டு எதிர்க்கின்றனர். தமிழரல்லா

www.tamilarangam.net



அடிநீரோட்டம் இக் குழுக்களின் தலைமைகளில் அழுந்தக் குந்திக்கொண்டிருப்பதே அதற்கான காரணமாகும். தமிழ்த் தேசிய ஓர்மை தம் இனத்தவரின் மேட்டிமையைக் கேள்விக் குரியதாகச் செய்துவிடுமோ என்னும் இன அச்சமே அவர்களை அந் நிலைக்கு ஆளாக்கியுள்ளது. வறட்டியமோ, மற்றொரு காரணம்.

தேசிய இனச் சிக்கலைப் பற்றிய இலெனினியக் கொள் கைக்குப் பெயர்ப்பலகைப் பொதுவுடைமைக் கட்சிஞம் அவற் றின் வறட்டியமும் நேரெதிரானவை என்பதை இடையில் வந்த தமிழீழப் போராட்டம் தோலுரித்துக் காட்டியது. இந் நிலை யில், இந்தியாவிலுள்ள எல்லாத் தேசிய இனங்களுக்கும் ஒட்டுக் காக விடுதலையை வாங்கித்தரப் போவதாக அப் 'புரட்சிகளில்' சிலர் வீரார்ப்புப் பேசத் தொடங்கினர். உள்ளூரில் ஓணான் பிடிக்க முடியாதவன் அயலூரில் கொக்குப் பிடிக்கப் புறப்பட்ட கதையே இவர்களுடைய கதை! சொந்தநாட்டு மக்களை விடு விக்கக் கையாலாகாதவர்கள், ஊர் உலகத்திலுள்ள ஒடுக்குண்ட தேசிய இனங்களை எல்லாம் விடுவிக்க ஊரறிய உறியடிக்கப் போகின்றனராம்! தமிழ்நாடு மார்க்சிய–இலெனினியக் கட்சி என்னும் பெயர்ப்பலகையுடன் தனித்தமிழில் பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் அவர்களில் ஓர் அணி மிக அண்மையில் புறப்பட்டது. அதன் தலைவர் தனித்தமிழில் 'கார்முகில்' என் னும் பெயரைச் சூட்டிக்கொண்ட ஒரு தெலுங்கராவார்! இப் பொய்மான்களைப்பற்றி விடுதலை உணர்வுள்ள இளந்தமிழர் சிறிது எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

## தனித்தமிழ் அணியில்...

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் கண்ட உலகத் தமிழ்க் கழகமோ அரசியலில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளாமல் மொழித் தூய்மையை மட்டுமே போற்றிவந்தது. விடுதலை அரசியலைச் செப்பமாக வளர்த்துக் கொண்டு தமிழரின விடு தலை வேட்கைக்கு உரிய வடிவம் தந்து அதை ஓர் அமைப்பாக வளர்த்தெடுக்க அக் கழகம் துணியவில்லை.

தனித்தமிழ் வழியில் நின்ற **தென்மொழி** வட்டம் முதலில் ஒரு விடுதலை இயக்கமாக இருக்கவில்லை. ஆயினும், தமிழக விடுதலை இயக்கம் ஒன்றைத் தொடங்கவிருப்பதாக 1966ஆம் ஆண்டில் பெருஞ்சித்திரனார் அறிவித்தார்.[114] தென்மொழியில் கட்டம்கட்டி,

www.tamilarangam.net



"தமிழக விடுதலைப் படை! விரைவில் அமைக்கப்படும். அமைக்கவிருக்கும் இப் பேரணியில் உங்களையும் ஒரு மறவனாக்கிக்கொள்ள அணியமாயிருங்கள்!"[115]

என்னும் அறைகூவலை வெளியிட்டார். 1972 சூன் திங்களில் திருச்சியில் நடந்தேறிய **தென்மொழி** மாநாட்டிற்கான அழைப் பிதழில் அடைப்புக்குள்தான் தமிழக விடுதலை மாநாடு என அச்சிடப்பட்டிருந்தது. ஆயினும், தமிழக விடுதலைக்கான ஓர் அரசியல் ஊர்வலம் எடுக்கப்பட்டதே அம் மாநாட்டின்போது தான் வரலாற்றிலேயே முதன்முதலில் நிகழ்ந்தது. 1964 சூன் திங்களில் மதுரையிலும், 1975 சூலைத் திங்களில் சென்னை யிலும் தமிழக விடுதலை மாநாடுகளை நடத்துவது முன்கூட் டியே அரசால் தடைசெய்யப்பட்டு, பெருஞ்சித்திரனாரும் பிற ரும் தளைப்படுத்தப்பட்டனர். பின்னர், 1981ஆம் ஆண்டில் **உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்** தொடங்கப்பட்டது. இத் தமிழின முன்னேற்றக் கழகம், தமிழின விடுதலைக்காகக் குரல் கொடுத்தது. ஆயினும், அதன் அமைப்பும் செயல்பாடுகளும் திராவிடக் கழகங்களின் வழியில் இருந்தன. அதனால், பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை.

பின்னாளில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழீழ விடு தலைப் புலிகளின் வீரத்தைப் போற்றும் பாடல்களை வித் தாக்கிக் களம்பாடத் துணிந்தார். அதனால் அவர் கொடிய 'தடா' சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டார். அந்தச் சிறை வாழ்க்கையின் இன்னல்கள், 1995ஆம் ஆண்டில் பாவல ரேறுவின் உயிரையே பலிகொண்டன.

## 'புல்லும் பூமியும் கல்லும் காவிரியும் உள்ள மட்டும்'

மொழிவழியில் தமிழகத்தைக் கூறாடியபோது, அதிலான வளமான பகுதிகளை எல்லாம் கன்னடரும் தெலுங்கரும் மலை யாளிகளும் அள்ளிச் சென்றனர். தமிழகத்தின் மண் வளம், மழைவளம், நீர்வளம், கனிவளம், காட்டுவளம், பொருள்வளம் ஆகிய எல்லா வளங்களையும் வந்தேறி 'திராவிடருக்கு' நீரட்டிக் கொடுத்துவிட்டுத் தமிழர்கள் எல்லாம் இழந்து நிற்கின்றனர்.

தமிழகத்திற்கு நீர்வளம் சேர்த்த காவிரி, தென்பெண்ணை, பாலாறு ஆகிய பேராறுகள் கருநாடகத்தில் தோன்றுவன. இவை போக, வையை, பொருநை, கொற்றலை என்னும் ஆறுகள் உண்டு. இவை யாவும் வற்றாத ஆறுகளல்ல. சோழரின்கீழ்

www.tamilarangam.net



இருந்த வரையில், பாலாறு தோன்றிய நந்திமலை தமிழரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இந்த நந்திமலைக்கு மேற்கில் அரக்காவதி, வடபெண்ணை ஆகிய இரு ஆறுகள் தோன்றின. அதன் வடக்கே சித்திராவதியும் பாவாக்கினியும் தோன்றின. அந்த மலைக்குக் கிழக்கே பாலாறும் தென்பெண்ணையும் தோன்றின. கோலார் மாவட்டத்திலுள்ள கைவாரா என்னும் இடத்தில் தோன்றும் பாலாறு, அம் மாவட்டத்தின் பங்காரு பேட்டை வட்டத்திலுள்ள பேத்தமங்கலம் (விசயாதித்தமங்கலம்), இராமசாகரம் ஆகிய இரு பெரும் ஏரிகளின் ஊடே கருநாடக எல்லையைக் கடந்து தமிழகத்தின் வடவார்க்காடு மாவட்டத் திற்குள் புகுகின்றது. நந்திமலைக்கு வடமேற்கில் தோன்றும் வடபெண்ணை ஆறு, கௌரிபீடனூர் நகரத்தைக் கடந்து ஆந்திராவின் அனந்தபூர் மாவட்டத்திலுள்ள பெனுகொண்டா வட்டத்தில் கிழக்கே திரும்பி, கடப்பை, நெல்லூர் ஆகிய மாவட்டங்களின் ஊடே கடலில் கலக்கின்றது. நந்திமலைக்குக் கிழக்கே தோன்றும் தென்பெண்ணை ஆற்றுக்கு மார்க்கண்டன் ஆறும், விரிசபாவதி ஆறும் துணை ஆறுகளாகும். பங்காரு பேட்டை வட்டத்திலுள்ள பூதிக்கோட்டையின் ஊடே பாயும் மார்க்கண்டனாறு, பங்காருபேட்டை நகரத்தின் வழியாக ஓடிக் குப்பம் ஏரியை நிரப்பிவிட்டு வரும் விரிசபாவதி ஆற்றுடன் அங்குசகிரி மலையருகில் இணைந்து, பின்னர்த் தமிழகத்தில் கருமலை (கிருட்டிணகிரி)க்கு அருகில் தென்பெண்ணை ஆற்றில் கலக்கின்றது.

இந் நிலையில், இந் நூற்றாண்டின் தொடக்கத்தில், பழைய மைசூர் மன்னராட்சி தமிழகத்திற்குக் கிடைத்துவந்த ஆற்றுநீரை மடக்கி அதனை வெற்றுப் பாலைநிலமாக்கச் சூழ்ச்சி செய்தது. பாலாற்றை மடக்கிக் கோலார் மாவட்டத்தில் 568 பெரிய ஏரிகளையும் 3,376 சிறிய ஏரிகளையும் வெட்டி நீரை முடக்கி யது.[116] பேத்தமங்கலத்தில் பாலாறு முற்றாக மடக்கப்பட்டது. கோலார் மாவட்டத்து மாலூர் வட்டத்தில் தென்பெண்ணை யையும் அதன் துணைஆற்றையும் மடக்கி, 55 பெரிய ஏரிகள் உள்ளிட்ட 385 குளங்களை வெட்டியது.[117] பங்காருபேட்டை யை அடுத்த தொடர்வண்டி நிலையமான காமசமுத்திரத்தில் தென்பெண்ணை ஆற்றை மடக்கிப் பெருங்கடல் போல் ஒரு பெரிய ஏரியை (காமனின் சமுத்திரத்தை) உருவாக்கியது.

இத்தனைக்கும், மைசூர் மன்னராட்சியின்கீழ் அக் கோலார் மாவட்டம் 1792ஆம் ஆண்டில்தான் சேர்க்கப்பட்டது.[118] மைசூ ரின் தலைமையமைச்சர் (திவான்) பூர்ணையா இத்தகைய நீர்ப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாசனத் திட்டங்களை விரிவாக்கிச் சென்னை மாகாணத்திற்குத் தண்ணீர் போகாமல் தடுக்கப் பார்த்த சூழ்ச்சிக்கு எதிராக ஆங்கிலேயரின் சென்னை அரசு எதிர்ப்பு மடலொன்றை (letter of objection) 1800ஆம் ஆண்டில் விடுத்தது. அதன் விளைவாக, 1892ஆம் ஆண்டு காவிரி ஒப்பந்தம் வந்தது.

கன்னடர்கள் காவிரி ஆற்றையும் ஆங்காங்கு மடக்கிடத் தமிழகத்தின் ஒரே உயிர்நாடியான அப் பேராறும்கூட இன்னொரு பாலாறாகவோ தென்பெண்ணை ஆறாகவோ போய் விடக் கூடாது என்னும் பதற்றத்துடன், அன்று சென்னை மாகாணத்தை ஆண்டுவந்த ஆங்கிலேயரின் ஆட்சி, 1924ஆம் ஆண்டு காவிரி ஒப்பந்தத்தை மைசூர் மன்னராட்சியின்மீது திணித்தது. அந்தத் தமிழர் ஆற்றுரிமைக் காப்பு ஒப்பந்தம் 1974ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், கன்னடவெறியையே தனது அரசியல் கருத்தியலாகக் கொண்ட கருநாடக அரசு, அந்த ஒப்பந்தத்தின் காலம் முடிந்துவிட்டது எனச் சொல்லிப் பொய் வழக்காடியது. பேசி முடிவெடுத்து காவிரியைப்பற்றி புதிதாய் ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள லாம் என்று பசப்பியது.

அன்று தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த திராவிட அரசியலாரும் தெலுங்கருமான மு. கருணாநிதி, தமிழகத்தின் ஆற்றுநீர் நலன்களைக் காக்கத் தவறினார். 1924ஆம் ஆண்டின் காவிரிநீர் ஒப்பந்தத்தைப் பச்சையாக மீறி, 13 பெரிய அணைக் கட்டுகளைச் சட்டத்திற்குப் புறம்பாகக் கருநாடக அரசு கட்டி முடித்தபோதும், தமிழகத்தின் காவிரியாற்றுப் படுகையையும் அதன் கழிமுகத்தையும் காக்க முயலாது தமிழகத்தையும் தமிழ ரினத்தையும் வஞ்சித்தார். அடுத்து வந்த மலையாளி ம. கோ. இராமச்சந்திரனின் ஆட்சியும் காவிரி மீதான உரிமையயைக் காக்கவில்லை. பின்னர், பழியைத் துடைக்க முன்னாள் வி. பி. சிங் தலைமையிலான அரசிடம் கெஞ்சிக் கேட்டுக் 'காவிரி ஆற்றுநீர்ப் பூசல் நடுவர் மன்றத்தை' 1990 ஆம் ஆண்டில் அமைத் திட வழிசெய்த கருணாநிதி, அந் நடுவர் மன்றத்தின் இடைக் காலத் தீர்ப்புக்கு எதிராக எசு. பங்காரப்பாவின் கன்னட அரசு கருநாடகத் தமிழர்மீது வன்முறையை ஏவிவிட்டு 1991 திசம்பரில் ஒரு பெரிய இனப்படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்டபோது, கருநாடகத் தமிழரைக் காக்கக் கண்ணீரில் தோய்த்து அறிக்கை விட்டதையும் ஓர் ஊர்வலம் எடுத்ததையும் தவிர, வேறொன் றுமே செய்யவில்லை. அந்த இனப்படுகொலைக்குப் பின்னர் அவர் பெங்களூர்ப் பக்கம் தலைகாட்டவில்லை.

www.tamilarangam.net



1996 பொதுத்தேர்தலுக்குப் பிறகு, புதுதில்லியில் பேராயக் கட்சி ஆட்சி ஒழிந்தது. அப்போது மக்கள் (சனதா) கட்சியின் தலைமையிலான கூட்டு முன்னணி, கருநாடகத்தின் முதல்வரா யிருந்த தேவே கௌடாவை அடுத்த தலைமை அமைச்சராக்க முடிவு செய்தது. இந் நிலையில், இந்தியாவின் தலைமையமைச் சரானால், காவிரி மீதான கருநாடகத்தின் நிலைபாட்டில் மாற்றம் இருக்குமாவெனக் கேட்கப்பட்டபோது, அக் காவிரி யைப் பொறுத்த மட்டில் கருநாடகத்தின் உரிமையைக் கடு களவும் விட்டுக்கொடுக்க மாட்டேனெனத் தேவே கௌடா அடித்துக் கூறினார்.[119] இதுதான் தமிழரையும் தமிழையும் எதிர்ப்பதையே உள்ளீடாகக்கொண்ட கன்னட இனவெறியின் உருவமும் ஆழமும் அளவீடும் ஆகும்.

ஆனால், கன்னட இனவெறியரான தேவே கௌடாவைத் தலைமையமைச்சராக்க தி. மு. க. தலைமை ஒத்துழைப்பதை எதிர்த்துப் பாட்டாளி மக்கள் கட்சி குரலெழுப்பியது. காவிரி நீரைத் தமிழகத்திற்கு விட மறுத்திட்ட கன்னடவெறியரையா தலைமையமைச்சராக்குவது என்னும் கேள்வியை அது தொடுத் தது. அதற்கு விடையளிக்கும் வகையில் பேசிய தமிழக முதல்வ ரான கருணாநிதி, அத் தேவே கௌடா தென்னகத்தவர் என் றும், அதிலும் பிற்படுத்தப்பட்ட சாதியினர் என்றும் சொல்லிப் பழைய திராவிடப் பாட்டையே பாடினார்.[120] ஆனால், கன்ன டரின் இனநலன் என வந்துவிட்டால், கன்னடக் களிமுண்டங் களிடையே 'முற்பட்ட சாதி' என்றும் 'பிற்பட்ட சாதி' என்றும் மயிரிழை அளவு வேற்றுமையும் இல்லையென்பது கருநாடகத் தில் வாழும் தமிழருக்காவது தெரியும்.

ஞாயம் பேசியே கெட்டவர்கள் தமிழர்கள். தத்தம் இன நலன் என வந்துவிட்டால், கன்னடனோ, தெலுங்கனோ, மலை யாளியோ, வடவனோ என்றுமே ஞாயம் பார்ப்பதில்லை. இனநலன்களை மறந்து எதற்கெடுத்தாலும் ஞாயம் பேசும் தமிழ ரின் பேதைமையைப்பற்றித் தெரிந்த தெலுங்குவழிக் கருணா நிதி, காவிரிப்பற்றி கருநாடகத்துடன் மீண்டும் பேசவும் செய் வோம்· என்கிறார்.[121] காவிரிநீர்ச் சிக்கல் தமிழகத்தின் நலன் களைப் பற்றியது. எதையும் மதிக்காத கன்னடருடன் மீண்டும் பேசுவது, தமிழகத்தின் நலன்களைக் காட்டிக்கொடுப்பது என் றாகும். இந் நிலைக்கு, தமிழ் மொழிப்பற்றும் தமிழ் இனப் பற்றும் எள்முனை அளவும் இல்லாத தமிழ் மாநிலப் பேராயக் ...யின் தலைவரான மூப்பனாரும் ஒத்து ஊதினார்.[122] தமிழ ... பீடித்துள்ள தலைவர்களின் அலங்கோலம் இது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புகளை மதிக்க முரட்டுத்தன மாக மறுத்துவரும் கருநாடகம், தமிழகத்திற்கும் கருநாடகத்திற் கும் இடையில் மீண்டும் பேச்சு' நடத்துவது என்னும் சூழ்ச்சிப் பொறியைச் சுற்றி வளைத்துத் திரும்பத் திரும்ப முன்வைக்கின் றது. அத்தகைய பேச்சுப்பொறியில் சிக்கிக்கொள்வது தமிழ கத்திற்குப் பெரிய தீங்காகும். இந்திய அரசுச்சட்டத்தின் 138வது பிரிவிலான 2வது உட்பிரிவின்கீழ் உச்சவழக்குமன்றத்தில் தீர்வு காண்பது என்னும் நிலையிலிருந்து தமிழக அரசு பின்வாங்குதல் கூடாது. திராவிடக் கருத்தியல் அத்தகைய பேச்சுப்பொறியில் தமிழகத்தைச் சிக்கவைக்காமலிருக்கத் தமிழர்கள் மிகவும் விழிப் போடு இருக்க வேண்டும்.

கருநாடக அரசு காவிரி மீதான அணைகளில் தேக்கிவைத் துள்ள நீர்க் கொள்ளளவை அடாவடித்தனமாக மூடிமறைத்துக் குறைத்துச் சொல்லிவருவது உலகறிந்த குட்டு. இந் நிலையில், அரக்கி செயலலிதாவின் வீழ்ச்சிக்குப்பின் அரசு கட்டிலேறிய முதலமைச்சர் கருணாநிதி, காவிரி மீதான தமிழகத்தின் உரிமை யைக் காக்க முனையாமல், கருநாடக அரசின் ஊதுகுழலாக ஏன் ஆனார் என்பது விளங்கவில்லை.

> "கருநாடக அணைகளில் தண்ணீர் இல்லை. அங்கு மழை பெய்து அணைகளில் நீர்மட்டம் உயர்ந்தால், தமிழகத் திற்கு எவ்வளவு தண்ணீர் பெற்றுத் தர முடியுமோ, அவ் வளவு தண்ணீர் பெற்றுத் தர கருநாடக அரசை வற்புறுத்து வோம்"[123]

எனத் திருவாரூரில் 18.6.1996 அன்று செய்தியாளரிடம் திருவாய் மொழிந்தருளியபோது, காவிரியின் பிறப்பிடமான குடகில் நாளெல்லாம் மழை கொட்டிக்கொண்டிருந்தது! அக் காவிரி தோன்றும் தலைக்காவிரியிலிருந்து 48 கட்டை (கிலோமீட்டர்) தொலைவிலுள்ள குடகின் தலைநகரமான மடிக்கேரி (மெர்க் காரா) மழை நீர்ப்பிடிப்புப் பகுதியில் உள்ளது. அங்கு 1996ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவமழை தொடங்கிய பின்னர் சூன் 14 முதல் பெய்த மழையின் பதிந்த அளவை அடியில் காண்க:

| பக்கல் | பெய்த மழையளவு[124] (மில்லிமீட்டரில்) |
|---|---|
| 14.6.1996 | 169 |
| 15.6.1996 | 202 |
| 16.6.1996 | 91 |
| 17.6.1996 | - |

www.tamilarangam.net



| பக்கல் | பெய்த மழையளவு மில்லிமீட்டரில் |
|---|---|
| 18.6.1996 | 101 |
| 19.6.1996 | 101 |

திராவிடம் பேசியே காவிரி மீதான தமிழகத்தின் உரிமையைக் காக்கத் தவறிய கலைஞர், கருநாடகத்துடன் மீண்டும் பேசவும் அடிப்போட்டார்! இதற்கிடையே, காவிரி நடுவர் மன்றத்தின் தலைவரான சித்ததோஃஷ் முக்கர்ஜி பதவி விலகினார்![125] அந் நடுவர் மன்றத்தின் வருங்காலத்தையே தேவே கௌடா தன் சூழ்ச்சியால் கேள்விக்குரியதாக்கிய கதை இது!

காவிரியின் துணைஆறுகளை எல்லாம் மடக்கிக் கன்னடர்கள் புதிது புதிதாக அணைகளைக் கட்டிக்கொண்டிருப்பதால் தான் கண்ணம்பாடி அணையின் நீர்மட்டம் 1996 சூன் திங்களில் மீமிக அளவை எட்டவில்லை. அவற்றில், பெங்களூருக்கு அருகிலான சன்னப்பட்டணம் வட்டத்தில் காவிரியின் துணைஆறான சிம்சா ஆற்றின்மீது கட்டப்பட்டுவரும் இக்கலூர் அணை 1997 திசம்பருக்குள் கட்டி முடிக்கப்படும். அந்த அணையின் இரண்டாவது கட்டப் பணிக்கு 1996 சூலை மாதத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது. முப்பது ஆண்டுகளாகக் கிடப்பில் கிடந்ததாகக் கன்னடர் சொல்லும் இந்த இக்கலூர் அணைத் திட்டத்தை முடிக்க கருநாடக அரசு அறக்கப் பறக்க இரவு பகலாகப் பாடாற்றிவருகின்றது. கருநாடகத்தின் மாண்டியம் மாவட்டத்தில் காவிரியின்மீது கட்டப்பட்டுவருகின்ற மஞ்சனப்பள்ளி அணையும் அதே போன்று போர்க்கால முறையில் அமைக்கப்பட்டுவருகின்றது.[126]

போதாமைக்கு, காவிரியின் துணை ஆறான ஏமாவதியிலிருந்து வெட்டிய ஏமாவதி–தும்கூர் கிளைக்கால்வாயிலிருந்து திப்தூரின் ஈச்சனூர் ஏரிக்கும் தும்கூரின் புகுதனள்ளி ஏரிக்கும் நீரைக் கொண்டுசென்று, அவ்விரு நகரங்களுக்கும் 1996 சூலை 1 முதல் குடிநீர் வழங்குவதாகத் தலைமையமைச்சர் தேவே கௌடா அளித்த உறுதிமொழியை விரைந்து நிறைவேற்றுவதில் கருநாடக அரசு குறியாக உள்ளது. இதனால், புகுதனள்ளி ஏரிக்கு 1.135 நூறு கோடி கனஅடி (tmc) நீரும், ஈச்சனூர் ஏரிக்கு 0.2 நூறு கோடி கனஅடி (tmc) நீரும் கிடைக்கும். இது போக, தும்கூர் கிளைக்கால்வாய் 22,000 குறுக்கம் (ஏக்கர்) நிலப்பரப்பிற்கும், நாகமங்கலம் கிளைக்கால்வாய் 3,500 குறுக்கம் (ஏக்கர்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலப்பரப்பிற்கும் பாசனநீரை வழங்கும். ஒட்டுமொத்தத்தில், துமக்கூர் கிளைக்கால்வாய் 83,000 குறுக்க நிலப்பரப்பிற்கும், நாகமங்கலம் கிளைக்கால்வாய் 1.47 இலக்கம் குறுக்க நிலப் பரப்பிற்கும் என அந்த ஆற்றுநீரைப் பாசனத்திற்குப் பகிர்ந் தளிப்பதே 1996–97ஆம் ஆண்டுக்குக் கருநாடக அரசு வைத் துள்ள திட்டக்குறியீடாகும். இந் நீர்ப்பாசனத் திட்டத்திற்கு ரூ. 222 கோடி ஆகுமாம். கண்ணம்பாடி அணையிலிருந்து தொடங்கும் விசுவேசுவரையா கால்வாயை வேறு கருநாடகம் புதினப்படுத்திவருகின்றது. இதனால், நொடிக்கு 2,200 கனஅடி (cusecs) என்னும் இப்போதுள்ள அளவிலிருந்து நொடிக்கு 3,020 கனஅடி (cusecs) அளவுக்கு என இக் கால்வாயின் கொள்ளளவு உயர்த்தப்பட்டுவருகின்றது.[127] தமிழ்நாட்டிற்கு ஒரு சொட்டு நீரும் காவிரியிலிருந்து தரக் கூடாது என்னும் கெட்ட எண்ணத் துடனேயே கன்னட இனவெறி அரசு காவிரியை இவ்வாறெல் லாம் மடக்கிப்போட்டுவருகின்றது. இந்த உண்மைகள் யாவும் தமிழரை ஆளவந்த முதலமைச்சர் கருணாநிதிக்குத் தெரியாதா என்ன? இருந்தும், கண்ணம்பாடி அணையில் போதிய நீர் இல்லையென அவர் கன்னடத்தானின் பாடத்தையே படிக்கத் துணிந்துவிட்டார்!

இவற்றிற்கிடையில், மலையாளத்தானும் தன் பங்குக்கு மடி பறிக்கப் பார்க்கின்றான். காவிரியிலிருந்து கேரளத்திற்கு 99.8 நூறு கோடி கனஅடி (tmc) நீர் வேண்டுமென மலையாளி கேட்கின்றான்! கேரளத்தில் தோன்றும் காவிரியின் துணை ஆறான கபிலை (கபினி) ஆற்றின்மீது ஓர் அணையும், தெற்கே யுள்ள பாம்பாற்றின்மீது ஐந்து அணைகளையும் புதிதாகக் கட்டக் காவிரி நடுவர் மன்றத்திடம் ஒப்புதல் கேட்டுப் பணித் திட்டஅறிக்கைகளைக் கேரளம் முன்வைத்துள்ளது.[128]

இதனால், இன்னொரு பாலாறாகவோ தென்பெண்ணை யாகவோ காவிரியும் ஆகப் போவது உறுதி. இந்திராவின் பேச்சைக் கேட்டுக் கருணாநிதி காவிரி பற்றிய உச்சவழக்குமன்ற வழக்கை அப்போது திரும்பப் பெற்றபோதும், இந்தி(ய) கூட்டு முன்னணி ஆட்சிக்காகக் கன்னடத்தானுடன் இப்போது பேசப் புறப்பட்டபோதும், ஒன்று மட்டும் மிகத் தெளிவாக விளங் கியது. தம் சொந்த நாற்காலி அரசியல் நலனுக்காகத் தமிழகத் தின் அடிப்படை உரிமைகளையும்கூடப் பச்சையாகக் காட்டிக் கொடுக்கத் துணிபவர்தான் கலைஞர் கருணாநிதி என்பதே அஃதாகும். முன்பு நகரியாறு, இன்று காவிரி என ஆற்றுநீர் உரிமைகளை அடுத்தடுத்துக் காட்டிக்கொடுத்த அவரது கயமை,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழகத்தின் துன்பியல் வரலாறாக நிலைக்கப்போவது மட்டும் உறுதியாகின்றது.

காவிரி மீதான தமிழகத்தின் உரிமையைப்பற்றிப் பழ. நெடுமாறன் ஓரளவு பேசவும் எழுதவுமாவது செய்தார். ஆற்றுநீர்ப் பங்கீட்டு நெறிமுறைகளை மீறிக் காவிரி ஆற்றை ஆங்காங்கே தடுத்துத் தமிழகத்திற்கு ஞாயமான அளவு நீர் கிடைக்காமல் கெடுப்பதை மட்டுமே நோக்கமாகவும் போக்காகவும் கொண்டு இயங்கிவந்த கன்னட அரசின் இனவெறிச் சூழ்ச்சிகளைப்பற்றித் தெரிந்துகொள்ளவும் மனமின்றி ஏனோ தானாவெனக் கிடந்த தமிழர்களை — குறிப்பாகக் காவிரிக் கழிமுக உழவர்குடியை — துயிலெழுப்பி, தாம் கண்ட காவிரிக் காப்புக் குழுவின் வாயிலாக அவ்வப்போது ஓயாது நினைவுறுத்தி வருபவர் கரூர் வழக்குரைஞர் பூ. அர. குப்புச்சாமி ஆவார். கருநாடகத்தில் 1991ஆம் ஆண்டு திசம்பர்த் திங்களில் கொடிய இனப்படு கொலைக்கு ஆளான தமிழர்க்கு உரிய இழப்பீடு கேட்டு உச்ச வழக்குமன்றம் வரை செல்லத் தூண்டிச் சட்டப்படி இன்னின்ன செய்ய வேண்டும் என ஓயாது எண்ணியும் கருத்துரைத்தும் ஊக்கியும்வரும் தமிழரின ஓர்மையாளரான அவர், காவிரிநீர்ப் பூசலைப்பற்றிப் பல்லாண்டுக் காலமாகத் தாம் திரட்டிவைத் துள்ள அரிய குறிப்புகளைத் தமிழரில் யாராவது நூல் வடிவில் தமிழ் மக்களின் முன்னால் படைக்கவும் பரப்பவும் செய்யாரா வென்னும் ஏக்கத்துடன் அலைந்து தோற்றும் சோர்வுறாத் தமிழ் நெஞ்சினராவார்.

## ஈழம் தந்த பாடம்

1983 சூன் திங்களில், இலங்கையில் சிங்கள இனவெறியர் நடாத்திய இனப்படுகொலை தமிழக வாழ்வியலின்மீது ஒரு பெரிய நிலநடுக்கத்தையே ஏற்படுத்தியது. அதனால், புலம் பெயர்ந்து தமிழ்நாட்டிற்குள் கரையேறி வந்த தமிழ் ஏதிலி (அகதி)களின் தொகை நூறாயிரத்தையும் தாண்டியது. இத்த கைய குடிபெயர்ச்சி, தமிழக அரசியலின்மீது பெரிய அழுத்தங் களைத் தோற்றுவித்தது.

இதனால் அரண்ட இந்தி(ய) அரசு, சிங்கள இனவெறியை எதிர்த்துத் தமிழீழத் தமிழரின் படைவழிப் போராட்டத்திற்கு உதவுவதைப்போல் பாசாங்கு செய்தது. அதன் வாயிலாகத் தன்னுடைய புவிஅரசியல் (geopolitical) நலன்களைக் குமரிப் பெருங்கடலில் (இந்துமாகடலில்) விரிவாக்கிக்கொள்ளப் பார்த்

www.tamilarangam.net



தது. தமிழீழ விடுதலைக் குழுக்களை அணைத்துக் கெடுப்பதன் வாயிலாகத் தமிழ்நாட்டில் அத்தகைய தேசிய விடுதலை எழுச்சி கால்கொள்ளாமல் தடுப்பதிலேயே பெருங்கண்ணாக விருந்தது. இந்தி(ய) வல்லரசின் ஒற்றுத்துறைகள், இங்குள்ள பொதுவுடைமைக் கட்சிகளையும் குழுக்களையும் வைத்து அங்கிருந்த பொதுவுடைமைச் சார்புக் கருங்காலிக் குழுக்களை ஊக்குவித்தன. கலைஞர் கருணாநிதியை வைத்து இன்னோர் உதிரி அமைப்பை இந்தி(ய) ஆய்வு அலசல் துறை (RAW) உருவாக்கியது. அத்தகைய இந்தி(ய) அடிவருடி ஈழக் கும்பல் ஒன்றை வைத்து 'இந்தி'யர் அமைத்த கைப்பாவை அரசின் 'முதலமைச்ச'ராகவிருந்த வரதராசப் பெருமாள், தமிழகத்தின் முகவை மாவட்டத்திலிருந்து போன தெலுங்கர் ஒருவரின் வழிவந்தவராம். கட்டபொம்மு, எட்டப்ப நாயக்கன் ஆகிய தெலுங்கரின் மரபில் வாராது வந்தவர் அவராயிற்றே!

நெறிகெட்ட திராவிட அரசியல் அணிவகுப்புகள், அருவருக்கத்தக்க வகையில் தமிழீழ விடுதலைக் குழுக்களைத் தத்தமக்கெனக் குத்தகை எடுத்துக்கொண்டு சிலம்பம் ஆடின. தமிழகத்தின் உதிரி அரசியல் பண்பாட்டைத் தமிழீழத் தமிழ்க் குழுக்களின்மீது வலியத் திணித்தன. அவற்றிடையே குழப்பத்தையும் பூசல்களையும் பகையையும் வளர்த்து, அரசியல் ஊதியமும் பொருள் ஊதியமும் பெற்றன. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வந்தேறிய தெலுங்கு ஆண்டை அரசியலாருக்கா தெரியாது? அவ் வழியில், தெலுங்கரின் படைவீடான திராவிடர் கழகத்தின் வெவ்வேறு அணிவகுப்புகள் தமிழீழத் தமிழரின் உற்ற உறவினரைப் போல் நடித்து நாடகமர்டின. தமிழீழ மக்களுக்கு நேர்ந்த கொடுமைகளை வைத்துத் தெலுங்கர் நலன் காக்கும் திராவிட அரசியல், குளிர்காயவும் மேயவும் பார்த்தது. காலமறிந்து அரசியல் ஆடுவதும் காசு சேர்ப்பதும் தெலுங்கரின் கைவந்த கலையாயிற்றே!

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுக்கோப்பும் படைவழியிலான அறிவியல் நோக்கும் போக்கும், பிற தமிழீழக் குழுக்களெல்லாம் இந்தி(ய) வட்டகை வல்லரசியத்தின் கைப்பாவைகளே என்பதைக் காட்டின. ஆயினும், இந்தி(ய) வல்லரசைப் பகைத்துக் கொள்ளாமல் அதன் உதவியைப் பெற்றுத் தமிழீழம் அமைத்துவிடுவது என்னும் அவ் விடுதலைப் புலிகளின் உத்தி கைகொடுக்கவில்லை. தமிழீழ விடுதலைப் போரைக் காலமறிந்து அமுக்கி அழிப்பதே இந்தி(ய) வல்லரசின் கரவான நோக்கமாகவிருந்த உண்மை, 1987 இந்தி(ய)–இலங்கை ஒப்பந்

www.tamilarangam.net



தத்தைத் தமிழீழத் தமிழரின்மீது இந்தி(ய) வல்லரசு திணித்த போது தெள்ளென வெளிப்பட்டது. தமிழருக்கென உலகில் ஒரு தனிநாடு அமைவதை 'இந்தி'யா என்றாவது ஏற்றுக்கொள் ளுமா? எனினும், இந்தி(ய) வன்கவர் படைகளோடு மோதிக் களம்கண்டு வென்றனர் தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழீழத் தேசிய விடுதலைப் போர் தமிழக வாழ்வியலின் மீது பெரிய தாக்கங்களை ஏற்படுத்தியதை யாரும் மறுக்க மாட் டார். அதனால் தமிழகத் தமிழர்க்குக் கிடைத்த முதல் பாடமே தமிழகத்தின் மண் தமிழர்களிடம் இல்லையென்ற அடிப்படைப் பாடமாகும். குழம்பிய நிலையில், கண்ணை அகல விரித்து அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்தபோது, தம்மைச் சுற்றித் தம் சொந்த மண்ணிலேயே வளமாக வாழ்ந்து கொற்றம் புரிந்து வருபவரெல்லாம் தெலுங்கராகவும் கன்னடராகவும் மலையாளி களாகவும் மராத்தியராகவும் உள்ள திராவிடரும், மார்வாடி யரும் குசராத்தியருமான வடவருமே என்பது நன்கு விளங்கியது. அத் தமிழீழ விடுதலைப் போரினாலேயே இந்த அறிவு வெளிச் சம் தமிழகத் தமிழருக்கு வந்தது. தாங்கள் தமிழரே என்னும் இன ஓர்மை தமிழரிடையே தோன்றாமல் தடுப்பதே அவர் களின் இந்தி(ய), இந்து, திராவிட, 'வருக்கக்' கருத்தியல்களின் நோக்கமும் நடப்பும் என்பது நன்கு விளங்கியது. குறிப்பாக, திராவிடச் சாயம் நன்கு வெளுத்தது.

1991ஆம் ஆண்டில் இராசீவ் காந்தி கொலையுண்ட பிறகு, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மீதும் தமிழீழ ஏதிலிகளின் மீதும் கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறையைக் கண்டு ஆடி அரண்டுபோன திராவிடக் கழகங்களின் நிலை, தமிழீழப் போராட்டத்திற்குத் தெலுங்கு வந்தேறிகள் வழங்கி வந்த ஆதரவு எவ்வளவு போலியானது என்பதைத் தோலு ரித்துக் காட்டியது. தமிழுணர்வுள்ள தமிழர் அதனால் வாயி ருந்தும் ஊமைகளாயினர். 1991 திசம்பர்த் திங்களில் கருநாட கத்தில் தமிழரின்மீது கன்னடர் அரசே நடத்திய இனப்படு கொலையில் தமிழச்சிகள் பலர் கற்பழிக்கப்பட்டனர். தமிழர் பலர் மிகக் கொடுமையாகக் கொல்லப்பட்டனர். அவர்தம் வீடுகளும் உடைமைகளும் சூறை யாடப்பட்டன. பச்சிளம் தமிழ்க் குழந்தைகளும் கன்னட வெறியர்களால் தீயில் எறியப் பட்டன. திராவிடனாம் கன்னடன் தமிழ்மீதும் தமிழர்மீதும் கொண்டுள்ள தீரா இனப்பகை அப்போது தெருக்கூத்திட்டது. இந் நிலையில், தமிழரல்லாதவரின் தலைமையிலான திராவிடக் கழகங்கள் தங்களைச் சார்ந்திருந்த கருநாடகத் தமிழர்க்கு இரண்

www.tamilarangam.net



டகம் செய்த நிகழ்ச்சியும் தமிழரினத்திற்கு இன்னொரு பாட மானது.

ஒருகாலத்தில் பர்மாவை வளப்படுத்திய பர்மியத் தமிழர் கள் அங்கிருந்து அடித்து விரட்டப்பட்டபோது, வாய்செத்த வராய் இருந்தும் இல்லாது கிடந்த தமிழகத் தமிழர், இப் போதும் அதே போல் நடைபிணங்களாக நின்றனர். கருநாட கத்தை யடுத்து மராத்தியத்தின் தலைநகராம் பம்பாயிலிருந்து தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டனர். கேரளத்துடன் வலிய இணைக்கப்பட்ட இடுக்கியில் மலையாளிகள் தமிழர்மீது நடத் தும் குறும்புத் தாக்குதல்களைப் பற்றிய செய்திகளும் வரலாயின திருவிதாங்கூர்த் தமிழர் வீரமுடன் போராடி மீட்ட குமரி மாவட்டத்தைக் கேரளத்துடன் இணைக்குமாறு மலையாளிகள் மீண்டும் குரலெழுப்பலாயினர்.

இந் நிலையில்தான், தமிழிளைஞரிடம் தேசிய விடுதலை அரசியல் கால்கொள்ளத் தொடங்கியது. இளந்தலைமுறையின ரில் ஊருக்குப் பத்துப் பதினைந்து பேர் என அரும்பிய விடு தலைப் புலிகளின் ஆதரவாளர்கள், தமிழ்த் தேசிய ஓர்மையைத் தங்களின் நெஞ்சில் வளர்க்கத் தொடங்கியமையால், தமிழ்த் தேசியக் குழுக்கள் தமிழகத்தில் ஆங்காங்கே மெல்ல முளைக்கத் தொடங்கின.

## சாதி அரசியல் சுழியில்...

இவற்றிற்கிடையில், தொல்தமிழரான பறையரையும் பள் ளரையும் தமிழரினத்திலிருந்து பிரிப்பதற்குத் 'தலித்' என்னும் சங்கத(சமற்கிருத)ப் பெயரை வைத்து ஒரு பெரிய சூழ்ச்சியே நடந்துவருகின்றது. மண்ணின் மைந்தரும் மூத்தகுடியினருமான தொல்தமிழரைப் பார்த்து, 'உங்களுக்கென மண்ணோ, நாடோ, தேசமோ இல்லை!' என்னும் பொய்யான பாடம் படிக்கப்படு கின்றது. ஒருகால் ஆண்ட இனத்தவராயிருந்த அவர்களின் வரலாறு மறைக்கப்படுகின்றது. அவர்தம் தன்னம்பிக்கையைக் கெடுக்கும் 'தாழ்த்தப்பட்ட' உளத்தியல் மட்டுமே அவர்களிடம் ஊன்றப்படுகின்றது. அவர்களின் மண்ணையும் வாழ்வையும் வளத்தையும் பறித்த வந்தேறி ஆண்டைகளிடமே கூனிக் குறுகி இரந்து நிற்கும் இரவலர் மனப்பாங்கை அவர்தம் அடிமனத்தில் நிலைப்படுத்த நினைக்கும் ஒரு சூழ்ச்சிக் கருத்தியலாகவே வந் தேறிகளின் 'தலித்தியம்' இருக்கின்றது. தொல்தமிழரே தமிழ் நிலத்தின் தொல்குடிகள்; அவர்களே அடிப்படைத் தமிழர் என்

www.tamilarangam.net



னும் பேருண்மையை மறைப்பதற்கென்றே வந்தேறிகளில் தாழ்த் தப்பட்டோர் செய்யத் துணிந்துள்ள குறும்புத்தனமே 'தலித்' என்னும் திருப்பெயர் சூட்டலாகும்.

அனைத்திந்தி(ய) சாதி ஒற்றுமை என்னும் சாக்கில், இந்தி வெறியரான இராம் விலாசு பாசுவான் போன்ற 'தலித்' தலை வர்களைச் செந்தமிழ் மண்ணில் இறக்குமதி செய்து, தொல் தமிழர்மீது இந்தி என்னும் ஆண்டைமொழியைத் திணிப்பதற்கு வந்தேறிகள் செய்துவரும் குறும்புகளையும்கூடத் தமிழரில் இன ஓர்மையுள்ளோர் விளங்கிக் கொள்வது நல்லது.

பார்ப்பனியம் தோன்றிட்ட சேரலத்தில் இருந்ததைவிடச் சாதிக் கொடுமை மிக்க் கூடுதலாக இருப்பது, இன்று தமிழ கத்தில்தான் என்பது கண்கூடான உண்மை. இன்றைய கன்னட நாட்டிலும் அது தமிழ்நாட்டில் இருக்கும் அளவுக்கு இல்லை. ஆந்திரத்தின் நிலையும் தமிழ்நாட்டுக்கு அடுத்ததே எனலாம். சாதியத்தை ஒழித்துக்கட்டிவிட்டதாக மிகப் பெரிதாகப் பீற்றிக் கொள்ளும் திராவிட அரசியலார் ஓம்பும் சாதி வழிச் சலுகை-இடவொதுக்கீட்டுக் கொள்கை, நயன்மைக் கட்சி பெற்றெடுத்த கொள்கை. மண்ணின் மைந்தரையே ஓடு ஏந்தவைத்த அந்தக் கொள்கை, இந்தியத் துணைக்கண்டத்தையே இன்று முழுதுமாய் ஆட்கொண்டுவிட்டது.

தமிழ்ச் சாதிகளைப் பகைநிலையில் பிரித்து அப் பகையை நிலைப்படுத்தும் நோக்கத்துடன், வந்தேறிக் கன்னடரும் தெலுங் கரும் பழைய சென்னை மாகாண அரசியலில் மேட்டிமையைப் பெறப் பயன்படுத்திய ஒரு சூழ்ச்சிப் பொறியே சலுகை-இடவொதுக்கீட்டு அரசியலாகும். அதனால், மொழிவழியில் சென்னை மாகாணத்தைப் பிரித்த பின்னரும், அச் சென்னை மாகாணத்தில் விளங்கிய சாதிப் பட்டியல்களே – பெரிய அடித் தல் திருத்தல் இன்றி – தமிழகத்தில் அப்படியே நீடிக்கின்றன. தமிழகத்தில் இன்று இல்லாத பல சாதிகளும் அவற்றில் இன்னும் உண்டு. கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது அமைக் கப்பட்ட **சட்டநாதன் ஆணையம்** அதனைச் சுட்டிக்காட்டித் திருத்தச் சொல்லியும், அவர் அதைச் செய்தாரில்லை. கிணறு வெட்டப்போய்ப் பூதம் வந்ததென அரண்டு, அவர் அதன் பரிந்துரைகளை ஏற்கவில்லை போலும்.

இக் கருத்தை நிறுவும் வகையில், தமிழக அரசு கடைப் பிடிக்கும் சாதிப் பட்டியல்கள் மொழியின அடிப்படையில் அடியில் தரப்படுகின்றன:

www.tamilarangam.net



## தமிழகத்தில் அட்டவணைச் சாதியர் எனப்படும் 'தாழ்த்தப்பட்டோரில்' பிற இனத்தவர்

| தமிழர் | தெலுங்கர் | கன்னடர் | மலையாளி |
|---|---|---|---|
| ஆதிதிராவிடர் | ஆதி ஆந்திரர் | ஆதிகருநாடகர் | ஐயனவர் (குமரி, நெல்லைச் செங்கோட்டை) |
| தேவேந்திர குலத்தார் | அருந்ததியர் | பைரா | செறுமன் |
| பரதர் (குமரி, நெல்லைச் செங்கோட்டை) | பண்டி | பெல்லரா | கக்கலன் (குமரி, நெல்லைச் செங்கோட்டை) |
| கடையன் | சக்கிலியன் (க) | சலவாதி | கல்லாடி |
| கோலியன் | டொம்பன் | ஒலையர் (து) | கணக்கன் (பட்டணன் — நீலமலை) |
| குடும்பன் | டொம்மர் (ஒ) | கூசா | கரிம்பாலன் |
| குறவன் (சித்தனார்) | கொட்டா | ராணேயர் | கூடன் (குமரி, நெல்லைச் செங்கோட்டை) |
| பட்டணவன் (குமரி, நெல்லைச் செங்கோட்டை) | கோசங்கி | **துளுவர்** | மன்னான் (குமரி, நெல்லைச் செங்கோட்டை) |
| பள்ளன் | ஜக்கலி (ஒ) | அஜிலா | மாவிளான் (த) |
| பாணன் (ம) (குமரி, நெல்லைச் செங்கோட்டை) | ஜம்புவுலு | பாக்குடா | நாயாடி |
| பண்ணாடி | மாதிகர் | கவரா (குமரி, நெல்லைச் செங்கோட்டை) | பள்ளுவன் |
| பரவர் (ம) (குமரி, நெல்லைச் செங்கோட்டை) | மாலா | மைலா | பதியன் (குமரி, நெல்லைச் செங்கோட்டை) |
| பறையர் (சாம்பவர்) | முச்சி (மரா) | மொகேர் | தண்டன் (குமரி, நெல்லைச் செங்கோட்டை) |
| புலையன் (ம) (சேரன்மார்) | பகடை | முண்டாளா | வேலன் |
| புதிரை வண்ணான் | பஞ்சமர் | நலகேயவா | வேடன் (குமரி, நெல்லைச் செங்கோட்டை) |
| சாம்பான் | பன்னியாண்டி | பம்படா | வேட்டுவன் (குமரி, நெல்லைச் செங்கோட்டை) |
| செம்மான் | தோட்டி | சமகாரா (மரா) | |
| திருவள்ளுவர் | வெங்கானூர் | **பிறர்** | |
| வல்லோன் | ஆதிதிராவிடர் (வடவார்க்காடு, திருவண்ணாமலை) | சமர் (ஒ) | |
| வள்ளுவன் | | சண்டாளர் (ஒ) | |
| வண்ணான் (குமரி, நெல்லைச் செங்கோட்டை) | | டொம்பரவர் (இ) | |
| வேப்பூர்ப் பறையர் (தென்னார்க்காடு) | | கொடகலி (ஒ/தெ) | |
| வெட்டியான் | | மாதாரி (மா) | |
| | | பைதி (ஒ) | |
| | | பாணோ (ஒ) | |
| | | சப்பரி (ஒ) | |
| | | வாத்திரியன் | |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## தமிழகத்தில் அட்டவணைப் பழங்குடிகள் எனப்படும் பழங்குடி வகுப்பினரில் பிற இனத்தவர்

| தமிழர் | தெலுங்கர் | கன்னடர் | மலையாளி |
|---|---|---|---|
| இரவாளர் (ம)<br>இருளர் (தெ)<br>கோத்தர் (க)<br>(குமரி, நெல்லைச் செங்கோட்டை தவிர)<br>மலசர் (ம)<br>மலைமலசர்<br>மலையாளி<br>(தரும்புரி, வடவார்க்காடு, திருவண்ணாமலை, புதுகை, சேலம், தென்னார்க்காடு, திருச்சி)<br>முதுவர் (ம)<br>பழையன்<br>பழியர்<br>பழியன் | கம்மாரா<br>(குமரி, நெல்லைச் செங்கோட்டை தவிர)<br>கொண்ட காப்பு<br>கொண்டா ரெட்டி | அடியன் (ம)<br>குறும்பர் (த)<br>(நீலமலை)<br>சோலகர்<br>**துளுவர்**<br>கொரகா (க)<br>குடியா<br>(மலைக்குடியா)<br>மலையக்கண்டி<br>**பிறர்**<br>தோடர்<br>(குமரி, நெல்லைச் செங்கோட்டை தவிர) | ஆறுநாடன்<br>காடர் (த)<br>காணிக் காரன் (த)<br>(குமரி, நெல்லைச் செங்கோட்டை)<br>காணியன் (த)<br>காட்டுநாயகன்<br>கொச்சுவேலன்<br>குறிச்சன் (க)<br>குறுமன் (க)<br>மலைஅரையன்<br>மலைக் குறவன் (த)<br>மலைப் பண்டாரம்<br>மலை வேடன் (த)<br>மன்னான் (த)<br>முடுகர்<br>(முடுவர்)<br>பணியன்<br>ஊராளி (த) |

## மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் பிற இனத்தவர்

| தமிழர் | தெலுங்கர் | கன்னடர் | மலையாளி |
|---|---|---|---|
| அம்பலக்காரர்<br>ஆண்டிப் பண்டாரம்<br>கிறித்துவப் பரவர்*<br>இரவாளர் (ம)<br>(குமரி, நெல்லைச் செங்கோட்டை தவிர)<br>கொங்குச் செட்டியார் | பெஸ்தா (க)<br>பட்டுராசு<br>(சத்திரிய ராஜு தவிர)<br>போயர்<br>தாசரி<br>டொம்மரர்<br>ஏகலா<br>இசை வேளாளர் | ஜங்கம் (தெ)<br>கொரச்சா<br>கும்பரர் (தெ)<br>குறும்பர்<br>குருகினிச் செட்டி<br>மௌண்டாடன் செட்டி<br>ராஜகா (தெ)<br>சிவியர்<br>யோகீசுவரர் (த) | நாவிதர் (த)<br>புர்ணோப காரி<br>ராஜகுல வெளக்குத் தலவர்<br>வெளக்குத் தலவ நாயர்<br>வெளுத்தேடர் |

www.tamilarangam.net



| தமிழர் | தெலுங்கர் | துளுவர் | பிறர் |
|---|---|---|---|
| (கோவை, பெரி | ஜோகி | அகசா (க) | நரிக்குறவர் |
| யார் மட்டும்) | குலாலா | மடிவாளா | (மரா), |
| குயவர் | மகேந்திரா | | |
| குன்றுவர் | மேதரா (க) | | |
| மன்றாடி | மங்கல(வாடு) | | |
| மருத்துவர் | மொண்ட | | |
| மீனவர் | கொல்லா | | |
| (பர்வதராசக் | ஒட்டர் | | |
| குலம், | சாத்தாத ஸ்ரீ | | |
| பட்டினவர், | வைணவர் (த) | | |
| செம்படவர், | (சாத்தானி, | | |
| கிறித்துவரா | சாட்டாடி | | |
| னோர் உட்பட) | உட்பட) | | |
| முக்குவர் (ம) | தெலுங்குப் | | |
| (முக்கயர் — | பட்டிச்செட்டி | | |
| கிறித்துவர் | தொட்டிய | | |
| உட்பட)* | நாயக்கர் | | |
| முத்தழகன்பட்டி | (ராஜகம்பளம், | | |
| நோக்கர் | கொல்லவார், | | |
| பன்னாயர் | சில்லவார், | | |
| (குமரியிலுள்ள | தொக்களவர், | | |
| காதிக்காரர் | தொழுவ | | |
| தவிர) | நாயக்கர் | | |
| பரவர் (ம) | உட்பட) | | |
| (குமரி, நெல்லைச் | | | |
| செங்கோட்டை | | | |
| தவிர) | | | |
| புன்னன் | | | |
| வேட்டுவ | | | |
| கவுண்டர் | | | |
| சாம்பவனோடை | | | |
| சோழியச்செட்டி | | | |
| தொண்டைமான் | | | |
| வலையர் | | | |
| (செட்டிநாட்டு | | | |
| வலையர் | | | |
| உட்பட) | | | |
| வண்ணார் | | | |
| (குமரி, நெல்லைச் | | | |
| செங்கோட்டை | | | |
| தவிர) | | | |
| வன்னியர் | | | |

www.tamilarangam.net



| தமிழர் |
|---|
| (கிறித்துவர் |
| உள்ளிட்ட |
| வன்னியக்குலச் |
| சத்திரியர், |
| வன்னியக் |
| கவுண்டர், |
| படையாட்சி, |
| பள்ளி, |
| அக்கினிக்குலச் |
| சத்திரியர்) |
| வேட்டைக்காரர் (தெ) |
| வேட்டுவக் |
| கவுண்டர் |

## தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் பிற இனத்தவர்

| தமிழர் | தெலுங்கர் | கன்னடர் | மலையாளி |
|---|---|---|---|
| அகமுடையார் | ஆயிர வைசியர் | படுகர் | அரையர் |
| (தொழு | போயர் | தாசப் | (நுளையர் — |
| வேளாளர்/ | (திருச்சி, புதுகை, | பலிஞ்சிகா | (குமரி, நெல்லைச் |
| துளுவ வேளாளர் | நீலமலை, சேலம், | (பெரியார், | செங்கோட்டை) |
| உட்பட) | தருமபுரி தவிர) | கோவை, | அரையவதி |
| அகரம் வேளாண் | பெத்த போயர் | நீலமலை) | (குமரி, நெல்லைச் |
| செட்டியார் | (திருச்சி, புதுகை, | தூடேகுலா (தெ) | செங்கோட்டை) |
| அளவர் | தவிர) | கௌடா | செக்காளர் |
| (அழவர்) | செட்டு/செட்டி | (கல்லாளி, | ஈழவதி |
| (குமரி, நெல்லைச் | (பாத்திரச் | அனுப்ப | (குமரி, நெல்லைச் |
| செங்கோட்டை) | செட்டி, | கௌடர், | செங்கோட்டை) |
| அரைச்சக்கரை | வளையல் | அனுப்ப | ஈழவர் |
| வேளாளர் | செட்டி — | வேளாளக் | (குமரி, நெல்லைச் |
| சவளக்காரர் | குமரி, நெல்லைச் | கவுண்டர், | செங்கோட்டை) |
| (குமரி, நெல்லைச் | செங்கோட்டை) | குறும்பக் | எழுத்தச்சர் |
| செங்கோட்டை) | சாக்களர் | கவுண்டர் | (குமரி, நெல்லைச் |
| செட்டி | (முகவை, பசும் | உட்பட) | செங்கோட்டை) |
| (கோட்டாறு | பொன், காம | காணிகா | களரி குருப்பு |
| செட்டி, | ராசர், தஞ்சை, | ஹெக்கடே | (களரிப் |
| ஏழூர் செட்டி, | நாகை, புதுகை, | கப்பேரா | பணிக்கர் — |
| புதுக்கடைச் | திருச்சி, மதுரை, | கன்னட | குமரி, நெல்லைச் |
| செட்டி | திண்டுக்கல், | சைனீகர் | செங்கோட்டை) |
| உட்பட — | நீலமலை தவிர) | (மாநிலம் | கணி |
| குமரி, நெல்லைச் | செள்திரி | முழுதும்) | [(கணிசு) |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| தமிழர் | தெலுங்கர் | கன்னடர் | மலையாளி |
|---|---|---|---|
| செங்கோட்டை) | தொங்க | கன்னடியர் | கணியர் |
| சேர்வை | தாசரி (க) | (மாநிலம் | பணிக்கர்] |
| (திருச்சி, புதுகை | (செங்கை, | முழுதும்) | காவுதியர் |
| தவிர) | திருச்சி, புதுகை, | கன்னடிய | கிருஷ்ண |
| தென்னிந்திய | சென்னை, | நாயுடு | வகைக்காரர் |
| திருச்சபைக் | சேலம் தவிர) | குஞ்சிடிகர் | (குமரி, நெல்லைச் |
| கிறித்துவரான * | தேவாங்கர் (க) | லிங்காயத்து | செங்கோட்டை) |
| தாழ்த்தப்பட் | (சேடர்) | (ஜங்கமா) | இலத்தீன் |
| டோர் | டொம்மர் (மரா) | தொரையர் | கத்தோலிக்கர் |
| தென்னிந்திய | (தஞ்சை, புதுகை, | தொரயர் | (குமரி, நெல்லைச் |
| திருச்சபைக் * | நாகை, வடவார்க் | ஒக்கலிகர் | செங்கோட்டை) |
| கிறித்துவர் | காடு, திருவண் | (காப்பிலியர், | மலையர் (க) |
| (குமரி, நெல்லைச் | ணாமலை தவிர) | காப்பிலிய | மாப்பிள்ளா |
| செங்கோட்டை) | காதிக்காரர் | ஒக்கலிக | பெருங் |
| ஏனாதி | (குமரி) | கவுடர், | கொல்லர் (த) |
| கவுண்டர் | கமல்லா | ஒக்கலிய | (குமரி, நெல்லைச் |
| இடையர் | கங்கவாரு | கவுடர், | செங்கோட்டை) |
| இல்லத்துப் | காண்ட்லா | ஒக்கலிய | புள்ளுவர் |
| பிள்ளை (ம) | கவரா, கவரை, | கவுடா | தோல்கொல்லர் |
| (இல்லுவர், | கவரை வடுகர் | உட்பட) | (குமரி, நெல்லைச் |
| இல்லத்தார்) | (கம்மா, காப்பு, | சாகரா | செங்கோட்டை) |
| கைக்கோலர் | பலிஜா, ரெட்டி | உப்பாரர் | வெளுத்தெடுத்து |
| (செங்குந்தர்) | தவிர) | | நாயர் |
| காலாடி | ஈடிகா | **துளுவர்** | (குமரி, நெல்லைச் |
| (முகவை, பசும் | ஜெட்டி | பில்லவா | செங்கோட்டை) |
| பொன், காம | ஜோகி | மாலே | |
| ராசர், தஞ்சை, | (செங்கை, | | **பிறர்** |
| நாகை, புதுகை, | சென்னை, | | அன்சார் (உ) |
| திருச்சி, மதுரை, | தென்னார்க்காடு, | | பொந்திலி (இ) |
| திண்டுக்கல் | வடவார்க்காடு, | | தெக்காணி |
| தவிர) | திருவண்ணா | | முகவிம் |
| கள்ளர் | மலை தவிர) | | (பட்டாணி |
| (ஈசநாட்டுக் | காலிங்கி (ஒ) | | யர் உட்பட) |
| கள்ளர், | கம்சலா | | டொம்பர் |
| கந்தர்வக் | கொப்பல | | (திருச்சி, புதுகை |
| கோட்டைக் | வேள்மர் | | தவிர) |
| கள்ளர்) | முத்திரியர் | | கார்வி (கொ) |
| (தஞ்சை, நாகை, | முத்துராச்சா | | கத்ரி (மரா) |
| புதுகை தவிர) | முத்துராசா | | குடும்பி (கொ) |
| கூத்தப்பார் | நாய்க்கர் | | (குமரி, நெல்லைச் |
| கள்ளர் | (குமரி, நெல்லைச் | | செங்கோட்டை) |
| (புதுகை, திருச்சி | செங்கோட்டை) | | லம்பாடி |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| தமிழர் | தெலுங்கர் | பிறர் |
|---|---|---|
| தவிர) | ஒட்டர் | பார்ப்பன |
| பிரமலைக் | (தஞ்சை, நாகை, | ரல்லாத |
| கள்ளர் | திருச்சி, புதுகை, | மராட்டியர் |
| (பசும்பொன், | மதுரை, திண்டுக் | (நாமதேவ் |
| காமராசர், | கல் தவிர) | மராட்டியர் |
| முகவை, மதுரை, | கல்லொட்டர் | உட்பட) |
| திண்டுக்கல், | (செங்கை, பசும் | ஒடியர் (ஒ/ம) |
| நாகை தவிர) | பொன், முகவை, | பட்டவாயர் |
| பெரிய சூடியூர்க் | மதுரை, காமராசர், | (சௌ) |
| கள்ளர் | திண்டுக்கல், புதுகை, | ரெட்டி (ஒ) |
| (திருச்சி, புதுகை | திருச்சி, நெல்லை, | (கஞ்சம்) |
| தவிர) | சிதம்பரனார், | பட்டுநூல்காரர் |
| கள்ளர்குலத் | சேலம் தவிர) | (சௌராட்டிரர்) |
| தொண்டைமான் | நெல்லூர்ப் | ஷேக் (உ) |
| கல்வேலிக் | பேட்டை ஒட்டர் | சையது (உ) |
| கவுண்டர் | (வடவார்க்காடு, | யவனர் |
| கம்பர் | திருவண்ணாமலை | |
| கம்மாளர் (தெ/ம) | தவிர) | |
| (தட்டார், | சூரமாரி ஒட்டர் | |
| பொற்கொல்லர், | (சேலம்) | |
| கன்னார், | பாமுலு | |
| கருமார், | பெரிக்கே | |
| கொல்லர், | (பெரிக்கே | |
| தச்சர், | பலிஜா) | |
| கல்தச்சர்) | பூசல(வாடு) | |
| காணியாள | சாதுச்செட்டி | |
| வேளாளர் | (தெலுங்குச் | |
| கற்பூரச் | செட்டி, | |
| செட்டியார் | தெலுங்குப்பட்டிச் | |
| கருணீகர் | செட்டி, | |
| (சீர்கருணீகர், | 24 மனை | |
| சிறீகருணீகர், | தெலுங்குச் | |
| சரடுக் | செட்டி | |
| கருணீகர், | உட்பட) | |
| கைகாட்டிக் | சக்கரவார் | |
| கருணீகர், | (காவதி — | |
| முத்துவழிக் | குமரி, நெல்லைச் | |
| கருணீகர், | செங்கோட்டை) | |
| சோழியக் | சாலிவாகனர் | |
| கணக்கர், | பத்ம சாலியர் | |
| சுண்ணாம்புக் | சவளக்காரர் | |
| கருணீகர்) | ஸ்ரீசாயர் | |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| தமிழர் | தெலுங்கர் |
|---|---|
| காசுக்காரச் செட்டியார் | தெலிகுலா |
| கடசர் | தொகட்டவீரச் சத்திரியர் |
| (பட்டம்கட்டி) | தொழுவ நாயக்கர் |
| கேரள முதலி | உக்கிரக்குலச் சத்திரிய நாயக்கர் |
| கொங்கு வைணவர் | உப்பரர் |
| கொங்கு வேளாளர் (வேளாளக் கவுண்டர், நாட்டுக் கவுண்டர், நரம்புக்கட்டிக் கவுண்டர், திருமுடி வேளாளர், தொண்டு வேளாளர், பாலைக் கவுண்டர், பூசாரிக் கவுண்டர், படைத்தலைக் கவுண்டர், செந்தலைக் கவுண்டர், பவழங்கட்டி வேளாளக் கவுண்டர், பாலை வேளாளக் கவுண்டர், சங்கு வேளாளக் கவுண்டர், இரத்தினகிரிக் கவுண்டர் உட்பட) | உரிக்கார நாயக்கர் |
| கோட்டையர் | வடுக ஆயர் (வடுக இடையர், கொல்லா, ஆஸ்தாந்தர கொல்லா, யாதவர்) |
| குடிக்கார வேளாளர் | வால்மீகி |
| குக வேளாளர் | வெற்றிலைக்கார நாயக்கர் |
| லப்பை (இராவுத்தர், மரக்காயர்) | விசுவகர்மர் (த) |
| மணியக்கார் | விசுவகர்மளா |
| மறவர் (தஞ்சை, நாகை, புதுகை, முகவை, பசும்பொன், காமராசர், நெல்லை, சிதம்பரனார் தவிர) [கருமறவர், ஆப்பன்நாட்டுக் கொண்டையன் கோட்டை மறவர் (முகவை, பசும்பொன், காமராசர், மதுரை, திண்டுக்கல் தவிர)] | விசுவபிராமணர் |
| செம்பிநாட்டு மறவர் (முகவை, பசும்பொன், காமராசர் தவிர) | எருகுலா |
| மூன்றுமண்டை 84 ஊர்ச் சோழிய வேளாளர் | |
| மூப்பன் | |

www.tamilarangam.net



**தமிழர்**

முத்தரையர்
நாடார்
(சாணார்,
கிராமணி
— கிறித்துவர் உட்பட)
நகரம்
நங்குடி வேளாளர்
நாஞ்சில் முதலி
(குமரி, நெல்லைச் செங்கோட்டை)
ஓடர் (ம)
(குமரி, நெல்லைச் செங்கோட்டை)
ஒரத்தநாட்டு பட்டுக்கோட்டை
சீர் வேளாளர்
ஊத்தூர் வளநாட்டு வேளாளர்
பையூர்க்கோட்டை வேளாளர்
பாணர் (ம)
(குமரி, நெல்லைச் செங்கோட்டை
தவிர)
பணிசெய்வோர்
(வீரக்கொடி வேளாளர்
உட்பட)
பன்னிரண்டாம் செட்டியார்
(உத்தம செட்டியார்)
பொடிக்கார வேளாளர்
பூலுவக் கவுண்டர்
பொறையர்
புலவர்
(கோவை, பெரியார்)
பூலுவர்
சாலியர் (ம)
[பட்டுச்சாலியர் (சௌ)
அடவியார் (ம)]
சேனைத்தலைவர்
(சேனைக்குடையார்,
இலைவாணியர்)
சோழிய வேளாளர்
(சோழ வேளாளர்,
வெற்றிலைக்காரர்,
கொடிக்கால்காரர்,
கீரைக்காரர்)
சுந்தரஞ்செட்டி
உடையார்

**தமிழர்**

(பார்கவக்குலம்,
சுருதிமார்,
மலையமார்,
நத்தமார்,
மூப்பனார்,
நைனார்)
உப்பிலியர்
உவச்சர்
ஊராளிக் கவுண்டர்
(திருச்சி, புதுகை தவிர)
ஊருடைய கவுண்டர்
(மதுரை, கோவை, திண்டுக்கல்,
பெரியார், திருச்சி, புதுகை,
சேலம்)
வல்லம்பர்
வர்ணியர்
வாணியச்செட்டி
வயநாட்டுச் செட்டி (ம)
(நீலமலை)
வேடர்
(வேடுவர் —
குமரி, நெல்லைச் செங்கோட்டை
தவிர)
வீரசைவர் (க/தெ)
(குமரி, நெல்லைச் செங்கோட்டை)
வேளாண் செட்டியார்
வேளார்
பிற்படுத்தப்பட்டோரில் கிறித்துவ மதமாறிகள் *
மிகவும் பிற்படுத்தப்பட்டோரிலும், தாழ்த்தப்பட்டோரிலும் கிறித்துவ மதமாறிகள் *

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் பட்டியல்

| தமிழர் | தெலுங்கர் | கன்னடர் | மலையாளி |
|---|---|---|---|
| அம்பலக்காரர் | ஆத்தூர் | குடிதாசரி | |
| (தஞ்சை, திருச்சி, | கிழ்நாட்டுக் | களவாதிலா | |
| நாகை, புதுகை) | குறவர் | போயர் | |
| அம்பலக்காரர் | (சேலம், தென் | | |
| (திருச்சிச் சூரியனூர்) | னார்க்காடு, | | |
| ஆப்பன்நாட்டுக் | முகவை, பசும் | | |
| கொண்டையன் | பொன், காம | | |
| கோட்டை | ராசர்) | | |
| மறவர் | ஆத்தூர் | | |
| (முகவை, பசும் | மேல்நாட்டுக் | | |
| பொன், காம | குறவர் | | |
| ராசர், மதுரை, | (சேலம்) | | |
| திண்டுக்கல்) | பட்டுத்துர்க்கர் | | |
| செட்டிநாட்டு | போயர் | | |
| வலையர் | (திருச்சி, புதுகை, | | |
| (முகவை, பசும் | நீலமலை, சேலம், | | |
| பொன், காமராசர்) | தருமபுரி) | | |
| தேவக்குடி | சி. கே. குறவர் (க) | | |
| தலையாரி | (தென்னார்க்காடு) | | |
| கந்தர்வ | சாக்களர் | | |
| கோட்டைக் | (முகவை, பசும் | | |
| கள்ளர் | பொன், காம | | |
| (தஞ்சை, நாகை, | ராசர், தஞ்சை, | | |
| புதுகை) | புதுகை, நாகை, | | |
| இஞ்சிக் குறவர் | திருச்சி, மதுரை, | | |
| (தஞ்சை, திருச்சி, | திண்டுக்கல், | | |
| நாகை, புதுகை) | நீலமலை) | | |
| காலாடி | சங்கையம்பூதிக் | | |
| (முகவை, பசும் | குறவர் | | |
| பொன், காமராசர், | (வடவார்க்காடு, | | |
| மதுரை, தஞ்சை, | திருவண்ணாமலை) | | |
| நாகை, திருச்சி, | தப்பைக் | | |
| புதுகை, | கொரச்சர் | | |
| திண்டுக்கல்) | (திருச்சி, புதுகை) | | |
| காலக்குறவர் | தப்பைக் குறவர் | | |
| (தஞ்சை, திருச்சி, | (சேலம்) | | |
| நாகை, புதுகை) | தாபி குறவர் | | |
| குறவர் | (தஞ்சை, நாகை, | | |
| (செங்கை, முகவை, | திருச்சி, புதுகை, | | |
| பசும்பொன், காம | வடவார்க்காடு, | | |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| தமிழர் | தெலுங்கர் |
|---|---|
| ராசர், புதுகை, நாகை, தஞ்சை, திருச்சி, நெல்லை, சிதம்பரனார், சென்னை, மதுரை, திண்டுக்கல், நீலமலை) | திருவண்ணாமலை) |
| கூத்தப்பார் கள்ளர் (திருச்சி, புதுகை) | டொம்பர் (திருச்சி, புதுகை) |
| மறவர் (தஞ்சை, முகவை, பசும்பொன், காமராசர், நாகை, புதுகை, நெல்லை, சிதம்பரனார்) | டொம்மர் (மரா) (தஞ்சை, புதுகை, நாகை, வடவார்க்காடு, திருவண்ணாமலை) |
| முத்தழகன்பட்டி (திருச்சி, புதுகை) | தொங்க போயர் |
| நோக்கர் (திருச்சி, புதுகை) | தொங்க தாசரி (க) (செங்கை, திருச்சி, புதுகை, சென்னை, சேலம்) |
| படையாட்சி (தென்னார்க்காட்டு வெள்ளையன்குப்பம், திருச்சித் தென்னூர்) | தொங்கவூர்க் கொரச்சர் |
| பெரிய சூடியூர்க் கள்ளர் (திருச்சி, புதுகை) | கந்தர்வகோட்டைக் குறவர் (தஞ்சை, திருச்சி, புதுகை, நாகை, தென்னார்க்காடு) |
| பிரமலைக் கள்ளர் (பசும்பொன், முகவை, காமராசர், மதுரை, திண்டுக்கல், தஞ்சை, நாகை, புதுகை) | கொர்ரல தொட்ட போயர் ஜோகிகள் (செங்கை, சென்னை, தென்னார்க்காடு, வடவார்க்காடு, திருவண்ணாமலை) |
| புன்னன் வேட்டுவக் கவுண்டர் (திருச்சி, புதுகை) | கல் ஒட்டர் (செங்கை, முகவை, பசும்பொன், காமராசர், மதுரை, திண்டுக்கல், புதுகை, திருச்சி, நெல்லை, சிதம்பரனார், சேலம்) |
| சாம்பவனோடை | கலிஞ்சி தாபி குறவர் (ஒ) (தஞ்சை, நாகை, புதுகை) |
| சேலம் மேல்நாட்டுக் குறவர் (மதுரை, திண்டுக்கல், கோவை, பெரியார், புதுகை, திருச்சி, சேலம், வடவார்க்காடு, திருவண்ணாமலை) | கேப்மாரி (செங்கை, புதுகை, திருச்சி) |
| செம்பிநாட்டு மறவர் (பசும்பொன், காமராசர், முகவை) | மொண்ட கொல்லா (சேலம்) |
| சேர்வை (திருச்சி, புதுகை) | மொண்டக் குறவர் |
| ஊராளிக் கவுண்டர் (திருச்சி, புதுகை) | நெல்லூர்ப்பேட்டை ஒட்டர் (வடவார்க்காடு, திருவண்ணாமலை) |
| வல்லையர் | ஒட்டர் (தஞ்சை, நாகை, திருச்சி, புதுகை, மதுரை, திண்டுக்கல்) |
| | பெத்த போயர் (திருச்சி, புதுகை) |
| | பொன்னைக் குறவர் (வடவார்க்காடு, திருவண்ணாமலை) |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| தமிழர் | தெலுங்கர் |
|---|---|
| (மதுரை, திண்டுக்கல், திருச்சி, பெரியார், கோவை, புதுகை) | சேலம் உப்புக்குறவர் |
| வேட்டைக்காரர் (தெ புதுகை) | சக்கரைத்தம்மாடைக் குறவர் (வடவார்க்காடு, திருவண்ணா மலை) |
| வேட்டுவக் கவுண்டர் (திருச்சி, புதுகை) | சாரங்கப்பள்ளிக் குறவர் (சேலம்) |
| | சூரமாரி ஒட்டர் (சேலம்) |
| | தெலுங்கப்பட்டிச் செட்டி (திருச்சி, புதுகை) |
| | தொட்டிய நாயக்கர் (பசும்பொன், காமராசர், முகவை, செங்கை, தஞ்சை, நாகை, திருச்சி, புதுகை, நெல்லை, சிதம்பரனார், சேலம், வடவார்க்காடு, திருவண்ணாமலை, கோவை, பெரியார்) |
| | தோகைமலைக் குறவர் அல்லது கேப்மாரிகள் (திருச்சி, புதுகை) |
| | உப்புக்குறவர் (செட்டிப்பள்ளிக் குறவர்) (தஞ்சை, நாகை, புதுகை, மதுரை, திண்டுக்கல், வடவார்க்காடு, திருவண்ணாமலை) |
| | வடுவார்பட்டிக் கொரச்சர் (மதுரை, திண்டுக்கல், பசும்பொன், முகவை, காமராசர், நெல்லை, சிதம்பரனார், திருச்சி, புதுகை) |
| | வரகனேரிக் குறவர் (திருச்சி, புதுகை) |
| | வாயல்பாடி அல்லது நாவல்பேட்டைக் கொரச்சர் |
| | வேட்டைக் குறவர் (சேலம்) |

அடைப்புக்குள் இருப்பன இன்ன இனத்தாருள்ளும் இச் சாதி உண்டு எனக் காட்டுவன:

தெ =தெலுங்கர் க=கன்னடர் ம=மலையாளி து =துளுவர்;
கொ =கொங்கணி மரா = மராத்தி ஒ =ஒரியர் உ=உருது
இ=இந்துஸ்தானி கோ =கோண்டு மா =மார்வாடி
சௌ=சௌராட்டிரர்

* தெலுங்கரும் கன்னடரும் மலையாளிகளும் துளுவரும் கொங்கணியரும் கூட இக் கிறித்துவரில் அடங்குவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்நாட்டின் மக்கள்தொகையில் 85% ஆகிய தமிழரிட மிருந்து தண்டிய வரிப்பணத்தில் பெரும்பகுதியைச் சலுகைகள் என்னும் பெயரில் வந்தேறிகளே வாரிக்கொண்டு போவது இத னால் விளங்கவில்லையா? இந்த வந்தேறி ஒநாய்களுக்காகத் தமிழர் ஏன் முள்முடி சூடிக்கொண்டு சவுக்கடிபட்டுக் குறுக் கையை (சிலுவையை)ச் சுமக்க வேண்டும்?

இதனால், சாதிப் பெயரில் சலுகைகளையும் அரிய வேலை வாய்ப்புகளையும் தட்டிச்செல்லும் கன்னடத் தெலுங்குச் சூழ்ச்சி களைத் தமிழர்கள் முறியடிக்க வேண்டும். சாதிச் சலுகைகளை யும் இடவொதுக்கீட்டையும் தொல்தமிழர்மீது வந்தேறி நலன் கள் திணித்த பிறகும், சாதிகள் குலையவில்லை; மாறாக, இன் னும் நன்றாக இறுகியுள்ளன. அத்தகைய அணுகலும் கொள்கை யும் இன்று வாலையே தலை விழுங்கும் நச்சுவட்டமாகியுள்ள மையால், அதை யாரால்லும் தவிர்க்க முடியாது. இதனால், தமிழகத்திற்குள்ளேயே அயன்மைப்பட்டுச் சுரண்டப்பட்டுவரும் தமிழ்ச் சாதிகளுக்கு **மட்டும்** — முதலியாரும் பிற முன்னேறிய சாதியினரும் உள்ளிட்ட தமிழர்க்கு **மட்டும்** — அச் சலுகைகளும் இடவொதுக்கீடும் வழங்கப்பட வேண்டுமெனக் கேட்பது மிகச் சரியானதாகும். தனித்தமிழர் கழகம் இக் கோரிக்கையை ஏற் கெனவே எழுப்பியுள்ளது.

## சாதிப் பூசலை இனப் பூசலாக்குக!

தமிழகத்தின் நாட்டுப்புறங்களில், ஒரு புள்ளியிய முறைமை யைக் (statistical regularity) காணலாம். சென்ற ஐம்பதாண்டு களில் தமிழகத்தில் மூண்ட பெரிய சாதிக் கலவரங்களையும் சாதிக் கொடுமைகளைப் பற்றிய செய்திகளையும் தொகுத்து ஆய்ந்தால், வந்தேறிய தெலுங்கரில் நாயுடுக்களும் இரெட்டி களும் எங்கெல்லாம் மிகுந்து நிலைவுடையார்களாக இருக்கின் றனரோ, அந்த ஊர்களிலும் சிற்றூர்களிலுமே தொல்தமிழர் மீதான சாதிக் கொடுமையும், தீண்டாமை வழக்கமும், சாதி வன்முறைகளும் மிகப் பரவலாகவும் அழுத்தமாகவும் இருப்பது தெரியவரும்.[129] தமிழரில் முன்பு போர்த்தொழில் பழகிவந்த வன்னியர், முக்குலத்தோர் ஆகியோர் மட்டும் இதற்கு விலக் காவர். தமிழ்ச் சாதிகளுக்கு இடையிலான சாதிப் பூசல்களின் பின்னால் ஒளிந்துகிடப்பது அவ் வந்தேறிகளின் தூண்டுதல் களேயாகும். தமிழ்த் தேசிய ஓர்மை ஆல்போல் வளர்ந்தாலன்றி இச் சூழலிலிருந்து விடுபடும் வழியேயில்லை.

www.tamilarangam.net



1995ஆம் ஆண்டு முதல் தமிழக அரசின் தூண்டுதலினால் தென்தமிழ்நாட்டில் தமிழ்ச் சாதிகளுக்கிடையில் வெடித்த சாதிச் சண்டைகளால், தமிழர் பலர் தத்தம் நிலபுலங்களை மலையாளிகளிடம் விற்றுவிட்டு ஊரைவிட்டே பெயரும் அவலநிலை தோன்றியுள்ளது. இத்தகைய சாதிச் சண்டைகளால் மலையாளி வந்தேறிகளே நன்மைபெற்றுத் தென்மாவட்டங்களில் தமிழரின் மண்ணை மெல்லக் கவர்ந்துவருகின்றனர். இதனால், சாதிச் சண்டைகளை இனச் சண்டைகளாகத் திரித்தாலன்றித் தமிழரின் மண்ணைக் காக்க முடியாது.

ஐதரலிக்கும் திப்புசுல்தானுக்கும் அஞ்சி மைசூர்ப் பகுதியை விட்டுத் தமிழகத்திற்கு அடைக்கலம் தேடி ஓடிவந்த படுகர் என்னும் வடுக வந்தேறிகள், நீலமலை மாவட்டத்தில் வளமான வாழ்க்கையை அமைத்துக்கொண்டு தொல்தமிழரையே மண்ணிலிருந்து பிடுங்கி எறிந்தனர். போதாதென்று, இன்று நீலமலைப் பகுதியையே தம்வயமாக்கிக்கொண்டு, தமிழரையே 'ஒலையர்' (பறையர்) என இழித்துரைத்து, அத் தமிழரெல்லாம் நீலமலையைவிட்டு ஓட வேண்டும் என ஓலமிடத் தொடங்கியுள்ளனர். படுகரைப் பழங்குடி வகுப்பினர் (Scheduled Tribes) பட்டியலில் சேர்க்கச் சொல்லிப் போராடத் தொடங்கியுள்ளனர்.[130] இப் படுகர்களுக்குத் தமிழரல்லாதாரின் திராவிடக் கட்சிகள் எல்லாம் வரிந்துகட்டிக்கொண்டு முட்டுக்கொடுத்துவருகின்றன. படுகருக்கு இருக்கும் அரசியல் பிடிப்புகளால் அவர்கள் விரைவில் அப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவர் எனத் தெரிகின்றது. நிலபுலங்களோடு வளமாக வாழ்ந்துவரும் படுகர், பழங்குடியினர் பட்டியலில் தங்களைச் சேர்க்கச் சொல்லிக் கேட்பதன் உள்நோக்கம் என்ன? பழங்குடிகளின் நிலங்களைச் சட்டப்படி பிறர் வாங்கவோ விற்கவோ முடியாது. இவ்வாறு பழங்குடியினர் என்னும் முத்திரையைப் பெற்றுவிட்டால், நீலமலைப் பகுதியையே சட்டப்படி முற்றிலும் தம்வயமாக்கிக் கொண்டு காலப்போக்கில் தமிழகத்திலிருந்து அதைப் பிரித்துக் கொண்டு போய்க் கருநாடகத்துடன் இணைந்துகொள்ளலாம் என்னும் சூழ்ச்சியே அக் கோரிக்கையின் உள்ளீடு. தமிழரின் மண்ணைப் பறிக்கும் தீய நோக்கமுடைய அப் படுகரின் குறும்பு, வந்தேறிகள் தமிழர்மீது திணித்துள்ள சாதிவழிச் சலுகை–இடவொதுக்கீட்டு அரசியலால் வந்த வினையாகும்.

இன்று சண்டை போட்டுக்கொண்டிருக்கும் தமிழ்ச் சாதிகளிடையே உள்ள சாதி அமைப்புகளும், அண்மையில் தோன்றியுள்ள சாதிக் கட்சிகளும், இந்தி(ய) தேசியத்தையும் திராவிடத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேசியத்தையும் இந்துவியத்தையும் பற்றிப் பேசாமல், தமிழ்த் தேசியத்தைப் பற்றியே பேசிவருவது ஒரு மெய்ம்மையாகவும் புதிராகவும் முரணணியாகவும் உள்ளது. ஆயினும், சாதிவெறி யிலிருந்து தமிழரை மீட்கவல்ல உள்ளாற்றல் தமிழ்த் தேசியத் திற்கு உண்டு என்பதையே இத்தகைய புதிய போங்குகள் பறை சாற்றுகின்றன.

## கான மயிலாட...

எண்பதுகளின் பிற்பகுதியில் வலுப்பெற்ற தமிழ்த் தேசியக் கருத்தியலின் தாக்கத்தால் தொண்ணூறுகளின் தொடக்கத்தில் தமிழ் — தமிழர் — தமிழ்த் தேசியம் என்னும் பெயரொட்டி களுடன் சில அரசியல் அமைப்புகளும் ஏடுகளும் தமிழகத்தில் தோன்றலாயின. ஆனால், அவை யாவும் பழைய திராவிடக் கொள்கையியல் என்னும் தீய கருத்தியலிலிருந்து விடுபெறாமல், அதனுடனான கொப்பூழை மட்டும் விடமாட்டேனென இறுகப் பற்றி நிற்கின்றன. இத்தகைய இரங்கத்தக்க கோலங்களுக்கு அத் திரட்சிகள் யாவும் தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் முத லான வந்தேறிகளைத் தத்தம் மடியில் வாரிக் கட்டிக்கொண்டு நிற்பதே காரணமாகும். தமிழ்த் தேசிய நிலைபாட்டின் ஞாயங் களையும் தேவைகளையும் ஓரளவு உணர்ந்தாலும், அவர்களுக்கு அவ்வப்போது படியளக்கும் வந்தேறி நலன்களை எதிர்க்கவோ பகைக்கவோ இயலாத நிலையில், இக் குழுக்கள் யாவும் காலத் தால் அவ் வந்தேறி நலன்களுக்குக் கேடயங்களாகித் தமிழரின நலன்களுக்கு எதிராகத் திரும்பியே ஆகவேண்டும்.

தேசிய இனம் இன்னது என்பதைப்பற்றி உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறை உண்டு. ஆங்கிலத்தைக் கரைத்துக் குடித்துவிட்டு, அதில் பட்டங்கள் பல பெற்றுக் குவித்துவிட்டு, வாயில் ஆங்கிலத்தைத் தவிர வேறு மொழி எதையும் உதிர்க் காதவனாகவும் தமிழன் ஒருவன் இருக்கலாம். உள்ளத்தாலும் எண்ணத்தாலும் அவன் ஆங்கிலேயனாயினும், புறத்தால் அவன் என்றும் ஆங்கிலேயன் ஆகிவிட மாட்டான். தெனாலிராமன் செய்ததைப் போல், கறுப்புநாயைத் தேய்த்துத் தேய்த்துக் கழுவி னாலும்கூட அது வெள்ளை நாயாகிவிடாது. அதே போல், ஆங்கிலப் புலமைபெற்ற அவன் ஆங்கிலேய இனத்தவனாகிவிட மாட்டான். அவனை எந்த ஆங்கிலேயனும் தம்மைப் போல் ஓர் ஆங்கிலேயன் என ஏற்றுக்கொள்ள மாட்டான். பிரிட்டன் என்னும் கூட்டாட்சியில் வந்தொதுங்கிய அச் கறுப்பன் பிரித்

www.tamilarangam.net



தானியக் குடியுரிமை வழங்கப்பெற்று அந் நாட்டுக் குடிமகனா யினும்கூட, அவனை ஓர் ஆங்கிலேயன் என யாரும் சொல்லத் துணியார்.

வரலாற்று அடிப்படையில் வந்த நிலையான தனி வாழ் வியலையும் தனி வரலாற்றையும் தனித்த மொழியையும் அம் மொழிவழியில் வந்த தனியொரு பண்பாட்டையும் தனி இனம் என்னும் உளத்தியலையும் கொண்ட ஒரு மக்கள்தொழுதியே தேசிய இனம். இந்த வரையறை சில நாடுகளிலும் சூழலிலும் கேள்விக்குரியதாயினும், பொதுவாக மக்கள் இனங்கள் பல வற்றிற்குப் பொருந்தும். தமிழருக்கு அது மிக நன்றாகவே பொருந்திவருகின்றது. இந் நிலையில், தமிழர் யார் என அறியா மலேயே தமிழ்த் தேசியத்தோடு உடன்படும் சிலர், தம்மைத் தாமே குழப்பிக் கொள்வதுடன், பிறரையும் குழப்பத் தலைப்பட் டுள்ளனர். ஒரு கால், தமிழகத்திலுள்ள 'தெலுங்கர் எல்லாருமே தமிழர்தாம்' எனத் திருவாய்மலர்ந்தருளிய இவர்கள், அடுத்த நொடியே இன்னார் 'தெலுங்கை வீட்டுமொழியாகக் கொண்ட தமிழர்' என்றெல்லாம் விளக்கத் தலைப்பட்டனர்! இவ்வாறா யின், கரு நாடகத்தில் தமிழர் யாருமில்லை என்றாகும்! கருநாட கத்தில் வாழும் தமிழரெல்லாம் 'வீட்டில் தமிழ் பேசும் கன்னடர்' என்றாவார்! ஈழத்து எல்லாளன் பிரபாகரனோ, 'வீட்டில் தமிழ் பேசும் சிங்களர்' ஆவார்! அதனால், இலங்கையில் தமிழ ரினம் என்றொன்றில்லை என்றாகும்! இவர்களிடம் குழப்பம் வீடுகட்டிச் சிலம்பமாடுவதைப் பாருங்கள்!

தமிழரின் மண்ணும் பெருவளங்களும் தொழிலும் பெரு வுடைமைகளும் தமிழகத்தின் சிறுபான்மைத் தேசிய இனத்தவ ரான தெலுங்கர் முதலானவரிடமே உள்ளன என்கையில், அவ் வந்தேறிகளில் உயர்சாதியினரிடமும் மேட்டுக்குடியினரிடமும் அவை யாவும் உள்ளனவென்றே பொருள்படும். இவ்வாறு சொல்கையில், அக் கூற்றிலடங்கிய உண்மையை மறைப்பதற் கென்றே, தெலுங்கரில் அடிமட்டத்திலிருக்கும் உழைக்கும் சாதி யினரான சக்கிலியரை நோக்கியே சொல்வதாகச் சொல்லி நாம் சொல்லாத இல்லாத பொருளை நம் தலைமேல் கட்டி, வண் டிக்கு முன்னே மாட்டைத் திருப்பிக்கட்டப் பார்க்கும் அத் தகைய 'தமிழ்த் தேசியர்கள்', தமிழருக்காக நிற்கின்றனரா, வந் தேறிகள் பக்கம் நிற்கின்றனரா என்பதை இந்தத் தன்முரண் பாடே தோலுரித்துக் காட்டிவிடும். தமிழ்நாட்டுத் தெலுங்கர் கள் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் குடியேறித் தமிழராகவே ஆகிவிட்டவர்கள் என்பதும் சிலரது வழக்குரை.

www.tamilarangam.net



ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு வந்தவரெல்லாம் தமிழராகிவிட்டனரெனின், இவர்கள் சொல்லும் 'ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வந்த ஆரியர்' என்பாரை மட்டும் இவர்கள் 'இந்தி'ய ராகவோ தமிழராகவோ ஏற்க மறுப்பானேன்?

தமிழ்நாட்டுத் தெலுங்கர்கள் தங்களின் மொழியை மறந்துவிட்டனரெனச் சிலர் கூறுவர். ஆனால், மொழியை மறந்தவர்களும் தங்களின் இனத்தையோ இனநலன்களையோ மறக்கவில்லையே! நாயுடுச் சாதிச் சங்கத் தலைவரும் தமிழ்நாட்டில் இன்னொரு தெலுங்கு தேசத்தை அமைக்கப் பாடாற்றிவருபவருமான கெங்குசாமி நாயுடு, 1996ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தம் சாதியினரான வை. கோபால்சாமிக்கு ஆதரவு வழங்கக் கருதி வந்த நிலையில், கலைஞர் கருணாநிதி தமது திருமகனான மு. க. இசுடாலினை கெங்குசாமி நாயுடுவிடம் தூது விடுத்தார். "நாங்கள் ஆட்சிக்கு வந்தால், உங்களின் குறைகள் உடனே கவனிக்கப்படும்" என அவர் உறுதிமொழி தந்தார். இதனை **நக்கீரன்** ஏடு அம்பலப்படுத்தியது.[131] கெங்குசாமி நாயுடுவின் தலைமையிலான தெலுங்கர் கூட்டமைப்பு தமிழகத்தில் 102 சட்டப் பேரவைத் தொகுதிகளில் தி. மு. க. கூட்டணியையும், 50 இடங்களில் ம. தி. மு. க-இடது பொதுவுடைமைக் கட்சிகளின் நாயுடு கூட்டணிக்கும் ஆதரவு வழங்க அதன் பின் முடிவு செய்தது.[132] ஆகவே, தெலுங்கை மறந்த கருணாநிதி இங்குத் தன் இனத்தை மறந்துவிட்டாரா என்ன? தமிழகத்தில் ஒரு தெலுங்கு தேசத்தை அமைக்கத் துணைநிற்பேன் என்று தானே அவர் தந்த உறுதிமொழி இருந்திருக்க வேண்டும்? அதே போல், 1996 தேர்தலில் தம் இனத்தவரான கருணாநிதியை ஆதரிப்பதாகத் தமிழ்நாட்டுத் தெலுங்கர் முன்னணியும் அறிவித்தது.[133]

அதனால்தானே தான் மீண்டும் ஆட்சிக்கட்டிலேறிய நாற்பது நாட்களுக்குள் தமிழ்க் கழகம் (சங்கம்) வளர்த்த மதுரை மாவட்டத்தை மீண்டும் உடைத்துத் திண்டுக்கல்லைத் தலைநகரராக வைத்து மன்னன் திருமலை நாயக்கன் என்னும் தெலுங்கன் பெயரைச் சூட்டி மகிழ்ந்தார் கருணாநிதி? யார் அந்த திருமலை நாயக்கன்? ஒரு தமிழ்ப் புலவர் அவன்மேல் இயற்றிய நூலைப் படிக்கக் கேட்டு, அது விளங்காமல் "அரவம் அத்வானம்" எனத் தமிழையே பழித்தவனன்றோ அந்த வந்தேறி ஆண்டை மகன்? அன்று திருநெல்வேலி மாவட்டத்தை உடைத்துத் தெலுங்குக் கொள்ளைக்காரன் கட்டபொம்முவின் பெயரில் புதிய மாவட்டத்தை அமைத்தபோது வாய்செத்துக் கிடந்த தமிழர்கள், இன்று மட்டும் என்ன செய்துவிடப் போகின்றனர் என்ற வந்தேறிச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செருக்குத்தானே தமிழரின் மண்ணுரிமைக்கு அவர் தொடர்ந்து தீமை செய்யத் துணிவதன் காரணம்? நாற்காலிக்காக தில்லியின் சின்னஞ்சிறு சலசலப்புகளுக்கு எல்லாம் ஆடி அரண்டு போகும் கருணாநிதிக்குத் தமிழரின் மண்ணுரிமையை நீரட்டித் தருவதில் மட்டும் ஒரு தனித் துணிச்சல்! வந்தேறித் தெலுங்கருக்குத் தந்திட்ட தேர்தல் உறுதிமொழியை ஆட்சிக்கு வந்தவுடனேயே நிறைவேற்றிவிட்ட பெருமை வேறு அக் கலைஞருக்கு!

இக் கூத்துக்கு இடையில் இன்னொரு கூத்து! நாமக்கல்லைத் தலைநகராகக் கொண்டு இராசாசி மாவட்டம் என்னும் புதிய மாவட்டத்தையும் அமைத்தார் கருணாநிதி. தமிழ்ப் பார்ப்பனரான இராசாசியின் பெயரில் மட்டும் மாவட்டம் கூடாது என முந்திக்கொண்டு எதிர்க்க முற்பட்ட திராவிடக் கழகத்தின் கி. வீரமணி,[134] தெலுங்கரான திருமலை நாயக்கனின் பெயரிலும், கட்டபொம்மு நாயக்கனின் பெயரிலும் மாவட்டங்களை அமைத்ததைப்பற்றி மட்டும் மூச்சு விடவில்லை! அவ் வீரமணியின் இனத்தார் அவர்களன்றோ? திராவிட செப்படி வித்தையைப் பாரீர்!

ஆலின்மேற் புல்லுருவி என்பது ஒரு சொலவடை. விழுதூன்றிப் படரும் ஆலமரம் எளிதில் பட்டுப்போகாது. அதன் மேலும்கூடப் படரவல்ல ஒட்டுண்ணிச் செடியான புல்லுருவி அந்த ஆலமரத்தையும்கூடப் பட்டுப்போகச் செய்யும். அதே போல், இன்று தமிழிளைஞரை ஆட்கொண்டுவரும் தமிழ்த் தேசிய ஓர்மையை அணைத்துக் கெடுக்கும் தீயநோக்குடன் போலிகள் சிலர் புறப்பட்டு, சந்தையில் கடைவிரித்துள்ளனர். ஆனால், இடையில் எங்கிருந்து வந்தாரோ அந்த நகைமுகனார்! அவர் எடுத்திட்ட தெலுங்கர் எதிர்ப்பு நிலை, இதுவரை எந்தத் தமிழ் அரசியலாரும் எடுக்கத் துணியாத மிகத் துணிச்சலான நிலைபாடானது. அவரது நிலை, எல்லாவற்றையும் குழப்பி, 'தமிழ்த் தேசியர்' எனப் போலிக் கடைவிரித்தவரின் பிழைப்பில் எல்லாம் மண்ணை வாரிப் போட்டுவிட்டது! அப் போலிகளின் நாடி படபடவென முரசுகொட்ட, கூட்டலும் கழித்தலும் சடுதியில் முடிந்துபோயின. தமிழரையும் தமிழரின் இன நலன்களையும் கண்போல் காப்பதைப் பார்க்கிலும், கன்னடத் தெலுங்கர் நலன்களையும் அவர்தம் திராவிடக் கருத்தியலையும் புரப்பதுடன் நில்லாது, அவற்றின் அடியாட்களாகவும் அச் சான்றோர் செயல்பட்டுவருவதை அது நன்கு அடையாளம் காட்டியது.

www.tamilarangam.net



தமிழைப் பழித்த திருமலை நாயக்கனின் பெயரில் கருணா நிதி ஒரு தனி மாவட்டத்தை அமைத்தபோது இவர்கள் வாய் செத்துக் கிடந்தனர். அரக்கி செயலலிதாவின் ஆட்சியின் அறுதிக்காலத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய தெலுங்கர்கள் கூடிக் கூச்சலிட்டுத் தெலுங்குவெறியன் திருமலை நாயக்கனின் சிலையைத் தமிழ் வளர்த்த மதுரையில் நிறுவியபோது வாய் பொத்திக் கிடந்த இப் போலித் தமிழ்த் தேசியர்கள், வான்புகழ் வள்ளுவரின் சிலையைத் தமிழர் இழந்த ஊரான பெங்களூரில் திறக்கவிடாது கன்னட இனவெறியர் மூடிவைத்துள்ள அவ லத்தை எங்கே ஏறெடுத்துப் பார்க்கப் போகின்றனர்? தமிழ கத்தில் தெலுங்கர் முதலான திராவிடரின் நலன்களைத் தங் களின் சிறகுகளை விரித்து மூடிமறைத்துக் காக்கத் துடிக்கும் 'தமிழ் — தமிழர்' எனப் பேசும் குழுக்களின் தலையாய நோக் கம், தமிழரின் தேசிய நலன்களைக் காப்பதன்று என்பதையே இவை காட்டுகின்றன.

ஒன்று மட்டும் உறுதி. தமிழக விடுதலைக் கருத்து கடந்த பத்தாண்டுகளாக நன்கு கால்கொண்டு வருவதைத் தெளிவாகப் பார்க்க முடிகின்றது. இக் கருநிலை முற்றிப் பெருவலி வரப் போவது திண்ணம். அதற்கு மருத்துவம் பார்க்கவல்ல நல்ல மருத்துவச்சியாக இளம்தமிழ்த் தலைமுறை உருத்திரள்வதைத் தமிழரினத்தின் அகப்பகையாலோ புறப்பகையாலோ இனி மேல் தடுத்து நிறுத்திவிட முடியாது. அடுத்து வரவிருக்கும் வரலாறு, இதைக் கட்டாயம் மெய்ப்பிக்கத்தான் போகின்றது. குமுக அறிவியலார் இதைக் காணத் தவறமாட்டார்கள் என நம்புவோமாக!

## சரியாகப் புரிந்துகொள்க!

தமிழ்த் தேசியக் கொள்கையின் தாழி எவ்வப்போது உடைந் தது என்னும் வரலாற்றையும், தமிழரல்லாதார் தமிழரினத்தின் மீது சுமத்திய திராவிடக் கொள்கையைச் சுமந்ததனால் வந்த வினையையும் சுட்டிக்காட்டுவதே இந் நூலின் நோக்கம். தமிழ ரினத்தை அணைப்பது போல் கெடுக்கின்ற மாற்றினத்தாரும் தமிழரில் உதிரிகளும் தரகர்களும் இக் கருத்துகளைக் கொச் சைப்படுத்தித் திரித்துப் புரட்டலாம். தமிழ்த் தேசிய இயக்கம் தன்னுடைய தாக்குதலுக்குக் குறியாகக் கொள்ளவேண்டிய தில்லி வல்லரசைப்பற்றி இஃது அவ்வளவாகப் பேசவில்லையே என்றும் குறைகூறலாம்.

www.tamilarangam.net



கொடுஞ்சிறைக்குள் ஓர் அறையில் தமிழன் அடைபட்டிருக்கின்றான். அச் சிறைக்குள்ளும் அவனது கைகால்கள் தளையிடப்பட்டுள்ளன. இந் நிலையில், அவனைப் பிணைத்துள்ள இரும்புத்தளைகளே திராவிட மாயையாகும். அந்தத் தமிழன் அடைபட்டிருக்கும் சிறையே இந்தி(ய)ச் சிறை. இந்தி(ய)ச் சிறையிலிருந்து தமிழன் விடுதலை பெற வேண்டுமாயின், அவனது கைகால்களைப் பிணைத்துள்ள திராவிடத் தளையை முதலில் அவன் அறுத்தெறிய வேண்டுமன்றோ?

தமிழரினம் உலகாண்ட இனம் என்பது 'இந்தி'யனுக்குத் தெரியும். நேற்று வரை இந்தியா என்றோர் ஆட்சியும் அரசும் இருந்ததில்லை. அதனால், 'இந்தி'யர் தமிழரைப் பிடித்தாண்டதும் இல்லை. ஆகவே, ஒரு நீண்ட அரசியல் பொருளியல் விடுதலைப் போராட்டத்தின் வாயிலாக இந்தி(ய)ச் சிறையிலிருந்து தமிழரால் விடுதலை பெற்றுவிட முடியும். அஃது அரசியல் விடுதலைப் போர். ஊன்றிப் போரிட்டால், அந்த இந்தி(ய)ச் சிறையிலிருந்து தமிழரினம் விடுதலை பெற்றுவிட முடியும். ஆனால், அதற்கடுத்த போர், மண்மீட்புப் போர். திராவிட வந்தேறிகளிடமிருந்து தாம் இழந்த மண்ணை மீட்கத் தமிழர் நடாத்தும் அடிப்படைப் போராக அப் போர் இருக்கும். மண் விடுதலைக்கான அப் போரே அறுதிப் போர். அந்த அறுதிப் போரின் அளவைகளையும் கடுமைகளையும் வீச்சுக்களையும் காலம்தான் முடிவு செய்ய வேண்டும்.

வேற்றுத் தேசிய இனத்தவர்கள் வந்தேறிகளாக வந்து தமிழகத்திலுள்ள காணிகளையும் கழனிகளையும் நிலையிருப்புகளையும் நிலைச்சொத்துகளையும் வாங்குவதையும், வாங்கிக் குவிப்பதையும் மேன்மேலும் பெருமளவில் வந்து குடியேறுவதையும் தடுத்து நிறுத்துவதே நம்முடைய உடனடிக் கடமை.

இத்தகைய குடியேறலைத் தடுப்பது, தேசிய இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் முற்றுவதைத் தடுக்கவும் தவிர்க்கவும் உதவும். இத் தேசிய இன முரண்பாடுகளைப் பயன்படுத்தி, முதலாளிய அணியினரும் பிற்போக்கரும் தொழில் நகரங்களிலுள்ள குடியாட்சி இயக்கங்களையும் மரபுகளையும் குலைப்பதைத் தடுக்க வேண்டுமாயின், தமிழரல்லாதோரின் குடிபெயர்ச்சிகளையும் குடியேற்றங்களையும் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

கன்னடர்கள், தமிழையும் தமிழரையும் எதிர்க்கும் அளவுக்கு மார்வாடிகள் முதலான வடவரை எதிர்ப்பதில்லை. மலை

www.tamilarangam.net



யாளிகளின் கதையும் அஃதேயாகும். தெலுங்கரும்கூட அவ் வடவரை எதிர்ப்பதோ பகைப்பதோ இல்லை. தமிழையும் தமிழரையும் மட்டுமே அவர்கள் வெறுக்கின்றனர். தங்களின் சொந்தச் சுரண்டலையும் மேட்டிமையையும் மறைப்பதற்காக வென்றே தமிழகத்திலுள்ள தெலுங்கர்கள் மலையாளிகளை நோக்கி மட்டும் தமிழரை அவ்வப்போது கிளப்பிவிடுவதுண்டு. ஆய்ந்து பார்த்தால், தெலுங்கர், மலையாளிகள், கன்னடர் ஆகி யோரின் தேசிய உணர்வுகள் இந்தி-இந்து வல்லரசியத்திற்கு என்றுமே எதிரானவையல்ல. தமிழுக்கும் தமிழருக்கும் தமிழ ரினத்திற்கும் எதிரானவையாகவே அவர்களின் தேசிய இன உணர்வுகள் இருப்பதுதான் பச்சை உண்மை. தமிழையும் தமிழ ரையும் அவர்கள் வெறுக்கின்ற அளவையும், அதன் வீச்சையும், தமிழகத்திற்கு அப்பால் அவர்களுடன் வாழ்ந்து பார்த்தால் தான் தெரியும். இதனால், தனிநாட்டுரிமைக்காக இவர்க ளுடன் சேர்ந்து போராடுவோம் என்பது வெற்று ஏமாற்று ஆகும்.

தமிழுக்கும் தமிழருக்கும் எதிர்ப்பான காழ்ப்பும் கசப்பும் பகையும் திராவிடரில் — குறிப்பாகக் கன்னடரின் — நாடி நரம்பெல்லாம் புரையோடிக் கிடக்கின்றது. பெரும் வெறி கொண்டு தமிழையும் தமிழரையும் பழிப்பதும் கடிப்பதுமே இன்றைய கருநாடக அரசியல்! அது, சாளுக்கியர்கள் பழைய தமிழ்ப் பேரரசுகளிடம் காட்டிய பகைமையின் வரலாற்றுத் தொடர்ச்சி போல் தெரிகின்றது. கன்னடரின் தமிழெதிர்ப்பும் தமிழரின எதிர்ப்பும் புரையோடிய ஓர் உளநோயாகும்.

இன்று அந் நோய் முற்றித் தமிழுக்கும் தமிழருக்கும் தீமை செய்வதில் இன்பம் காணும் (sadistic) கொடிய உளநிலையாக முற்றியுள்ளது. குருதிக்கொடைஞரிடமிருந்து அரத்தத்தைப் பெறுவது என்னும் சாக்கில் தமிழ்நாட்டிலிருந்து பெங்களூருக்கு ஆசைகாட்டிக் கொணரப்பட்ட ஏழை பாழைத் தமிழருக்குத் தெரியாமலேயே, அவர்தம் சிறுநீரகங்களைப் பெங்களூர் மருத் துவ மனைகளில் அறுத்தெடுத்து, அவற்றைக் கள்ளத்தனமாக ஏற்றுமதி செய்துவந்த கொடுமை 1995 சனவரி இறுதியில்தான் அம்பலமானது. அவ்வாறு வஞ்சிக்கப்பட்டவரில் பெரும்பான் மையர் 20–35 ஆண்டு அகவைக்குட்பட்டவர்கள்! இத்தகைய கொடுமை ஒரு தற்செயல் நிகழ்வு என்பதைவிட, தமிழுக்கும் தமிழருக்கும் எதிராகக் கன்னடரிடம் பன்னூறு ஆண்டுகளாக வளர்த்துவிடப்பட்ட இனப்பகையின் அளவையியல் எல்லை யென்றே சொல்ல வேண்டும்.

www.tamilarangam.net



தெலுங்கர்களும் மலையாளிகளும் கடந்த எட்டு பத்தாண்டு களில் தனித் தேசிய இனங்களென நன்கு ஒன்றுபட்டாகிவிட் டனர். பழங்குடிகளிடம் காணும் குல ஒற்றுமைக்கு நிகராக மலையாளிகளிடையேயும் வங்காளியர்களிடையேயும் இறுக்க மான, கமுக்கமான இனவொற்றுமை உள்ளதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இவ்வாறு 'ஆழப் புரையோடிய தேசிய இன ஒற்றுமையைக்கொண்ட மலையாளிகளும் வங்காளி களுமே செங்கொடியைக் கையில் பிடித்துக்கொண்டு 'உலகம்', 'பாரதம்' என்னும் பொய்க்கோலங்களை எடுத்து அகலப் பரந்து விரிந்த மனப்பான்மையைக் கொண்டவரைப் போல் நடித்துக் கெடுக்கின்றனர்; பிறரையும் கெடுக்கப் பார்க்கின்றனர். கன்ன டர்களும் பெருமளவுக்கு ஒன்றுபட்டுவிட்டனர். அத்தகைய தேசிய இன உணர்ச்சியையும், இன ஒற்றுமையையும் பெற வேண்டிய கடைசி இனமாகத் தமிழினம் இருக்கப்போவதும் ஒரு வரலாற்றுப் புதிர்தான்! தமிழினத்தின் தற்காப்புக்கும் வருங் காலத்துக்கும் இந்த இனவுணர்வு இன்றியமையாதது.

'திராவிடம்' என்னும் பெயர்ப்பலகையை மாட்டிக்கொண்டு தமிழரின் இனமானத்தையும் இனவிடுதலையையும் ஆதரிப்ப தாகச் சொல்பவர்களின் கூற்று முன்னுக்குப்பின் முரணானது. அவ்வாறு சொல்பவர்களிடம் உள்ளத் தூய்மையும் கொள்கைப் பிடிப்பும் இருப்பின், அந்தத் 'திராவிடப்' பெயர்ப்பலகையை முதலில் அப்புறப்படுத்துவதுதான் சொல்லுக்கும் செயலுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க வழிசெய்யும். தமிழ கத்தைச் சுரண்டிக் கொழுத்து அலைக்கழித்துவரும் பொய்யான "இந்தி-இந்துத்" தேசியத்திலிருந்து மட்டும் மீண்டால் போதாது. "திராவிடர்" என்னும் மாயையிலிருந்தும் தமிழர்கள் உடனடி யாக மீண்டாக வேண்டும். இந்த ஓர்மை தமிழ் இளைஞரிடம் தோன்றும் நாளே, தமிழரினத்தின் மானமீட்புக்குக் கொம்பூதும் நாளாகும். காலம் நம்மை அழைக்கின்றது. விடுதலையின் சங்கொலி தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் எதிரொலிக் கட்டும்! உலகம் நடுங்கட்டும்!

¤

www.tamilarangam.net

## குறிப்புகள்

1. K. A. Nilakanta Sastri, *A History of South India,* Oxford University Press, Madras, 1984, p 88.

2-3. Eugene F. Irschick, *Politics and Social Conflict in South India — The Non-Brahmin Movement and Tamil Separatism, 1916-1929,* Oxford University Press, Bombay, 1969, p 283.

4-5. D. A. Washbrook, *The Emergence of Provincial Politics – The Madras Presidency 1870-1920,* Vikas Publishing House Private Ltd., New Delhi, 1977, pp 295 and 297.

6. Eugene F. Irschick, *Politics and Social Conflict in South India — The Non-Brahmin Movement and Tamil Separatism, 1916-1929,* p 39.

7. Christopher John Baker, *The Politics of South India,1920-1937,* Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1976, (Biographical notes), p 335

8. D. A. Washbrook, *The Emergence of Provincial Politics — The Madras Presidency 1870-1920,* p 297 *f.*

9-10. Christopher John Baker, *The Politics of South India, 1920-1937,* pp 330-31.

11. D. A. Washbrook, *The Emergence of Provincial Politics — The Madras Presidency 1870-1920,* pp 268-69.

12–13. பேராசிரியர் பெ. தங்கராசு, *தமிழ்நாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களின் பற்றுக்கோடு — பாட்டாளி மக்கள் கட்சி–2* (கட்டுரை), *பாட்டாளி முழக்கம்,* நவம்பர் 1995, பப 13–14.

14-15. Christopher John Baker, *The Politics of South India, 1920-1937,* p 67.

16. Eugene F. Irschick, *Politics and Social Conflict in South India — The Non-Brahmin Movement and Tamil Separatism,* p 248.

17-18. Christopher John Baker, *The Politics of South India, 1920-1937,* p 68-70.

19-20. ம. பொ. சிவஞானம், *தமிழகத்தில் பிறமொழியினர்,* பூங்கொடிப் பதிப்பகம், சென்னை–4, 1979, பக்கங்கள் 33, 41–42.

21. பேராசிரியர் பெ. தங்கராசு, *தமிழ்நாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களின் பற்றுக்கோடு — பாட்டாளி மக்கள் கட்சி–2* (கட்டுரை), *பாட்டாளி முழக்கம்,* நவம்பர் 1995, பப 14–17.

22. ம. பொ. சிவஞானம், *தமிழகத்தில் பிறமொழியினர்,* ப 40.

23. மேற்படி ப 91.

24. Christopher John Baker, *The Politics of South India, 1920-1937,* (Biographical notes), p 330.

25. ம. பொ. சிவஞானம், *தமிழகத்தில் பிறமொழியினர்,* ப 51.

26-27. K. V. Narayana Rao, *Telengana — A Study in the Regional Commitee in India,* Minerva Associates, Calcutta, 1972, p 58-59.

28. Eugene F. Irschick, *Politics and Social Conflict in South India*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



– *The Non-Brahmin Movement and Tamil Separatism, 1916-1929* (Madras Record Office, Public Ordinary Series, G. O. 82, January 22, 1922), pp 245–46.

29-32. Eugene F. Irschick, *Politics and Social Conflict in South India – The Non-Brahmin Movement and Tamil Separatism, 1916-1929,* pp 249, 247, 251.

33. Eugene F. Irschick, *Politics and Social Conflict in South India – The Non-Brahmin Movement and Tamil Separatism, 1916-1929, (Report of the Tamil University Committee, p 40)*, p 251 *f.*

34–35. Eugene F. Irschick, *Politics and Social Conflict in South India – The Non-Brahmin Movement and Tamil Separatism, 1916-1929,* p 36–37.

36. David Arnold, *The Congress in Tamilnad – Nationalist Politics in South India, 1919–1937,* Manohar Book Service, New Delhi-2, 1977, (Biographical Notes), p 236.

37. Eugene F. Irschick, *Politics and Social Conflict in South India – The Non-Brahmin Movement and Tamil Separatism,* p 307.

38-39. சி. சுப்பிரமணிய பாரதி, **மகாகவி பாரதியார் கவிதைகள்,** அருணா பதிப்பகம், மதுரை, 1958, பப 43–46.

40–42. Eugene F. Irschick, *Politics and Social Conflict in South India – The Non-Brahmin Movement and Tamil Separatism, 1916-1929,* p 348.

43-45. ம. பொ. சிவஞானம், **தமிழகத்தில் பிறமொழியினர்,** பப 65–66.

46. ஆ. சிவசுப்பிரமணியன், ஆ. இரா. வெங்கடாசலபதி, **பின்னி ஆலை வேலை நிறுத்தம் 1921,** பொன்னி, சென்னை, 1990, பப 66.

47. ம. பொ. சிவஞானம், **தமிழகத்தில் பிறமொழியினர்,** பப 34–35.

48. Eugene F. Irschick, *Politics and Social Conflict in South India – The Non-Brahmin Movement and Tamil Separatism,* p 192.

49–55. ம. பொ. சிவஞானம், **தமிழகத்தில் பிறமொழியினர்,** பப 57, 141, 231, 58–59, 71–72.

56. **இதுவே திராவிடம்!** (ஆசிரியவுரை), **திராவிட நாடு,** 13.7.1947, ப 8.

57–58. **குமரித் தமிழ் மக்களின் தென் எல்லைப் போராட்டம்** (தொகுப்பு: அசுரன்), **மாணவர் முழக்கம்,** தி. பி. துலாம் 2025–சுறவம் 2026 (நவம்பர் 1994–பிப்ரவரி 1995), பப 3–6.

59–60. எசு. கே. சாமி, **திருவாங்கூரில் தமிழர், திராவிட நாடு,** 4.1.1948, ப 6.

61–62. ஈகி. பி. எசு. மணி, **எல்லைப் போராட்டத்தில் ம. பொ. சி. யின் பங்கு, மாணவர் முழக்கம்,** தி. பி. துலாம் 2025–சுறவம் 2026 (நவம்பர் 1994–பிப்ரவரி 1995), பப 21.

63. எசு. கே. சாமி, **திருவாங்கூரில் தமிழர், திராவிட நாடு,** 4.1. 1948, ப 6.

64. **குமரித் தமிழ் மக்களின் தென் எல்லைப் போராட்டம்** (தொகுப்பு: அசுரன்), **மாணவர் முழக்கம்,** தி. பி. துலாம் 2025–சுறவம் 2026 (நவம்பர் 1994–பிப்ரவரி 1995), பப 3–6.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



65. ஈகி. பி. எசு. மணி, *எல்லைப் போராட்டத்தில் ம. பொ. சி.யின் பங்கு, மாணவர் முழக்கம்*, தி. பி. துலாம் 2025–சுறவம் 2026 (நவம்பர் 1994–பிப்ரவரி 1995), பப 20.

66. *இன்றையத் தமிழ்நாடு பெற்ற, பெறத் தவறிய வரலாறு, எழுகதிர்*, நவம்பர் 1995.

67-68. ஈகி. பி. எசு. மணி, *எல்லைப் போராட்டத்தில் ம. பொ. சி. யின் பங்கு, மாணவர் முழக்கம்*, தி.பி. துலாம் 2025–சுறவம் 2026 (நவம்பர் 1994–பிப்ரவரி 1995), பப 20.

69. மருத்துவர் இராமன், *மங்காப்புகழ் மங்கலங்கிழார், ராணி*, 3.9. 1995, ப 42.

70. டாக்டர் மு. அரங்கசுவாமி, *கவி கா. மு. ஷெரீப் தலையங்கங்கள் — 1948 முதல் 1956 வரை*, தமிழ் முழக்கம் பதிப்பகம், சென்னை 2, 1992, ப 147.

71. ம. பொ. சிவஞானம், *தமிழகத்தில் பிறமொழியினர்*, ப 82.

72. ம. பொ. சிவஞானம், *தமிழகத்தில் பிறமொழியினர்*, ப 246.

73. ம. பொ. சிவஞானம், *தமிழகத்தில் பிறமொழியினர்*, ப 250.

74. வெ. மணி, இந்திய தலைமை வங்கி, பெங்களூர்.

75. *தமிழகப் பறையர் குரல்* ஆசிரியர் சாமுவேல் பறையர் வழியாக அறிந்த செய்திகள்.

76. ம. பொ. சிவஞானம், *தமிழகத்தில் பிறமொழியினர்*, 47.

77–79. ம. பொ. சிவஞானம், *தமிழகத்தில் பிறமொழியினர்*, பப 56, 106–07,35–36.

80. பெரியார் *ஈ. வெ. ரா. சிந்தனைகள்*, இரண்டாம் தொகுதி, பதிப்பாசிரியர்: வே. ஆனைமுத்து, சிந்தனையாளர் கழகம், திருச்சிராப்பள்ளி–2, ப 660.

81. *குடி அரசு*, 13.3.1938, ப 1.

82. *குடி அரசு*, (பெட்டிச் செய்தி அறிவிப்பு), 17.4.1938.

83–84. ம. பொ. சிவஞானம், *தமிழகத்தில் பிறமொழியினர்*, பப 186–87,189, 196.

85–86. 'விடுதலை' ராசேந்திரன், *பெரியாரைக் கொச்சைப்படுத்தும் குழப்பவாதிகள் (10), விடுதலை*, சென்னை, 13.2.1995, ப 1.

87–88. பெரியார் *ஈ. வெ. ரா. சிந்தனைகள்*, முதல் தொகுதி, பப 249–50.

89. *குடி அரசு*, 2.9.1944, ப 2.

90–91. பாரதிதாசன், *பாரதிதாசன் கவிதைகள்*, செந்தமிழ் நிலையம், இராமச்சந்திரபுரம், திருச்சி மாவட்டம், 1964, பப100, 98.

92. ம. பொ. சிவஞானம், *தமிழகத்தில் பிறமொழியினர்*, ப 36.

93–94. *திராவிடன் வீரம்*, ஆகத்து 1995

95. *திராவிடன் வீரம்*, திசம்பர் 1995, ப 2.

96–103. Mohan Ram, *Hindi Againt India*, Rachna Prakashan New Delhi, pp 98-102 and 110.

104–06. பா வலரேறு பெருஞ்சித்திரனார், *நூறாசிரியம்*, தென்மொழி நூல்வெளியீட்டு, விற்பனையகம், சென்னை–5, 1996, பப 249, 258, 256

www.tamilarangam.net



107. ம பொ. சிவஞானம், தமிழகத்தில் பிறமொழியினர், ப 222.
108. தமிழா இவரெல்லாம் தமிழரல்லர்! (துண்டறிக்கை), தமிழ்ச் சங்கம், சென்னை.
109–113. K. V. Narayana Rao, *Telengana — A Study in the Regional Committee in India,* pp 63-65.
114. தென்மொழி, தி. பி. 1997 ஐப்பசி (அக்டோபர் 1966), ப 48.
115. தென்மொழி, தி. பி. 1998 இரட்டை (சூன் 1967), ப 24.
116–18. *Mysore Gezetteer,* Vol V, ed., C. Hayavadana Rao, 1930, pp 271, 360, 337 and 266.
119. "Mr. Gowda said, 'whether Tamil Nadu Chief Minister M. Karunanidhi or any other leader is a Third Front partner or not, our stand on Cauverry issue remains unaltered'. He allayed fears among certain sections that the alliance with the DMK might lead to the latter pressurising him on the release of Cauvery waters to Tamil Nadu"
— *Deccan Herald,* Bangalore, May 19, 1996, p 1.
120. முதல்வர் கருணாநிதி 16.5.1996 அன்று சென்னையில் செய்தியாளருக்குத் தந்த செவ்வி.
"**கேள்வி:** காவிரிச் சிக்கலில் தமிழகத்திற்கு ஆதரவாக இல்லாத தேவே கௌடாவை தி. மு. க. எப்படித் தலைமையமைச்சராக ஆதரிக்கலாம் என்று பா. ம. கட்சி கண்டனம் தெரிவித்திருக்கிறதே!
"**விடை:** காவிரிச் சிக்கலைத் தீர்க்க வேண்டுமென்று தலைமையமைச்சரிடமே கேட்கலாம் அல்லவா? அது மட்டுமன்று. தேவே கௌடா ஒரு தென்னாட்டுக்காரர் என்பதையும், பின்தங்கிய குழுகத்தைச் சேர்ந்தவர் என்பதையும் பா. ம. க.வின்ர் அறியமாட்டார் போலும்".
121. *Deccan Herald* dated June 7, 1996, p 1.
122. தினமணி, 4.6.1996, ப 1.
123. காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு: கருணாநிதி நம்பிக்கை (செய்தி), தினமணி 16.6.1996, ப 5.
124. *Deccan Herald,* Weather Report from June 15-20, 1996.
125. *Deccan Herald* dated July 6, 1996, p 7.
126. தினமணி, 7.7.1996.
127. *Deccan Herald* dated June 30, 1996, p 1.
128. *Deccan Herald* dated July 17, 1996, p 10.
129. குணா, எரிமலையின் வாயில்மேல் இந்துமதம்!, பஃறுளிப் பதிப்பகம், சென்னை_5, தி. பி. 2025 விடை, பப 16–17.
130. வாலாட்டும் வந்தேறிப் படுகன், மாணவர் முழக்கம், தி. பி. 2026 சுறவம்–மீனம் (சனவரி–ஏப்ரல் 1996), பப 12–13.
131. நக்கீரன், 7.4.1996, ப 6.
132. தினமணி, 19.4.1996, ப 5.
133. தினமணி, 15.4.1996, ப 9.
134. தினமணி, 27.6.1996, ப 6.

—

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசிரியரின் பிற நூல்கள்

வள்ளுவத்தின் வீழ்ச்சி!

புதிய சமய உருவாக்கங்கள்

திராவிடத்தால் வீழ்ந்தோம்!

மார்க்சிய இயங்கியல்

சாதியத்தின் தோற்றம்

வகுப்பும் சாதியும் வருணமும்

இந்திய தேசியமும்
திராவிடத் தேசியமும்

தமிழர் மெய்யியல்

தமிழியப் பொதுவுடைமை

தமிழ்த் தேசிய இன சிக்கல்
(உலக நம்பிகயின் இயங்கவியல்)

தமிழ்த் தேசியத்திற்கு
பொருந்திய பொதுவுடைமை.

கிறுத்துவத்தின் உள்ளீடு
தேசிய விடுதலை இறையியலே

எரிமலை வாயின் மேல் இந்து மதம்

ஒடுக்குண்ட கிறுத்தவர்களும்
தமிழ்த் தேசியமும்

நாட்டு விடுதலையும் உழவர் புரட்சியும்

Asialtic Mode
(A Socio-Cultural Perspectives)

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சகரத்தை மீட்போம்!

காவிரிக்குத் தெற்கேயுள்ளவர்கள் பொதுவாகச் சகரத்தைச் 'ச' (Cha) எனச் சரியாகவே ஒலிப்பராம். காவிரிக்கு வடக்கே அச் சகரம் ஸகரமாகிச் **சோறு** (Choru) என்பது ஸோறு (Soru) என்றும், **செல்வம்** (Chelvam) என்பது ஸெல்வம் (Selvam) என்றும் திரிந்து ஒலிக்கும். சகரம் அவ்வாறு ஸகரமாவது, தமிழ் எதிர்ப்பைத் தானறிந்த தன்வினையாகக்கொண்ட பார்ப்பனருக்கு எடுத்த கையாகியது. அந்த ஸகரத்தை அவர்கள் வேண்டுமென்றே ஷகரமாக (Sha) ஒலிக்கத் தலைப்பட்டுள்ளனர். நேற்று வரை 'அவாள், இவாள்' எனப் பேசுவதன் வாயிலாகப் தாங்கள் இன்னாரெனக் காட்டிக்கொண்டனர். அந்த 'அவாள், இவாள்' சாதிநடை இன்று நகைப்பிற்குரியதாகப் போய்விட்டமையால், இன்று சகரத்தை ஷகரமாக ஒலிப்பதன் வாயிலாக அவர்கள் தங்களின் சாதி அடையாளத்தைக் காட்டிக்கொள்கின்றனர்.

க ——— ங
ச ——— ஞ
ட ——— ண
த ——— ந
ப ——— ம

ஆகிய தமிழ் உயிர்மெய்யெழுத்துகளில், க, ச, ட, த, ப முதலான வல்லின உயிர்மெய் எழுத்துகளை விரிவாக்கியதாலேயே வடமொழிகளில் *Ka, Kha, Ga, Gha* போன்ற வருக்க ஒலியன்கள் தோன்றின. [வடமொழிகளில் ஞகரம் இருந்தும், அதை 'ஞ்' என ஒலிக்காமல் 'க்ஞ்' என்றோ, 'க்ய' என்றோ ஒலிப்பதும் அதனை மெய்ப்பிக்கும்]. அவற்றில் 'ச' வரிசையில் சகரமே (Cha) முதல் எழுத்தாகும். இதுவே தமிழில் ஸகரம் முதல் எழுத்தாக வர முடியாது என்பதைக் காட்டும். தமிழில், அச் சகரமே ஒரு சொல்லுக்கு இடையில் ஸகரமாக மாறி ஒலிக்குமேயன்றி, ஸகரம் (Sa) முதல் எழுத்தாக வரவே வராது. சகரம் (Cha) மட்டுமே முதல் எழுத்தாக வரும். அதனாலேயே ஸகரம் முதலான வடவெழுத்துகள் தனியாகச் சேர்க்கப்பட்டன.

இந் நிலையில், தமிழர்கள் சகர (Cha) ஒலிப்பை மீட்கத் தவறுவாரெனின், அது தமிழைக் கெடுத்து மெல்ல ஒழிக்கப் பார்க்கும் பார்ப்பனச் சூழ்ச்சிக்கே கைகொடுக்கும் என்பதைத் தமிழுணர்வாளர்கள் உணர வேண்டும். சரியாக ஒலிப்பதன் வாயிலாகச் சகரத்தை மீட்பது, தமிழைக் கண்ணெனப் பேணும் தமிழ்க் காப்பு வினையேயன்றி வேறில்லை.